வெளியீடு 28-10-2005 Issued 28-10-2005

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT


புதன்கிழமை, மார்ச் 23, 2005—தொகுதி 75—எண் 2

Wednesday the 23rd March 2005—Volume 75—No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009



D
V211, 31'P05
P05. 75. 2
185276.


[Price Rs. 3.00

557
21.2.06

23–3–2005

## உள்ளடக்கம்

பக்கங்கள்


1. **கவன ஈர்ப்பு—**

புதுக்கோட்டை, அருள்மிகு பிரகதாம்பாள் திருக்கோயில் குடமுழுக்கு – தேர்களை ஓடச் செய்தல் 389-394

2. **தகவல் கோரல்—**

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் 389, 390

3. **அறிவிப்புகள்—**

(அ) கூடுதல் செலவினங்கள் குறித்த இறுதித் துணை நிதிநிலை அறிக்கை, 2004–2005, முன்மொழிதல் (ஆ.செ.) 394, 395

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2005 (ஆ.இ.) 397

(இ) முன்பண மானியக் கோரிக்கைகள், 2005–2006, முன்மொழிதல் (ஆ.செ.) 398

(ஈ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2005 (ஆ.இ.) 402

4. **கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2004–2005, வாக்கெடுப்பு** 395-397

5. **அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—**

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2005 397-398

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2005 403

6. **முன்பண மானியக் கோரிக்கைகள், 2005–2006, வாக்கெடுப்பு—** 398-402

பக்கங்கள்

**7. அரசினர் தீர்மானங்கள்—**

(அ) விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தல் 403-404

(ஆ) விதி 32–ஐத் தளர்த்தல் 535

**8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—**

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2005 404-406

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2005 406-407

**9. மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி. 408-467

(அ) கோரிக்கை எண் 11 – வணிக வரித் துறை – முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு

(ஆ) கோரிக்கை எண் 29 – செய்தி மற்றும் சுற்றுலாத் துறை, எழுதுபொருள் மற்றும் அச்சு

(இ) கோரிக்கை எண் 36 – மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

(ஈ) கோரிக்கை எண் 39 – வருவாய்த் துறை

(உ) கோரிக்கை எண் 49 – இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

(ஊ) கோரிக்கை எண் 34 – பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை

— 471-534

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 408, 416, 417,421, 427, 435, 447-451, 453-457, 474, 478, 481





பக்கங்கள்

**9. மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்—தொடர்ச்சி 483, 487, 490-492, 495, 496, 498, 509,519-534

மாண்புமிகு திரு. சி. பொன்னையன், 441, 475, 476, 477, 484, 504, 513-519

திரு. கு. பிச்சாண்டி 415, 420, 431, 432, 439, 444, 448-458

* திரு. ப. இராஜரெத்தினம் 458-467

திரு. சி. ஞானசேகரன் 471-484, 486-488

* திரு. கோ. இரவிராஜ் 489-494

செல்வி க. பாலபாரதி 495-500

திரு. சோ. இராசேந்திரன் 500-506

திரு. கேஎன். இலட்சுமணன் 507-512

**10. விதி 110-ன்கீழ் அறிக்கை—**

காவல், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைகளின் பணியாளர்களுக்குப் படிகளை உயர்த்தி வழங்கல் - மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை 467-471

**11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 535-537

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 10, தாரண – திருவள்ளுவர் ஆண்டு 2036

## 2005 மார்ச் 23, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்"

பெருமைக்கு ஏதுவான பண்பை இயற்கையாக உடையவர், பிறரால் செயற்கரிய நற்செயல்களை நெறிப்படி செய்து முடிப்பர்.

**குறிப்பு :** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.

## 1. கவன ஈர்ப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு.

## 2. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் கூட்டுறவுச் சங்கம்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, ஏற்கெனவே சொன்னீர்கள், என்னுடைய ஆய்வில் இருக்கிறது.

## 1. கவன ஈர்ப்பு–தொடர்ச்சி

### புதுக்கோட்டை, அருள்மிகு பிரகதாம்பாள் திருக்கோயில் குடமுழுக்கு – தேர்களை ஓடச் செய்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். டாக்டர் சி. விஜயபாஸ்கர்.

## 2. தகவல் கோரல்–தொடர்ச்சி

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்–தொடர்ச்சி

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு ஒத்திவைப்புத் தீர்மானம், ஒரு கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லாம் ஆய்வில் இருக்கிறது.

## 1. கவன ஈர்ப்பு–தொடர்ச்சி

### புதுக்கோட்டை, அருள்மிகு பிரகதாம்பாள் திருக்கோயில் குடமுழுக்கு – தேர்களை ஓடச் செய்தல்–தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் சி. விஜயபாஸ்கர்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை அருள்மிகு பிரகதாம்பாள் ஆலயத்திற்கு குடமுழுக்குச் செய்து, தேர்களை ஓட வைக்க வேண்டியதன் அவசியம் குறித்து மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விவர அறிக்கை இந்த அவையின்முன் வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
185276

D 211,31/05 P05 75.2



### அறிக்கை

புதுக்கோட்டை நகர், திருகோகர்ணம், அருள்மிகு பிரகதாம்பாள் திருக்கோயில், புதுக்கோட்டை தொகுப்புக் கோயில்களில் ஒன்றாகும். இத்தொகுப்பில் 201 திருக்கோயில்கள் உள்ளன. அனைத்துத் திருக்கோயில்களும் ஒரே நிர்வாகத்தின்கீழ் உள்ளன. இத்திருக்கோயிலின் நிர்வாகம், முதல் நிலை செயல் அலுவலரது கண்காணிப்பில் உள்ளது. இத்திருக்கோயிலில் பரம்பரை அல்லாத 5 அறங்காவலர்கள் நியமனம் செய்யப்பட்டு பொறுப்பேற்று உள்ளனர்.

(2) இக்குழு கோயில்களில், 14–5–2001 முதல் 16–3–2005 வரை 10 திருக்கோயில்களில் குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. 2004–2005 ஆம் ஆண்டில் 2 திருக்கோயில்களில் குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. தற்போது 6 திருக்கோயில்களில் திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன.

(3) அருள்மிகு பிரகதாம்பாள் திருக்கோயிலுக்கு 23–6–1982–ல் திருப்பணி செய்து குடமுழுக்குச் செய்யப்பட்டுள்ளது. இத்திருக்கோயிலில் மீண்டும் குடமுழுக்கு நடத்திட வேண்டி திருப்பணி வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. ரூ.4,89,000/– மதிப்புள்ள 19 உபய திருப்பணி வேலைகளுக்கு மதிப்பீடுகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இதுவரை, இராஜகோபுரம் புதுப்பித்து வர்ணம் வைத்தல், கட்டை கோபுரம் வர்ணம் பூசுதல், அருள்மிகு கோகர்ணேஸ்வரர் விமானம் வர்ணம் பூசுதல் மற்றும் அருள்மிகு பிரகதாம்பாள் விமானம் வர்ணம் பூசுதல் ஆகிய நான்கு வேலைகள் முடிவடைந்துள்ளன. எஞ்சிய 15 வேலைகளில் 60 சதவீதம் வரை நடைபெற்றுள்ளது.

(4) மேற்கண்ட பணிகளுடன் திருக்கோயிலின் உட்புறத்தில் 16 கல் உத்திரங்கள் உடைந்து இருப்பது புதுப்பிக்கப்பட்டுள்ளன. மேல்தளத்தில் 40,354 சதுர அடி பரப்பளவில் செங்கல், ஜல்லிகள் கொத்தி எடுக்கப்பட்டு கான்கிரீட் போடப்பட்டுள்ளது. 10–3–2005 முதல் தட்டோடு பதிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

(5) இத்திருக்கோயிலில் திருப்பணி வேலைகளுக்காக ரூ.23,59,000/–க்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு ரூ.13,34,000/–க்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன. எஞ்சிய பணிகள் விரைவில் துவக்கப்படும்.

(6) திருப்பணி வேலைகளை இன்னும் ஆறு மாதங்களுக்குள் முடித்து குடமுழுக்கு நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[திரு. பி.சி. ராமசாமி] [2005 மார்ச் 23

(7) **தேர்த் திருப்பணி:** இத்திருக்கோயிலில் மரத்திலான ஐந்து திருத்தேர்கள் உள்ளன. இவ்வைந்து தேர்களும் பழுதடைந்துள்ளதால் 1982 ஆம் ஆண்டிலிருந்து தேரோட்டம் நடைபெறவில்லை. இவற்றின் தேர்ச் சக்கரங்கள் மற்றும் அச்சுகள் செய்வதற்கு திருச்சிராப்பள்ளி பாரத மிகுமின் நிலையத்திலிருந்து பார்வையிட்டு, பின்வரும் விவரப்படி மதிப்பீடுகள் அளித்துள்ளனர்.

| வ.எண் | தேர் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. |
|---|---|---|
| 1. | சுவாமி தேர் | 5,26,958 |
| 2. | அம்பாள் தேர் | 3,76,588 |
| 3. | விநாயகர் தேர் | 2,30,211 |
| 4. | சுப்பிரமணியர் தேர் | 2,30,211 |
| 5. | சண்டிகேஸ்வரர் தேர் | 1,90,000 |
| | **மொத்தம்** | **15,53,968** |

(8) உபயதாரர்கள் மூலமாக தேர் வேலைகள் முடித்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மொத்தத்தில் தேர் மராமத்துக்காக ரூ.15,53,968/-க்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு உள்ளன. மேற்கண்ட திருக்கோயில் திருப்பணி முடித்து, கும்பாபிஷேகம் நடத்தப்பட்ட பின் அடுத்த கட்டமாக தனித் திருப்பணிக் குழு அமைத்து, தேர்த் திருப்பணி செய்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையினைப் படித்துப் பார்த்தேன். விவர அறிக்கையிலே புதுக்கோட்டை அருள்மிகு பிரகதாம்பாள் ஆலயத்திற்கு இன்னும் ஆறு மாதங்களில் திருப்பணிகள் முடிந்து குடமுழுக்கு விழா நடத்தப்படும் என்று அறிவித்துள்ள மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுக்கு தொகுதி மக்கள் சார்பிலே என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை நான் பணிவோடு சமர்ப்பித்துக்கொள்கின்றேன். இதுவரை 3,000 கோயில்களுக்கு மேலாக குடமுழுக்கு விழா நடத்தியும், ஒரே நாளிலே ஏறத்தாழ 853 கோயில்களுக்கு ஒரே நேரத்திலே கும்பாபிஷேகம் நடத்தியும்,



2005 மார்ச் 23] [டாக்டர் சி. விஜயபாஸ்கர்]

வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனைகளைச் செய்து, ஆலயங்களிலே அன்னதானம் கொடுத்துள்ள அம்மா அவர்களுடைய ஆட்சியை ஆன்மீக ஆட்சி என்று மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். நாடே வியக்கின்ற இந்த நல்லாட்சியிலே—புதுக்கோட்டை அருள்மிகு பிரகதாம்பாள் ஆலயத்தைப் பொறுத்தவரையிலே கி.பி. ஏழாம் நூற்றாண்டிலே பல்லவர் காலத்தினுடைய குடவரைக் கோயிலாகும் இந்தக் கோயில். காமதேனு காதிலே நீர் கொண்டு வந்து அபிஷேகம் செய்த சிவலிங்கம் இங்கே உள்ளதாக வரலாறு கூறுகின்றது. குடவரைக் கோயிலினுடைய குகைப் பகுதியிலே கருவறை அமைந்துள்ளது. கருவறையின் உள்ளே சிவலிங்கம் அமைந்துள்ளது. இந்தியாவிலேயே வினாயகர் உருவமும், தட்சிணாமூர்த்தியினுடைய உருவமும் அருகருகே அமைந்துள்ள அற்புத அமைப்பைக் கொண்டுள்ளது இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க கோயில்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் விஜயபாஸ்கர், கேள்வியாகக் கேளுங்கள்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** இந்தக் கோயிலிலே குடமுழுக்கு விழா நடத்தப்படும் என்று அறிவித்த அமைச்சர் அவர்களிடத்திலே அம்பாள் டிரஸ்ட் என்ற உபயதாரர்கள் இராணி ரமாதேவி தலைமையிலே, ஐம்பது இலட்சம் ரூபாயை செலவு செய்திருக்கிறார்கள். அரசு நிதியாக மேலும் ஒரு பத்து இலட்சம் ரூபாய் வழங்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் விஜயபாஸ்கர் அவர்கள் மேற்படி திருக்கோயிலுக்கு 50 இலட்சம் ரூபாய் செலவில் உபயதாரர்கள் மூலமாக திருப்பணி வேலைகள் நடைபெற்று வருவதாகக் கூறினார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திருக்கோயில் திருப்பணியில் காட்டும் ஆர்வத்திற்காக என்னுடைய பாராட்டுகளை நான் இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இதிலே அரசின் மானியமாக பத்து இலட்சம் ரூபாய் உடனடியாக வழங்குவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் சி. விஜயபாஸ்கர்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்து இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, சிவகங்கை கண்டதேவி தேரை ஓட்டிய பெருமைக்குரிய நம்முடைய ஆட்சியிலே ஐந்து அற்புதத் தேர்களைக் கொண்ட புதுக்கோட்டை திருக்கோயிலின் அந்தத் தேர்களையும் ஓட்டி பிரம்மோற்சவம் என்று சொல்லக்கூடிய பெரும் திருவிழாவை நடத்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோன்ற திருக்கோயில்களின் திருப்பணிக்காக 15 இலட்சம் ரூபாய்க்கு மேல் மதிப்பீடுகள் பெறப்பட்டுள்ள நிலையில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் உபயதாரர்களை அணுகி இப்பணியை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தால், துறையின்மூலம் தேவையான மானியத் தொகை வழங்கவும் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். ஒரே திருக்கோயிலில் ஐந்து திருத்தேர்கள் இருப்பது ஒருசில திருக்கோயில்கள் மட்டுமே. இதில் தங்கள் புதுக்கோட்டை தொகுதியைச் சேர்ந்த இத்திருக்கோயிலும் ஒன்றாகும். இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான ஐந்து திருத்தேர்களின் தேரோட்டத்தையும், பிரம்மோற்சவத்தையும் விரைவில் நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள்மூலம் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

## 3. அறிவிப்புகள்

### (அ) கூடுதல் செலவினங்கள் குறித்த இறுதித் துணை நிதி நிலை அறிக்கை, 2004-2005, முன்மொழிதல் (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2004-2005 ஆம் ஆண்டின் கூடுதல் செலவினங்கள் குறித்த இறுதித் துணை நிதி நிலை அறிக்கை. பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2004-2005 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது.

**Message**

"In pursuance of Clause (2) of Article 205, read with Clause (3) of Article 203, of the Constitution of India, I, Surjit Singh Barnala, Governor of



Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for further Grants for the Financial Year 2004-2005."

*முற்பகல் 10-05*

## 4. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2004-2005, வாக்கெடுப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2004-2005 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்கள் குறித்த மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004-2005 ஆம் ஆண்டின் கூடுதல் செலவினங்களுக்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 21-3-2005 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள இறுதித் துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், 2004-2005 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

## நிறைவேற்றப்பெற்ற 2004-2005 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

(ரூபாய் ஆயிரத்தில்)

| கோரிக்கை | துறை | வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|---|
| 6 | கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு | 1,90,10 | ... | ... |
| 7 | கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—மீன்வளம் | 1,83,43 | ... | ... |
| 12 | கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை | 4,43,00 | ... | ... |
| 13 | எரிசக்தித் துறை | 30,00 | ... | ... |
| 14 | சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை | 80,20 | 1 | ... |
| 18 | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 1,94,51 | ... | ... |
| 19 | உயர் கல்வித் துறை | 39,02 | ... | ... |
| 20 | நெடுஞ்சாலைகள் துறை | ... | 1 | ... |
| 21 | உள் துறை—காவல் | 27,72,27 | 50,00 | ... |
| 25 | வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | 20,41 | ... | ... |
| 27 | செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் | 1 | ... | ... |
| 31 | தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | ... | 95,89 | ... |
| 33 | நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | ... | ... | 5,36,51 |
| 36 | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை | 2,80,00 | ... | ... |
| 37 | பொதுத் துறை | 1,57,48 | ... | ... |
| 38 | பொதுப் பணித் துறை | 7,74,24 | 40,13 | ... |



| கோரிக்கை | துறை | வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|---|
| 40 | ஊரக வளர்ச்சித் துறை | 3 | ... | ... |
| 41 | பள்ளிக் கல்வித் துறை | 2 | ... | ... |
| 43 | சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 60,31 | ... | ... |
| 45 | தமிழ் வளர்ச்சி—பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை | 87,47 | ... | ... |
| 47 | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 1 | ... | ... |
| | பெருமொத்தம் | 53,12,51 | 1,86,04 | 5,36,51 |

### 3. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2005 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் மற்றும் ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள்.

### 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2005

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள். அறிமுகம் செய்தல். 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

[2005 மார்ச் 23

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 3. அறிவிப்புகள்–தொடர்ச்சி

### (இ) முன்பண மானியக் கோரிக்கைகள், 2005-2006, முன்மொழிதல் (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2005–2006 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

**Message**

"In pursuance of Clause (2) of Article 206, read with Clause (3) of Article 203, of the Constitution of India, I, Surjit Singh Barnala, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for Grants in advance, during the Financial Year 2005-2006."

## 6. முன்பண மானியக் கோரிக்கைகள், 2005–2006, வாக்கெடுப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2005–2006 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.



2005 மார்ச் 23]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2005–2006 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் அடங்கிய 21-03-2005 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றுக்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகை 2005–2006 ஆம் ஆண்டிற்கான உடனடிச் செலவிற்காக அரசுக்கு முன்பணமாக வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

### நிறைவேற்றப்பெற்ற 2005-2006 ஆம் ஆண்டிற்கான உடனடிச் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள்

| வ. எண் | கோரிக்கை | ரூபாய் ஆயிரத்தில் வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|---|
| 1. | மாநிலச் சட்டமன்றம் | 3,28,33 | – | – |
| 2. | ஆளுநர் மற்றும் அமைச்சரவை | 3,48,27 | – | – |
| 3. | நீதி நிருவாகம் | 38,12,80 | 1,68,06 | – |
| 4. | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 101,83,49 | 10,57,97 | – |
| 5. | வேளாண்மைத் துறை | 201,52,61 | 12,07,61 | – |
| 6. | கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை–கால்நடை பராமரிப்பு | 41,42,51 | 4,40 | – |

| வ. எண் | கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|---|
| 7. | கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை–மீன்வளம் | 18,97,30 | 1,00,49 | – |
| 8. | கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை–பால்வளம் | 3,03,39 | – | – |
| 9. | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 47,67,31 | 24,13,39 | – |
| 10. | வணிக வரித் துறை–வணிக வரிகள் | 106,66,25 | 1 | .. |
| 11. | வணிக வரித் துறை–முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு | 25,07,96 | – | .. |
| 12. | கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை | 328,56,96 | 13,68,16 | 2,29,43 |
| 13. | எரிசக்தித் துறை | 273,34,18 | 6,25,00 | 27,15,45 |
| 14. | சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை | 29,99,54 | 27,11,40 | – |
| 15. | நிதித் துறை | 98,48,14 | 1 | 4,56,76 |
| 16. | கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை–கைத்தறி மற்றும் துணி நூல் | 78,09,51 | – | 10,00 |
| 17. | கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை–கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் | 15,36,43 | – | – |
| 18. | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 364,37,55 | 48,63,48 | – |
| 19. | உயர் கல்வித் துறை | 183,02,41 | 2,41,95 | 1 |
| 20. | நெடுஞ்சாலைகள் துறை | 227,40,30 | 520,46,42 | 1 |
| 21. | உள் துறை–காவல் | 317,30,27 | 17,34,11 | 12,50 |
| 22. | உள் துறை–தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் | 17,13,74 | 1 | – |





| வ. எண் | கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|---|
| 23. | உள் துறை–சிறைச்சாலைகள் | 17,76,90 | 6,25,01 | – |
| 24. | உள் துறை–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் | 14,42,26 | – | – |
| 25. | வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | 57,99,34 | – | 28,87,50 |
| 26. | தொழில் துறை | 12,68,60 | – | – |
| 27. | செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–செய்தி மற்றும் விளம்பரம் | 8,01,80 | – | – |
| 28. | செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–சுற்றுலா | 4,50,95 | 3,59,62 | – |
| 29. | செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–எழுதுபொருள் மற்றும் அச்சு | 13,67,81 | 25,00 | – |
| 30. | தகவல் தொழில்நுட்பவியல் துறை | 3,52,17 | – | – |
| 31. | தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | 47,52,50 | – | – |
| 32. | சட்டத் துறை | 2,08,42 | – | – |
| 33. | நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | 175,53,64 | 166,57,56 | 30,42,31 |
| 34. | பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | 6,22,23 | – | – |
| 35. | திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | 31,18,03 | 2,08,25 | – |
| 36. | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை | 8,82,51 | – | – |
| 37. | பொதுத் துறை | 20,30,78 | 2,50,00 | – |
| 38. | பொதுப் பணித் துறை | 174,77,01 | 168,16,60 | – |

| வ. எண் | கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|---|
| 39. | வருவாய்த் துறை | 248,98,15 | 2 | – |
| 40. | ஊரக வளர்ச்சித் துறை | 484,07,58 | 119,94,10 | – |
| 41. | பள்ளிக் கல்வித் துறை | 1,068,05,05 | 18,91,43 | 3,88 |
| 42. | சிறுதொழில்கள் துறை | 14,22,04 | 13,00 | – |
| 43. | சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 139,54,47 | 1 | – |
| 44. | தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–தமிழ் வளர்ச்சி–பண்பாடு | 9,59,67 | 25,63 | – |
| 45. | தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–இந்து சமய அறநிலையத் துறை | 7,20,61 | 12,90 | – |
| 46. | போக்குவரத்துத் துறை | 67,37,89 | 3 | – |
| 47. | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 8,49,21 | 1 | – |
| 48. | ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | 1,207,78,50 | – | – |
| 49. | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 502,69,01 | – | – |
| | **பெருமொத்தம்** | **6,881,24,40** | **1,200,38,93** | **93,64,10** |

## 3. அறிவிப்புகள்–தொடர்ச்சி

### (ஈ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2005 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் மற்றும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.



## 5. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)–தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2005

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு, அறிமுகம் செய்தல். 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 7. அரசினர் தீர்மானங்கள்

### (அ) விதிகள் 30, 130 மற்றும் 132–ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானம், மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[திரு. சி. பொன்னையன்] [2005 மார்ச் 23

"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, இன்று அறிமுகம் செய்யப்பெற்ற 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2005) மற்றும் 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2005) ஆகியவை இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவுகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறுகின்றன.

## 8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2005

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தல். 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2005) மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2005) @ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ 23-3-2005 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



2005 மார்ச் 23] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல், சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2005) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

[2005 மார்ச் 23

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2005

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2005), மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2005) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

---

@ 23-3-2005 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



2005 மார்ச் 23] [பேரவைத் தலைவர்]

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல், சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2005), நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

[2005 மார்ச் 23

## 9. மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 11 - வணிக வரித் துறை - முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு

(ஆ) கோரிக்கை எண் 29 - செய்தி மற்றும் சுற்றுலாத் துறை- எழுதுபொருள் மற்றும் அச்சு

(இ) கோரிக்கை எண் 36 - மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

(ஈ) கோரிக்கை எண் 39 - வருவாய்த் துறை

(உ) கோரிக்கை எண் 49 - இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

(ஊ) கோரிக்கை எண் 34 - பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை.

### (அ) கோரிக்கை எண் 11 - வணிக வரித் துறை - முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2005–2006 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 11, வணிக வரித் துறை–முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வணிக வரித் துறை–முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.100,31,83,000/–க்கு, மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2708, திரு. அ.இரா. மலையப்பசாமி, இருக்கையில் இல்லை.



2005 மார்ச் 23] [பேரவைத் தலைவர்]

வெட்டுத் தீர்மானம் எண் 3297, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3442, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குறைந்த மதிப்பிலான முத்திரைத்தாள்கள் தேவைக்கேற்ப கிடைக்கச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை–முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,31,83,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4308, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "முத்திரைத்தாள்களின் கட்டணத்தைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை–முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,31,83,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4561, டாக்டர் ஆர். கோவிந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5309, திரு. டி.கே. இராஜா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5775, திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை–முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,31,83,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6313, திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை–முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,31,83,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6356, திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பத்திரப் பதிவு அலுவலகங்களில் அதிகரித்து வரும் முறைகேடுகள் ஊழல் புகார்கள் குறித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை–முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,31,83,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6583, திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3830, திரு. எச்.எம் ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டிலுள்ள சார் பதிவாளர் அலுவலகங்களில் ஆவண எழுத்தர்களுக்கு அடிப்படை வசதிகளுடன் கூடிய தனி இடம் ஒதுக்கி கட்டடம் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"வணிக வரித் துறை–முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,31,83,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5612, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6673, திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3966, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை–முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,31,83,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6506, திருமதி எ.எஸ். மஹேஸ்வரி.

**திருமதி எ.எஸ். மஹேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பத்திரப்பதிவுக் கட்டணத்தைக் குறைப்பதற்காகப் பொதுமக்கள் தாக்கல் செய்யும் மனுக்கள் மற்றும் மேல்முறையீட்டு மனுக்கள்மீது உடனுக்குடன் தீர்வு காணப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை – முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,31,83,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5005, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டத்தில் உள்ள அனைத்து சார் பதிவாளர் அலுவலகங்களிலும்

பொதுமக்களுக்குத் தேவையான அடிப்படை வசதி செய்து கொடுக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை–முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,31,83,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6193. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அறந்தாங்கி, மீமிசல் சார் பதிவாளர் அலுவலகங்களுக்குக் கட்டடங்கள் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை–முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,31,83,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6104. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காஞ்சிபுரம் மாவட்டத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கும் அனைத்து பதிவுத் துறை அலுவலகங்களும் சொந்தக் கட்டடத்தில் இயங்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை–முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,31,83,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4587. திரு. ஆர். கிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4278, திரு. எஸ். தாமோதரன்.



**திரு. எஸ். தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பத்திரப் பதிவுக் கட்டணத்தைக் குறைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை–முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,31,83,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4104. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குடும்பத்தில் ஏற்படும் பாகப்பிரிவினைக்குப் பழைய முறையிலேயே முத்திரைத்தாள் கட்டணம் வசூலிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை–முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,31,83,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4140, திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரையில் பத்திரப்பதிவுக்கானத் தொகை மிகக் கடுமையாக உள்ளதால் முத்திரைத் தாள் கூடுதலாக விலை கொடுக்க உள்ளதை குறைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை–முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,31,83,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2984, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சாதாரண மக்கள் இடம் வாங்கி வீடு கட்டுகின்ற வகையில் முத்திரைத் தாள்களின் விலையை குறைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை-முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,31,83,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2738, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மஹால் பத்திரப்பதிவு அலுவலகத்தில் பத்திரம் எழுதுவோர், பொதுமக்கள் பயன்படுத்தி வந்த கழிப்பறையை சீர்செய்ய உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை-முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,31,83,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3100, திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3273, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வணிக வரி-முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு-பல நகர்ப்புறங்களில் அரசு நில மதிப்பீடு அதிகமாக உள்ளது. தற்சமயம் வறட்சியால் தொழிற்சாலைகள் இயங்காத நிலை உள்ள காரணத்தால் பணப் புழக்கம் இல்லாததால் நில மதிப்பில் சரிவு ஏற்பட்டுள்ளதைக் கருத்தில் கொண்டு அரசு நிர்ணயித்துள்ள விலையைக் குறைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை-முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,31,83,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3280, திரு. அ. அசோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6642, திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் மற்றும் வேட்டவலம் ஆகிய இடங்களில் உள்ள பத்திரப்பதிவு அலுவலகங்களுக்குக் கட்டடம் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை-முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,31,83,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4462, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "முத்திரைத்தாள் கட்டணத்தைக் குறைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை-முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,31,83,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7228, திரு. ஆ. ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகாசியில் பத்திரப்பதிவு அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தரவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை-முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,31,83,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

[2005 மார்ச் 23

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6839, திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தளி தொகுதி, கெலமங்கலத்தில் தற்போதுள்ள சார் பதிவாளர் அலுவலகத்தை தேன்கனிக்கோட்டைக்கு மாற்றாமல் தடுத்து நிறுத்தி, தொடர்ந்து அங்கேயே இயங்கச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை–முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,31,83,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7256, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் சார் பதிவாளர் அலுவலகம் நெருக்கடி அதிகமாக உள்ள ஒரு சந்தில் தற்போது இயங்கி வருவதை மெயின் ரோடில் வசதியான பெரிய கட்டடத்திற்கு மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை–முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,31,83,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

முற்பகல் 10–15

## (ஆ) கோரிக்கை எண் 29 – செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – எழுதுபொருள் மற்றும் அச்சு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 29, செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–எழுதுபொருள் மற்றும் அச்சு, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



2005 மார்ச் 23] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–எழுதுபொருள் மற்றும் அச்சு பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், வருவாய்க் கணக்கில், ரூ.54,71,22,000/– மற்றும் மூலதனக் கணக்கில், ரூ.1,00,01,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2829, திரு. அ. இரா. மலையப்பசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3560, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழக அரசின் எழுதுபொருள் அச்சுத் துறையின்மூலம் தயாரிக்கப்படும் எழுதுபொருட்கள், வெளி மாநிலங்களுக்கு விற்பனைக்கு அனுப்பி, வருவாய் ஈட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–எழுதுபொருள் மற்றும் அச்சு பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,71,22,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4738, திரு. டி.கே. இராஜா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5828, திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கராபுரம் தொகுதி முழுவதும் உள்ள அனைத்துப் பள்ளிகளுக்கும், எழுதுபொருள் அதிகமாக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–எழுதுபொருள் மற்றும் அச்சு பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,71,22,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6325, திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–எழுதுபொருள் மற்றும் அச்சு பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,71,22,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7122, திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3913, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாநில அரசு அச்சு மையங்களில் பழுதடைந்த கருவிகளையும், பழைய எழுத்துகளையும் புதுப்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–எழுதுபொருள் மற்றும் அச்சு பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,71,22,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5492, திரு. என்.ஆர். ரங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–எழுதுபொருள் மற்றும் அச்சு பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,71,22,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5530, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6505, திருமதி எ.எஸ். மஹேஸ்வரி.



**திருமதி எ.எஸ். மஹேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–எழுதுபொருள் மற்றும் அச்சு பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,71,22,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7272, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு அச்சகத் தொழிலாளர்களின் சம்பளத்தை உயர்த்தித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–எழுதுபொருள் மற்றும் அச்சு பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,71,22,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5028, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாநகரில் உள்ள பழமையான அரசு அச்சகத்தை நவீனப்படுத்துவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–எழுதுபொருள் மற்றும் அச்சு பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,71,22,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6640, திரு. கு. பிச்சாண்டி.

[2005 மார்ச் 23

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னையிலுள்ள அச்சுத் துறை அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—எழுதுபொருள் மற்றும் அச்சு பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,71,22,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6203, திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை அரசு அச்சகத்திற்குப் புதிய இயந்திரங்கள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—எழுதுபொருள் மற்றும் அச்சு பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,71,22,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6067, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னையில் உள்ள மைய அச்சகத்தினை நவீனப்படுத்தி, தேவையான பொறிகளைப் பெற்று, அரசுப் பாடநூல் நிறுவனத்தின்மூலம் வெளியிடப்பட்டுவரும் நூல்களை முன்புபோல அரசு அச்சகத்திலேயே அச்சிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—எழுதுபொருள் மற்றும் அச்சு பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,71,22,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3141, திரு. மே.ப. காமராஜ்.



2005 மார்ச் 23]

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாரமங்கலம் தொகுதி, தொளசம்பட்டி ஊராட்சியில், புதிதாக அரசு அச்சகம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—எழுதுபொருள் மற்றும் அச்சு பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,71,22,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

## (ஒ) கோரிக்கை எண் 36 – மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 36, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், வருவாய்க் கணக்கில், ரூ.35,30,02,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 3611, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எடப்பாடி தொகுதியில் கள்ளச் சாராயம் காய்ச்சி விற்பனை செய்பவர்கள், திருந்தி வாழ மறுவாழ்வுக்கு வழிவகை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,30,02,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4220, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,30,02,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4963, திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுவிலக்கு வழக்குகளில் கள்ளத்தனமாக மதுவை ஏற்றுமதி செய்து, கைது செய்யப்படும் குற்றவாளிகளுக்கு அபராதத் தொகையை அதிகமாக்கினால், மதுவிலக்கைச் சரியாக அமல்படுத்தலாம் என்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,30,02,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5856, திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கள்ளுக் கடைகளைத் திறந்து ஏழை மக்களைக் கள்ளச் சாராயத்திலிருந்து பாதுகாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,30,02,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3827, திரு. எச்.எம். ராஜு.



**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் பூரண மதுவிலக்கு அமல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,30,02,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6792, திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,30,02,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 412, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறை மலைப் பகுதிக்கு, கேரளாவில் இருந்து மதுபானம், கள்ளத்தனமாகக் கடத்திக்கொண்டு வந்து விற்கப்படுவதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,30,02,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4833, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் கிராமப்புறங்களில் திறக்கப்பட்ட அனைத்து அரசு மதுக் கடைகளையும் உடனடியாக மூட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. மு. கார்த்தி] [2005 மார்ச் 23

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,30,02,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6208, திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "டாஸ்மாக் கடைகளில் பணியாற்றும் பணியாளர்களுக்குச் சம்பளம் உயர்த்திக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,30,02,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6504, திருமதி எ.எஸ். மஹேஸ்வரி.

**திருமதி எ.எஸ். மஹேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் பூரண மதுவிலக்கு கொண்டு வரப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,30,02,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4272, திரு. எஸ். தாமோதரன்.

**திரு. எஸ். தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாட்டையும், வீட்டையும், குட்டிச்சுவராக ஆக்கும் மதுவை ஒழிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,30,02,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



2005 மார்ச் 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4404, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுபானங்களின் விலை, அதிகமாக இருப்பதால், கள்ளச் சாராயம் குடிக்க ஆர்வம் ஏற்படுவதால், IMFL மதுபானங்களின் விலையைக் குறைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,30,02,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6084, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு மதுக் கடைகளில் பணியாற்றும் பணியாளர்களுக்கு, 'பாதுகாப்புப் படி' எனத் தனியாக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,30,02,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3252, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு மதுபானக் கடைகளில் வேலை செய்கின்ற விற்பனையாளர் மற்றும் சூப்பிரவைசர்கள் ஆகியோருக்குச் சம்பள உயர்வு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,30,02,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2741, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுவினால் விளையும் கேடுகளை விளக்கி, குறும்படங்கள் தயார் செய்வதை ஊக்கப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,30,02,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 640, திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோயில்கள், பள்ளிகள் மற்றும் பொது மக்கள் பயன்படுத்தும் கிராமச் சாலைகள் சந்திப்பில் உள்ள மதுக் கடைகளை வேறு இடங்களில் மாற்றி அமைப்பது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,30,02,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3128, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகம் முழுவதும் புதியதாகக் கள்ளுக் கடை திறக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,30,02,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

## (ஈ) கோரிக்கை எண் 39 – வருவாய்த் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 39, வருவாய்த் துறை, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.





**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வருவாய்த் துறை பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், வருவாய்க் கணக்கில், ரூ.995,92,59,000/– மற்றும் மூலதனக் கணக்கில், ரூ.7,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

முற்பகல் 10–20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3626, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள வீடு இல்லாத மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஆதிதிராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.995,92,59,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4215, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதி, வலசை கிராமத்தில் 45 ஆண்டு காலமாக புறம்போக்கு நிலத்தில் குடியிருந்துவரும் இருளர் இன மக்களுக்குப் பட்டா வழங்குவது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.995,92,59,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

[2005 மார்ச் 23

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4922, திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.995,92,59,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6454, டாக்டர் ஆர். கோவிந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6988, திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7066, திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7239, திரு. க. பாரமலை.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.995,92,59,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3213, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.995,92,59,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



2005 மார்ச் 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3802, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டம், குந்தா தாலுகா, குந்தா ஊராட்சிக்கு உட்பட்ட கிண்ணக்கொரை கிராமம், தணியக்கண்டியில் வசிக்கும் ஆதிவாசிகளுக்குப் பட்டாக்கள் வழங்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.995,92,59,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5590, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2778, திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3938, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.995,92,59,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3135, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், மேச்சேரி சிறப்பு ஊராட்சியில் மாரியம்மன், ஈஸ்வரன், பெருமாள் கோயில் நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. அரசுக்குப் பணம் செலுத்துவதில்லை. எனவே, மேற்படி நிலங்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டு அரசுக்கு வருவாயைப் பெருக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.995,92,59,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6820, திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேன்கனிக்கோட்டை வட்டத்தில் விவசாயிகளின் நலன் கருதி விவசாய புறம்போக்கு நிலங்களுக்குப் பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.995,92,59,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4898, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பட்டா மாறுதல் பதிவு செய்தவுடன் பத்திரப் பதிவு அலுவலகத்திலேயே பொதுமக்களுக்கு உரிய சான்றிதழ் கொடுக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.995,92,59,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7216, திரு. ஆ. ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகாசி தொகுதியில் பட்டா மாற்றல் தொடர்பான மனுக்களின்மீது உரிய நடவடிக்கை எடுப்பதில் ஏற்படும் காலதாமதத்தைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"வருவாய்த் துறை பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.995,92,59,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5890, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறை தொகுதியில், கோட்டூர் சிறப்பு ஊராட்சி பகுதியில் நீண்ட நாட்களாகக் குடியிருப்பவர்களுக்கு பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.995,92,59,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6759, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புறம்போக்கு நிலங்களில் குடியிருந்துவரும் ஏழைகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.995,92,59,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6644, திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணமாலை மாவட்டம், காட்டுமலையனூர் மற்றும் கிக்கலூர் ஆகிய இடங்களில் வசிக்கும் அருந்ததி இன மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.995,92,59,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5992, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிராம நிர்வாக அலுவலர்களுக்கு, அலுவலகம் அருகில் குடியிருப்பு கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.995,92,59,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6503, திருமதி எ.எஸ். மஹேஸ்வரி.

**திருமதி எ.எஸ். மஹேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.995,92,59,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2037, திரு. எ.வ. வேலு.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள தாலுகா அலுவலக கட்டடங்களைச் சீர்செய்வது தொடர்பாக" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.995,92,59,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 642, திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பல ஆண்டுகளாக அரசு நிர்ணயித்த பணத்தைச் செலுத்தியவர்களுக்கும் பட்டா அளிக்காதது தொடர்பாக" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.995,92,59,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2731, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வறுமைக்கோட்டிற்குக் கீழிருக்கும் அனைத்து ஏழை மக்களுக்கும் இலவச வேட்டி, சேலை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.995,92,59,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3250, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வறட்சியின் காரணமாக பாதிக்கப்பட்ட பகுதிகளின் நில வரியினை இரத்து செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.995,92,59,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6210, திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அறந்தாங்கி வட்டாட்சியர் அலுவலகம் பழைய கட்டடமாக உள்ளதால் புதிய கட்டடம் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.995,92,59,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7264, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர், தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வறட்சி நிலவுவதால் நில வரியைத் தள்ளுபடி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.995,92,59,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4097, திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாநகராட்சி, 25–வது டிவிஷன் நெடுஞ்சாலை அலுவலகத்திற்கு அருகிலுள்ள மக்களுக்கு உடனடியாக பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.995,92,59,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4595, திரு. ஆர். கிருஷ்ணன், இருக்கையில் இல்லை.



## (உ) கோரிக்கை எண் 49 – இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 49, இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத் தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.2,010,76,03,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 3706, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இயற்கைச் சீற்றங்களினால் ஏற்படும் துயரத்தினைத் தணிக்க வழங்கப்படும் நிவாரண நிதியினை காலதாமதமின்றி உடனடியாக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,010,76,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4180, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மழை, வெள்ளப் பெருக்கு, தீ விபத்து போன்றவற்றால் பாதிக்கப்படுவோருக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகையோடு வீட்டுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களையும் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,010,76,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1929, திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,010,76,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5988, திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,010,76,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6085, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செங்கற்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம், புதுப்பட்டினம்–சட்ராஸ் போன்ற பகுதிகளில் கடற் பேரலைகளினால் ஏற்பட்ட இழப்பினை ஈடுகட்ட வழங்கும் இழப்பீட்டுத் தொகை வழங்கும் அளவினை அதிகரித்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,010,76,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7234, திரு. ஆ. ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,010,76,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3206, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,010,76,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3754, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டத்தில் ஒவ்வோர் ஆண்டும் இயற்கையின் சீற்றத்தால் பர்லியார் சாலை பெரிதும் பாதிப்புக்குள்ளாவதால் ஊட்டி–கோவை மூன்றாவது சாலைத் திட்டம், ஊட்டி, கைகாட்டி ஆரகுச்சி–தூதூர்–கொலகம்பை–பழனியம்மா எஸ்டேட் பால்மர லீசு–முள்ளி–காரமடை–வழியாக கோவை செல்லும் சாலையை உடனடியாகத் திறப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,010,76,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6249, திரு. சி. சண்முகம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5898, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இயற்கைச் சீற்றங்கள் ஏற்பட்டால் உடன் செலவு செய்ய, அரசு ஏற்கெனவே அரசின் இருப்பில் பெரிய அளவில் தொகையை வைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. கோவை தங்கம்] [2005 மார்ச் 23

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,010,76,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7257, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வீடுகள் தீயினால் எரிந்துபோனால், வீட்டுக்கு ரூ.2,000/– என்று நிதி வழங்குவதை ரூ.5,000/– என்று உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,010,76,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6803, திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடந்த மூன்று ஆண்டுகளாக வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 50% பேருக்கு நிவாரணத் தொகை வழங்கப்பட்டு, மீதமுள்ள 50% பேருக்கு நிவாரணத் தொகை வழங்கப்படாததை, உடனடியாக வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,010,76,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 649, திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இயற்கைச் சீற்றத்தால் குடிசைகளை இழந்தோருக்கு உதவித் தொகையை உயர்த்திக் கொடுப்பது தொடர்பாக" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,010,76,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



2005 மார்ச் 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6502, திருமதி எ.எஸ். மஹேஸ்வரி.

**திருமதி எ.எஸ். மஹேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தீ விபத்தால் பாதிக்கப்படும் மக்களுக்கு ரூ.2,000/– மட்டுமே இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டு வருவதை மாற்றி, உண்மையான இழப்பின் அடிப்படையிலே இழப்பீட்டுத் தொகையை உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,010,76,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6648, திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சுனாமி போன்ற இயற்கைச் சீற்றம் ஏற்படும் நேரங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய துயர் துடைப்பு நடவடிக்கைகள் குறித்த வழிகாட்டி நெறிமுறைத் திட்டம் வகுக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,010,76,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2767, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சுனாமி ஆட்கொல்லிப் பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் முறையாகக் கிடைக்க அனைத்துக் கட்சி கண்காணிப்புக் குழுக்கள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,010,76,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3028, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், மேச்சேரி ஒன்றியத்தில் கடுமையான வறட்சியின் காரணமாக தக்காளி பயிர் செய்த விவசாயிகளுக்கு மிகுந்த நஷ்டம் ஏற்பட்டதால், அதைக் கண்டறிந்து நஷ்டஈடு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,010,76,03,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3243, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வறட்சி, வெள்ளம், சுனாமி போன்ற இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க அதிகப்படியான நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,010,76,03,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5459, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டத்தில் மழைக் காலங்களில் ஏற்படும் மண் சரிவைத் தடுத்து நிறுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,010,76,03,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5012, திரு. மு. கார்த்தி.



**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சுனாமியால் படகு, வலை ஆகியவற்றை இழந்த மீனவர்களுக்கு உடனடியாக படகு, வலை போன்றவற்றை அரசு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,010,76,03,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4094, திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தொடர்ந்து வரும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள கோவை, மேட்டுப்பாளையம், அவினாசி, திருப்பூர் மற்றும் பல்லடம் தாலுகாக்களுக்கு பாண்டியாறு-புன்னம்புழா நீர்ப்பாசனத் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,010,76,03,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

### (ஊ) கோரிக்கை எண் 34 – பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 34, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, மாண்புமிகு நிதி அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.24,88,90,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3310, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தற்போது காலியாக உள்ள பணியிடங்களுக்கு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின்மூலம் அலுவலர்களை நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,88,90,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4222, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகம் முழுவதும் நல்லமுறையில் பொதுமக்களுக்கு சேவை மனப்பான்மையுடன் பணியாற்றும் அரசு அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கு ஒவ்வொரு வருடமும், அரசு பரிசுகள் வழங்கி ஊக்குவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,88,90,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

முற்பகல் 10–25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4918, திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,88,90,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5123, திரு. மு. கார்த்தி.



**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள காவல் துறை, ஜெயில் வார்டன் மற்றும் அரசுப் பணிகளுக்கு அனுமதிக்கும் உயர்வயது வரம்பை ஐந்து வருடம் உயர்த்தி அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,88,90,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5847, திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு முழுவதும் அரசு அலுவலகங்களில் காலியாக உள்ள பணியாளர்களின் பணியிடங்களை உடன் நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,88,90,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3217, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,88,90,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5474, திரு. என்.ஆர். ரங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. என்.ஆர். ரங்கராஜன்] [2005 மார்ச் 23

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,88,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6793, திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,88,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6039, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்மூலம் "தொகுதி-4" பணியிடங்களை உடனடியாக நிரப்ப, தடை ஆணையை நீக்கி தேர்வு நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,88,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6639, திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசுப் பணியாளர்களின் பணி தொடர்பான ஆணைகளைத் தொகுத்து வெளியிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,88,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6206, திரு. ப. அரசன்.



2005 மார்ச் 23]

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசுத் துறைகள் அனைத்திலும் காலியாகவுள்ள பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,88,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5924, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பணியாளர்கள் அலுவலகத்திற்கு பணிக்காக காலையில் உரிய நேரத்திற்கு வரவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,88,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 639, திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பல ஆண்டுகளாக தற்காலிகமாகப் பணியாற்றும் பணியாளர்களை வரன்முறைப்படுத்துவது தொடர்பாக" விவாதிகக, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,88,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7207, திரு. ஆ. ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு அலுவலகங்களில் ஏற்பட்டுள்ள காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,88,90,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4098, திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தகவல் பெறும் உரிமைக்கான சட்டம் இயற்றப்பட்ட பின்புகூட, தகவல் கோரும்போது அதனை வழங்காத அலுவலர்கள்மீது நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,88,90,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3732, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டத்தில் உள்ள அரசுப் பணிகளில் காலியாகவுள்ள பணியிடங்களை உடனே நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,88,90,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3254, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பணியாளர்களின் குறைகளை அறிந்து அவ்வப்போது அவற்றைத் தீர்க்க வேண்டி பணியாளர் பிரதிநிதிகளைக் கொண்ட குழு ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,88,90,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3137, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் பணியாளர்கள் மிகவும் குறைவாக இருப்பதால், மேற்படி ஒன்றியத்தில் பணியாளர்களை அதிகப்படுத்தும் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,88,90,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2730, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேர்வாணையத்தின்மூலம் தேர்வு செய்யப்பட்டு காத்திருப்போரை உடனடியாகப் பணியில் அமர்த்தவும், காலிப் பணியிடங்களை நிரப்பி ஊழியர்களின் வேலைப் பளுவைக் குறைக்கவும் வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,88,90,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிக வரித் துறை–முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு, செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–எழுதுபொருள் மற்றும் அச்சு, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, வருவாய்த் துறை மற்றும் இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு ஆகியன பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே

கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்புகளை* நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அவையிலே தரப்பட்டிருக்கிறது. தமிழிலே உள்ள கொள்கை விளக்கக் குறிப்பை** நான் அவையிலே படித்ததாக ஏற்று, அதைப் பதிவு செய்ய வேண்டுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்தைக் கேட்டு, பின்னர் என் பதிலைத் தருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தப் பேரவையில் வருவாய்த் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை மானியத்தின்மீது பேசுகின்ற வாய்ப்பினை வழங்கிய தலைவர் கலைஞர் அவர்களுக்கும், தளபதி ஸ்டாலின் அவர்களுக்கும், தங்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு வருவாய்த் துறை என்பது ஒரு தாய்த் துறை. ஆனால, அந்தத் துறையிலே இன்றைக்கு மக்களுக்குத் தேவையான, அடிப்படையான பணிகள் நடைபெறுகிறதா என்பது ஒரு கேள்விக்குறியாகத்தான் இருக்கிறது. 2000 ஆம் ஆண்டிலே பட்டா பாஸ் புத்தகம் வழங்குகிற ஒரு திட்டம் விவசாயிகளுக்காகத் தொடங்கப்பட்டு அதற்காக பணங்கள் எல்லாம் வசூலிக்கப்பட்டு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி, எல்லா மானியக் கோரிக்கைகளையும் சேர்த்தே பேசுங்கள்.

---

* 539 முதல் 558 வரையுள்ள பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

** 559 முதல் 747 வரையுள்ள பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.



**திரு. கு. பிச்சாண்டி:** பணங்கள் எல்லாம் வசூலிக்கப்பட்டு நான்கு ஆண்டுகாலமாகிறது. ஆனால் அவர்களுக்கான பட்டா பாஸ் புத்தகம் வழங்குகின்ற அந்தப் பணி இதுவரை தொடங்கப்படாமல் இருப்பது விவசாயிகள் மத்தியிலே மிகப் பெரிய அதிருப்தியை இன்றைக்கு ஏற்படுத்தி இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, இலவச வீட்டுமனைத் திட்டம். தலைவர் கலைஞர் ஆட்சியிலே சுமார் 7 இலட்சத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன. ஏரிகள், குளங்கள், மந்தைவெளிப் புறம்போக்குகள் இவற்றில் எல்லாம் 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட வீட்டுமனைப் பட்டாக்கள் அன்றைக்கு வழங்கப்பட்டன. ஆனால், இந்த நான்கு ஆண்டுகாலமாக 80 ஆயிரம் வீட்டுமனைப் பட்டாக்கள்தான் நீங்கள் வழங்கியிருக்கிறீர்கள் என்பது மிகவும் குறைவான அளவு என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலை இங்கே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே, இந்த அவையில் இதுகுறித்து கேள்வி கேட்கப்பட்டு, நான் விளக்கமாகப் பதில் கூறியிருக்கிறேன். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2001 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பின்னால், இதுவரை 3 இலட்சத்து 63 ஆயிரம் வீட்டுமனைப் பட்டாக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–30

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரத்திலே வீட்டுமனைப் பட்டாக்களே வழங்கப்படுவதில்லை. புறம்போக்குகளை மாற்றம் செய்து வழங்குகின்ற அந்தப் பட்டாக்கள் இன்றைக்கு வழங்கப்படுவதில்லை என்பதைத்தான் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, குடும்பத் தலைவரை இழந்துவாடும் குடும்பங்களுக்கு உதவிடும் திட்டத்தின்கீழ் 2002–2003–ல் இந்த அரசால் உதவிகள் எதுவும் வழங்கப்படவில்லை. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தவே இல்லை.

உதவித் தொகை கேட்டு மனுச் செய்தவர்கள் 353 பேர். 2003 ஆம் ஆண்டில் 161 பேர். 2004 ஆம் ஆண்டில் 296 பேர். 2005-ல் இதுவரை 57 பேர். மொத்தம் 867 பேர் மனு கொடுத்திருக்கிறார்கள். ஆனால், பணம் வழங்கியது எங்களுடைய தாலுகாவிலே 282 பேருக்குத்தான். ஆக, நான்கு ஆண்டு காலமாக முதலில் கொடுத்தவர்களுக்கே இதுவரை பணம் வழங்கப்படாமல் பல மனுக்கள் இன்றைக்கு இருக்கின்றன என்பது உண்மையான நிலவரம். ஆகவே, இன்றைக்கு வருவாய்த் துறையிலே முதியோர் உதவித் திட்டம் என்பது, யாராவது இறந்தால்தான் வழங்கப்படுகிறது. இப்படி விதவைகள் உதவித் திட்டம் இவையெல்லாம் ஒருவர் இல்லையென்றால்தான் அடுத்தவருக்கு வழங்குகின்ற நிலை இருக்கின்றது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், நில ஆக்கிரமிப்பு. இன்றைக்கு மதுரையிலே நீதிமன்றம் சொல்லி இடிக்கப்படுகிறது. ஆனால், ஆக்கிரமிப்பாளர்களைத் தடுப்பதற்கு இந்தத் துறை என்ன நடவடிக்கை எடுக்கிறது? ஆரம்பத்திலேயே இதைத் தடுப்பதில்லை. அதற்காக தனியாக ஒரு நிர்வாக அலகு.....

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலை ஓரங்களில் பொது மக்களுக்கு இடையூறாக இருக்கின்ற ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டுமென்று சென்னை உயர் நீதிமன்றக் கிளையினுடைய மதுரைக் கிளை உத்தரவு போட்டிருக்கின்றது. தற்போது அந்தப் பகுதியில் ஏதோ நம்முடைய ஆட்சியில், 2001-க்கு பின்னால்தான் அந்த ஆக்கிரமிப்புகள் எல்லாம் வந்தன என்கின்ற தோரணையில் மாண்புமிகு உறுப்பினரவர்கள் பேசிக் கொண்டிருக்கின்றார்கள். இந்த நாடு உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து ஆக்கிரமிப்புகள் உருவாகி வந்திருக்கின்றன என்பதனை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் இப்போது சொல்வது, ஆக்கிரமிப்பு ஆரம்பிக்கின்ற பகுதியிலே தடுப்பதற்காகத் தனியாக அலுவலர்களை நியமித்து—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆக்கிரமிப்பு என்பது கடந்த பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் இருந்திருக்கின்றது. காங்கிரஸ் ஆட்சியில் இருந்திருக்கின்றது. தி.மு.க. ஆட்சியில் இருந்திருக்கின்றது. அனைத்திந்திய அண்ணா திராவிட



முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் இருந்திருக்கின்றது. அத்தனை ஆட்சிகளிலும், அந்தக் காலத்திலிருந்து இன்றுவரை ஆக்கிரமிப்புகள் இருக்கத்தான் செய்கின்றன. புதியதாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பின்னால் ஆக்கிரமிப்புகள் வரவில்லை என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பிச்சாண்டி, 50, 60 வருடங்களாக இருந்ததைப் பூராவும் இடித்துவிட்டார்கள்.

**திரு. கு. பிச்சாண்டி:** இனிமேலாவது அதற்காக அலுவலர்களை நியமித்து மேற்கொண்டு நடைபெறாமல் இருப்பதற்கான ஆலோசனைகள் வழங்க வேண்டும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

பல கிராமங்களிலே இன்றைக்கு V.A.O. பணி இடங்கள் காலியாக இருக்கின்றன. புதியதாகப் போடப்படவில்லை. அதனால் பல கிராமங்களை அவர்கள் in-charge எடுத்துக் கொண்டிருக்கின்ற காரணத்தால், விவசாயிகளுக்கான பல பணிகள் நடைபெறவில்லை. அதுவும் இன்றைக்கு நம்முடைய மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலே, வருவாய்த் துறையில் கணினிமூலம் அடங்கல், சிட்டா இவை எல்லாம் வழங்குவதற்காக மனு செய்தும், அங்கே அதற்கான பணியாளர்கள் நியமிக்கப்படாததால், விவசாயிகளுக்கு ஒரு வாரமானாலும் கிடைக்காத நிலை இன்றைக்கு இருக்கிறது.

அதேபோல், இன்றைக்கு வாரிசு சான்றிதழ் வேண்டுமென்று கேட்டு ஒருவர் சென்னையிலே அதற்காக மனு செய்து 4 மாதங்கள் ஆகின்றன. ஆனால், 4 மாதங்களாக இன்றைக்குவரை அவர்களுக்கு வாரிசு சான்றிதழ் வழங்கப்படாத நிலைதான் இங்கே இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்குக் காரணம், பல பதவிகள் இன்றைக்கு நிரப்பப்படாமல் இருக்கின்றன. D.R.O. promotion எல்லாம் போடப்படாமல், அரசியல் காரணங்களுக்காக அவை எல்லாம் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. தாசில்தார்கள் போன்ற பல அரசு அலுவலர்களுடைய பணியிடங்கள் காலியாக இருக்கின்ற காரணத்தால், இப்படிப்பட்ட பணிகள் இன்றைக்கு நடைபெறாமல் இருக்கின்றன என்பதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். அதே போல—

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் பணியாளர்களினுடைய சதவீதம் பிற மாநிலங்களோடு ஒப்பிடும்போது மிக அதிகமாக இருக்கிறது, அதைக் குறைக்க வேண்டுமென்று மைய அரசும், நிதி நிறுவனங்களும் வலியுறுத்துகிற காரணத்தால், அந்த ratio அடிப்படையில் பணிகள் இருக்க வேண்டுமென்ற முறையில் இது கண்காணிக்கப்படுகிறது. எங்குமே, நிவாரணப் பணிகளோ, வளர்ச்சிப் பணிகளோ, சமுதாயப் பணிகளோ தடைபடவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இப்போது வழங்குகின்ற உதவித் தொகை அவர்கள் குடிசைகளைக் கட்டுவதற்குக்கூடப் போதாத ஒரு நிலை இருக்கிறது. ஆகவே, தீயினால் பாதிக்கப்படுகின்ற சாதாரண மக்களுக்கு அதிக அளவிலே நிதிகளை ஒதுக்கித் தரவேண்டுமென்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 10–35*

அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு பேரழிவு இடர்ப்பாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. சுனாமி பாதிப்பு திடீரென்று வந்து மிக அதிக அளவிலே நம்முடைய மக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். அதற்கான நிவாரண நடவடிக்கைகள் அரசுமூலம் எடுக்கப்படுகின்றது என்று சொல்லப்படுகின்றது. ஆனால், நேற்றைக்குக்கூட கடலூர், தேவனாம்பட்டினத்திலே நடைபெற்ற கட்டுமரங்களுக்கான நிதி உதவி வழங்குகின்ற திட்டத்திலே தகராறு ஏற்பட்டு, அங்கே போலீசார் தடியடி நடத்தக்கூடிய ஒரு நிலைமை. அதுமட்டுமல்லாமல், நாகப்பட்டினம் கலெக்டர் திரு. ராதாகிருஷ்ணன் அவர்கள் பேட்டியிலே சொல்லியிருக்கின்றார்கள். வேதாரண்யம், கோடியக்கரை பகுதிகளிலே இருக்கின்ற 4, 5 கிராமங்களிலே இந்த நிவாரண உதவிகள் தவறுதலாக வழங்கப்பட்டிருக்கின்றன, அவற்றையெல்லாம் நாங்கள் திரும்ப வசூல் செய்வதற்கான நடவடிக்கையை எடுக்கின்றோம் என்று அவர்கள் பேட்டியிலே சொல்லியிருக்கின்றார்கள். ஆக, இன்றைக்கு இந்தப் பேரிடர் நிவாரண நிதியில் இருக்கின்ற அந்தப் பட்டியலை எடுப்பதில் எந்த அளவுக்கு மோசமாக இருக்கின்றது என்றால், ஒரு பத்திரிகையிலே நான் கார்ட்டூன் பார்த்தேன். அந்தக் கார்ட்டூனிலே இரண்டு ஆவிகள் பேசிக்கொள்கின்றன. ஏற்கெனவே வாக்காளர் பட்டியலிலேதான் நம் பெயரை சேர்த்து ஏமாற்றினார்கள். இன்றைக்கு சுனாமி பட்டியலிலேயும் நம் பெயரை சேர்த்து ஊழல் பண்ணி...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பிச்சாண்டி, என்ன உங்கள் இயல்புக்கு மாறாக பேசிக் கொண்டிருக்கின்றீர்கள். நீங்கள் கார்ட்டூனில் வந்ததையெல்லாம் இங்கே சொல்ல முடியாது.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு பத்திரிகைகளில் வருகின்ற கார்ட்டூனையெல்லாம் அடிப்படையாக வைத்து மாண்புமிகு உறுப்பினர் பேசுகின்ற நிலையை எடுத்தார் என்றால், நாங்களும் அதுபற்றி பேசவேண்டிய கட்டாய சூழ்நிலை இந்த மாமன்றத்தில் ஏற்படும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைத் தவிர்த்திட வேண்டும். நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர், அந்தப் பகுதியில் சில குறைகள் இருந்தன. அவை கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன என்பதைத்தான் அவர் அங்கே ஆதாரபூர்வமாக சொல்லியிருக்கின்றாரேயொழிய, தவறு நடக்கவேயில்லை என்று சொல்லவில்லை. சில இடங்களில் சில அதிகாரிகளிடம் உண்மைக்கு மாறான தகவல்களை அங்கிருக்கின்ற பொதுமக்கள் கொடுக்கின்றபோது, அதை ஏற்று கொடுத்திருக்கின்றார்கள். மீண்டும் அது சரிசெய்யப்பட்டபோது, அந்தத் தவறு கண்டுபிடிக்கப்பட்டு, திருத்தி அமைக்கப்பட்டு, கொடுக்கப்பட்ட தொகை மீண்டும் பெறப்பட்டிருக்கின்றது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருக்கு நன்றி. நான் அதைத்தான் சொன்னேன். தவறுகள் நடைபெறுகின்றன என்றால், தவறுகளைத் திருத்த வேண்டுமென்பதற்காகத்தான் அதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இதில் அரசின் தவறு ஏதுமில்லை. நிவாரணம் பெற்ற பொதுமக்கள் தவறான தகவல்களைத் தந்து நிதி உதவியைப் பெற்றிருக்கின்றார்கள். திரும்பவும் அது சரிசெய்யப்பட்டபோது, அந்த நிதியைத் திரும்பவும் அரசே பெறுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு, அந்த நிதி மீண்டும் பெறப்பட்டிருக்கின்றது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோல பேரழிவுகள் ஏற்படுவதைத் தவிர்க்க விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலே பள்ளிப்பாடப் புத்தகங்களிலே குழந்தைகள்

தெரிந்துகொள்ளும் வகையில் அதற்கான பாடத் திட்டங்களிலே, அவற்றையெல்லாம் விளக்கமாக எடுத்துச் சொல்லவேண்டும். ஏனென்றால், அதிக அளவிலே இதுபோன்ற பூகம்பங்கள், புயல், இவையெல்லாம் வந்தால்தான் நடவடிக்கை எடுக்கின்றோம் என்கின்ற அந்த நிலை மாறி, அதற்கு முன்பாக காக்கின்ற நடவடிக்கை எடுப்பதிலே அரசு கவனம் செலுத்த வேண்டுமென்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுமட்டுமல்ல, வறட்சி, புயல், வெள்ளம் ஆகிய இவற்றால் நம்முடைய மாநிலம் 4 ஆண்டுகளாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், வறட்சிக்குள்ளான தென்னை மரங்களுக்குப் பணம் வழங்குகின்றோம் என்று சொல்லி மத்திய அரசினுடைய பணம்தான் வழங்கப்பட்டிருக்கின்றதே தவிர, மாநில அரசு துயர் துடைப்பு நிதியில் இருந்து நிதியுதவி வழங்கியிருக்கிறதா என்றால் இல்லை. பல விவசாயிகள் இன்றைக்கு...

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு முழுமையாக தேசிய சேற்றங்கள் துயர் துடைப்பு நிதியிலிருந்து தருவதில்லை. அவர்கள் ஒரு பங்கீடு தருகின்றார்கள். மாநில அரசின் நிதியிலிருந்து நாமும் ஒரு பங்கீட்டை அதில் சேர்த்துக்கொண்டு அந்த நிதியைத்தான் தற்போது வழங்கிக் கொண்டிருக்கின்றோம். ஏதோ மத்திய அரசுதான் இந்த வறட்சி, வெள்ளத்திற்கு நிதி தருவதுபோல் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். கடந்த 2004 அக்டோபர், நவம்பர் மாதங்களில் இரண்டு, மூன்று தினங்களில் பெய்த கடும் மழையினால் ஏற்பட்ட வெள்ளச் சேதத்திற்கு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மத்திய அரசுக்கு 411 கோடி ரூபாய் அளவிற்கு விரிவான ஒரு அறிக்கையை அனுப்பியும் இதுவரை எந்த நிவாரண உதவியும் வந்து சேரவில்லை. ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள், பாதிக்கப்பட்ட உயிரினங்கள், கால்நடைகள், விவசாயத்திற்கு என்று அத்தனைக்கும் நிவாரணம் வழங்கியுள்ளார்கள். அது மாநில அரசின் நிதியிலிருந்துதான் வழங்கப்பட்டது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம் கடுமையான வறட்சியில் 4 ஆண்டுகளாக இருக்கிறது. அதற்கான குடிநீர்த் திட்டங்களோ, அந்த வறட்சியைப்



போக்குவதற்கான பணிகளோ அந்த நிதியின்மூலம் எங்கே நடைபெற்றிருக்கின்றது? அந்த அளவுக்கு நடந்திருந்தால், மக்கள் தண்ணீருக்கு அலையக்கூடிய நிலை இன்றைக்கும் வேலூர் மாவட்டத்தில் இருக்குமா என்பதையும் நான் மாண்புமிகு அமைச்சரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் ஏற்கெனவே வேலூர் மாவட்டத்தில் ஏற்பட்டிருக்கின்ற கடும் குடிநீர்ப் பற்றாக்குறையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துரைத்திருக்கின்றார்கள். உடனே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முன்னிலையில், நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளை அழைத்து இரண்டு நாட்கள் நீண்ட ஆய்வு செய்தார்கள். வேலூர், தர்மபுரி மற்றும் சில மாவட்டங்களில் குடிநீர்ப் பிரச்சினை இன்னும் ஓரிரு மாதங்களில் வருவதை எதிர்நோக்கி, கிட்டத்தட்ட 16 மாவட்டங்களில் அதனை எதிர்பார்த்து, மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் அறிக்கை கேட்டிருக்கின்றோம். அறிக்கை இன்னும் ஓரிரு தினங்களில் வந்தவுடன், உடனே நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை நான் இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10–40

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்படி சுனாமி பாதிப்பு வந்ததோ, அதைப்போல அரசு ஊழியர்கள்மீது இந்த அரசின்மூலமாக சுனாமி வந்ததன் காரணமாக, 999 பணியாளர்கள் பணிநீக்கக் காலத்தை வேலைநாட்களாக மாற்ற வேண்டும் என்று கேட்கின்றேன். 50 விழுக்காடு அகவிலைப் படியை...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி நெருக்கடியை உருவாக்கி, கஜானாவை காலி செய்து, அரசு ஊழியர்களுக்கு எதிராக சுனாமி தாக்குதலை நீங்கள் நடத்திவிட்டுச் சென்றுவிட்டீர்கள். நாங்கள் நிவாரணத்தைத் தந்து கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களை ஏதோ சுனாமி தாக்கியதாக ஓர் உவமையோடு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அரசு

ஊழியர்களும் மனிதாபிமானம் மிக்கவர்கள்தான் என்பதை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நன்றாகவே உணர்ந்திருக்கிறார்கள். அவர்கள் பூரண ஆரோக்கியத்துடன், நலமுடன் வாழ வேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய நிலையான கொள்கை என்பதனையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 999 பேருக்கு பணிநீக்கக் காலத்தை வேலை நாட்களாக மாற்ற வேண்டும் என்று கோரிக்கை வைக்கிறேன்.

அதேபோல, இன்றைக்கு ஒரு இலட்சம் பேர், அவர்களுடைய வாரிசுகள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். காவல் துறையினருக்கு எப்படி நீங்கள், தளர்த்தி வாரிசுகளுக்கு வேலை வழங்கியிருக்கிறீர்களோ, அதேபோல அரசு ஊழியர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும். அவர்களுடைய வாரிசுகள் இன்றைக்கு வேலை இல்லாமல் இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசு ஊழியர்கள்தான் ஒரு நிர்வாகத்தை செம்மையாக நடத்தக் கூடியவர்கள். ஆகவே, அவர்களுடைய அந்தக் குறைபாடுகளை நீங்கள் நீக்கி, அவர்களை அரசோடு ஒருங்கிணைந்து செயலாற்றுவதற்கான அந்த வாய்ப்பினை உருவாக்க வேண்டும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்லாமல், மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை. *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பிச்சாண்டி, இரண்டு மணித் துளிகளில் முடித்துவிடுங்கள்.

**திரு. கு. பிச்சாண்டி:** அன்றைக்கு நம்முடைய அண்ணன் ஆற்காட்டார் அவர்கள் சொன்னார்கள். State Excise–2,313,–1,857 கோடி என்று நிதி நிலை அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். 456 கோடி ரூபாய் குறைகிறது என்று 2003–2004–க்கு சொன்னார்கள். இந்த மதுவிலக்குத் துறையினுடைய Demand–லே அதற்கான விளக்கம் வரும் என்று எதிர்பார்த்தோம். இதுவரை எதுவுமே வரவில்லை. ஆக, 456 கோடி ரூபாய் மதுவிலக்கிலே குறைந்திருப்பதற்கு என்ன காரணம் என்று–



**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் இதற்கு நீண்ட விளக்கம் கொடுத்தேன். அதற்குக்கூட விளக்கம் மிக நீண்டதாக இருக்கிறதே என்று குறைபட்டுக் கொண்டார்கள். மீண்டும் என்னுடைய பதிலில் இதற்கு விரிவான விளக்கம் இருக்கிறது. நிதியாண்டிற்கும் ஆயத்தீர்வைத் துறையிலே வருவாய் ஆண்டுக்கும் வித்தியாசங்கள் இருக்கின்றன. மாதங்கள் வித்தியாசம் இருக்கின்றன. ஆகவே, அதை கணக்கிட்டு என்னுடைய பதிலில் பதிலுரையாகத் தருகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பிச்சாண்டி, இரண்டு மணித் துளிகளில் முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. கு. பிச்சாண்டி:** ஐந்து நிமிஷம் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இல்லை. இன்னும் ஆறு உறுப்பினர்கள் பேச வேண்டும்.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதியமைச்சர் வரியில்லா பட்ஜெட் என்று சொல்கிறார். நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் மதுவிலக்கிலே பல கோடி ரூபாய் வருமானம் வந்திருக்கிறது என்று சொல்கிறார். ஒரு பெரியவர் சொல்வதைப்போல ஒரு கதை உண்டு. அதாவது, ஒரு முதியவர் பிராணிகளை வதைப்படுத்த வேண்டாம், அவை வாயில்லா ஜீவன் என்று சொல்கிறார். ஓர் இடத்திலே சென்று பார்க்கிறபோது, ஒரு பிராணியினுடைய காதிலே ஒருவர் பால் ஊற்றிக் கொண்டிருக்கிறார். ஏன் இப்படிச் செய்கிறாய் என்று கேட்கிற நேரத்திலே, அது வாயில்லா ஜீவன் ஆயிற்றே என்று அவர் சொல்கிறார். அப்படி தமிழக மக்கள் வாயில்லாத ஜீவன்களாக இருக்கின்ற காரணத்தால்தான், பல உதவித் திட்டங்களினுடைய பணம் வழங்கப்படவில்லை. மதுவிலக்கிலே பணத்தை, வரிக்குப் பதிலாக மதுவிலக்கின்மூலம் மது விற்பனையின்மூலம், வருமானம் பெறுகிறார்கள். இப்படி எல்லா நிலைகளிலுமே இந்த வருவாய்த் துறை பல்வேறு வகைகளிலே இன்றைக்கு தன்னுடைய பணிகளைச் செவ்வனே ஆற்றாமல் இருக்கிறது என்பதுதான் உண்மையான நிலைமை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, முத்திரைத்தாள். அதிலேகூட இன்றைக்கு பல பதவி உயர்வுகள் வழங்கப்படவில்லை. அதேபோல, எழுதுபொருள் அச்சுத் துறையிலேகூட நவீன இயந்திரங்கள் புகுத்தப்படவில்லை. இப்படிப் பல்வேறு நிலைகளிலே ஒவ்வொரு துறையிலும் இருக்கின்ற குறைபாடுகள் எல்லாம் நீக்கப்பட வேண்டும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்து, ஏழை எளிய மக்கள், இந்த அரசை நம்பி, அவர்களுடைய சமுதாயத் திட்டத்தை நம்பி வாழ்கிறார்கள். அதை நிறைவேற்றக்கூடியது வருவாய்த் துறை. ஆனால், பல ஆண்டு காலமாக அந்த மக்களுக்கான ஊதியங்கள், உதவித் தொகைகள் எல்லாம் சரியாக வழங்கப்படாமல் இருக்கின்ற அந்த நிலை மாறுவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி.

*முற்பகல் 10–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. இராஜரெத்தினம். திரு. பிச்சாண்டி, நீங்கள் சொன்ன கதைதான் புரியவில்லை எனக்கு. அப்புறம் வந்து கொஞ்சம் விளக்கம் சொல்லுங்கள்.

***திரு. ப. இராஜரெத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மெழுகாய் தான் உருகி, அழகாய் தமிழகத்தை உயர்த்த, அனுதினமும் பாடுபட்டு வரும் ஒப்பில்லா எங்கள் ஒளிவிளக்கே, தமிழ்நாட்டை இந்தியாவின் தலைநாடாய் செய்வதற்கு ஒரு நாளைக்குக் குறைந்தது 20 மணி நேரம் உழைத்து, இன்றைக்கு உத்தமத் தலைவியாக வலம் வந்து கொண்டிருக்கின்ற எங்கள் அன்புத் தலைவி தமிழக முதல்வர், தங்கத் தாரகை, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி என்னுடைய பணிவான வணக்கத்தையும், நன்றியையும் முன் வைத்து என் உரையைத் தொடங்குகின்றேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, சோகம், துரோகம், துளிர்க்கும் பகைமை, இவை சேர வரும்பொழுதும் நேரே எதிர் நிறுத்தி, நிர்மூலமாக்கிவரும் நித்தியத் தலைவிதான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. தமிழ், தமிழர், தமிழ்நாடு தானுயர, வரியில்லா வரவு–செலவுத் திட்டத்தைத் தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக புரட்சித் தலைவி கொடுத்ததன் வாயிலாக இன்றைக்குப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியிருக்கின்ற இந்த வரியில்லா வரவு–செலவுத் திட்டம், தமிழக மக்களுக்கு வேதமாய், வித்தகமாய், நாதமாய், நற்பேறாய் திகழ்ந்து கொண்டிருக்கின்ற இந்த இனிய வேளையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற வருவாய்த் துறை,



பத்திரப் பதிவு, முத்திரைத்தாள், எழுதுபொருள் மற்றும் அச்சு, மதுவிலக்கு ஆயத்தீர்வை, பணியாளர் நலன் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர்த் தணிப்பு ஆகிய மிக முக்கிய மானியக் கோரிக்கைகள்மீது எனக்குப் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை முதலிலே உரித்தாக்கிக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்திரைத்தாள் மற்றும் பத்திரப் பதிவுத் துறையை எடுத்துக்கொண்டோம் என்று சொன்னால், இன்றைக்குப் புரட்சித் தலைவி அம்மாவினுடைய நல்லாட்சியிலே மிகுந்த சிறப்போடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற துறைதான் முத்திரைத்தாள் மற்றும் பத்திரப் பதிவுத் துறை என்பதை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகின்றேன். இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியிலே ஆவணப் பதிவிலும், முத்திரைத் தீர்வை நிருவாகத்திலும், தகவல் தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதால் பத்திரப் பதிவு நடைமுறைகள் எளிமையாக்கப்பட்டிருக்கின்றன என்பதை இந்த அவைக்கு நான் பணிவோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்றைக்குப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆளுகின்ற தமிழ் மாநிலத்திலேதான் இந்தத் துறையிலே Star Project என்று சொல்லப்படுகின்ற நட்சத்திரத் திட்டத்தின் வாயிலாக மாநிலத்திலே இருக்கின்ற 558 சார் பதிவகங்களிலே 300 சார் பதிவகங்கள் முழுமையாகக் கணினிமயமாக்கப்பட்டு இன்றைக்குப் பத்திரப் பதிவு மற்றும் முத்திரைத்தாள் துறையிலே முத்திரைப் பதித்த ஆட்சிதான் புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சி என்று சொன்னால் அது மிகையாகாது. (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்குப் புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியிலே 50 பத்திரப் பதிவு மாவட்டங்கள் முழுமையாக கணினி மயமாக்கப்பட்டிருக்கின்றன. எனக்கு முன்னாலே பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர் மாண்புமிகு திரு. பிச்சாண்டி அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். நான் பணிவோடு அவருக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். முந்தைய ஆட்சிக் காலங்களிலே வில்லங்கச் சான்று வழங்க வேண்டும் என்று சொன்னால் அதற்கு 8 நாட்கள் ஆகும். ஆனால், இன்றைக்குப் புரட்சித் தலைவி அம்மாவினுடைய நல்லாட்சியிலே, 5 நிமிடத்திலே வில்லங்கச் சான்றுகள் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதைப்போலத்தான்,

சொத்து மதிப்பிடல் முன்பு 30 நிமிடங்கள் இருந்த நிலைமை மாறி இன்றைக்கு 5 நிமிடங்கள். சான்று நகல் வழங்க முன்பு 4 நாட்கள் என்றிருந்தது. இன்று 5 நிமிடங்களாக ஆக்கப்பட்டிருக்கிறது. ஆவணப் பதிவைத் திரும்பப் பெறுகின்ற முறையில் 4 நாட்கள் இருந்த நிலைமை மாறி இன்றைக்கு 1 மணி நேரத்திலேயே ஆவணப் பதிவை நாம் பெறுகின்ற சூழ்நிலையைப் புரட்சித் தலைவி அம்மாவினுடைய நல்லாட்சியிலே இதையெல்லாம் சாதனையாகச் செய்திருக்கிறார்கள் என்பதை நான் இன்றைக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு டாஸ்மாக் என்கின்ற அந்த நல்ல துறை, தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தைப் பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. பிச்சாண்டி அவர்கள் சொன்னார்கள். கடந்த கால திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியிலே என்ன நடைபெற்றது என்பதை நாடறியும், நாட்டோர் அறிவார்கள். நல்லவர்கள் அனைவரும் அறிவார்கள்.

முற்பகல் 10–50

கடந்த கால திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியிலே ஏற்படுத்தப்பட்ட நிதி நெருக்கடி ஒரு புறம். அதைத் தாங்கி புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அற்புதமான திட்டங்களை வடிவமைத்துக் கொண்டிருக்கின்ற நேரத்திலேதான் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் திட்டமிட்டார்கள்; அரசு கஜானாவை முடக்க நினைத்தார்கள். இன்றைக்கு தமிழ்நாடு வாணிபக் கழகத்தின் மூலமாக, கடைகளை, சில்லரை விற்பனைக் கடைகளைத் திறப்பதற்காக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 29–11–2003 ஆம் ஆண்டு முதல் நடைபெறும் என்கின்ற ஆணையை அவர்கள் போட்ட நேரத்திலே, இதே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் சொன்னார்கள், கடையா! நடத்த முடியாது என்று சொன்னார்கள். அவர்களுடைய குறிக்கோள் எல்லாம் போலி மதுபானங்கள்மூலம் பலன் பெறவேண்டும். மதுக் கடைகளிலே, தனி இராஜ்ஜியத்தை நடத்த வேண்டும். அரசு வருமானத்தைத் தடுக்க வேண்டும். ஆனால், இவற்றையெல்லாம் மீறி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 29–11–2003 முதல் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் TASMAC மூலம், இன்றைக்கு 7,000 கடைகளைத் திறந்து, அந்த 7,000 கடைகளின்மூலமாக, இன்றைக்கு 33,600 பேர் வேலைவாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள் என்று சொன்னால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் படைத்திட்ட சாதனையை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



இன்றைக்கு அப்படி நியமிக்கப்பட்ட 33,600 பேர்களிலே, 10,419 பேர்கள் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள், அந்தக் கடைகளிலே பணிபுரிவதற்கு இன்றைக்கு நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள் என்று சொன்னால், பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்கும் தெரியும்; தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இந்தியத் திருநாடு முழுவதும் எத்தனை சதவிகிதம் வேலைவாய்ப்பிலே இட ஒதுக்கீடு கொடுக்கிறார்கள் என்பது அனைவருக்கும் தெரியும். 18 சதவிகிதம் வேலைவாய்ப்பிலே இட ஒதுக்கீடு என்று இருக்கின்ற நிலைமையை மாற்றி, இன்றைக்கு தமிழ்நாடு வாணிபக் கழகத்திலே 10,419 தாழ்த்தப்பட்ட ஊழியர்களை நியமித்ததன் வாயிலாக புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு 31 சதவிகிதம், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இந்த வேலைவாய்ப்பை வழங்கியிருக்கிறது.

பேரவைத் தலைவர் அவர்களே. ஆங்கிலத்திலே ஒரு வாக்கியத்தைச் சொல்வார்கள்; Expect victory and get victory என்று சொல்வார்கள். யார் வெற்றியை எதிர்பார்க்கிறார்களோ, அவர்களுக்குத்தான் வெற்றி கிடைக்கும் என்கின்ற அந்த சரித்திர வரிகளுக்கேற்ப புரட்சித் தலைவி அவர்கள், இன்றைக்கு 7,000 கடைகள் தமிழகம் முழுவதும், சிறப்பாக யார் தலையீடும் இல்லாமல், யாருடைய குறுக்கீடும் இல்லாமல், தங்குதடையற்ற ஒரு நல்ல சீர்மிகு சிறந்த நிர்வாகத்தின்மூலம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். 29–11–2002 முதல் 28–11–2003 வரை இந்தத் துறையிலே இன்றைக்கு மதுபான விற்பனைமூலம் கிடைத்த தொகை 3,825.99 கோடி ரூபாயாக இருந்த அந்த விற்பனை, 29–11–2003 முதல் 28–11–2004 வரை ஓர் ஆண்டு காலத்தில் 4,441 கோடியே 88 இலட்சமாக உயர்ந்து, அதன்மூலம் இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மாவினுடைய நல் அரசுக்கு ரூ.615.89 கோடி இலாபம் கிடைத்திருக்கிறது என்பதை இன்றைக்கு நான் பெருமையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோலத்தான், எழுது பொருள் அச்சுத் துறை, இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய நல்லாட்சியிலே ஏற்றத்தோடு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்தத் துறைகளிலே, தாய்த் துறையாக விளங்கக்கூடியது வருவாய்த் துறை. அன்றைக்கு காந்தியடிகள் "இந்தியா என்பது கிராமத்திலே வாழ்கிறது" என்று சொன்னார்கள். இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மாவினுடைய நல்லாட்சியிலே, இந்தத் தமிழ்த் திருதேசம் என்பது 30 மாவட்டங்களாக, 73 வருவாய்க் கோட்டங்களாக, 206 வட்ட

அலுவலகங்களாக, 1,120 உள் வட்டங்களாக மற்றும் 17,244 வருவாய்க் கிராமங்களாக இன்றைக்கு சீருடன் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே கனிவோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மாவினுடைய நல் ஆட்சிக் காலத்திலேதான் இன்றைக்கு வருவாய் நிர்வாக அதிகாரிகள், கிராம நிர்வாக அதிகாரிகள், அந்தந்தக் கிராமத்திலேயே இருந்தால்தான் பொதுமக்களுக்குச் சீரான நல்ல உதவிகளைச் செய்ய முடியும், பொது மக்களுக்கு நல்ல பணியை ஆற்றிட முடியும் என்று உணர்ந்த புரட்சித் தலைவி அம்மா அவர்கள், முன்பு 2001 வரை கிராம நிர்வாக அலுவலர்களுக்கு 575 கட்டடங்கள்தான் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன என்கின்ற நிலைமையை மாற்றி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றவுடன், 2001 முதல் 2004 வரையிலான இந்த 3 ஆண்டு காலத்தில், ஒரு ஆண்டுக்கு 4,000 கட்டடங்கள் கட்டவேண்டும் என்பதை இலக்காக நிர்ணயித்து, இதுவரை 11,683 கட்டடங்களுடையப் பணிகளை எடுத்துக்கொண்டு, 11,337 கட்டடங்கள் கிராம நிர்வாக அலுவலர்களுடைய கட்டடங்கள், புரட்சித் தலைவி அம்மாவினுடைய நல்லாட்சியிலே (மேசையைத் தட்டும் ஒலி) கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன என்கின்ற சரித்திர சாதனையை நான் இன்றைக்கு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 10–55

பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு வருவாய்த் துறை அலுவலர்களுக்கான ஊர்திகளை, வாகனங்களை வழங்கக்கூடிய அந்த நிகழ்வுகளிலும் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு சாதனை படைத்திருக்கிறது. பழைய Jeep–களை மாற்றி 76 புத்தம் புதிய நவீன Bolero Jeep–கள் வழங்கியிருக்கிற ஆட்சி புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சி (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் இன்றைக்குப் பெருமையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் மரியாதைக்குரிய பிச்சாண்டி அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். முதியோர் உதவித் தொகை கிடைக்கவில்லை, தடையிருக்கிறது என்று சொன்னார்கள். நான் பணிவோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். புரட்சித் தலைவி அம்மாவினுடைய நல்லாட்சியிலேதான் தமிழகத்திலேயிருக்கின்ற 11 இலட்சத்து 80 ஆயிரம் பேர் ஏழைப்





பயனாளிகள், ரூபாய் 200 வீதம், வருவாய்த் துறை ஊழியர்கள் சிறப்பாகப் பணி செய்து அவர்கள் கையிலே மாதமானால் 200 ரூபாயைக் கொடுத்து, இன்றைக்குச் சாதனை படைத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த வகையிலே முதியோர் உதவித் தொகை 4.67 இலட்சம் பேருக்கும், ஆதரவற்ற ஊனமுற்றோர் உதவித் தொகை 63 ஆயிரம் பேருக்கும், ஆதரவற்ற விதவை உதவித் தொகை 4.74 இலட்சம் பேருக்கும், ஆதரவற்ற விவசாயக் கூலி உதவித் தொகை 90 ஆயிரம் பேருக்கும், ஆதரவற்ற, கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கான உதவித் தொகை 80 ஆயிரம் பேருக்கும், ஆக மொத்தம், 11 இலட்சத்து 80 ஆயிரம் பேருக்கு புரட்சித் தலைவி அம்மாவினுடைய நல்லாட்சியிலே வருவாய்த் துறைமூலம் ரூபாய் 200 மாதந்தோறும் சிறப்பான முறையிலே வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே பணிவோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குப் பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை என்பது புரட்சித் தலைவி அம்மாவினுடைய நல்லாட்சியிலே சீர்மிகுந்த சிறப்புகளைப் பெற்று வருகின்ற துறையாகப் பரிணமித்துக்கொண்டிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய தலைமையிலே மனிதவள மேம்பாட்டுக் குறியீடுகள் சிலவற்றிலே குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் பொது விநியோகத்திலும், கல்வி முறையிலும் தேசிய அளவிலே இந்தத் துறை முதல் இடத்தைப் பெற்றிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, புரட்சித் தலைவி அம்மாவினுடைய நல்லாட்சியிலே குடிநீர், சாலை, போக்குவரத்துப் பணிகளிலே தேசிய அளவில் இரண்டாவது இடத்தைப் பெற்று சிறப்பாக இந்தத் துறை விளங்கிக் கொண்டிருக்கிறது என்பதைப் பணிவோடு நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கோப்புகளை ஆய்வு செய்து முடித்தல் என்கிற இலட்சியத்தை அடிப்படையாகக் கொண்டு புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியிலே கோப்புகளை ஆய்வு செய்து இறுதி முடிவு எடுக்க நேரத்தைக் குறைக்கின்ற வகையிலே 'நிலை தாண்டுதல்' (Level jump) என்கிற முறையிலே உயர் அலுவலர்களுக்கு நேரடியாகச் சமர்ப்பித்து, உடனடியாக அந்த உத்தரவுகளைப் பெற்று சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது இந்தத் துறை என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

[திரு. ப. இராஜரெத்தினம்] [2005 மார்ச் 23

பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர் நல்லுறவை பேணிக் காக்கிற நல்ல அரசுதான் புரட்சித் தலைவி அம்மாவினுடைய நல்லரசு என்பதை அனைவரும் அறிவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய குடிமைப் பணிகள், அதாவது I.A.S., I.P.S. தேர்வு. அந்தத் தேர்விலே தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் 54 பேர் தேர்ச்சிப் பெற்றிருக்கிறார்கள் என்று சொன்னால், சென்னையிலே நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற அனைத்திந்திய குடிமைப் பணிகள் தேர்வுப் பயிற்சி மையத்தின் வாயிலாக மட்டும் இந்த 54 பேர்களிலே 31 பேர் இந்தப் பயிற்சி நிலையத்திலே பயிற்சி எடுத்தவர்கள்–இன்றைக்கு தமிழ்நாட்டிலிருந்து தேர்வு பெற்ற 54 பேரிலே 31 பேர் இப்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்றிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர்த் தணிப்புத் துறையைப் பற்றி நான் சில கருத்துகளை எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். To a brave heart nothing is impossible என்று சொல்வார்கள். தைரியமான மனோதிடத்தால் முடியாதது எதுவுமேயில்லை என்பதை நிரூபித்திருக்கிறார் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமி தாக்கப்பட்ட பகுதிகளை ஒரு முறை அல்ல, மூன்று முறை சென்று பார்வையிட்டு நேரில் ஆறுதல் கூறி, போர்க் கால அடிப்படையிலே நிவாரணப் பணிகளை ஆற்றி, இன்றைக்கு சுனாமி நிவாரண நடவடிக்கை என்று சொன்னால், மேலை நாடுகளிலே பாராட்டிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

முற்பகல் 11–00

அன்றைக்கு பாரதியார்

"மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை யில்லை;
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதைவணக்கஞ் செய்தல் வேண்டும்"!

என்று சொன்னார். அந்த பாரதியார் இன்று இருந்தால், புரட்சித் தலைவி அம்மாவைப் பாராட்டி, மீண்டும் ஒரு புரட்சிக் காவியம் படைத்து இருப்பார். (மேசையைத் தட்டும் ஒலி) நான் பணிவோடு



2005 மார்ச் 23] [திரு. ப. இராஜரெத்தினம்]

சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு சுனாமி நிவாரண நடவடிக்கைகள் என்று சொன்னால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சுனாமி நிவாரண நடவடிக்கைகளிலே மின்னலைவிட வேகமாகப் பணியாற்றி, மிகச் சிறப்பான மறுவாழ்வு வாழ்க்கையை, சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கி இருக்கிறார்கள்.

அன்று பாரதியார் சொன்னதை மெய்ப்பித்துக் காட்டுவதைப்போல, பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு சம்பவத்தை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். சுனாமி பற்றிய மாநாடு, தாய்லாந்து நாட்டிலே அண்மையிலே நடைபெற்றது. அந்த மாநாட்டிலே சொன்னார்களாம், அம்மாவின் நடவடிக்கைகளைப் பற்றி, அம்மா எடுத்த அதி விரைவு நிவாரணப் பணிகளைப் பற்றி, அம்மாவின் மின்னல் வேகப் பணிகளைப் பற்றி தாய்லாந்து நாட்டிலே புகழ்ந்து சொன்னார்களாம். சுனாமி நிவாரணப் பணிகளைக் கண்டு, அடுத்த நாடுகளும் மேற்கொள்ளும்படி அந்த மாநாட்டிலே அறிவிப்பைத் தந்தார்களாம். தமிழ்நாட்டை முன்மாதிரியாகக் கொண்டு, தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கைகளை வருங்காலத்திலே, சுனாமியைப் பற்றி கவனத்திலே நாம் கொள்ளவேண்டும் என்று அந்த மாநாட்டிலே அவர்கள் சொன்னார்களாம். இந்தியாவின் பிரதிநிதிகளாக, இன்றைக்கு அம்மாவின் நாட்டிலே இருக்கின்ற நாகை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. இராதாகிருஷ்ணன் அவர்களையும் அதேபோல் I.A.S. அதிகாரி திருமதி சாந்தா ஷீலா நாயர் அவர்களையும் தம் நாட்டிற்கு அனுப்பும்படி புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பார்த்து இலங்கை அரசு கேட்டது. உங்கள் அதிகாரிகளை அனுப்பி வையுங்கள், இடர்பாடுகளைக் களைய வேண்டும்; எடுக்க வேண்டும் சுனாமி நடவடிக்கை என்று இலங்கை கேட்டுக்கொண்டது. புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தன்னுடைய அதிகாரிகளை இலங்கைக்கு அனுப்பி வைத்து, அவர்கள் சுனாமி நிவாரண நடவடிக்கைகளிலே, தமிழ்நாட்டிலே எத்தகைய சிறப்பான முயற்சிகள், எத்தகைய நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன என்பதைச் சிறப்பாக எடுத்து வைத்து, அவர்கள் திரும்பி இருக்கிறார்கள் என்பதை நான் பணிவோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பிச்சாண்டி அவர்கள் சொல்கின்ற நேரத்திலே, வறட்சி நிவாரணம் பற்றிச் சொன்னார்கள். நான் பணிவோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். கடுமையான வறட்சி, கடந்த 4 ஆண்டுகளிலே இருந்தபோதிலும் அதைத் திறமையாகச் சமாளித்து, வறட்சியிலும்

புரட்சி செய்தவர்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்று நான் பணிவோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) வறட்சி நடவடிக்கைகளை மேற்கொள்கிற நேரத்திலே, முதலமைச்சராக இருக்கின்ற நம்முடைய அம்மா அவர்கள் 24-6-2002 அன்று தஞ்சைக்கு நேரிலே சென்று 164.18 கோடி ரூபாயை, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேரடியாக, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வறட்சி நிவாரணமாக வழங்கினார்கள் என்பதை நான் பெருமையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல், இன்றைக்கு தென்னை விவசாயிகளுக்கு, வறட்சி நிவாரணமாக ஒரு எக்டேர் நிலத்திற்கு ரூ.4 ஆயிரம் வறட்சி நிவாரணத் தொகை வழங்கிய பெருமை, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒருவருக்குத்தான் உண்டு என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, காவிரிப் பாசன 10 இலட்சம் விவசாயிகளுக்கு, தீபாவளிப் பரிசாக, ரூ.21 கோடி ரூபாயைக் கொடுத்து, அதிலே 50 ரூபாய் ரொக்கம், 10 கிலோ அரிசி, மளிகை சாமான்களிலிருந்து, தொகுப்பாகக் கொடுத்து இன்றைக்கு வறட்சி நிவாரணத் திட்டத்திலே மிகப் பெரிய புரட்சியை, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்து இருக்கிறார்கள் என்பதை இந்த நல்ல நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2001 ஆம் ஆண்டிலே, தேர்தல் அறிக்கையிலே, தமிழ்நாட்டை ஏழ்மை, வறுமை, இல்லாமை இல்லாத ஒரு மாநிலமாக உருவாக்குவோம் என்று அன்று சொன்னார்கள். இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாட்டிலே ஏழ்மை, வறுமை, இல்லாமை இல்லாத நிலைமையை உருவாக்குவதற்கு நாள்தோறும் 20 மணி நேரத்திற்கு மேலாக உழைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல, தூய்மையும், செயல் திறனும் மிக்க ஆட்சி முறையைத் தருவேன் என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொன்னார்கள். இன்றைக்கு தூய்மையும், செயல் திறனும் மிக்க ஆட்சியை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தந்துகொண்டு இருக்கிறார்கள். நேர்மையும், திறமையும் மிகுந்த நிர்வாக முறையைத் தருவேன் என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தேர்தல் அறிக்கையிலே சொன்னார்கள். அதை இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செயல்படுத்திக்கொண்டு இருக்கிறார்கள். புனிதமும், நடுநிலைமையும் மிக்க நீதி நிர்வாகத்தைத் தருவேன் என்று சொன்னார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதை செயல்படுத்திக்கொண்டு இருக்கிறார்கள். வளம் மிகுந்த வாழ்க்கைத் தரமும், பாதுகாப்பும்,



அமைதியும் நிறைந்த பொது வாழ்க்கையை அமைத்துத் தருவேன் என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொன்னார்கள். அதை இன்றைக்கு செய்துகொண்டு இருக்கிறார்கள்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எல்லாம் பேசி முடிக்கின்ற நேரத்திலே வருகின்ற தேர்தலிலே வெற்றி பெறுவோம் என்று சொன்னார்கள். நான் பணிவோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் பணிவோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களுக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கடைந்த வெண்ணெய் மோர் புகாது, உடைந்துபோன சங்கின் ஓசை மீண்டும் உயிர் புகாது, உதிர்ந்த பூவும், விழுந்த காயும் மீண்டும் போய் மரம் புகாது, அதேபோல, இறந்து போன மானிடன் இனி பிறப்பதற்கு இல்லை, கீழே இறக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் வருவதற்கு வாய்ப்பே இல்லை, வாய்ப்பே இல்லை. என்றுமே தமிழகத்தில் புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சிதான் என்று சொல்லி, நல்லவரை நாடு நம்பும், நல்லவருக்கு வாழ்த்துரைக்கும், வல்லவரை வரவேற்கும், வாழ வழிகாட்டச் சொல்லும், நல்லவரே, வல்லவரே நாடு காக்க வந்தவரே, புரட்சித் தலைவி அம்மா அவர்களே, தமிழ்நாட்டிலே என்றுமே உங்கள் ஆட்சிதான், ஆட்சிதான் என்று சொல்லி வருவாய்த் துறை குறித்த மானியக் கோரிக்கையை வரவேற்று அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

## 10. விதி 110-ன்கீழ் அறிக்கை

### காவல், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைகளின் பணியாளர்களுக்குப் படிகளை உயர்த்தி வழங்கல் – மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110–ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கை ஒன்றினை அளிக்க அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு காவல் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதங்களுக்கு பதில் அளித்து 15–3–2005 அன்று இந்த அவையில்

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2005 மார்ச் 23

நான் பேசும்போது நாட்டின் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைவது காவல் துறை என்பதை தெளிவுபடத் தெரிவித்தேன். வலிமையான நாடாக இந்தியா இருக்க வேண்டும். அதில் வளம் மிக்க மாநிலமாக தமிழகம் திகழவேண்டும் என்ற இலட்சியம் ஈடேற வேண்டுமென்றால் தமிழகம் அமைதிப் பூங்காவாக விளங்க வேண்டும். எந்த வளர்ச்சிக்கும் முதல் தேவையாக இருப்பது அமைதியான சூழ்நிலைதான். அத்தகைய அமைதிச் சூழ்நிலையை உருவாக்குவதிலும், அதனைக் கட்டிக்காப்பதிலும் காவல் துறையின் பணி இன்றியமையாதது. இதன் அடிப்படையில்தான், காவல் துறையை நவீனப்படுத்தவும், காவல் பணியை மேம்படுத்தவும், காவலர்கள் நலன் பேணவும், பல்வேறு திட்டங்கள், சலுகைகள், உதவிகள் ஆகியவற்றை நான் அறிவித்தேன்.

தமிழக மக்களுக்கு அமைதியான வாழ்க்கையை உறுதி செய்திட தமிழகக் காவல் துறை 24 மணி நேரமும் ஆயத்த நிலையிலேயே இருக்கிறது. காவலர்களுக்கு வாரத்தில் 6 நாட்கள் பணி நாட்கள் என்றும், ஒரு நாள் வார விடுமுறை நாள் என்றும் உள்ள போதும், சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை, வழக்குகள் புலன் விசாரணை, வழக்குகள் தொடர்பாக நீதிமன்றங்களுக்குச் சென்று வருதல் முதலான பல்வேறு பணிகள் காரணமாக சில நேரங்களில் வார விடுமுறையை காவலர்கள் துய்க்க முடியாத நிலை உள்ளது. அவ்வாறு, வார விடுமுறை நாட்களிலும் தவிர்க்க இயலாத காரணங்களால் பணி மேற்கொள்ளும் காவலர், முதல் நிலைக் காவலர் மற்றும் தலைமைக் காவலர் ஆகியோருக்கு விடுமுறை அன்று பணி செய்தமைக்கு ஈடாக வார விடுப்பு ஈட்டுப் படி வழங்கப்பட்டு வருகிறது. 50 ரூபாயாக இருந்த இந்த வார விடுப்பு ஈட்டுப் படியை நாள் ஒன்றுக்கு 100 ரூபாயாக உயர்த்தி 2002 ஆம் ஆண்டு நான் ஆணையிட்டேன். அதன்படி தற்போது இவர்கள் வார விடுப்பு ஈட்டுப் படியாக 100 ரூப்பாய் பெற்று வருகின்றனர்.

அவசரப் பணிகள் நிமித்தமாக வார விடுமுறை துய்க்காமல் பணியில் ஈடுபடுகின்ற காவலர்களுக்கு, நிறைவான விடுப்பு ஈட்டுப் படி வழங்கப்பட வேண்டும். எனவே, தற்போது வழங்கப்படுகின்ற வார விடுப்பு ஈட்டுப் படியை உயர்த்தி வழங்க நான் முடிவு எடுத்துள்ளேன். இதன்படி, காவல் துறையில் பணியாற்றுகின்ற காவலர், முதல் நிலைக் காவலர் மற்றும் தலைமைக் காவலர் ஆகியோருக்கு வார விடுப்பு ஈட்டுப் படியாக நாள் ஒன்றுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் 100 ரூபாயை 150 ரூபாயாக உயர்த்தி வழங்க நான் ஆணையிட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)



2005 மார்ச் 23] [செல்வி ஜெ ஜெயலலிதா]

அதேபோல, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் நிலைய அலுவலர் நிலைக்குக்கீழ் உள்ள பணியாளர்களுக்கு வார விடுப்பு ஈட்டுப் படியாக, தற்போது நாள் ஒன்றுக்கு 100 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. இவர்களுக்கும் வார விடுப்பு ஈட்டுப் படி நாள் ஒன்றுக்கு 150 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு சுமார் 22.06 கோடி ரூபாய் கூடுதலாகச் செலவாகும்.

காவல் துறையில் பணிபுரியும் காவலர் நிலை முதல் தலைமைக் காவலர் நிலை வரை உள்ள பணியாளர்களுக்கு மாதந்தோறும் 40 ரூபாயும், உதவி ஆய்வாளர் மற்றும் ஆய்வாளர் ஆகியோருக்கு 50 ரூபாயும், துணை காவல் கண்காணிப்பாளர், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் மற்றும் இந்திய காவல் பணி-I.P.S.-அல்லாத காவல் கண்காணிப்பாளருக்கு 60 ரூபாயும் சீருடைப் படியாக தற்போது வழங்கப்படுகிறது. தற்போதுள்ள சலவைக் கட்டணங்களைக் கருத்தில்கொண்டு, இச்சீருடைப் படியை உயர்த்த நான் முடிவு எடுத்துள்ளேன். இதன்படி, காவல் துறையில் பணியாற்றும் காவலர் நிலை முதல் இந்திய காவல் பணி-I.P.S.-அல்லாத காவல் கண்காணிப்பாளர் நிலை வரை அனைவருக்கும் ஒரே அளவில் மாதந்தோறும் 100 ரூபாய் சீருடைப் படி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-10

இதேபோல், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் தீயணைப்போர் முதல் கோட்ட அலுவலர் வரை உள்ள பணியாளர்களுக்கு அவரவர் நிலைக்கேற்ப மாதந்தோறும் 40 ரூபாய் முதல் 60 ரூபாய் வரை சீருடைப் படி வழங்கப்பட்டு வருகிறது. தீயணைப்போர் முதல் கோட்ட அலுவலர் நிலை வரையுள்ள அனைத்துப் பணியாளர்களுக்கும் இனி ஒரே அளவில் மாதந்தோறும் 100 ரூபாய் சீருடைப் படி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

காவல் துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களுக்கு உயர்த்தபபட்ட விகிதத்தில் சீருடைப் படி வழங்க அரசுக்கு ஆண்டொன்றுக்கு 6 கோடியே 62 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவாகும்.

தற்போது சென்னை மாநகரம் மற்றும் தமிழகத்தின் ஏனைய பகுதிகளில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்படும் காவல் துறை ஆய்வாளர் நிலை வரை உள்ள பணியாளர்களுக்கும் தீயணைப்பு மற்றும் மீட்பு அழைப்புகளின் பேரில் அப்பணிகளில் ஈடுபடும்போது,

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை நிலைய அலுவலர் நிலைக்குக் கீழுள்ள பணியாளர்களுக்கும் உணவுப் படி வழங்கப்பட்டு வருகிறது.

15-3-2005 அன்று உள் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி அவர்கள் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் பணிபுரியும் பணியாளர்களுக்கு 9 ரூபாய்தான் உணவுப் படியாக வழங்கப்பட்டு வருகிறது என்று குறிப்பிட்டார். இது சரியல்ல.

சென்னை நகரைப் பொறுத்தவரை காவல் துறைப் பணியாளர்களுக்கும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களுக்கும் நாள் ஒன்றுக்கு 80 ரூபாய் என்ற வீதத்தில் உணவுப் படியை ஆகஸ்ட் 2002 முதல் உயர்த்தி வழங்கி நான் ஆணையிட்டேன். சென்னை நகர் அல்லாத பிற பகுதிகளில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களுக்கான உணவுப் படி கணக்கிட்டு வழங்கப்படும் முறை காவல் துறையினருக்கு வழங்கப்பட்டுவரும் முறையிலிருந்து மாறுபட்டுள்ளது. தீயணைப்புப் பணிக்குச் செல்லும் தூரம் மற்றும் தீயணைப்புப் பணியில் ஈடுபட்டுள்ள கால அளவு ஆகியவற்றின் அடிப்படையில் அவர்களுக்கு உணவுப் படி வழங்கப்பட்டு வருகிறது.

1992-ல் நிர்ணயிக்கப்பட்ட அதிகபட்ச அளவான 9 ரூபாய் உணவுப் படியை, ஜனவரி 2002 முதல் நகராட்சி எல்லையிலிருந்து 8 கிலோ மீட்டருக்கு மேற்பட்ட இடங்களுக்குத் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளுக்காகச் செல்லும்போது வழங்கப்படும் உணவுப் படியை கால அளவுக்கேற்ப 25 ரூபாய் முதல் அதிகபட்சமாக நாள் ஒன்றுக்கு 50 ரூபாயாக உயர்த்தி ஆணையிட்டேன். அதேபோல், 8 கிலோ மீட்டருக்குள் உள்ள இடங்களுக்குக் கால அளவுக்கேற்ப 15 ரூபாயிலிருந்து அதிகபட்சமாக நாள் ஒன்றுக்கு 40 ரூபாயாக உயர்த்தி ஆணையிட்டேன். எனவே, 9 ரூபாய் என்றிருந்த உணவுப் படியை 2002 ஆம் ஆண்டே நான் உயர்த்தி ஆணையிட்டுள்ளேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

• சென்னை நகர் அல்லாத பிற பகுதிகளில் பணிபுரியும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களுக்கும் காவல் துறைப் பணியாளர்களுக்கு வழங்கப்படுவதைப் போலவே, பணிக்குச் செல்லும் தூரத்தையும் கால அளவையும் கணக்கில் கொள்ளாமல் உணவுப் படி வழங்க நான் தற்போது ஆணையிட்டுள்ளேன். மேலும், காவல் துறையிலும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையிலும், சென்னை அல்லாத இடங்களில் தற்போது உணவுப் படி பெற்று வரும்



பணியாளர்கள் அனைவருக்கும் ஒரே அளவாக 55 ரூபாய் உணவுப் படி வழங்க நான் ஆணையிட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு சுமார் 7 கோடியே 50 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவாகும்.

இவ்வாறு உயர்த்தப்பட்ட வார விடுப்பு ஈட்டுப் படி, சீருடைப் படி, மற்றும் உணவுப் படி ஆகியவற்றால் 87,047 காவல் துறைப் பணியாளர்களும், 6,281 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களும் பயன் பெறுவார்கள். இதனால் அரசுக்கு மொத்தம், ஆண்டு ஒன்றுக்கு, 36 கோடியே 18 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும்.

தற்போது நான் அறிவித்துள்ள இந்தச் சலுகைகள் காவல் துறையினர் மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினர் மேலும் ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும் பணியாற்ற வழிவகை செய்யும் என்பதைத் தெரிவித்து, அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 9. மானியக் கோரிக்கைகள், 2005-2006, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) **கோரிக்கை எண் 11 - வணிக வரித் துறை — முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு**

(ஆ) **கோரிக்கை எண் 29 - செய்தி மற்றும் சுற்றுலாத் துறை— எழுதுபொருள் மற்றும் அச்சு**

(இ) **கோரிக்கை எண் 36 - மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை**

(ஈ) **கோரிக்கை எண் 39 - வருவாய்த் துறை**

(உ) **கோரிக்கை எண் 49 - இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு**

(ஊ) **கோரிக்கை எண் 34 - பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை**

—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

[2005 மார்ச் 23

முற்பகல் 11–15

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்திரைத்தாள் மற்றும் பத்திரப் பதிவு, எழுதுபொருள் மற்றும் அச்சு, மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வை, வருவாய்த் துறை, பணியாளர்கள் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை மானியக் கோரிக்கைகளின்மீது பேசுகிற வாய்ப்பினை நல்கிய தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை நான் இங்கே காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவாதத்திற்குள்ளே போவதற்கு முன்னால், சென்ற ஆண்டு அவை முடிகிறபோது, இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவருடைய அறிக்கையை நீங்கள் இந்த அவையிலே வைத்ததைச் சுட்டிக்காட்டி, அதில் சொல்லப்பட்டிருக்கிற அளவிற்கு எவ்வளவு வருவாய் இழப்பு நம்முடைய அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விற்பனை வரி, மாநில ஆயத்தீர்வை, வேளாண்மை வருமான வரி, நில வருவாய் நகர்ப்புற நிலவரி, இயக்கூர்திகள் மீதான வரி மற்றும் ஏனைய துறைகளின் பதிவேடுகளை 2002–2003 ஆண்டில் சோதனை ஆய்வு செய்ததிலே குறைவான தொகைக்கு வரி விதிப்பு, குறைவாக வரி விதித்தல், வருவாய் இழப்பு முதலியன 3,318 இனங்களில் 2,266.63 கோடி என்று தெரிய வந்திருக்கிறது என்று C.A.G. Report–ல் மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

அதேபோல, நில வருவாய்த் தலைப்பிலே பார்க்கிறபோது, ஆக்கிரமிப்பு இனங்களில் விதிக்கப்படும் தண்டத் தீர்வை போதுமானதாக இல்லாததால், 26 வட்டங்களில் ரூபாய் 524.47 கோடி வருவாயை அரசு ஈட்ட இயலவில்லை என்றும், வணிக நிறுவனங்களின் ஆக்கிரமணங்களால் 5 வட்டங்களில் குத்தகையின் பேரில் கிடைக்கும் ரூபாய் 11.05 கோடி வருவாயை அரசு ஈட்ட இயலவில்லை என்றும், ஒரு வட்டத்தில் அரசு நிலங்களில் நீண்டகாலத் தவறான உடைமையின் காரணமாகவும், மற்றொரு வட்டத்தில் ஆக்கிரமித்த நிலங்களை மனைகளாகப் பிரித்து விற்பனை செய்ததாலும் ஏற்பட்ட வருவாய் இழப்பு ரூபாய் 26.73 கோடி என்றும், 7 மாவட்டங்களைச் சேர்ந்த 10 வட்டங்களில் ரூபாய் 45.23 கோடி பெறுமானமுள்ள ஆக்கிரமணம் செய்யப்பட்ட அரசு நிலங்கள், பின்னர் பதிவு செய்யப்பட்ட நடவடிக்கைகள் வாயிலாக, தனி நபர்களால் சட்டத்திற்குப் புறம்பாகக் கிரயம் செய்யப்பட்டன என்றும், பத்து வருடங்களாகியும் மதுரையில் ஒரு குத்தகையாளரின் குத்தகை வாடகையை உயர்த்தாத வகையில், ரூபாய் 9.45 கோடி வருவாய்க் குறைவு ஏற்பட்டது என்றும், முத்திரைத்



2005 மார்ச் 23] [திரு. சி. ஞானசேகரன்]

தீர்வை மற்றும் பதிவுக் கட்டணங்கள் என்ற தலைப்பில், ஒரு தாய் நிறுவனம் (கம்பெனி) தனது இரண்டு துணை நிறுவனங்களுக்குச் சொத்து மாற்றம் செய்தது. இச்சொத்து மாற்றத்திற்குத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணத்திலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது. இது தவறாகும். இந்த வகையில் ரூபாய் 2.34 கோடி தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் செலுத்தப்படவில்லை என்றும், சட்டம், விதிமுறைகள் வகுக்கப்பட்ட வழிகாட்டுதல்கள் முதலியவற்றில் கூறப்பட்டுள்ள விதிமுறைகளைக் கடைப்பிடிக்கத் தவறியதால், சொத்துகள் விலைக் குறைவாக மதிப்பிடப்பட்டன. அதனால் ரூபாய் 2.10 கோடிக்கு முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் வசூலிக்கப்படவில்லை என்றும், சிமெண்ட் தொழிற்சாலைகளில் சுட்ட செங்கல் (கிளிங்கர்) உற்பத்திக்காக உபயோகிக்கப்பட்ட 3.50 கோடி மெட்ரிக் டன் சுண்ணாம்புக் கற்கள் கணக்கில் காட்டப்படவில்லை என்றும், இதனால் 1996–1997 முதல் 2001–2002 வரையிலான காலத்தில் ரூபாய் 113.97 கோடி உரிமைக் கட்டணம் குறைவாக விதிக்கப்பட்டது என்றும், இத்துறை, ஒரு குத்தகைதாரரிடமிருந்து குறிப்பிட்ட கால வரையினுள் குத்தகைத் தொகையினை வசூல் செய்யத் தவறியது. துறை, குத்தகையை இரத்துச் செய்யவோ, இரு மடங்கு குத்தகை வசூலிக்கவோ முற்படவில்லை. இதனால் வசூல் செய்யப்படாத குத்தகைத் தொகை ரூபாய் 42.94 கோடியாகும் என்றும், விழுப்புரம் மாவட்டத்திலுள்ள ஒரு குத்தகைதாரருக்கு, குத்தகைத் தொகை நிர்ணயம் செய்யாததால் குத்தகை வாடகையாக ரூபாய் 1.74 கோடி வரி விதிப்பு செய்யப்படவில்லை என்றும் C.A.G. Report–ல் சொல்லப்பட்டிருக்கிறது.

இப்போது கஜானா காலி என்று சொல்லி, அதனால் நிதிச் சீர்திருத்தம் என்றெல்லாம் கொண்டு வந்து, அதேபோல இப்போது புதியதாக வேலைக்கு ஆளே எடுப்பதில்லை என்று தமிழக அரசு முடிவெடுத்து பல துறைகளிலே இன்று வேலையிடங்கள் காலியாக இருந்து கொண்டிருக்கின்றன. T.N.P.S.C.–லே பார்த்தால், I + II, தலைவர் ஒருவர், 11 உறுப்பினர்களை நாம் போட்டிருக்கிறோம். அரசுப் பணிகளுக்கு வேலைக்கு ஆள் எடுப்பதுதான் அந்த ஆணையத்தினுடைய வேலை. ஆனால், வேலையே இல்லாத அதற்கு ஒரு தலைவரும் 11 உறுப்பினர்களையும் மட்டும் நியமித்துவிட்ட நாம்....

முற்பகல் 11–20

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள், T.N.P.S.C. பற்றிக் குறிப்பிடும்பொழுது, பணிக்கு ஆள் எடுப்பது குறித்துதான் அந்த ஆணையம் செயல்படுகிறது என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள்.

அதுவல்ல. அரசினுடைய பல்வேறு நிர்வாக அமைப்பில் இருக்கின்ற ஊழியர்கள், அலுவலர்கள் குறித்த அவர்களுடைய கருத்துகளையும் T.N.P.S.C.–யிடம் நம் அரசு கேட்கின்றது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய விளக்கத்திற்கு நன்றி. அப்போது அந்த...

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய தேர்வாணையத்தில் அதிகமான உறுப்பினர்களை நியமனம் செய்திருக்கின்றார்கள் என்று சொன்னார்கள். ஏற்கெனவே, வரையறுக்கப்பட்ட உறுப்பினர்கள்தான் நியமனம் செய்யப்பட்டிருக்கின்றார்கள். புதிதாக யாரும் தற்போது நியமனம் செய்யப்படவில்லை. அதைப்போல, தேர்வாணையத்தில் பல்வேறு இனங்களில், பல்வேறு முறைகேடுகளில் அரசு ஊழியர்கள் இருக்கின்றார்களா, இல்லையா; சம்பந்தப்பட்டிருக்கின்றார்களா, இல்லையா என்ற கடைசிக் கருத்தினைத் தேர்வாணையத்திற்கு அனுப்பி நாம் கேட்கவேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அந்தப் பணியையும் அவர்கள் செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், T.N.P.S.C. எந்த recruitment–ம் செய்வதில்லை என்று ஒரு மாறான கருத்தைச் சொன்னார்கள். அது தவறு. இப்பொழுதுகூட நான் சார்ந்திருக்கின்ற அந்தத் துறையில் Civil Judges – இதுவரையிலும் Civil Judges நியமிக்கப்படவில்லை. 52 பேர் Civil Judges–ஐ நியமித்து இருக்கின்றார்கள். அதேபோன்று, A.P.P.s, பணியிடங்களில் முதல் கட்டமாக 52 பேர் நியமனம் செய்யப்பட்டிருக்கின்றார்கள். இப்பொழுதுகூட 20 பேர்—(இருக்கையில் அமர்ந்து கொண்டு திரு. ப. ரங்கநாதன் அவர்கள் சிரித்துக்கொண்டிருந்தார்) திரு. ரங்கநாதன் அவர்கள் ஏன் சிரிக்கிறார்கள் என்று தெரியவில்லை (குறுக்கீடு) இல்லை, இல்லை. நீங்கள் ஏன் அநாவசியமாகச் சிரித்தீர்கள் என்று தெரியவில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு டி. ஜெயக்குமார்:** இப்போதுகூட 20 A.P.P.s அவர்களை recruitment செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவின்பேரிலே Tamil Nadu Public Service Commission–க்கு எழுதப்பட்டு தேர்வுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் தணிக்கைத் துறை கூறியுள்ளவற்றையெல்லாம் கூறியுள்ளார். தணிக்கைத் துறை என்ன குறைகளைச் சுட்டிக்காட்டியிருக்கிறது என்பதைப் படித்தாரேயொழிய அதற்கு அரசினுடைய பல்வேறு துறைகளும் என்ன விளக்கங்களைத் தந்துள்ளன என்பதை இங்கே படிக்கவில்லை. அதையும் சேர்த்துப் படித்தால்தான் உண்மைப் பொருள் என்ன என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும். எந்தக் காலகட்டத்தில் ஏற்பட்ட குறைகள் என்பதையும் நீங்கள் சொல்லவில்லை. அது பல ஆண்டுகளாக இருந்த அந்தக் குறைபாடுகளையும் சுட்டிக்காட்டி இருக்கிறது. அதற்குள்ள காரணங்கள் துறைகளால் விளக்கப்பட்டு இருக்கின்றன. நிவர்த்தி எப்படிச் செய்யப்பட்டுள்ளது என்று கூறப்பட்டுள்ளது. படிப்படியாக நிவர்த்தி செய்யப்படவேண்டிய ஒன்றும் இருக்கிறது.

அடுத்து, ஆக்கிரமிப்பைப் பற்றிச் சொல்கிறார். அது மிகத் தவறான அணுகுமுறை. ஏற்கெனவே அவையிலே விளக்கப்பட்டிருக்கிறது. இலட்சக்கணக்கான ஏழைகள், புறம்போக்கு இடங்களில், அரசு இடங்களில் எல்லாம் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள். அந்த ஆக்கிரமிப்புக்கு, அந்த ஏழைகளுக்குத் தண்டத் தீர்வையைப் போடவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகிறாரா என்று புரியவில்லை. அதைக்கூட அவர்கள் இழப்பு என்று சொல்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது பொத்தாம்பொதுவாக ஏதோ சொல்லவேண்டும் என்பதற்காக எதையும் சொல்லக் கூடாது என்று கூறிக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி அமைச்சர் நான் பொத்தாம்பொதுவாகச் சொல்கிறேன் என்று சொல்வது விந்தையாக இருக்கிறது. C.A.G. Report உங்களால் இந்த அவையிலே வைக்கப்பட்ட ஓர் அறிக்கை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இல்லை. உங்கள் அறிக்கைக்குத்தான் அவர் பதில் சொல்லியிருக்கிறார்.

**திரு. சி. ஞானசேகரன்:** பதிலிலே என்ன சொல்லியிருக்கிறார்? அதாவது, பெரிய பெரிய கம்பெனிகள் ஆக்கிரமிப்பு செய்துள்ளன. இதிலே ஒன்றும் இல்லை. சாதாரணமாக சிறுசிறு குடிசைவாசிகளுக்குப் போட்டிருக்கிற கணக்கெல்லாம் அவர்கள் எடுத்ததாக இல்லை. பொதுவாக, நான் கேட்பதெல்லாம் இந்த அவையிலே நீங்கள் இதற்கான விளக்கம் கொடுத்ததாகச் சொல்கிறீர்கள். அந்த விளக்கத்தை, நீங்கள்

இந்த அளவிற்குப் பெரிய அளவிலே இழப்பு ஏற்பட்டிருக்கிறது. C.A.G. Report செய்திருப்பதை நீங்கள் ஆய்வு செய்து அந்தத் தொகையை எல்லாம் நீங்கள் வசூலித்து நிதி இடர்ப்பாட்டிலிருந்து கொஞ்சம் தப்பித்து எல்லாத் துறைகளுக்கும் நீங்கள் ஆளைப் போட்டு, நீங்கள் நிர்வாகத்தைச் சரியாக நடத்தவேண்டும் என்ற ஒரு நல்ல கருத்தைத்தான் உங்களுக்கு நான்....

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட சிறந்த நிர்வாகத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மேற்கொண்ட காரணத்தால்தான் நிதிச் சீரமைப்பில் வெற்றி பெற்றிருக்கிறோம். பல கோடி, நூற்றுக்கணக்கான கோடி வருவாயை அதிகமாக ஈட்டியிருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** அப்படி என்றால், தயவுசெய்து எல்லாத் துறைகளிலும் காலியாக இருக்கிற இடங்களை நீங்கள் முதலிலே fill-up செய்யுங்கள். Service Commission-க்கு எப்படி எல்லோரையும் போட்டீர்களோ, அதேபோல், எல்லாத் துறைகளுக்கும்-ban order போட்டிருக்கிறீர்கள். Why are you imposing that ban order? You better revoke it immediately...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை, இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டில் உள்ள நடைமுறையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். நாம் ஒரு நிதி நிறுவனத்திடம் செல்கிறோம். நிதி உதவியைக் கேட்கிறோம். மைய அரசு முதற்கொண்டு எல்லோரும் கூறுவது என்னவென்றால், பணிக்கு ஏற்ற அளவிற்கு அந்த சதவிகிதத்தில்தான் ஆட்கள் இருக்க வேண்டுமென்று கூறப்படுகிறது. மைய அரசும் அதையே சொல்கிறது. நிதி நிறுவனங்களும் அதையே சொல்கிறார்கள். ஒன்றை உதாரணத்திற்குச் சொல்ல விரும்புகிறேன். பக்கத்திலே இருக்கிற ஆந்திர மாநிலத்திலே மக்கள் தொகை, தற்போது அங்கு 7½ கோடி மக்கள் இருக்கிறார்கள். ஆனால், அங்கு இருக்கின்ற அந்த ratio - அரசு ஊழியர்களுடைய ratio 1.75% தான். ஆனால், தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் 6 கோடி மக்கள் இருக்கிறார்கள். இங்கு அரசுப் பணியாளர்களுடைய எண்ணிக்கை சதவீதம் 2.13 ratio; கர்நாடக மாநிலத்தை எடுத்துக்கொண்டால் 5 கோடி பேர்தான் மக்கள் தொகை இருக்கிறார்கள். அங்கே அரசுப் பணியாளர்களுடைய சதவீதம் 1.36 ratio. நமக்கு அது 2.13. இதைத்தான் சுட்டிக்காட்டுகிறது, மைய அரசு சுட்டிக்காட்டுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவேதான்,



Administrative Reforms Committee ஒன்று போட்டு, அதன்மூலமாக எந்தெந்தப் பணிகளில் தேவைக்கு அதிகமாக ஆட்கள் இருக்கிறார்கள், எங்கு ஆட்கள் குறைவு என்பதனையெல்லாம் ஆய்ந்து கொண்டிருக்கின்றோம். எங்கெங்கு அத்தியாவசியமாக ஆட்கள் தேவையோ அங்கெல்லாம் தேவையின் அடிப்படையில் மாண்புமிகு அம்மா புரட்சித் தலைவி அவர்கள் ஆட்களைப் புதிதாக நியமிப்பதற்கு ஆணையிட்டுக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதுதான் நடைமுறை உண்மை.

*முற்பகல் 11–25*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கல்லூரிகளை எடுத்துக்கொண்டாலும்கூட, கல்லூரிகளிலே விரிவுரையாளர்கள் இன்னும் நியமிக்கப்படாமல், ஆயிரக்கணக்கான posts இப்போது fill-up செய்யப்படாமல் இருக்கிற காரணத்தினாலே, கல்வியே பாதிக்கப்படுகிறது, எதிர்காலச் சமுதாயம், இன்று படித்துக்கொண்டிருக்கின்ற மாணவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அவையெல்லாம் முக்கியமான posts இல்லையா? அவற்றையெல்லாம் நீங்கள் ஆண்டுக்கணக்கில் fill-up செய்யமாட்டீர்களா?

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிகளிலே ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். கல்லூரிகளிலே கௌரவ விரிவுரையாளர்கள் நியமிக்கப்பட்டு, பணியில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறையைப் பொறுத்த அளவில் சில கருத்துகளை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கோப்புகள் முடிக்கும் வாரம் என்று ஒன்றை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடனே அறிமுகப்படுத்தி, ஒரு மனு வருமேயானால், அந்த மனுவை 90 நாட்களுக்குள்ளே முடிக்க வேண்டுமென்று உத்தரவிட்டார்கள். அதற்காக மனு நீதித் திட்டம் என்றும், பொது மக்கள் குறை தீர்க்கும் நாள் என்றும், அதேபோல, M.L.A., M.P.,–க்கள், அமைச்சர்கள் தங்களுடைய தொகுதிக்குச் செல்கிறபோது, அங்கே கொடுக்கப்படுகிற மனுக்களை எல்லாம் பெற்று, உடனடியாக அவை தீர்க்கப்பட வேண்டும் என்று இருந்தாலும்கூட, கொள்கை விளக்கக் குறிப்பில் மனு நீதித் திட்டத்தின்கீழ் 2,49,957 மனுக்கள் வந்தன; அதிலே தீர்வு கண்டது 2,26,118 என்று சொல்லியிருக்கிறீர்கள். இந்த மனுக்கள் எல்லாம் கொடுக்கப்பட்டவுடன், அந்த மனுக்கள் அதற்குரிய department–க்கு

அனுப்பப்பட்டிருக்கின்றன என்று மட்டும் பதிலை அனுப்பிவிடுகிறார்களேயொழிய, அதிலே வீட்டுமனைப் பட்டா கேட்டவர்களுக்குப் பட்டா கொடுத்ததாகவோ அல்லது ரேஷன் கார்டு கேட்டு மனுக் கொடுத்தவர்களுக்கு ரேஷன் கார்டு கொடுக்கப்பட்டதாகவோ, அப்படிப்பட்ட முடிவுகளைத் தெரிவிக்கின்ற ஒன்றாக அது அமையவில்லை. அப்படியில்லாதபட்சத்தில் அதையெல்லாம் எந்தக் கணக்கிலே எடுத்து நீங்கள் சொல்கிறீர்கள்? பொதுவாக இந்த 90 நாட்களுக்குள்ளே முடிக்கிற, கோப்புகள் முடிக்கும் வாரம் என்று நீங்கள் வைத்திருப்பதை, நீங்கள் strict–ஆக அதை follow செய்து, உடனடியாக அவற்றையெல்லாம் முடிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முதியோர் pension–ஐப் பொறுத்த அளவில் எங்களுடைய வேலூர் நகரத்தில் தோட்டப்பாளையம், சைதாப்பேட்டை, சலவன்பேட்டை பகுதிகளிலே மட்டும் 600 பெண்களுக்கு, விதவைப் பெண்கள், வயதானவர்கள், கணவனால் கைவிடப்பட்டவர்கள் என்று ஒரு பகுதியிலேயே 600 பேருக்கு இன்று முதியோர் pension–ஐ எல்லாம் cancel செய்திருக்கிறார்கள். நான் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் மனு கொடுத்தேன். நேரடியாகவும் சொல்லியிருக்கிறேன். இதிலே எந்த அளவீட்டைக் கொண்டு, அவர்கள் அப்படிச் செய்தார்கள்? காரணம், பொதுவாக மாடி வீடு இருக்கிறது என்றா அல்லது ஆண் பிள்ளை இருக்கிறது என்றா? பொதுவாக அவர்கள் 10 ஆண்டு காலமாக, 15 ஆண்டு காலமாகத் தொடர்ந்து பெற்றுவந்து கொண்டிருக்கின்றவர்கள். அதேபோல, என்னுடைய தொகுதியிலே பாலமதி என்கிற மலைக் கிராமத்திலே மட்டும் 50 பேருக்கு ஒரே நாளிலே நீக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அவர்கள் தகுதி படைத்தவர்கள். நான் நம்முடைய சமூக நலன் மானியக் கோரிக்கையிலேகூட அந்தக் கருத்தை இங்கே வலியுறுத்தினேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதியோர் உதவித் தொகை வாங்குபவர்களில் யாரையும் நீக்க வேண்டும் என்று அரசால் ஆணை பிறப்பிக்கப்படவில்லை. ஏதாவது ஒரு பகுதியில், சம்பந்தப்பட்ட பகுதியில் சில முறைகேடுகள் இருந்தால், அது விசாரிக்கப்பட்டு நீக்கப்பட்டிருக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நீக்கப்பட்ட பட்டியலைக் கொடுத்தார்கள் என்றால், அதற்குத் தக்க பதில் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவரிடம் நானே என்னுடைய கடிதத்தோடு இணைத்துக் கொடுத்திருக்கிறேன். அதைத்தான் நான் சொல்ல வருகிறேன். பொதுவாக எந்தவிதக் காரணமும் இல்லாமல், திடீரென்று ஏன் அப்படி நீக்கினார்கள் என்று தெரியவில்லை.

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அன்றைக்கு வினா எழுப்பிய நேரத்தில் நான் கூறியிருக்கின்றேன். எந்தப் பகுதியில் அவ்வாறு நீக்கப்பட்டிருக்கின்றது, அந்த விவரத்தினைக் கொடுங்கள், அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதை ஏற்கெனவே கூறியிருக்கின்றேன். தகுதி உள்ளவர்கள் நீக்கப்பட்டிருந்தால், நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதனை நான் அன்றையதினமே கூறியிருந்தேன். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விவரங்கள் அடங்கிய பட்டியலை இன்னும் கொடுக்கவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதாரத்தை வேண்டுமானால் கொடுக்கிறேன். 12–3–2005, மாவட்ட ஆட்சித் தலைவர்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைத்தான் அமைச்சர் கேட்கிறார்கள். அன்றைக்கே கொடுத்திருக்கலாம் இல்லையா?

**திரு. சி. ஞானசேகரன்:** நான் கொடுத்தேன். மாவட்ட ஆட்சித் தலைவரைப் பார்த்து அங்கேயே கொடுத்தேன். அமைச்சர் வரைக்கும் இது வரவேண்டுமா என்று எனக்குத் தெரியவில்லை. நான் வேண்டுமானால் இப்போது கொடுத்துவிடுகிறேன்.

(மனுவை அமைச்சரிடம் அளித்தார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே கேட்டார்கள். கேட்டவுடனே கொடுத்திருக்க வேண்டியதுதானே? கொடுத்தால் இன்றைக்குப் பேச முடியாது என்று முடிவு பண்ணிவிட்டீர்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை, இல்லை.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் C.A.G. Report–ஐ இங்கே காண்பித்து ஒரு முரண்பாடான கருத்தை இங்கே தெரிவித்திருக்கின்றார்கள். அவர் கூறியது உண்மை அல்ல. வருவாய் நிலுவைகள் என்று சொல்லும்போது 31 மார்ச் 2003 வரையில் 5 ஆண்டுகளுக்கு மேலாக நிலுவையிலுள்ள தொகையைத்தான் அவர் குறிப்பிட்டார். எனவே, இது தி.மு.க. ஆட்சியிலிருந்து தொடர்கிறது என்பதுதான் உண்மை. இது இப்போது ஏற்பட்டது அல்ல.

முற்பகல் 11–30

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் ஆட்சிக்கு வந்து விட்டீர்கள். வந்து விட்ட பிறகு என்ன செய்தீர்கள்? அதைத்தான் நான் கேட்பது. உங்களுக்கு 2002–2003 ஆம் ஆண்டிலே ஆய்விலே கொடுத்திருக்கிற C.A.G. Report.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், நீங்கள் சொன்னதற்கு அமைச்சர் விளக்கம் சொல்லிவிட்டார். நீங்கள் அடுத்ததற்குப் போங்கள். அப்படியில்லையென்றால் நேரம் முடிந்து விட்டால், நான் மணி அடித்துவிட்டால், கோபித்துக்கொள்ளாதீர்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** போகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், இங்கே ஒரு கருத்து வந்தபோது தேர்தல் அதிகாரிகளாகப் பணியாற்றிய மாவட்ட ஆட்சித் தலைவர்களெல்லாம் செய்த சில முறைகேடுகள் காரணமாகத்தான் நாங்கள் நாடாளுமன்றத் தேர்தலிலே தோல்வி அடைய நேரிட்டது என்கிற கருத்து தொனிக்கின்ற வகையில் அன்று சொன்னார்கள். ஆனால், அவர்களை வைத்து, இன்னும்கூட பார்த்தீர்கள் என்றால் அதே மாவட்ட ஆட்சித் தலைவர்களே இன்னும் 12 பேர் இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சர் அவர்கள் அப்படிச் சொல்லவேயில்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** அவர்கள்மீது என்ன நடவடிக்கை?

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்னதையே மாற்றி மதிப்பிற்குரிய உறுப்பினர் அவர்கள் இங்கே பேசிக்கொண்டிருக்கிறார். நான் மாவட்ட ஆட்சித் தலைவர்களைப் பற்றிக் குறிப்பிடவில்லை. தமிழகத்திலுள்ள 234 சட்டமன்றத் தொகுதிகளில் பணியாற்றிய Electoral Registration



Officers–ஐப் பற்றித்தான் குறிப்பிட்டேன். அவர்களைப் பற்றியும் நான் குறிப்பிடவில்லை. இந்திய தேர்தல் ஆணையமே அவர்களைக் குறிப்பிட்டு அவர்களுக்கு Show-cause Notice அனுப்ப வேண்டுமென்ற தாக்கீதை இங்கே மாநிலத்திற்கு அனுப்பியது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 234 தொகுதிகளில் இருக்கக்கூடிய அந்தத் தொகுதியினுடைய தேர்தல் அதிகாரிகூட அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவரின்கீழ்தான் அப்போது பணியாற்றினார்கள். ஆகவே, மாவட்ட ஆட்சித் தலைவர்களும் அதற்குப் பொறுப்பு.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கறிஞர் மாண்புமிகு உறுப்பினர் புரிந்து பேச வேண்டும். தேர்தலைப் பொறுத்தவரைக்கும், தேர்தல் ஆணையம்தான் தேர்தலை நடத்துகிறது. மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்தாலும் சரி, அல்லது பிற தேர்தல் அதிகாரிகளாக இருந்தாலும் சரி, they are all functioning during that time under the jurisdiction of the Election Commission. எனவே, Election Commission-தான் அதற்குப் பொறுப்பு. மாவட்ட ஆட்சித் தலைவர் என்ற முறையிலே அல்ல. தேர்தல் ஆணையத்தின்கீழ் பணியாற்றுகிற காரணத்தால் அவர்கள்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும். மாண்புமிகு அம்மா அவர்கள் தேர்தல் ஆணையம் இதுகுறித்து நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத்தான் குறிப்பிட்டார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், 2 மணித்துளிகளில் பேச்சை முடித்துவிடுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீடுகள் தீப்பற்றி எரிந்தாலோ அல்லது வெள்ளத்தால், பொதுவாக மழையால் இடிந்து போனாலோ 2,000 ரூபாய்தான் அரசு கொடுத்துக்கொண்டிருக்கிறது. அந்தத் தொகை மிகவும் குறைவு. ஓலைக்குக்கூடப் போதவில்லை. ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தயவுசெய்து அதைப் பரிசீலித்து...

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இழப்பீட்டுத் தொகை அகில இந்திய ரீதியில் மத்திய அரசினுடைய வரைமுறைக்கு உட்பட்டு, குறிப்பிட்ட அளவுதான் நாமும் கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** வேலூரிலே சென்ற 9 ஆம் தேதி 40 வீடுகள், கடைகள் எரிந்து விட்டன. அது மந்தைவெளிப் புறம்போக்கு. அது எரிந்து விட்ட பிறகு, அந்த இடத்திற்கு மாவட்ட நிருவாகம் சென்று நாங்கள் hostel–ஐக் கட்டப்போகிறோம் என்று திடீரென்று ஓர் அறிவிப்பைக் கொடுத்து, அவர்களிடம் மீண்டும் அந்த இடத்திலே கடையையோ, வீட்டையோ கட்டக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். அது திரௌபதி அம்மன் கோயிலினுடைய இடம். தொடர்ந்து அந்தக் காலியான இடத்திலே அவர்கள் விழா நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தோட்டப்பாளையம் பகுதி, காட்பாடி சாலையையொட்டியுள்ள அந்த இடத்தைத் தயவுசெய்து அந்தக் கோயிலினுடைய பொறுப்பிலேயே விட்டுவிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, பேரிடர் நிவாரண நிதி, குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் நீங்கள் அவ்வப்போது பணத்தை ஒதுக்குகிறீர்கள். இந்த அவையிலே நான் குறிப்பிட்டபோது, 1 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறீர்கள் என்று சொன்னேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள்கூட 2 ஆய்வுக் கூட்டங்களை நடத்தியதாகச் சொன்னார்கள். எங்கள் தொரப்பாடி, அல்லாபுரம், முன்பு Town Panchayat–ஆக இருந்தது இப்போது சிறப்பு ஊராட்சியாக இருந்துகொண்டிருக்கிறது; அந்தப் பகுதியிலே 32 நாட்களுக்கு ஒருமுறை இப்போது தண்ணீர் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். மேலும் லாரிகளிலோ அல்லது வேறு எந்த வகையிலோ நீர் கொடுப்பதற்குப் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சுனாமியைப் பொறுத்த அளவில் நேற்று Indian Express, Hindu–லே ஒரு கருத்து சொல்லப்பட்டிருக்கிறது – Court panel recommends job guarantee scheme;—சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எந்தவிதமான முறைகேடும் இல்லையென்று முதலிலே இங்கே சொன்னார்கள். ஆனால், இப்போது நம்முடைய நாகை மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவரே ஒரே ஊரில் 17 இலட்சம் ரூபாய் சுனாமியால் பாதிக்கப்படாதவர்களுக்குக் கொடுக்கப்பட்டுவிட்டது என்று சொல்லி, அவர்களே ஒப்புக்கொண்டு இன்று Press Statement கொடுத்திருக்கிறார்கள். அதேபோல், இன்று.....



**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. பிச்சாண்டி அவர்கள் இந்தப் பிரச்சினையைக் கிளப்பியபோதே நான் அதற்கு விளக்கமாக விளக்கம் சொன்னேன். நிவாரணம் வாங்கிய பயனாளிகள் உண்மைக்கு மாறான தகவலை அரசிடம் சொல்லி வாங்கியிருக்கின்றார்கள். நாம் ஆய்வு செய்தபோது அது கண்டுபிடிக்கப்பட்டு அந்தத் தொகை திரும்பப் பெறப்பட்டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். *(மணியடிக்கப்பெற்றது)*

*முற்பகல் 11–35*

**திரு. சி. ஞானசேகரன்:** பேச்சை முடித்துவிட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடத்திலே பேச்சை முடியுங்கள்.

**Thiru. C. GNANASEKARAN :** "Court panel recommends job guarantee scheme. The Supreme Court Commission on Food Security will recommend to the State Government that it implement a special employment guarantee scheme with Central assistance for tsunami victims until they return to their normal activities. Winding up the public hearing of the Supreme Court Commission on Food Security here today, Harsh Mander, Adviser to the Commission, said it would take at least three years for the victims to return to their regular life. The special employment scheme should be different from the normal one. Mr. Mander said there were complaints that many affected people, especially Dalits, orphans and farm workers, were not provided Government assistance. He wanted a list of those who were left out so that he could take up their cases with the Government. Again there were conflicts between fishermen and other community people over distribution of assistance. He appealed to the victims to sink their differences so that injustice was not done to the affected persons. Earlier, representatives from tsunami-hit areas complained that relief measures announced by the Central and State Governments had not reached them. Dalits and other non–fishing communities charged that fishermen cornered most of the relief amount."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது என்னவென்றுதான் சொல்லுங்களேன்!

**திரு. சி. ஞானசேகரன்:** Supreme Court–னுடைய panel இங்கே விசாரணைக்கு வந்தபோது, சுனாமியால் பாதிக்கப்பட்ட

பகுதிகளுக்குச் சென்று விசாரித்தபோது தலித் மக்களுக்கும் மற்றும் சில ஆதரவற்றவர்களுக்கும் அந்த நிவாரணம் சென்றடையவில்லை என்பதையும், அதை அரசினுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்வதாகவும் அங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, நான் மாண்புமிகு அமைச்சரைக் கேட்டுக்கொள்வதெல்லாம், இப்படி இருக்கக்கூடிய சிறு குறைகளை நீங்கள் களைய வேண்டும் என்பதுதான்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூறப்பட்டுள்ளது குறை அல்ல. உண்மையிலேயே பாதிக்கப்பட்டவர்கள், மீனவர்களாக இருந்தாலும் சரி, மீன் பிடிக்காத மற்ற பணிகளில் இருந்தவர்களாக இருந்தாலும் சரி, விவசாயக் கூலிகளாக இருந்தாலும், தாழ்த்தப்பட்ட மக்களாக இருந்தாலும், பாதிக்கப்பட்ட அனைவருக்கும் தாயுள்ளத்தோடு புரட்சித் தலைவி நிவாரண உதவிகளை வழங்கியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) ஏதோ சிலர் கூறியிருந்தால், அவர்கள் பாதிக்கப்பட்டவர்களா என்பதை ஆய்வு செய்து, பாதிக்கப்பட்டது உண்மை என்றால் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஏற்கெனவே அம்மா அவர்கள் இட்டிருக்கிற ஆணையின் அடிப்படையில் நிவாரணத்தை வழங்குவார்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** அப்படி வழங்கினால் சரி. (மணியடிக்கப்பெற்றது) பேச்சை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், வாக்கியத்தை முடியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** முடித்துவிட்டேன். பேரவைத் தலைவர் அவர்களே, இதோ பேச்சை முடித்துவிடுகிறேன். ஒன்றே ஒன்று. பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் ஒரேயொரு நிமிடம். முத்திரைத்தாளைப் பொறுத்தவரையில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது புது subject. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. சி. ஞானசேகரன்:** ஒரே ஒரு நிமிடம்...(குறுக்கீடு)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் பேசுகின்றபோது தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தில் தலைவரையும், 11 உறுப்பினர்களையும் நியமித்துவிட்டீர்கள். ஆனால்,



அவர்கள் யாரையும் பணிக்குத் தேர்வு செய்யவில்லை, எந்தப் பணியும் செய்யவில்லை, இத்தனை உறுப்பினர்களை மட்டும் போட்டு வைத்திருக்கிறீர்கள் என்று திரும்பத் திரும்பச் சொன்னார்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அண்மையில்தான் Assistant Public Prosecutor மற்றும் Assistant Medical Officer ஆகிய பதவிகளுக்குத் தேர்வுகள் நடத்தியுள்ளது. விரைவிலேயே 2,322 மருத்துவர்களை இந்த ஆணையம் தேர்வு செய்யவுள்ளது. இதற்கான Notification வெளியிடப்படவுள்ளது. இதுமட்டுமின்றி, இந்தத் தேர்வாணையம், பதவி உயர்வு, மாற்றல் மூலமாகச் செய்யப்படும் நியமனங்கள் தொடர்பாக அரசுக்கு ஆலோசனை வழங்கும் குழுமமாகவும் செயல்படுகிறது.

பணியாளர்களைத் தெரிவு செய்தல் பற்றிய விதிகள் இயற்றுவது, பணி நியமனம், பதவி உயர்வுகள் அளித்தல், ஒரு பணியிலிருந்து மற்றொரு பணிக்கு மாற்றல்கள் செய்தல் ஆகியவற்றில் பின்பற்றப்பட வேண்டிய நெறிமுறைகள், மேலும், அரசு ஊழியர்களைப் பாதிக்கக்கூடிய ஒழுங்கு நடவடிக்கை போன்ற அனைத்து இனங்களிலும் அறிவுரை வழங்கும் பணிகளையும் இத்தேர்வாணையம் மேற்கொள்கிறது. அரசுப் பணியாளர்களுக்கான சிறப்புத் தேர்வுகள் மற்றும் துறைத் தேர்வுகளை இத்தேர்வாணையம் நடத்துகிறது.

இந்த அரசு வந்த பிறகு 10,000 ஆசிரியர்கள் பணிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இந்த recruitment, Teachers Recruitment Board மூலமாகச் செய்யப்பட்டுள்ளது. Tamil Nadu Uniformed Services Recruitment Board மூலமாக 2004–2005 ஆம் ஆண்டில் 11,000 காவல் துறைப் பணியாளர்கள் recruit செய்யப்பட்டிருக்கிறார்கள். மேலும் 2003 ஆம் ஆண்டில் அரசுப் பணியாளர்கள் வேலை நிறுத்தம் செய்தபோது, ஒரு தற்காலிக முறையில் 15,000 பேர் ad hoc basis–ல் recruit செய்யப்பட்டார்கள். அவர்களை அப்படியே பணியில் தொடர அனுமதித்திருக்கிறோம். இது ஓர் அவசர கால நடவடிக்கை என்பதால், Employment Exchange மூலம் செய்யப்பட்டது. ஆகவே, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாகவும், இதர அமைப்புகள் மூலமாகவும் பெருமளவில் பணியாளர்களைத் தேர்வு செய்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2005 மார்ச் 23

முற்பகல் 11–40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், முடித்து விடுங்கள், முடித்து விடுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்திரைத்தாள் மோசடியை முதலிலே எங்களுடைய மாவட்டத்தில் வாணியம்பாடி பகுதியிலேதான் அப்போதிருந்த மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சிவக்குமார் அவர்கள் கண்டுபிடித்து, அதை நம்முடைய Home Secretary–க்கு report செய்து, பிறகு அது படிப்படியாகக் கண்டுபிடிக்கப்பட்டது. இன்றைக்கு அதிலே பல்லாயிரம் கோடி ரூபாய் அரசுக்கு வரவேண்டிய வருவாய் வராமல் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. அது என்ன ஆனது என்றே தெரியவில்லை? தவறு செய்த அதிகாரிகள் தண்டிக்கப்பட்டார்களா என்பதை அரசு விளக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்திரைத்தாள் மோசடி சம்பந்தமாக 19 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. அந்த வழக்குகள் C.B.I. விசாரணைக்கு வழங்கப்பட்டுள்ளன. ஆகவே, C.B.I. விசாரணை நடத்திக் கொண்டிருக்கிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறை நடவடிக்கை ஏதாவது அப்படிப்பட்ட அதிகாரிகள்மீது நம்முடைய அரசு எடுத்திருக்கிறதா? ஏனென்றால், C.B.I.–க்குக் கொடுத்தும் ரொம்ப நாட்களாக ஆகிவிட்டது. இன்னும் அதனுடைய progress என்னவென்று தெரியவில்லை. ஆகவே, அந்த...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** இதோ முடித்துவிட்டேன், முடித்துவிட்டேன். இன்னொன்று, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல, ஆயத் தீர்வையைப் பொறுத்தளவிலே ஒரேயொரு கருத்து. ஆயத் தீர்வையைப் பொறுத்தளவிலே, எங்களுடைய காங்கிரஸ் கட்சியினுடைய கருத்து, பூரண மதுவிலக்கு வேண்டும் என்பதுதான். ஆனால், இந்த அரசு வந்ததற்குப் பிறகு, டாஸ்மாக் வந்ததற்குப் பிறகு, இன்றைக்கு நாங்கள் இவ்வளவு கோடி ரூபாயை ஈட்டியிருக்கிறோம் என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். அதாவது, பணத்தை எவ்வளவுதான் நீங்கள் கூட்டி, அதிகமாக இலாபம் சம்பாதித்தாலும்கூட,...



2005 மார்ச் 23]

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே அதிகமாக மது விற்கப்படுவது காங்கிரஸ் ஆட்சி நடைபெறும் மகாராஷ்டிரா மாநிலத்தில்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அங்கே காங்கிரஸ் கட்சியின் ஆட்சி, பூரண மதுவிலக்கை அமல்படுத்தத் தயாரா என்பதை மாண்புமிகு உறுப்பினர் தெரிவிக்கவேண்டும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ்நாட்டு மக்கள்தான் முதலமைச்சருக்கும், நமக்கும் ஓட்டுபோட்டு அனுப்பினார்கள். இந்த மாநிலத்தைப் பொறுத்தளவில்தான், நாம் இப்படிப்பட்ட கொள்கை முடிவுகளை எடுக்கமுடியும். ஆகவே, நம்முடைய மாநிலத்தில்தான்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், இல்லை, அந்த மதுவிலக்குக் கொள்கையிலே காங்கிரசில் உள்ள எல்லோருக்கும் ஒத்த கருத்து உண்டா? காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் ஒத்த கருத்து உண்டா? டாக்டர் கு. ஜெயக்குமார், (சிரிப்பு) டாக்டர் கு. ஜெயக்குமார். (சிரிப்பு) (குறுக்கீடு) மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சார்ந்திருக்கின்ற காங்கிரஸ் கட்சி டெல்லியை ஆண்டு கொண்டிருக்கிறது. டெல்லி யூனியன் பிரதேசம். அங்கே மிக மோசமாக door–to–door service–ஐ, door–to–door service, mobile service–லே மதுபானம் விற்பதை நேற்றைக்கு அறிவித்திருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போலி முத்திரைத்தாள் விற்பனையில் அரசு என்ன நடவடிக்கை எடுத்தது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களும், 19 வழக்குகள் சி.பி.ஐ. விசாரணைக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன என்ற தகவலை இங்கே சொன்னார்கள். மேலும், 2002 முதல் வாரத்தில், பதிவுத் துறையினுடைய உயர் அலுவலர்களால் ஆய்வு செய்யப்பட்டு, இதுவரை 2,003 உரிமதாரர்களின் உரிமங்கள் இரத்துச் செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அவ்வளவுதான், போதும். திரு. கோ. இரவிராஜ். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** முடித்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்வதெல்லாம், இன்றைக்குக்கூட பார்த்தால், ஆந்திராவில் இருக்கக்கூடிய ஒரு Bench, judgement–ல் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், ஓர் அரசாங்கம் என்பது நம்முடைய மக்களுடைய வளர்ச்சிக்குத்தான் திட்டம் தீட்டவேண்டும். நாம் கொண்டுபோய் சாராயத்தை விற்பது அல்லது டாஸ்மாக்–ஐ நடத்துவது என்பதன்மூலம் நீங்கள் வருமானத்தை அதிகமாக்கியிருக்கலாம். ஆனால், அந்த அளவிற்குக் குடிகாரர்களை அதிகமாக உற்பத்தி செய்திருக்கிறோம் என்று பொருளாகிவிடும். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீண்டும் அதைப் பரிசீலனை செய்து, பூரண மதுவிலக்கை நம்முடைய தமிழகத்தில் கொண்டுவர வேண்டுமென்று கேட்டு, நன்றி சொல்லி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ். (குறுக்கீடு)

**திரு. ப. இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள், பூரண மதுவிலக்கு வேண்டும் என்று தற்போது பேசினார்கள். ஆனால், இதே அவையிலேயே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள், டாஸ்மாக் கடைகளை முன்கூட்டிய நேரத்திலேயே மூடிவிடுகிறார்கள். அதை நீண்ட நேரம் திறந்து வைக்கவேண்டுமென்று இந்த அவையிலேயே பேசியிருக்கிறார். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,–

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், உங்களுடைய கோரிக்கையை ஏற்றுத்தானே திறந்து வைத்திருக்கிறார்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை, இல்லை. தவறு, தவறு. மாண்புமிகு உறுப்பினர் தவறாகச் சொல்கிறார். நீங்களெல்லாம் இராத்திரியிலே நிறைய நேரம் திறந்து வைக்கிறீர்கள். அதனாலே நிறைய law and order problem வருகிறது என்றுதான் நான் பேசினேன். நான் பேசியிருப்பதே, நீங்கள் இராத்திரியிலே அதிக நேரம் திறந்து வைப்பதால், crimes ரொம்ப அதிகமாகின்றன. ஆகவே, வேளையோடு மூடுங்கள், அதை இராத்திரியிலே எல்லாம் திறந்து வைக்காதீர்கள் என்றுதான் சொன்னேன்.



*முற்பகல் 11–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, திரு. கோ. இரவிராஜ்.

**•திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005–2006 ஆம் ஆண்டிற்கான முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு, எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, வருவாய்த் துறை, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை ஆகிய துறைகளின் மானியக் கோரிக்கைகளின்மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ப. இராஜரெத்தினம்) தலைமை]*

பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு தேர்தலிலும் தமிழகத்தினுடைய வெற்றி–தோல்விகளைத் தீர்மானிக்கிற தலைவராக இருந்துவரும் எங்கள் தமிழினப் போராளி, மருத்துவர் அய்யா அவர்களை வணங்கி என்னுடைய உரையைத் துவங்குகிறேன்.

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை. தனியார்கள் நடத்திய மதுக் கடைகளை எடுத்துவிட்டு, அரசே நடத்துவதனால் 2003–2004 ஆம் ஆண்டில் 18 மாதங்களில் மட்டும் மது விற்பனை 3,307 இலட்சம் பெட்டிகள் விற்பனை என்கின்ற அளவைத் தாண்டி, 2004–2005 ஆம் ஆண்டில் 11 மாதங்களிலே மட்டும் 33.10 இலட்சம் பெட்டிகள் மது விற்பனை செய்யப்பட்டு, அதன்மூலம், அரசுக்கு அதிக இலாபம் என்கின்ற நிலையைப் பார்க்கும்போது, நமது தமிழ்நாட்டு மக்கள், பெரும்பாலும் நம்முடைய தமிழ்நாட்டிலே இருக்கக்கூடியவர்களில் அதிகம்பேர் குடிக்கிறார்கள் என்கின்ற நிலையைக் காணமுடிகிறது. அதைப் பார்க்கிறபோது, தமிழகம் குடிகாரர்களுடைய சரணாலயமாக அமைந்துவிட்டதோ என்று சொல்லக்கூடிய அளவிற்கு மது விற்பனையினுடைய விலை, மது உற்பத்தி, விற்பனை அதிகரித்திருப்பதை இங்கே காணமுடிகிறது. கிராமங்களிலே, மதுக் கடைகளைத் திறந்து இருப்பதனால் குடிப்பவர்களுடைய எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு வருகிறது. ஏழைப் பெண்களின் கண்ணீரைத் துடைத்திட கிராமங்களிலே திறக்கப்பட்டுள்ள மதுக் கடைகளை உடனே மூடவேண்டுமென பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

2002–2003 ஆம் ஆண்டில் மதுக் கடை மூலம் அரசுக்கு வருமானம் ரூ.3,877 கோடி, 2004–2005 ஆம் ஆண்டில் வருமானம் ரூ.5,340 கோடி. ஆக, மது விற்பனையில் நாம் முன்னணியில் இருக்கிறோம் என்பது இதன்மூலமாகத் தெரிகிறது. நாம் மது விற்பனையில் மட்டும் முதலிடத்தில் இருந்தால் போதாது. விவசாயம், கல்வி, சுகாதாரம், தொழில் மற்றும் பல்வேறு துறைகளில் நாம் முழு வளர்ச்சியைப் பெறவேண்டும் என்பதுதான் எங்களுடைய தமிழினப் போராளி, மருத்துவர் அய்யா அவர்களுடைய ஆசை என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

உதாரணத்திற்கு, இன்றையதினம் எங்களுடைய மருத்துவர் சின்ன அய்யா அவர்கள், மத்திய சுகாதாரத் துறை அமைச்சராக பணியாற்றிக் கொண்டிருக்கிற இந்த நேரத்திலே, அந்தத் துறையை எப்படி சீரமைத்து, சிறப்பாகச் செயல்படுத்துகிறார் என்பதை பாரதப் பிரதமர் உள்பட பல தலைவர்கள் பாராட்டுகிற செய்திகள் நாள்தோறும் பத்திரிகைகளிலே வெளிவந்து கொண்டிருக்கின்றன.

அதேபோல, தொடர்வண்டித் துறையிலும், நமது தமிழகத்திற்கு எத்தனைத் திட்டங்களைச் செயல்படுத்தி இருக்கிறோம்; என்னென்ன திட்டங்களைச் செயல்படுத்த இருக்கிறோம் என்பதை தமிழ்நாட்டு மக்கள் அறிவார்கள் என்பதை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

பத்திரப்பதிவுத் துறை. ஒரு நபரிடமிருந்து வேறு நபருக்கு சொத்துப் பரிமாற்றம் நடக்கும்போது, சட்டப்படி வரைமுறைப்படுத்தவும், மக்களுக்கு முழுமையாகப் பயன்பட ஏற்படுத்தப்பட்ட துறைதான் பத்திரப்பதிவுத் துறை. 'பத்திரம் என்றால் பத்திரமாய் இரு என்று பொருள்' என்று சொல்லி எங்களுடைய அண்ணன் திரு. ஐ. கணேசன் அவர்கள் சொல்கிறபோது குறிப்பிட்டுச் சொன்னார்கள். பத்திரப் பதிவுகளில், முத்திரைத் தாள் பதிவுக் கட்டணத்தை அதிகபட்சம் 5 சதவீதம் என்கின்ற அளவிலே அரசு நிர்ணயிக்க வேண்டும். இதனால் பொதுமக்களும் பயன்பெறுவார்கள். அரசுக்குக் கூடுதல் வருவாய் கிடைக்கும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

முற்பகல் 11–50

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே முத்திரைக் கட்டணமாக 11 சதவீதத்திலிருந்து



8 சதவீதமாக இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள் சென்ற ஆண்டு குறைத்தார்கள். அந்த அடிப்படையில் கடந்த ஒரு வருஷத்தில் மட்டும் முத்திரைத் தீர்வை குறைக்கப்பட்டதில் தமிழக மக்கள் 648 கோடி ரூபாய் அளவிற்கு பயன்பெற்றிருக்கிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதிவு செய்யப்பட்டு நிலுவையில் உள்ள பத்திரங்களைத் திரும்பப் பெற்றுக்கொள்ள சமாதானத் திட்டம் என்கின்ற ஒரு திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தியது. அது எப்படி இருக்கிறது என்று சொன்னால் ஒரு கடைக்காரர் ஒரு பொருளினுடைய விலையைக் கூட்டி லேபிளை ஒட்டிவிட்டு பின்பு 20 சதவீதம் கழிவு என்று சொல்வதைப்போல இந்தச் சமாதானத் திட்டம் இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட்டுச் சொல்கிறேன். சமாதானத் திட்டம் அறிவிப்பு செய்த பின்பும் சுமார் 51,000 பதிவு செய்யப்பட்ட நிலுவையில் இருக்கக்கூடிய பத்திரங்களை இன்னும் மக்கள் பெற முடியாமல் இருப்பதாகத் தெரிகிறது. இதனால் அரசுக்கு சுமார் 150 கோடி ரூபாய் வர வேண்டிய பணம் வராமல் இழப்பு ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பத்திரங்களைப் புதிதாகப் பதிவு செய்யக்கூடியவர்கள் முன்பு தமிழக அரசு ஆணை எண் 150–லே பத்திரங்களைப் பதிவு செய்கிறபோது நகராட்சிகள் அல்லது பேரூராட்சிகளிலே தடையில்லாச் சான்று N.O.C. பெற்று பதிவு செய்துகொள்ளலாம் என்கின்ற அரசு ஆணை இருந்தபோதிலும் அப்படி எந்த நகராட்சிகளிலேயும் அல்லது பேரூராட்சிகளிலேயும் அப்படிப்பட்ட ஒரு சான்று வழங்கப்படுவதில்லை. அதனாலே பத்திரங்கள் பதிவு செய்யப்படாமல் பொதுமக்கள் அவதிக்குள்ளாகக்கூடிய நிலைமை இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், அரசுக்குக் கூடுதல் வருவாய் வருவது தவிர்க்கப்பட்டிருக்கிறது அல்லது தடுக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

முற்பகல் 11–55

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை. வருவாய்த் துறை என்பது பெரிதும் பொதுமக்கள் தொடர்புள்ள, தினந்தோறும் பொதுமக்களுக்கு உதவி செய்யக்கூடிய ஒரு மிகப் பெரிய

முக்கிய துறை என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்கிறேன். இந்தத் துறையிலே பொதுமக்கள், பாமரர்கள், படிக்காதவர்கள், ஏழை எளிய மக்கள் இவர்கள் எல்லாம் எளிதாக தங்களுக்குத் தேவையான சான்றுகளைப் பெற்று தினந்தோறும் அன்றாடப் பணிகளை எளிதாக அவர்கள் சாதித்துக்கொள்ள முடிகிறதா என்று சொன்னால், அது ஒரு மிகப் பெரிய கேள்விக்குறி. ** என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். **

இன்னும் சொல்லப்போனால், **

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள். அதை அவைக் குறிப்பிலிருந்து முதலில் நீக்கி விடுகிறேன். அதற்குப்பின் நீங்கள் சொல்லுங்கள். ** என்று சொன்னது, அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** ஒட்டுமொத்தமாக, ** சொல்லிவிட்டார், கோரிக்கையினை தவறு நடந்த இடத்தில் அவர் குறிப்பிட்டுச் சொன்னால், உடன் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டுச் சொல்கிறபோதே, தெளிவாகச் சொன்னேன். ** அப்படிக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, விவசாயிகளுக்குப் பட்டா புத்தகம் வழங்கப்பெற வேண்டும். இதன்மூலமாக வங்கிகளிலே கடன் பெறக்கூடிய விவசாயிகளுக்கு அது பயனுள்ளதாக அமையும். எனவே, அந்த பாஸ் புத்தகத்தை வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

உதாரணமாக, ஒரு பட்டா பெறவேண்டுமென்று சொன்னால், தாசில்தார் அலுவலகத்திலே பட்டாவிற்கு மனு செய்து, மாதக் கணக்கிலே காத்திருக்கக்கூடிய ஒரு நிகழ்வு இன்றைக்கும் இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், இன்று தமிழகத்திலே இருக்கக்கூடிய பெரும்பாலான வட்டாட்சியர் அலுவலகங்கள் கணினி

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



மயமாக்கப்பட்டிருக்கின்றன. ஆக, இங்கே பேசுகிறபோது, நம்முடைய அமைச்சர் பெருமக்கள்கூட, பட்டா கேட்டு மனு செய்தால், உடனடியாக 20 ரூபாய் பணம் கட்டினால், உடனே பட்டா கிடைக்கும் என்றுகூட உறுதிமொழி தந்திருக்கிறார்கள். ஆனால், அப்படிப்பட்ட ஒரு நிலைமை எந்த வட்டாட்சியர் அலுவலகத்திலும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரவிராஜ், இரண்டு மணித்துளிகளில் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட்டு, இந்த வருவாய்த் துறையைச் சீரமைத்து, செம்மைப்படுத்தி, தமிழக ஏழையெளிய மக்களுக்கு முழுவதுமாக ** வேலைகளை செய்து தரக்கூடிய ஒரு நல்ல துறை, இந்த வருவாய்த் துறை என்று, தமிழக மக்கள் பாராட்டக்கூடிய அளவிற்கு இந்தத் துறை திகழ வேண்டும். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை. அரசு விதித்துள்ள, புதிதாக ஆள் எடுக்க உள்ள தடைச் சட்டத்தால், கடந்த நான்கு ஆண்டு காலமாக அரசுப் பணிகளுக்கு ஆட்களைத் தேர்வு செய்வது முழுமையாக நின்றுபோய்விட்டது. எனவே, இந்தத் தடைச் சட்டத்தை அரசு மீண்டும் திரும்பப் பெற வேண்டுமென்றும் அதேபோல,...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பணிகளுக்கு ஆட்கள் எடுப்பதற்குத் தடைச் சட்டம் என்று எதுவுமே இல்லை. எங்கெங்கு தேவையோ, தேவையின் அடிப்படையில் தற்போது ஆட்கள் எடுக்கப்பட்டு வருகின்றார்கள் என்பதை நான் தெளிவாக்க விரும்புகிறேன்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல, ** தேர்வாணையக் குழு ஒன்று இருக்கிறது. நான்கு ஆண்டு காலத்திலே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரவிராஜ், இவ்வளவு நேரமும் அதைத்தான் விளக்கினார்கள். நீங்கள் என்ன, மறுபடியும் அதையே சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். வேறு ஏதாவது பேசுங்கள். இன்னும் ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுங்கள். ** என்று சொன்னது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. இரவிராஜ், முடித்துவிடுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

[2005 மார்ச் 23

**திரு. கோ. இரவிராஜ்:** அந்தத் தேர்வாணையக் குழு, அந்தக் குழுவிலே 12 பேர் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். 12 உறுப்பினர்களைக் கொண்ட அந்தக் குழுவிலே, இந்தத் தமிழகத்திலே பெரும்பான்மை சமுதாயமாக வாழ்ந்து கொண்டிருக்கிற, 2 கோடி மக்கட்தொகையைப் பெற்றிருக்கக்கூடிய வன்னியர்களில் ஒருவரைக்கூட நியமிக்கவில்லை என்பதை ஆதங்கத்தோடு இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நண்பகல் 12-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படி .அடியுங்கள். பாய்ன்டை அப்படி அடியுங்கள். அதோடு முடியுங்கள். (சிரிப்பு)

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் துறை. அரசின் பல்வேறு பணிகளில் நியமன முறை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரவிராஜ் முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. கோ. இரவிராஜ்:** வயது, கல்வி, அனுபவம், சம்பளம் போன்ற அடிப்படைக் கோட்பாடுகள், அந்தந்தப் பணியின் சிறப்பு விதிகள் எடுத்துக் கூறுகின்றன. இந்தச் சிறப்பு விதிகள் அனைத்தும் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்டு, நடைமுறைக்கு வந்தவை. இன்றைய நடைமுறைக்கு ஒத்துவராதவை. குறிப்பிட்டுச் சொல்வது என்றால், நவீன கால படிப்புகளான கணினி பாடம், உடல் வேதியல், உயர் தொழில் நுட்பவியல் போன்ற பட்டதாரிகளுக்கு சிறப்பு விதிகளில் இடமில்லை. பல பழைய பாடங்களை தற்போது சொல்லித் தருவதில்லை. இந்தக் குறைபாடுகளைப் போக்கிட அனுபவம் உள்ள உயர் அதிகாரிகள் கொண்ட குழு ஒன்றினை அமைத்து, அனைத்து சிறப்பு விதிகளையும் மறு ஆய்வு செய்து, காலத்திற்கேற்ப திருத்தி அமைத்திட அரசு முன்வரவேண்டுமென்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, என்னுடைய தொகுதியைப் பற்றிய இரண்டே இரண்டு கோரிக்கைகளை மட்டும், தொகுதியின் கோரிக்கைகள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. முடித்துக்கொள்ளுங்கள். மற்றதை எல்லாம் எழுதிக் கொடுத்துவிடுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். 15 மணித்துளிகள் முடிந்துவிட்டது. (குறுக்கீடு) 15 மணித்துளிகள் முடிந்துவிட்டது. மற்றதை எழுதிக் கொடுங்கள்.



2005 மார்ச் 23] [பேரவைத் தலைவர்]

வேறு வாய்ப்பு வரும்போது பேசுங்கள். செல்வி க. பாலபாரதி. (குறுக்கீடு) மத்தியானத்திற்குள் முடிக்க வேண்டியிருக்கிறது. (குறுக்கீடு) தொகுதி பற்றிய கோரிக்கைகளை எழுதிக் கொடுங்கள். செல்வி க. பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு மனிதனுடைய அடிப்படை தேவை என்பது, உணவு, உடை, இருப்பிடம். இம்மூன்று தேவைகளையும் பூர்த்தி செய்வதுதான் மன்னராட்சிக்குப் பிறகு வந்த ஒவ்வொரு அரசாங்கத்தினுடைய கடமையாக இருந்து வந்திருக்கின்றது. அந்த வகையிலேதான் இருப்பிடம் இல்லாதவர்களுக்கு குடிமனைப் பட்டா வழங்கக்கூடியதை இந்த அரசாங்கம் கடந்த மூன்று ஆண்டு காலத்தில், மூன்று இலட்சம் பட்டா வழங்கப்பட்டதாக சற்று முன்னர் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலேகூட 50 ஆயிரம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க நிச்சயிக்கப்பட்ட இலக்கு 84,207 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது அல்லது உயர்ந்திருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே, எனக்குத் தெரிந்தவரை பட்டா இருப்போர்களுக்கு மட்டுமேதான் பட்டா கிடைத்துக்கொண்டிருக்கிறது. பட்டா இல்லாதவர்களுக்கு ஆண்டவன் பரமசிவனே வந்தாலும் பட்டா கிடைப்பதில்லையென்கின்ற யதார்த்த நிலை நீடிக்கிறது என்பதை தங்களுடைய கனிவான கவனத்திற்கு நான் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சென்ற ஆண்டு பட்டா கொடுக்கப்பட வேண்டிய இலக்கைக் குறிப்பிட்டு, அதற்கும் மேலாக நாம் கொடுத்திருக்கின்றோம்; கிட்டத்தட்ட 85 ஆயிரம் பட்டாக்கள் கொடுத்திருக்கின்றோம் என்ற தகவல்தான் சென்ற அந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் இருக்கிறது. ஒட்டுமொத்தமாக 2001-லிருந்து இன்று வரை 3 இலட்சத்து 65 ஆயிரம் வீட்டுமனைப் பட்டாக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதுவும்கூட 2 இலட்சம்தான் நாம் இலக்கு நிர்ணயம் செய்திருந்தோம். கூடுதலாக 3 இலட்சத்து 65 ஆயிரம் வீட்டுமனைப் பட்டாக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் இங்கே தெளிவுபடக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ரேஷன் கடைகளிலேகூட அரிசி, சீனி போன்ற உணவுப் பொருட்களைப் பற்றி வெளியிலே எழுதிப் போட்டிருக்கிறீர்கள். ஆனால், ஒவ்வொரு தாலுகா அலுவலகத்திலேயும் யாருக்கு பட்டா கொடுக்கப்படுவது என்பது மிக இரகசியமாகவே வைக்கப்பட்டிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்டால்கூட பயனாளிகள் யார்...

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டா வழங்கப்படுவதை ஒன்றும் இரகசியமான வேலையாக அரசு கருதவில்லை. வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழுகின்ற மக்களுக்கு, தகுதியுடைய மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. பட்டா இருக்கின்ற யாருக்கும் வீட்டுமனைப் பட்டா வழங்குவதில்லை. அப்படி வழங்கியிருந்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுவார் என்றால், அதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6 மாதத்திற்கு ஒரு முறை மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் வருவாய்த் துறை அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள் அமர்ந்து, அந்தப் பயனாளிகள் யார், என்ன பிரச்சினை வருகிறது என்பதைக் கவனிப்பதற்கான ஒரு கூட்டம் நடத்துவது என்பது இந்தப் பட்டா வழங்கலை முறைப்படுத்த உதவி செய்யும். இல்லையென்று சொன்னால், பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலிருந்து இது தொடர்ந்து நடந்து கொண்டிருக்கக்கூடிய ஒரு இரகசிய வேலையாகவே இருக்கிறது என்பதுதான் என்னுடைய தாழ்மையான கருத்தாகச் சொல்ல வேண்டியிருக்கிறது. அதுவும் குற்றச்சாட்டு அல்ல. உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்காகத்தான் சொல்கிறேன்.

*பிற்பகல் 12–05*

இரண்டாவதாக, குடியிருக்கக்கூடிய வீடுகளுக்குப் பட்டா. கிட்டத்தட்ட திண்டுக்கல், அது ஒரு திண்டான கல்லாக இருப்பதன் காரணமாக, அங்கே குடியிருப்பேயில்லை. 75 ஆண்டுகாலமாகத்தான் அது ஊராக உருமாறி இருக்கிறது. அங்கே 60 ஆயிரம் வீடுகளில் 20 ஆயிரம் வீடுகளுக்குப் பட்டா என்பதே இல்லை. பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் ரேடியோ மைதானம், சுடுகாடு மைதானப் புறம்போக்கு என்பதெல்லாம் இருந்தது. ஆனால், இன்றைக்கு மின் மயானம் வந்திருக்கிறது. வேறு மயானத்திற்காக இடங்கள்



ஒதுக்கப்பட்டிருக்கின்றன. ஆன்ால், பிரிட்டிஷ் ஆட்சிக் கால record–ல் என்ன மைதானம் இருந்ததோ, எந்த இடுகாட்டு மைதானம் இருந்ததோ, அது இன்றைக்கும் பதிவேடுகளில் இருக்கிறது. அது இன்றைக்கு நகரங்களாக, வார்டுகளாக உருவாகி இருக்கிறது. ஆகவே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய தலைமையில் ஒரு குழு அமைத்து, பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் என்ன record இருந்தது, அது இப்பொழுது நடைமுறையில் எப்படி இருக்கிறது என்பதையெல்லாம் ஆய்வுக்கு உட்படுத்தி, தேவையற்ற இடங்களை, வீடுகளில் 10 ஆண்டுகளுக்கு மேல் குடியிருந்தால், சென்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 108–வது அரசாணையின்படி 10 ஆண்டுகள் குடியிருந்தால், அவர்களுக்கு பட்டா. அதேபோன்று இந்த அரசாங்கம் கொடுப்பதற்கு இதுவரை ஏன் முன்வரவில்லை என்பதுதான் என்னுடைய– (குறுக்கீடு) இப்பொழுது நீங்கள் உட்காருங்கள்.– அடிப்படையான கேள்வியாக இருந்து கொண்டிருக்கிறது. (குறுக்கீடு)

அதேபோன்றுதான், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 50 ஆயிரம் கையெழுத்துக்களை மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக திண்டுக்கல்லில் இருக்கக்கூடிய இந்த விசேஷமான பிரச்சினையை வைத்து மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு Post card இயக்கம் என்பதை மக்கள் சார்பாக நாங்கள் நடத்தி இருக்கின்றோம். ஆகவே, அந்த வீடுகளுக்கு பட்டா கொடுக்கக்கூடிய இந்தப் பிரச்சினையில், பழைய record–களில் இருக்கக்கூடிய அந்தப் பதிவேடுகளை மாற்றுவதற்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் முயற்சி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்ததாக, தென் மாவட்டங்கள் முழுவதும் இப்பொழுது பதற்றம் நிலவுகிறது. அநேகமாக ஒவ்வொரு வீட்டினுடைய செங்கல்லும் உடைத்து நொறுக்கப்படுகிறது. குடிசைகள் குப்புற கவிழ்க்கப்படுகின்றன. நடைபாதைக் கடைகள் சூறையாடப்படுகின்றன. Collector–கள் கிட்டத்தட்ட கடப்பாரையும் கையுமாக அலைந்து கொண்டிருக்கிறார்கள். நீதிமன்றத்தினுடைய உத்தரவுகளை அமல்படுத்த வேண்டுமா என்றால் அமல்படுத்த வேண்டும். ஆனால், அதே சமயத்தில் அந்த மக்களினுடைய உணர்வுகள், அவர்களுடைய கஷ்டங்கள், கண்ணீரைத் துடைப்பதற்கு நிர்வாகம் என்ன செய்கிறது? ஒரு மாற்று இடம் கொடுப்பதற்கு, மாற்று என்ன செய்யலாம் என்பதற்கு ஒரு ஆலோசனைத் திட்டம், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் இருப்பது இல்லை, R.D.O. போன்ற அதிகாரிகளும் செய்வதில்லை.

உங்களுடைய கொள்கை விளக்கக் குறிப்பிலேகூட ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும் என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறதே தவிர, அந்த ஆக்கிரமிப்புகளில் சாதாரண ஏழைகள், எளியவர்கள் இருந்தால்...

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரைமுறை இல்லாமல் ஆக்கிரமிப்பு செய்தவர்கள்மீது உயர் நீதிமன்றத்தினுடைய தீர்ப்பின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாற்று இடம் கொடுப்பதற்கு அரசு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவிக்கின்றேன். விருதுநகர் மாவட்டம், வெல்லூரில் கண்மாய் ஒன்று இருக்கிறது. அங்கிருந்து கிட்டத்தட்ட 30 கிராமங்களுக்குத் தண்ணீர் வரத்து கிடைக்கிறது. அந்தக் கண்மாய்க்கு வரக்கூடிய கால்வாய்களை எல்லாம் கிரானைட் கல் quary-க்காக ஒரு தனியார் முதலாளி அடைக்கிறார். அவர்மீது மதுரை நீதிமன்றம் (மணியடிக்கப்பெற்றது) தடையாணை கொடுத்துள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி பாலபாரதி, இன்னும் 2 மணித்துளிகளில் முடியுங்கள்.

**செல்வி க. பாலபாரதி:** இந்த ஆக்கிரமிப்பு அகற்றலில் மாவட்ட Collector எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால், சாதாரண மக்களின் ஆக்கிரமிப்புகளை மட்டும் அகற்றுவது என்பது இன்னமும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். யார் ஆக்கிரமிப்பு, எதற்காக ஆக்கிரமிப்பு, வாழ்க்கைக்காக ஒரு சாதாரண இடத்திலே எலுமிச்சம்பழம் வியாபாரம் செய்வது ஆக்கிரமிப்பே அல்ல. அதிலே ஒரு மூன்று மாடிக் கட்டடம் கட்டி, ஜவுளி ஸ்டோர் வைத்திருந்தால் அது ஆக்கிரமிப்பு. ஆகவே, இதைப்பற்றிய கொள்கை மாறுபாடுகளை அரசாங்கம், அதிகாரிகள் மூலமாக தெளிவுபடுத்தி, அவர்களை இந்த ஆக்கிரமிப்பு அகற்றலுக்கு அனுப்ப வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று, வீட்டு வசதி வாரியத்திற்கு எடுக்கப்பட்ட நிலங்கள். 20 ஆண்டுகாலமாக Court–லே வழக்கு நடத்திக்கொண்டிருக்கிறது. அந்த Court–லே நடக்கக்கூடிய வழக்குகளுக்காக 20 ஆண்டுகாலம் கிரயப் பத்திரங்களைப் பிணைக் கைதிகளைப்போல வைத்துக்கொண்டு, பத்திரமும் கொடுக்கமாட்டோம், வாங்கிய காசையும் கொடுக்கமாட்டோம், Court-லே வழக்கு இருக்கிறது என்று சொல்லிக் கொண்டிருப்பது எதிர்காலத்திலே மாற்றப்பட வேண்டும்.



அதேபோன்று, நில உச்சவரம்புச் சட்டத்தின்படி பழனியிலே இருக்கக்கூடிய 5 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் யாருக்கும் இன்றைக்கு சொந்தமே இல்லை. ஆனால், கேரளாவிலிருந்து சில பெரு முதலாளிகள் வந்து ஆயிரம் ஏக்கர், 2,000 ஏக்கர் என்று பயிர் செய்துகொண்டிருக்கிறார்கள். ஆனால், பட்டா இருக்கிறதா என்றால் பட்டா இல்லை. நில மீட்புப் போராட்டத்தை மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி நடத்தி 300 ஏக்கர் நிலங்களுக்கு 'B' form Notification கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், 300 நிலமற்ற ஏழைகளுக்கு நிலம் கொடுப்பதற்கு இன்னமும் அந்த நில உச்சவரம்புச் சட்டப் பிரிவிலே இருக்கக்கூடிய அதிகாரிகள் முன்வரவில்லை. ஆகவே, அந்த நில உச்சவரம்புச் சட்டத்தின்படி நிலங்களை எடுத்துக் கொடுப்பதற்கு இந்த அரசாங்கம் முன்முயற்சி செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. இராசேந்திரன். (குறுக்கீடு)

**செல்வி க. பாலபாரதி:** இரண்டு கோரிக்கைகளை மட்டும் சொல்லி விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்து விடுங்கள். (குறுக்கீடு) இல்லை, வேண்டாம். 10 நிமிடங்கள்தான். (குறுக்கீடு) அமைச்சருடைய பதிலுரை வேறு இருக்கிறது. (குறுக்கீடு) 10 மணித்துளிகளுக்கு மேல் கொடுக்க முடியாது.

**செல்வி க. பாலபாரதி:** இரண்டு கோரிக்கைகள்தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராசேந்திரன். (குறுக்கீடு) 10 மணித்துளிகளுக்கு மேல் கொடுக்க முடியாது. (குறுக்கீடு) திரு. இராசேந்திரன். (குறுக்கீடு) முடியுங்கள், வாக்கியத்தை முடியுங்கள்.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீ விபத்துகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 2,000 ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. அதை 5,000 ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டும். விதவைப் பெண்களுக்கு 10,000 ரூபாய் என்ற அந்த விசாரணை முறையை மாற்ற வேண்டும். வீடுகளுக்குத்

தெரியாமல் போய் இரகசியமாகக் கேட்டறிந்து, அவர்களுக்குத் தகுதியே இல்லை என்று நிராகரிக்கக்கூடிய அந்த ரெவின்யூ முறை கைவிடப்படுவதற்கு அதிகாரிகளுக்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் ஆலோசனை கூற வேண்டும். பகிரங்க விசாரணை நடத்தப்பட வேண்டும். அந்த மனுதாரர்களை அழைத்து விசாரணை செய்து அவர்களுக்கு உதவி என்பது வழங்கப்பட வேண்டும்.

அதேபோன்று, டாஸ்மாக் ஊழியர்கள் 16 மணி நேரம் வேலை செய்கிறார்கள். தயவுசெய்து 8 மணி நேரமாவது குடிகாரர்களுக்கு ஓய்வு கொடுப்பதற்கு அந்த ஊழியர்களுடைய வேலை நேரத்தை உலக அளவில் இருக்கக்கூடிய வேலை நேரச் சட்டத்தோடு இணைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முத்திரைத்தாள். தடையில்லாச் சான்றிதழ் பெறுவதற்கு மிகப் பெரிய போராட்டத்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். ஒரு மனைப் பிரிவு அங்கீகாரம் பெறுவதற்கு ஒரு வருடம் ஆகிறது. ஆகவே, அரசுக்கு இழப்பு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, அந்த N.O.C. முறைகளிலே சில மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு முன்முயற்சி எடுக்க வேண்டும்.

விவசாயத் தொழிலாளர் நல வாரியம் அமைக்கப்பட்டிருக்கிறது. அதிலே பல நன்மைகளைச் செய்வதற்கு விவசாயத் தொழிலாளர் நலச் சங்கங்களினுடைய பிரதிநிதிகளையும், தலைவர்களையும் அதிலே இணைக்க வேண்டும்.

பஞ்சமி நிலம் மீட்பதற்கு ஒரு தனி ஆணையம் அமைக்கப்பட வேண்டும். கிராம உதவியாளர்களுக்கு இருசக்கர வாகனங்கள் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளோடு, விவசாயிகளுக்குப் பட்டா பாஸ் புத்தகம் வழங்கப்பட வேண்டும். சிறுமலையில் இருக்கக்கூடிய 7,000 விவசாயிகளுக்குப் பட்டா என்பது இன்னமும் வழங்கப்படவில்லை. அவையெல்லாம் தீர்வு செய்யப்பட்ட ஒரு ஜமீன்தாரருடைய நில உச்சவரம்புக்குக்கீழ் எடுக்கப்பட்ட நிலங்கள். ஆகவே, ஒரு குழு அமைத்து சிறுமலை விவசாயிகளுக்குப் பட்டா வழங்குவதற்கு இந்த அரசாங்கம் முன்முயற்சி எடுத்து நடவடிக்கைகளை எடுத்தால் அது நல்ல பலன்களை ஏற்படுத்தும் என்ற வகையிலே வாய்ப்புக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. இராசேந்திரன்.



**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை மானியக் கோரிக்கை மற்றும் ஐந்து மானியக் கோரிக்கைகள்மீது விவாதத்திலே கலந்துகொண்டு, இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக சில கருத்துகளைப் பதிய வைக்க விரும்புகிறேன்.

கோலப்பன் குழு அளித்த பரிந்துரை என்பது, அரசுக்கு அளித்து கிட்டத்தட்ட 7 ஆண்டுகள் கடந்துவிட்டன; அந்தப் பரிந்துரையை அரசு அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றோம். பொதுவாக, விவசாயத் தொழிலாளர்கள் நலன்களைப் பாதுகாத்திட அமைக்கப்பட்ட தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் கிட்டத்தட்ட 7 இலட்சத்து 32 ஆயிரத்து 130 உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு, அவர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட தொகை 7 கோடியே 32 இலட்சத்து 13 ஆயிரம் ரூபாய் அளவிலே அரசின் கணக்கிலே இன்று வரவு வைக்கப்பட்டிருக்கிறது.

விவசாயத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பணியாளர்கள் நியமிக்கப்படாமல், செயல்படாமல் இருக்கிற சூழ்நிலை இன்று இருக்கிறது. எவ்வித வசதிகளும் இல்லாமல், கிராமப்புறங்களிலே வசிக்கின்ற ஏழை, விவசாயக் கூலிகளுடைய, விவசாயத் தொழிலாளர்களுடைய சலுகைகள், விபத்துகளால் ஏற்படுகிற இறப்புகள் மற்றும் பல்வேறு நிவாரணத் தொகைகள் இதுவரை வழங்கப்படவில்லை. விவசாயத் தொழிலாளர் நல வாரியம் முறையாகச் செயல்படுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆதிவாசிகள், பழங்குடி மலைவாழ் மக்கள் வசிக்கின்ற பகுதிகள், அவர்கள் மிருகங்கள் மத்தியிலே வாழக்கூடிய சூழ்நிலை இன்று நாட்டிலே இருக்கிறது. எவ்விதமான அடிப்படை வசதிகளும் இல்லாமல் வாழ்கின்ற அந்த மக்கள் ஜாதிச் சான்றிதழ்கூட பெற முடியாத சூழ்நிலை இன்று நிலவுகிறது. அந்தப் பகுதி மக்கள் மத்தியிலே ஜாதி வாரியாக ஆய்வு செய்யப்பட வேண்டும். ஜாதிச் சான்றிதழ் வழங்குவதற்கு அரசு தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டும். அதேபோல ஆதிவாசிகள், பழங்குடி மலைவாழ் மக்களுக்கு புதியதாக ஒரு நல வாரியம் அமைக்க வேண்டுமென்று இங்கு நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

D
V211, 31/2005
POS.75.2
185276.
நூலகம்

பிற்பகல் 12-15

அதேபோல, 1969 ஆம் வருட வேளாண்மைத் தொழிலாளர்கள் நியாய ஊதியச் சட்டங்கள் தமிழக அரசிலே அமலில் இருந்தாலும்கூட, மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை அரசு ஆய்வு செய்து வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு கூலி உயர்வு என்பது உயர்த்தப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

விவசாயிகளுக்கு வறட்சி, வெள்ளம் போன்றவற்றால் பல்வேறு பகுதிகளிலே பாதிப்பு ஏற்படுகின்றது. அந்தச் சமயங்களில் விவசாயக் குத்தகைதாரர்களுக்கு, குத்தகைத் தொகையை முழுவதுமாக ஒத்திவைக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கூடிய மட்டும் அந்தப் பாதிப்பு ஏற்படும்போது, தள்ளுபடி செய்யவேண்டுமென்ற ஒரு கோரிக்கையையும் நான் வைக்க விரும்புகின்றேன்.

அதேபோல, ஏழைகள், தாழ்த்தப்பட்ட, மிகவும் தாழ்த்தப்பட்ட மக்கள் கிராமங்களில் மட்டுமல்ல, நகர்ப்புறங்களிலும் அவர்கள் வசிக்கின்றார்கள். அவ்வாறு நகர்ப்புறங்களிலே வசிக்கின்ற ஏழை மக்கள், தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தேவையான வீட்டுமனைப் பட்டா என்பது, நகரங்களிலும், மாநகராட்சிகளிலும் வழங்கப்படாத சூழ்நிலை இருக்கின்றது. அரசு அதை கவனத்தில் கொண்டு அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா கொடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, ஆறுகள், குளங்கள், ஏரிகள் செப்பனிடுவதற்கு மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். ஆனால், ஆறுகள், குளங்கள், ஏரிகள் போன்ற இடங்களிலே ஆக்கிரமிப்புகள் என்பது அதிகமாக இருக்கின்றன. இதனால் நீர்வரத்துகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டு, ஏரிகள், குளங்களுக்கு நீர்வரத்து முறையாகப் போய்ச் சேருவதில்லை. இதை ஒழுங்குபடுத்துவதன் மூலமாக அந்தப் பகுதிகளிலே நீர் ஆதாரங்களைப் பெருக்குவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அதேபோல, வறட்சி, வெள்ளச் சேதம் போன்ற நேரங்களில் விவசாயிகளுக்கு நிவாரணமாக வழங்கப்படக்கூடிய நிவாரண நிதி என்பது 1,000 ரூபாய் என்ற அளவிலே அரசால் வழங்கப்படுகிறது. ஆனால், இந்த 1,000 ரூபாய் என்பது விவசாயிகளது உழவுக்



கூலிக்குக்கூடக் கட்டுப்படியாகாத சூழ்நிலை. ஆகவே, இதை அரசு ஆய்வு செய்து, இந்த நிவாரணத் தொகையை உயர்த்துவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அதேபோல, தாலுகா அலுவலகங்களைப் பொறுத்தமட்டிலும் மாணவ, மாணவிகள் சாதிச் சான்றிதழ் பெறுவதற்குக் கிட்டத்தட்ட வாரக் கணக்கிலே அலைக்கழிக்கப்படுகிறார்கள். அதற்குக் கூறப்படுகின்ற காரணம் என்பது, வட்டாட்சியர் அலுவலகங்களிலே போதிய அலுவலர்கள் இல்லை, கிட்டத்தட்ட 50 சதவீதத்திற்குத் தேவையான ஊழியர்கள் அங்கே பணியில் அமர்த்தப்படவில்லை என்ற காரணத்தைக் கூறுகின்றார்கள். வேலைப் பளுவும் இருக்கின்றது என்று குறிப்பிடுகின்றார்கள். அமைச்சரவர்களும் ஒரு விளக்கத்தைக் குறிப்பிட்டார்கள். சில குறிப்பிட்ட துறைகளில் வேலை நியமனத் தடைச் சட்டத்திற்கு விதிவிலக்களித்து பணி நியமனம் செய்கிறோம் என்ற ஒரு விளக்கத்தை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அளித்தார்கள். ஆனால், வட்டாட்சியர் அலுவலகங்களிலே சாதிச் சான்றிதழ், இறப்புச் சான்றிதழ் மற்றும் பல்வேறு சான்றிதழ்கள் வழங்குவதற்குத் தேவையான கால அவகாசம் என்பது அதிகமாக எடுத்துக்கொள்ளப்படுகின்றது. இதைப் போக்குவதற்கு அங்கே போதிய பணியாளர்களை நியமிப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, குறிப்பாக மாவட்ட ஆட்சியர் அலுவலகம். பெரும்பகுதி மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலே சட்டமன்ற உறுப்பினர்களோ, பாராளுமன்ற உறுப்பினர்களோ, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிற Union Chairman–களோ செல்லும்பொழுது, பெரும்பாலும் அங்கே கூறப்படுகின்ற பதில் என்பது மாவட்ட ஆட்சியரோ அல்லது வருவாய்த் துறை ஆட்சியரோ முகாம் சென்றிருக்கின்றார்கள் என்ற ஒரு தகவல் கிடைக்கின்றது. (குறுக்கீடு) அதாவது முகாம் சென்றிருக்கின்றார்கள் அல்லது meeting–க்குச் சென்றிருக்கிறார்கள் என்ற ஒரு தகவல் கிடைக்கின்றது. (குறுக்கீடு) ஆமாம் Camp. இதை, குறிப்பிட்ட தினங்களில் மாவட்ட அளவிலே இருக்கின்ற மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலே இருக்கக்கூடிய உயரதிகாரிகள், எங்களைப்போன்ற மக்கள் பிரதிநிதிகளைச் சந்திப்பதற்குத் தேவையான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரவேண்டும். அதேபோல, தொகுதிப் பிரச்சினை என்னவென்றால்....

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட உயரதிகாரிகள் திங்கட்கிழமைதோறும் மக்களைச் சந்திக்கிறார்கள், மனுக்களைப் பெறுகிறார்கள். கூடுதலாக ஒருவேளை இன்னும் ஒருநாள் வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் கருதுகிறார் என்று நினைக்கின்றேன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், திங்கட்கிழமைதோறும் அலுவலர்கள் இருப்பதாகச் சொன்னார்கள். ஏற்கெனவே அரசாணை இருந்தாலும்கூட, பெரும்பகுதி மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலே அதை அமல்படுத்துவதில்லை. அதைத்தான் நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அதாவது meeting போய் விடுகின்றார்கள், camp போய் விடுகின்றார்கள். இந்த மாதிரி நிலை இருக்கின்றது. இதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகின்றேன். அதேபோல பூமிதானம் மூலம் பெறப்பட்ட நிலம்...

*பிற்பகல் 12-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராசேந்திரன், இரண்டு மணித்துளிகளில் உரையை முடித்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு)

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொன்னதற்கு ஒரே ஒரு விளக்கம். மனுக்களைப் பெறுவதற்கான நாட்கள் என்பது, பொதுமக்களிடமிருந்து மனுக்களைப் பெறுவதற்கான நாள். அன்றையதினம் மக்கள் பிரதிநிதிகள், சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் போய் அவர்களோடு சேர்ந்து கொடுக்கின்ற வாய்ப்பு என்பது இயலாத காரியம். அதற்காக ஒரு தனி நாள் ஒதுக்கினால்தான் நம்முடைய கோரிக்கைகளைச் சொல்வதற்கும், மனுக்களை அளிப்பதற்கும், நடவடிக்கை எடுக்கச் செய்வதற்கான ஒரு முயற்சி ஏற்படும் என்ற கருத்து சொல்லப்படுகின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராசேந்திரன், இரண்டு மணித்துளிகளில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. சோ. இராசேந்திரன்:** பூமிதானம் மூலம் பெறப்பட்ட நிலங்களை விநியோகிப்பதற்காக குழு போடாததன் காரணமாக நிலங்கள் வழங்கப்படவில்லை, பட்டா வழங்கப்படவில்லை. உடனடியாக பூமிதானம் மூலம் பெறப்பட்ட நிலங்களை விநியோகம் செய்வதற்கு, பட்டா வழங்குவதற்கு உடனடியாக ஒரு குழு அமைத்திட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



அடுத்து, எனது தொகுதி பிரச்சினை. குறிப்பாக கடந்த அக்டோபர், நவம்பர் மாதங்களில் தென் மாவட்டங்களில், அதிலும் குறிப்பாக எட்டயபுரம், விளாத்திகுளம், கோவில்பட்டி, சங்கரன்கோவில் போன்ற தாலுகாக்களில் தொடர் மழை பெய்த காரணத்தால் விவசாயிகளின் ஆடுகளுக்கு நீலநாக்கு நோய் கண்டு, ஆயிரக்கணக்கிலே ஆடுகள் அந்தப் பகுதிகளில் செத்து மடிந்திருக்கின்றன. இதுசம்பந்தமாக விவசாயிகள் மாவட்ட ஆட்சியரிடம் பல்வேறு முறை முறையிட்டும், சட்டமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையில் இந்தக் கோரிக்கையைப் பல்வேறு முறை மாவட்ட ஆட்சியரிடம் முறையிட்டும்கூட இதற்குத் தேவையான நடவடிக்கையை எடுக்கவில்லை. நிவாரண நிதி, நீலநாக்கு நோய் கண்ட ஆடுகளை இழந்த அந்த விவசாயிகளுக்கு, உடனடியாக வழங்குவதற்கு அரசு தேவையான நடவடிக்கையை எடுக்கவேண்டும். அதோடு இன்னொரு தொகுதிப் பிரச்சினை. திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டத்தில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராசேந்திரன், உரையை முடித்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு)

**திரு. சோ. இராசேந்திரன்:** முடித்துக்கொள்கின்றேன், ஒரு நிமிடம். சங்கரன்கோவில் வட்டத்தில் இருக்கின்ற இளையநேந்தல் பிர்கா, அந்த பிர்காவைச் சேர்ந்த 12 கிராமங்கள்; அதேபோன்று திருவேங்கடம் பிர்காவிலுள்ள ஒரு கிராமம். அங்குள்ளவர்கள், வருவாய்த் துறை அதிகாரிகளைச் சென்று பார்ப்பதற்கு பல்வேறு கஷ்டங்கள் இருக்கின்ற காரணத்தால், அதை அருகிலுள்ள கோவில்பட்டி வட்டத்துடன் இணைக்க வேண்டுமென்பது அந்தப் பகுதி மக்களுடைய நீண்டநாளைய கோரிக்கை. அதைப் பரிசீலனை செய்யவேண்டும். ஏற்கெனவே 2002 ஆம் ஆண்டு இதுசம்பந்தமாக வினா எழுப்பியபோது, மாண்புமிகு அமைச்சரவர்கள் உடனடியாக, விரைவில் அறிவிக்கப்படும் என்று அன்று அறிவித்தார்கள். இதை அரசு பரிசீலனை செய்து அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல, வருவாய்த் துறை..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள். திரு. கேஎன். இலட்சுமணன். (குறுக்கீடு) மற்ற கோரிக்கைகளையெல்லாம் எழுதிக் கொடுங்கள். (குறுக்கீடு)

**திரு. சோ. இராசேந்திரன்:** வருவாய்த் துறையின் சர்வே பிரிவைப் பொறுத்தமட்டிலும், தமிழ்நாட்டிலுள்ள 30 மாவட்டங்களில்,

4 மாவட்டங்களில் மட்டுமே சர்வே உதவி இயக்குநர்கள் பணிபுரிகின்றார்கள். மீதமிருக்கின்ற 26 மாவட்டங்களில் கீழ்நிலையிலுள்ள பணியாளர்களுக்குக் கூடுதல் பொறுப்பு கொடுத்து அந்த உதவி இயக்குநர் அலுவலைப் பார்த்து வருகின்றார்கள். அந்தப் பணியிடத்தை உடனடியாக நிரப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். டாஸ்மாக்கில் பணிபுரியும் ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு கொடுக்கப்பட வேண்டும். அவர்களின் வேலை நேரம் கணக்கிடப்படாமல் 12 மணி நேரம், 14 மணி நேரம் என்று வேலை பார்க்கக்கூடிய சூழ்நிலைகளெல்லாம் இருக்கின்றன. டாஸ்மாக்–ஐப் பொறுத்தமட்டிலும், இன்று அதிகமான நிதி அரசுக்கு வருவாயாக கிடைக்கின்ற காரணத்தால் அவர்களுடைய பணி நேரத்தை பரிசீலனை செய்து குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள். திரு. கே.என். இலட்சுமணன். *(குறுக்கீடு)* திரு. கே.என். இலட்சுமணன். *(குறுக்கீடு)*

**திரு. சோ. இராசேந்திரன்:** தமிழ்நாட்டில் இருக்கின்ற சார்பதிவாளர் அலுவலகங்களை மூடுவதற்கு அரசாணை பிறப்பித்திருந்தாலும்கூட, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதை தற்காலிகமாக, மூடுவதை நிறுத்தி வைத்திருக்கின்றோம் என்று சட்டமன்றத்தில் அறிவித்தார்கள். எனவே, அதை நிரந்தரமாக மூடாமல் இருப்பதற்கான நிலையை ஏற்படுத்துவதற்கு அந்த அரசாணையை முற்றிலுமாக இரத்து செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.என். இலட்சுமணன், *(குறுக்கீடு)* அமைச்சர் பதில் சொல்ல வேண்டும். *(குறுக்கீடு)*

**திரு. ஜி. பழனிசாமி:** ஒரே ஒரு கோரிக்கை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் பதில் சொல்வதற்காகச் சொல்கின்றேன். குடியிருப்பு மனைப் பட்டா தமிழ்நாட்டில் வழங்குவதற்கு சென்ற முறை சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது. சாராயம் காய்ச்சுபவர், விபச்சாரம் செய்பவர், அதுபோன்று சமூக விரோதிகள் ஆகிய இவர்களோடு சேர்த்து, ஏதோ குடிசை போட்டு ஆக்கிரமிப்பவர்களை அந்தச் சட்டத்திலே இணைத்திருந்தார்கள். குடிசை போட்டவர்களெல்லாம் ஏழை எளியவர்கள். அந்தச் சட்டத்திலிருந்து அவர்களை மீட்க வேண்டும். சமூக விரோதக்



கும்பலோடு இவர்களைக் கொண்டுபோய்ச் சேர்க்கக் கூடாது என்பதை நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

*பிற்பகல் 12-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சரி. திரு. கே.என். இலட்சுமணன்.

**திரு. கே.என். இலட்சுமணன்:** தீயவர்களுக்குப் பத்ரகாளியாகவும், நல்லவர்களுக்கு நல் முத்தாகவும் விளங்குகின்ற மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே,..... *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இலட்சுமணன், இந்த இரண்டு category–யும் யார் யார் என்று சொல்லிவிட்டீர்களானால் பரவாயில்லை.

**திரு. கே.என். இலட்சுமணன்:** வேறு ஒன்றும் இல்லை. சீக்கிரமாக bell அடிக்காமல் இருப்பதற்கு. *(சிரிப்பு)* மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை மற்றும் பல்வேறு மானியக் கோரிக்கைமீது பேச வாய்ப்பளித்தமைக்கு மிக்க நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

பத்திரப் பதிவுத் துறையிலே இன்றைய தினம் Market Value மற்றும் அரசு வழிகாட்டி விலை என்கின்ற இரண்டு விதத்திலே இருக்கின்றன. இன்றையதினம் வழிகாட்டி மதிப்பு, அதற்கும் சந்தையினுடைய விலைக்கும் வித்தியாசம் மிகவும் அதிகமாக இருக்கின்றது. அதுவும் இப்போது சில ஆண்டு காலமாக சொத்துக்களினுடைய மதிப்பு பாதியாகக் குறைந்துவிட்டது. ஆகையினாலே, Estate வியாபாரம், அதாவது நில வியாபாரம், பத்திரப் பதிவு மிகக் குறைந்திருக்கிறது. காரணம், விலை குறைந்துவிட்டது. இந்தத் துறையிலே, நகரத்திலே, இந்த வழிகாட்டி மதிப்பு, எவ்வளவு விலை என்பதை நிர்ணயிப்பதற்கு, நகர்ப்புறத்திலே ஓராண்டு காலத்திற்கு ஒரு முறையாகவும், கிராமப்புறத்திலே மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறையும், இந்த வழிகாட்டி மதிப்பு நிர்ணயம் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதை மாற்ற வேண்டும். ஏனென்றால், மூன்று வருடங்களுக்கு ஒரு தடவை கிராமப்புறத்திலே மதிப்பீடு செய்வது என்றால், அது சரியாக இருக்காது, வழிகாட்டி மதிப்பு சரியாக இருக்காது. ஆகையினாலே, எல்லா இடங்களிலும் ஓர் ஆண்டுக்கு ஒரு முறை ஆய்வு செய்கின்ற முறையிலே ஒரு சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

[திரு. கே.என். இலட்சுமணன்] [2005 மார்ச் 23

வருவாய்த் திட்டத்திலே, 1968–69-லே ரூ.40 கோடி ரூபாயாக பத்திரப் பதிவுத் துறை வருமானம் ஈட்டியிருந்தது. இப்போது நடப்பாண்டு, அதே துறையிலே, 1,626 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது. ரூ.40 கோடியிலிருந்து 1,626 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது. பத்து ஆண்டு காலத்திலே கணக்குப் பார்த்தால், 1994–95 ஆம் ஆண்டிலே 12,65,287 பத்திரப் பதிவுகள் நடைபெற்றிருக்கின்றன. வருமானம் 586.34 கோடி ரூபாய். 2003–2004-லே 15,92,934 பத்திரப் பதிவுகள் நடந்திருக்கின்றன. வருவாய் 1,732.91 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கின்றது. இதிலே பார்த்தோமேயானால், இந்தப் பத்தாண்டு காலத்திலே, பத்திரம் பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை அதிகமாக ஆகவில்லை. ஒன்றிலிருந்து ஒன்றேகால் ஆக, கால் பாகமாக ஏறியிருக்கிறது. ஆனால், வருவாய் 586 கோடி ரூபாயிலிருந்து 1,732 கோடி ரூபாயாக, அதாவது ஏறக்குறைய மூன்று மடங்கு அதிக வருமானம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால், பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை, குறைந்திருக்கிறது. இது எதைக் காட்டுகிறது என்றால், இந்த வழிகாட்டி மதிப்பு அதிகமாக ஏற்பட்ட காரணத்தினாலே, சமாதானத் திட்டத்தைக் கொண்டுவந்து, இந்த வித்தியாசத்திலே 60 சதவீதம் கட்டிவிட்டால் போதும் என்கிற காரணத்தினாலே, மிக நிறையப் பேர் பதிவு செய்திருக்கிறார்கள். ஆகையினாலே, வருவாய் ஏறியிருக்கிறது, அதிகமாக வந்திருக்கிறது. ஆகையினாலே, தமிழ்நாடு அரசு இந்தச் சமாதானத் திட்டத்தை, இன்னும் மூன்று நாட்கள்தான் இருக்கின்றன; 27 மார்ச் 2005-லே இது முடிந்துவிடும். இப்போது இருக்கிற அந்தச் சமாதானத் திட்டப்படி செலுத்த வேண்டிய முத்திரைத் தீர்வைக்கும், ஏற்கெனவே செலுத்தியுள்ள தீர்வைக்கும் உள்ள வித்தியாசத்தில், அந்த வித்தியாசத் தொகையில் 60 சதவீதம் கட்டினால் போதும். உடனடியாக பத்திரம் வாங்கிக் கொண்டு வந்து விடலாம். பொதுமக்களுக்கு மிக நல்ல முறையிலே ஒரு சௌகரியம் இருக்கிறது.

பிற்பகல் 12-30

நான் தமிழ்நாடு அரசை, நம்முடைய அரசைக் கேட்டுக்கொள்வது, 27–3–2005-லே முடிகின்ற இந்தச் சமாதானத் திட்டத்தைக் குறைந்தது 31–3–2006 வரையிலே நீட்டிக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். இல்லாவிட்டால் இந்தக் காலவரையறையை நீக்கிவிட்டால், இன்னும் நமக்கு வருவாய் அதிகமாகவே இருக்கும்.

தமிழ்நாடு முத்திரைத்தாள் சட்டத்தைக் கொண்டு வரப் போகிறோம் என்று அரசு சொல்லியிருக்கின்றது. இதை உடனடியாகக் கொண்டு



2005 மார்ச் 23] [திரு. கே.என். இலட்சுமணன்]

வரவேண்டும். மிக அவசியமும்கூட. இப்பொழுதெல்லாம் கேரளாவிலே ஒரு சின்னக் கடையை விலை பேசி விடுகிறார்கள். இங்கே 50 ஏக்கர் அல்லது 50 இலட்சம் பெறுமானமுள்ள ஒரு கட்டடம் இரண்டையும் சேர்த்து கேரளாவிற்குப்போய், அங்கு பதிவுக் கட்டணம் மிகக் குறைவாக இருப்பதனாலே, இரண்டையும் சேர்த்து அங்கே பதிவு செய்துவிட்டு, இங்கே 50 இலட்சத்திற்குண்டான பதிவுப் பணம், மிகவும் குறைந்த கட்டணத்திலே கேரளாவிலே பதிவு செய்வதினால் மீதமாகின்றது. வாங்கிவிட்டு பத்திரம் பெற்றுக் கொண்டு அந்தக் கடையை ஏதோ ஒரு விலைக்கு விற்றுவிட்டு இங்கே வந்துவிடுகிறார்கள். ஆனால், இது இப்பொழுது தடை செய்யப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டிற்கு அப்படிப் பத்திரம் வந்தால் மீண்டும் இங்கேயும் பதிவு செய்ய வேண்டும் என்கின்ற நிலை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. இதைச் சட்டமாக ஆக்கி தமிழ்நாடு முத்திரைச் சட்டத்தை விரைவிலேயே தமிழ்நாடு அரசு கொண்டு வர வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

மதுவிலக்கைப் பற்றிப் பேசினார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள், திருமதி மஹேஸ்வரி அவர்கள்கூடச் சொன்னார்கள். காங்கிரஸ் உறுப்பினர்கள் பூரண மதுவிலக்கு வேண்டும் என்று சொன்னார்கள். நான் அதற்குப் போகவில்லை. ஆனால், ஓர் அரசு, ஆட்சி நடத்துகின்ற அரசு, ஆட்சியைத்தான் நடத்த வேண்டும் என்பது எனது பணிவான வேண்டுகோள். The business of a Government is to rule. The business of a Government is to rule and a Ruler should not do business. ஆட்சி நடத்த வேண்டும் சீராக, அதுதான் குறிக்கோளாக இருக்க வேண்டுமேயொழிய, வியாபாரத்திலே அரசு இறங்கிவிட்டால் பல்வேறு தொல்லைகள் ஏற்படும். அதுவும் மதுபான வியாபாரத்தில் கண்டிப்பாக இறங்கக் கூடாது என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றேன். நாம் இந்தச் சட்டமன்றத்திலே...

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் தனியாரால் பல்வேறு நிலைகளில் கடைகள் நடத்தப்பட்டபோது போலி மதுபானங்களும், கள்ளச்சாராயமும் அதிக அளவில் வந்ததையடுத்து அரசினுடைய வருவாய் மிகுந்த நட்டத்தில் இருந்தது. இன்றைக்கு நம் அரசு சில்லறை விற்பனையை மேற்கொண்டதிலிருந்து கிட்டத்தட்ட நம்முடைய வருவாய் முன்பிருந்ததைக் காட்டிலும் ஒன்றரை மடங்கு கூடிய நிலையில் இருக்கிறது என்பதை நான் இங்கு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

[2005 மார்ச் 23

**திரு. கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் இலாபம் ஈட்டியிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். என்னுடைய வேண்டுகோள் அது அல்ல. இந்த வியாபாரத்திலே இலாபம் சம்பாதிக்கக் கூடாது என்பதுதான் என்னுடைய தாழ்மையான வேண்டுகோள். நாம் ஒரு முன்னுதாரணமான ஒரு ஆட்சியாக, அரசாக இருக்க வேண்டும். (குறுக்கீடு) இதைத்தான் எல்லோருக்கும் சொல்கிறேன். உங்கள் ஆட்சியில் இருக்கிறதா என்றால் அவர்களுக்கும்தான் நான் சொல்வேன். எடுத்துக் காட்டிச் சொல்கிறேன். அடுத்த மாதம் டெல்லியிலே தேசிய செயற்குழு இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர்கள் எல்லோரும் வருவார்கள். நான் அவர்களைக்கூட வன்மையாகக் கண்டித்துத்தான் சொல்லிக் கொண்டிருக்கின்றேன். அதைத்தான் இங்கேயும் சொல்கிறேன். தமிழ்நாடு இந்தியாவிலேயே முன்னுதாரணமான, ஒரு முதன்மையான மாநிலமாக வேண்டும் என்றால், இதில் செய்து காண்பிக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். பூரண மதுவிலக்கைக் கொண்டு வரவேண்டும் என்று நான் சொல்லவில்லை. இதிலே வியாபாரம் செய்ய வேண்டாம்; அரசு செய்ய வேண்டாம். இப்பேர்ப்பட்ட ஒரு சிறந்த மாமன்றத்திலே நாங்கள் கூடும்போது, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தினமும் திருக்குறளைச் சொல்லி அந்தத் திருக்குறள் பிரகாரம் ஆட்சி நடத்த வேண்டும் என்று தினமும் நினைவுபடுத்திக் கொண்டிருக்கிற நாம்...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், அவர் பேசி முடிக்கட்டும்.

**திரு. கே.என். இலட்சுமணன்:** நான் முடித்துவிடுகின்றேன். (குறுக்கீடு)

பிற்பகல் 12–35

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பாயின்ட் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றுமில்லை. பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு மூத்த உறுப்பினர் அவர்கள் நல்ல கருத்தைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். பூரண மதுவிலக்கு வேண்டாம் என்கிறார். நான்கூட ஏற்கெனவே சொன்னது மாதிரி இந்த TASMAC என்பது இல்லாமல், உடலுக்குக் கேடு விளைவிக்காத கள்ளுக் கடைகளைத் திறக்கலாம். அதனாலே இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலை பெறுவார்கள். இலட்சக்கணக்கான குடும்பங்களுக்கு வாழ்வளிக்க முடியும். அப்படிச் செய்யலாமே!



2005 மார்ச் 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இலட்சுமணன் பேசுங்கள்.

**திரு. கே.என். இலட்சுமணன்:** அண்மையிலே சுனாமி....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளிகளிலே முடித்து விடுங்கள்.

**திரு. கே.என். இலட்சுமணன்:** சரி, முடித்துவிடுகிறேன். சீனிவாசபுரம் என்பது, கடற்கரையோரமாக இருக்கின்ற மீனவர்களுடைய குடியிருப்பு. 5,000 பேர்களுக்கு, ஒரு குடும்பத்திற்கு 4,000 ரூபாய் வீதம் அங்கே சுனாமி நிவாரணமாக, பங்கீடு செய்யப்பட்டது, இரண்டு, மூன்று நாட்கள் தொடர்ச்சியாக. நேர்மையாகக் கொடுத்தார்கள். ரொக்கப் பணமே கொடுத்தார்கள். நானும் இருந்தேன். சீனிவாசபுரத்திலே அரசாங்கம் நடத்துகின்ற மதுபானக் கடை இருக்கிறது. நாள் ஒன்றுக்கு 40,000–லிருந்து 50,000 ரூபாய் அங்கே turnover, விற்பனை. இந்த சுனாமி நிவாரண நிதி கொடுத்த பிறகு, அன்றிலிருந்து ஒரு வாரம், தினம் ஒன்றரை இலட்சம் ரூபாய் sales. நிவாரண நிதியெல்லாம் எங்கே போகிறது என்றால் இங்கே போய்க் கொண்டேயிருக்கிறது. ஆகையினாலே, (குறுக்கீடு) எப்படியோ (குறுக்கீடு) அரசாங்கத்தினுடைய நோக்கம் நிறைவேறாமல் அங்கே பெண்கள் ஆதரவு இல்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களிடம் பணம் போய்ச் சேருவதில்லை. குடிசை கட்டுவதற்கு, சேருவதில்லை என்பதைத்தான் நான் சுட்டிக் காண்பிக்கின்றேன்.

வருவாய்த் துறை என்பது, எல்லாத் துறைகளுக்கும் தாயகமாக விளங்குகின்ற ஒரு துறை. இந்தத் துறையினுடைய நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களை, காலையிலிருந்து, மாலை வரையிலும் நாம் ரொம்ப இடித்துக்கொண்டேயிருந்தோம். இன்றைக்கும் மறுபடியும் அவருக்கே தொடர்ச்சியாக tension கொடுத்துக்கொண்டிருக்கிறோம். ஒரு நாள் விட்டுக்கூட இந்தத் துறையை அவருக்குக் கொடுத்திருக்கலாம். (குறுக்கீடுகள்) கிராம இராஜ்யம்தான் இராம இராஜ்யம் என்பார்கள். கிராமம் சீர்பட்டால்தான் தமிழ்நாடே சீர்படும். ஆகையினாலே, கிராமத்திலே இருக்கின்ற பணியாளர்களுக்கு தமிழ்நாடு அரசு நல்ல ஓய்வூதியம், நல்ல வேலைவாய்ப்புகள், வேலைகள், அதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றது. வரவேற்கின்றோம். கிராமங்களிலே இருக்கின்ற சிறப்பு ஓய்வூதியம் பெறுகின்றவர்களுக்கு இப்பொழுது 848 ரூபாய் இந்த அரசு கொடுக்கின்றது. அதை 1,500 ஆக ஏற்றிக்கொடுத்தால், அந்தக்

[திரு. கே.என். இலட்சுமணன்] [2005 மார்ச் 23

கிராமத்திலே இருக்கின்ற மக்களுக்கு, அந்தக் குடும்பங்களுக்கு மிக நன்றாக இருக்கும் என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, நில வரி வசூல் தமிழ்நாட்டில் மிக அதிகமாக, தொடர்ச்சியாக எந்த அரசாங்கம் வந்தாலும் நிலுவையிலே இருந்துகொண்டே இருக்கின்றது. ஏறக்குறைய 7,000 கோடி ரூபாய்க்கு நில வரி பாக்கி தமிழ்நாட்டிலே இருக்கின்றது என்று நான் கேள்விப்பட்டேன். முழுமையாக வசூலிக்க முடியவில்லை. வழக்கு மன்றத்திலே பல வழக்குகள் நிலுவையிலே இருக்கின்ற காரணத்தினாலே முழுமையாக வசூலிக்க முடியவில்லை. ஆனாலும், மாவட்ட ஆட்சியாளர்கள் வசூலிப்பதற்கு நம்முடைய அரசு கொஞ்சம் முனைப்போடு வேலை செய்வதற்கு அங்கே ஊக்கம் அளிக்க வேண்டும். அதை விரைவாக முடிப்பதற்கு, அதிகமாக வசூல் செய்பவர்களுக்கு ஊக்கத் தொகைகூட கொடுத்தால் பரவாயில்லை. ஆகையினாலே, தமிழ்நாடு அரசு அதை வசூல் செய்தால் இன்னும் பல்வேறு சமுதாய நற்பணிகளைச் செய்ய முடியும் என்பதை நான் இந்த நேரத்திலே வலியுறுத்த விரும்புகின்றேன்.

அதைத் தவிர, தமிழ்நாடு குடும்ப துயர் துடைப்புத் திட்டத்திலே, ஆண்டு ஒன்றுக்கு 5,000 ரூபாய்க்குக்கீழே வருமானம் உள்ளவர்களுக்கு, நிவாரணத் தொகையாக 2,000 ரூபாய் கொடுக்கின்றார்கள். அதை இப்பொழுது 7,200 ரூபாய்க்கு மேற்படாமல் இருக்கின்றவர்களுக்கு, அதே 2,000 ரூபாய் நிவாரணத் தொகையாகக் கொடுக்கப்படும் என்று சொல்லியிருக்கின்றார்கள். தமிழ்நாடு அரசு எவ்வளவு நிவாரணம் கொடுக்கின்றதோ, எல்லாவற்றையும் மானியமாக மத்திய அரசால், வாஜ்பாய் அரசு காலத்திலேயிருந்து கொடுக்கப்பட்டு வருகின்றது. ஆகவே, இதனால் கிராம மக்கள் பயன் அடைவார்கள் (மணியடிக்கப் பெற்றது) அதை . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்து விடுங்கள். முடித்து விடுங்கள்.

**திரு. கே.என். இலட்சுமணன்:** அதைத் தீவிரமாக அமல்படுத்த வேண்டுமென்று கேட்டு நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 12–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.



2005 மார்ச் 23]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணியாளர்கள் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் மூலம் நிர்வாகச் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்ட காரணத்தால் பல இடங்கள் பணி நிரப்பப்படாமல் இருப்பதையும், அதை நிரப்ப வேண்டுமென்ற கருத்தை பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதற்கு நான் ஏற்கெனவே ஒரு விளக்கத்தைத் தந்திருக்கிறேன்.

Administrative Reforms Commission மற்றும் மைய அரசு போன்ற அமைப்புகள், நிதி நிறுவனங்கள் எல்லாம் மக்கள் தொகைக்கு அதிகமாக, பணிகளினுடைய அந்த அளவுக்கு அதிகமாக அரசுப் பணியாளர்கள் இருக்கிற காரணத்தால் அதைச் சீரமைக்க வேண்டுமென்ற வரையறை இருக்கின்ற காரணத்தால் இத்தகைய சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. நான் ஏற்கெனவே சொன்னதைப்போல 7-1/2 கோடி மக்கள் தொகையிருக்கின்ற ஆந்திராவிலே 1.75-சதவீத ratio–வில்தான் அங்கு அரசுப் பணியாளர்கள். 5 கோடி மக்கள் தொகையிருக்கின்ற கர்நாடகத்திலே 1.36 சதவீதம்தான் அரசுப் பணியாளர்கள். அதேபோல, 3-1/2 கோடி மக்கள் தொகை இருக்கின்ற ஒரிசாவிலே 1.87 சதவீதம்தான் அரசுப் பணியாளர்கள். 4-3/4 கோடி மக்கள் தொகை இருக்கின்ற குஜராத்திலே 1.69 சதவீதம்தான் அரசுப் பணியாளர்கள். அதைப்போலவே, உத்தரப்பிரதேசத்திலும் 1.07 சதவீத ratio–தான் இருக்கிறது. ஆனால், தமிழகத்தில் 2.13 ratio என்ற நிலை இருக்கிறது. ஆனாலும்கூட, மாண்புமிகு தமிழகத்தின் முதலமைச்சர் புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள் எந்தெந்தத் துறையில் பணியாளர்களினுடைய எண்ணிக்கைக் குறைவு காரணமாகப் பணித் தேக்கம் ஏற்படுகிறது என்று தெரிய வருகிறதோ, உடனடியாக அங்கெல்லாம் பணியாளர்களை நியமிக்க ஆணையிட்டு ஆங்கு அந்த இடங்கள் எல்லாம் நிரப்பப்பட்டு வருகின்றன. இருந்தபோதிலும்கூட எங்குமே பணித் தொய்வு ஏற்படாமல் நிர்வாகத் துறையிலே அதனுடைய விரைவு சிறிதும் குன்றாமல் பணிகளை மேற்கொள்ளக்கூடிய அளவிற்குப் பணிகள் முடுக்கிவிடப்படுகின்றன. அதற்கான அறிவுரைகள், அறிவுறுத்தல்கள் எல்லாம் அந்தந்தத் துறைக்கு அவ்வப்போது தரப்படுகின்றன.

Sensitization scheme என்ற முறையிலே ஆங்காங்கு அவர்கள் பணி நேரத்தில் productivity increase, உற்பத்தித் திறனைப் பெருக்கக்கூடிய அளவிற்குப் பணியாற்றுகிற அந்தப் பாங்கினையும் தமிழகத்தின் முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள் முடுக்கிவிட்டிருக்கின்ற

காரணத்தால் நிர்வாகப் பணி செம்மையாக நடைபெற்று வருகிறது. நிர்வாகம் செம்மையாக நடைபெறுகிற காரணத்தால்தான் பல்வேறு துறைகளில் இன்று வருவாய்ப் பெருக்கம் அதிகமாக ஏற்பட்டிருக்கிறது. ஆட்சிப் பொறுப்புக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் தற்போது வந்த நேரத்தில் நிர்வாகத்திலே ஏற்பட்டிருந்த அந்தத் தொய்வுகள் எல்லாம் களையப்பட்டு தற்போது துடிதுடிப்புடன், சுறுசுறுப்புடன் நிர்வாகம் நடக்கக்கூடிய ஒரு சூழல் உருவாகியிருக்கிறது. குறிப்பாக, ஏற்கெனவே மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப்போல, வருவாயைப் பெருக்குகிற பணியில் நிதித் துறைக்கு உதவியாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய நேரடிப் பார்வையில் அவர்கள் சிறப்பாகக் கண்காணிக்கிற காரணத்தால், அவர்களுடைய வழிகாட்டுதலின் அடிப்படையில் சிறந்த நிர்வாகம் நடைபெறுகிற காரணத்தால், கிட்டத்தட்ட 1338.68 கோடி ரூபாய் அதிகப்படியான நிதியினை மதுவிலக்குத் துறை மட்டுமே ஈட்டித் தந்திருக்கிறது. அது அந்தத் துறையினுடைய சிறந்த நிர்வாகச் செம்மைக்கு எடுத்துக்காட்டாக இருக்கிறது.

அதைப்போலவே, Commercial Taxes Department-ஐ எடுத்துக்கொண்டால், இந்த ஆட்சி பொறுப்புக்கு வருவதற்கு முன்னால் அப்போது நிர்வாகத்தில் இருந்த சந்து பொந்துகள், முறைகேடுகள் எல்லாம் முற்றிலும் களையப்பட்டு நிர்வாகச் செம்மை ஆங்கு புகுத்தப்பட்ட காரணத்தால், துரிதப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட காரணத்தால், வரலாற்றில் இல்லாத அளவிற்கு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தூய்மைமிகு, விரைவுமிகு நிர்வாகம் 6585.22 கோடி ரூபாய் கூடுதல் வருவாயை வணிக வரித் துறை மூலமாக மட்டும் ஈட்டித் தந்திருக்கிறது. இது இந்த ஆட்சியினுடைய நிர்வாகச் செம்மைக்கு எடுத்துக்காட்டாகும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 12–45*

அதைப்போலவே, பதிவுத் துறை. பதிவுத் துறையிலே ஆட்குறைப்பு என்று சொன்னார்கள். இருந்தபோதிலும்கூட இருக்கின்ற ஆட்கள் அதிகப்படியான அக்கறையோடு பணிகளை மேற்கொண்ட காரணத்தால், பல நிர்வாகச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட காரணத்தால், மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின் அடிப்படையில், கடந்த கால ஆட்சியில் இருந்ததைவிட, தற்போது 652.61 கோடி ரூபாய் அதிகப்படியான வருவாயை ஈட்டக்கூடிய



அளவுக்கு செம்மையான நிர்வாகத்தை தமிழ் மண்ணிலே மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் தவழவிட்டிருக்கிறார்கள் என்பதனை நான் மகிழ்வோடு சொல்லி, இந்த ஆட்சியினுடைய நிர்வாகச் செம்மைக்கு, இந்த ஆட்சியினுடைய சுறுசுறுப்புமிக்க நிர்வாகத்திற்கு இவை எடுத்துக்காட்டு என்பதனைச் சொல்ல விரும்புகிறேன்.

அதைப்போலவே, மிகச் சிறந்த முறையிலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி நிர்வாகப் பணிகளை மேற்கொண்டு வருகிற காரணத்தால், இந்திய அளவிலான மனிதவள மேம்பாட்டுக் குறியீடுகள் சிலவற்றில், எந்தக் காலத்திலும் இல்லாத அளவிற்கு தமிழகம் முதல் நிலை இடங்களைப் பெற்று இருக்கிறது. உதாரணமாக, பொது விநியோகத்திலும், பள்ளிக் கல்வி முறையிலும் தேசிய அளவில், தமிழ்நாடு முதல் இடத்தையும், குடிநீர் வசதி மற்றும் சாலைப் போக்குவரத்துப் பணிகளில் இரண்டாவது இடத்தையும் பெற்று தலைசிறந்த மாநிலமாக இன்று தமிழகம், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையில் விளங்குகிறது *(மேசையைத் தட்டும் ஒலி)* என்றால் அதற்கு அனைத்துத் துறைகளிலும், தமிழகத்தை ஒரு செம்மையான, செம்மைமிகு துறையாக ஒவ்வொரு துறையையும் ஆக்கவேண்டுமென்ற அம்மா அவர்களினுடைய எண்ணக் கிடக்கையில் அவர்கள் மேற்கொள்கிற செயல்பாடுகள். நிலைதாண்டுதல் level jump என்ற முறையில் கோப்புகளைத் துரிதமாக முடிப்பதற்காக அம்மா அவர்கள் கொண்டு வந்த, level jump என்று சொல்லப்பெறும் நிலைதாண்டுதல் முறையும், single file system என்று சொல்லப்படும் ஒற்றைக் கோப்பு முறையும் மற்றும் கோப்புகள் முடிக்கும் இயக்கம் என்று சொல்லப்படும் file closing campaign ஆகியவை மிகச் செம்மையாக நடைமுறைப்படுத்தப்பட்ட காரணத்தால், இந்தச் சாதனைகளை இந்த அரசு எட்டி இருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், வெளிப்படையான, நேர்மையான மற்றும் திறமையான நிர்வாகம் அளிக்கும் பொருட்டு, பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களைத் துரிதமாகப் பரிசீலித்து மனுதாரருக்கு தக்க பதில்களை அளித்திட அரசு காலக்கெடு நிர்ணயித்து இருக்கிறது. அதற்காக, அரசு நடைமுறைகளை மக்கள் புரிந்துகொள்ளவும், தங்கள் கோரிக்கைகளின் தற்போதைய நிலையைத் தெரிந்துகொள்ளவும், அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் துறைத் தலைமை அலுவலகங்களிலும் தகவல் மற்றும் சேவை மையங்கள் மாண்புமிகு அம்மா அவர்களினுடைய ஆணையையொட்டி திறக்கப்பட்டு இருக்கின்றன.

ஒரு அரசின் முதன்மையான நோக்கமே, ஏழை எளிய வாய்ப்பு வசதிகள் அற்ற மக்களுக்கு, நலத் திட்டப் பயன்கள் சென்று அடைவதை உறுதி செய்து அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதுதான். இந்தக் குறிக்கோளை அடைவதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுடைய நேரடிப் பார்வையில், அவர்களுடைய ஆய்வுக்கு உட்பட்ட வகையில் வேகமாகச் செயல்படும் நிர்வாகத் திறனால், மக்கள் சாசனம் வகுக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டதற்கிணங்க தலைமைச் செயலகத்தில் 29 துறைகளும், சில அரசு நிறுவனங்களும் மக்கள் சாசனத்தைத் தயாரித்து தமது கொள்கை விளக்கக் குறிப்புடன் சட்டமன்றப் பேரவை முன்வைத்து இருக்கிறார்கள். இத்துறைகளின் மக்கள் சாசனங்களை இவ்வரசினுடைய www.tn.gov.in என்ற இணையதள முகவரியில் காணக்கூடிய ஒரு சூழலை உருவாக்கி இருக்கிறது மாண்புமிகு அம்மா அவர்களினுடைய அரசு.

ஒளிவு மறைவற்ற சிறந்த நிர்வாகத்திற்கு மின் ஆளுகையை உரிய அளவிற்குப் பயன்படுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள், e-governance முறைக்கு. அதைப்போலவே, அனைத்துச் சட்டங்களும் விதிகளும் உள்ளடக்கிய மின்னணுவியல் தொகுப்பு உருவாக்கப்பட்டு கணினி குறுந்தகடுகளில்- C.D.-Rom பதிவு செய்யப்பட்டு வருகின்றன.

அதுமட்டுமல்லாமல், இத்துறையால் வெளியிடப்பட்ட அனைத்து அரசாணைகளையும் உள்ளடக்கிய மின்னணுவியல் தொகுப்பு compendium உருவாக்கப்பட்டு, கணினி குறுந்தகடுகளில் பதிவுசெய்யப்பட்டு வருகின்றன. சட்டங்களிலும், விதிகளிலும் அவ்வப்போது செய்யப்படும் திருத்தங்கள் உடனடியாக கணினியில் பதிவு செய்யப்பட்டு, இதற்காக தனியாக ஒரு Reference Bank-ஐ மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டு உருவாக்கியிருக்கிறார்கள்.

தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயம் Administrative Tribunal-ஐப் பொறுத்தவரைக்கும், அதனுடைய நிலை, மாண்புமிகு உறுப்பினர்கள் பலமுறை பேசுகிறபோது பேசினார்கள். 2001 ஆம் ஆண்டு ஒரு கொள்கை முடிவினை அரசு எடுத்து, இந்தத் தீர்ப்பாயத்தைக் கலைத்து விடலாம் என்று முடிவு எடுத்தது. அதுகுறித்து சென்னை உயர் நீதிமன்றத்தினுடைய அனுமதியைப் பெற்று மைய அரசிற்கு தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயத்தைக் கலைத்துவிட கருத்துரு அனுப்பப்பட்டது. இது தற்போது மைய அரசினுடைய ஆய்விலே இருக்கிறது. இதற்கிடையிலே சென்னை உயர் நீதிமன்றத்திலே 6-1-2005-ல் வழங்கப்பட்ட நீதிப்பேராணை வழக்கு, 2 நீதிபதிகள் ஆயம்,



மனுதாரர்கள் விருப்பப்பட்டால் தீர்ப்பாயத்திலிருந்து வழக்குகளை உயர் நீதிமன்றத்திற்கு மாற்றிக்கொள்ளலாம் என்று ஆணையிட்டிருக்கிறது. அதன்படி பல வழக்குகள் மாநில நிர்வாகத் தீர்ப்பாயத்திலிருந்து உயர் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு வருகின்றன. இதற்கிடையிலே உச்ச நீதிமன்றமும் ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கிறது. மாநில நிர்வாகத் தீர்ப்பாயத்தைக் கலைப்பது ஒரு கொள்கை முடிவென்றால் அந்த உரிமை மாநில அரசுக்கு உண்டு என்று மத்தியப் பிரதேசம் தொடர்ந்த ஒரு வழக்கில் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு அளித்திருக்கிறது. உச்ச நீதிமன்றத்தினுடைய அந்தத் தீர்ப்பு பற்றிய தகவலை உயர் நீதிமன்றத்திற்கு மாநில அரசு கூறியிருக்கிறது. மைய அரசுக்கு இது குறித்து தகவலைத் தெரிவித்து, மைய அரசு இந்தத் தீர்ப்பாயத்தைக் கலைப்பதற்கு ஆணையிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 12-50

அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களைப் பொறுத்தவரைக்கும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபோது நிதிநிலை எவ்வாறு சீர்கெட்டு இருந்தது என்பது அனைவருக்கும் தெரியும். இருந்த நிதியை வைத்துத்தான் எல்லாப் பிரச்சினைகளையும் தீர்க்க வேண்டியிருந்தது. ஒப்பந்தக்காரர்களுக்குக்கூட கொடுக்க வேண்டிய, அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய பாக்கியை, பண பாக்கியை தர முடியாத ஒரு நிலை இருந்தது. ஒரு மாதத்தில் 27, 28 நாட்கள் ரிசர்வ் வங்கியிலிருந்து O.D. facility பெற்றுதான் அரசு நிர்வாகத்தையே நடத்தக்கூடிய சூழல் இருந்தது. அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு, அவர்கள் வாங்கிய டீசலுக்கு வேண்டிய பணத்தைக்கூட தர முடியாத நிலை இருந்தது. இப்படிப்பட்ட நிலையில் வளர்ச்சிப் பணிகளையும் ஒரு புறம் மேற்கொள்ள வேண்டும், அன்றாட நிர்வாகச் செலவை ஈடுகட்ட வேண்டும் என்ற கடுமையான ஒரு சோதனை, நிதி நெருக்கடி கடந்த கால ஆட்சியால் உருவாக்கப்பட்டுவிட்ட நிலையில்தான் பல நிர்வாகச் சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. மாண்புமிகு அம்மா அவர்கள் 1991-96 ஆண்டு வாக்கில் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது செம்மையான நிதி நிர்வாகம் அம்மா அவர்களால் மேற்கொள்ளப்பட்டிருந்தபோது, தாய் உள்ளத்தோடு கேட்காமலேயே அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) எத்தனையோ சலுகைகளைத் தந்த கருணைத் தாய்தான் தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

அரசு இயந்திரம் சிறப்பாக இயங்குவதற்குப் பணியாளர்கள் முக்கியப் பங்கு வகிக்கிறார்கள் என்பதை உணர்ந்த தாய் அவர்கள் அப்போதே சொன்னார்கள். நிதிநிலை சீர்கெட்டு இருக்கிறது, இக்கட்டான சூழலில் நாங்கள் ஆட்சிக்கு வந்திருக்கிறோம், நிதிநிலை சீர்படுத்தப்பட்டவுடன் கட்டாயமாக உங்களுக்கு அனைத்து சலுகைகளும் தரப்படும் என்ற உத்தரவாதத்தை அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஈந்தார்கள். தன் வயிற்றுப் பிள்ளைபோல் அரசு ஊழியர்களையும், ஆசிரியர்களையும் பாவிக்கின்ற தாயாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருந்த காரணத்தால், இருக்கின்ற காரணத்தால் (மேசையைத் தட்டும் ஒலி) நிதி நெருக்கடியைச் சமாளிக்க பல்வேறு ஆக்கத் திட்டங்களை மேற்கொண்டு, சிக்கன நடவடிக்கைகளை மேற்கொண்டு, சீர்திருத்தங்களை மேற்கொண்டு, வரி ஏய்ப்புகளைக் கண்டறிந்து, அவற்றைத் தடுத்து, வருவாய்ப் பெருக்கத்தை ஏற்படுத்தி ஓரளவு பிரச்சினையைச் சமாளித்தவுடன் மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், சமுதாயத்தில் நலிந்த மக்களுக்கும் எந்த ஒரு நிதி நெருக்கடி கடந்த காலத்தில் உருவாக்கப்பட்டதோ அந்த நிதி நெருக்கடியால் ஏற்பட்ட இன்னல்களை எல்லாம் களைந்து புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் எண்ணற்ற சலுகைகளைத் தாராளமாக வாரி வழங்கியதை இந்த அவை அறியும்.

அதைப்போலதான், சமுதாயத்தில் நலிந்த மக்களுக்காக எந்தெந்த திட்டங்கள் கடந்த கால நிதி நெருக்கடியால் இடையிலே இன்னலுக்கு உள்ளானதோ அவற்றை எல்லாம் களைந்து, இலவச வேட்டி, சேலையை மீண்டும் தமிழகத்திற்குத் தந்தார்கள். இலவச மின்சாரத் திட்டத்தை உழவர்களுக்குத் தந்தார்கள். 6 ரூபாய் அரிசியை 3-1/2 ரூபாய் என ஏழை மக்களின் வயிற்றிலே பாலை வார்த்தார்கள். இப்படிப்பட்ட செம்மையான நிதி நிர்வாகத்தை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டுவந்து வெற்றி அடைந்ததற்குக் காரணம், அம்மா அவர்கள் ஒரு நாளைக்கு ஒரு மணி, 2 மணி அல்ல, 18, 20 மணி நேரம் உழைத்து, நாட்டில் செம்மையான நிர்வாகம் நடைபெற வேண்டும். அதேநேரத்தில் வளர்ச்சிப் பணிகள் கண்காணிக்கப்பட வேண்டும், இத்தோடு சேர்ந்து அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், ஏழை எளிய மக்கள் நலன் பேணப்பட வேண்டும் என்று தாய் உள்ளத்தோடு அம்மா அவர்கள் பாடுபட்ட காரணத்தால் இந்த அரசு இன்று இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு தலைசிறந்த அரசு என்ற பாராட்டை (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பெற்றிருக்கிறது என்பதனை எடுத்துச் சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி)



மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கோரிக்கைகளைத் தந்திருக்கிறார்கள். பல்வேறு வெட்டுத் தீர்மானங்களைத் தந்திருக்கிறீர்கள். உங்களுடைய கோரிக்கைகள் எல்லாம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, ஆய்ந்து, அதற்கேற்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று கூறி, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது வெட்டுத் தீர்மானங்களை எல்லாம் திரும்பப் பெற்று இந்த மானியத்தை நிறைவேற்றித் தருமாறு பேரவைத் தலைவர் அவர்களை வேண்டுகிறேன்.

பிற்பகல் 12-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் நலனை இதயத்திலே தேக்கி, தமிழகத்து மக்களின் நலனை நெஞ்சிலே தாங்கிக் கொண்டு, வாழ்வின் ஒவ்வொரு கணத்தையும் இந்த நாட்டுக்காகவும், இந்த நாட்டு மக்களுக்காகவும் அர்ப்பணித்து வாழ்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் பொற்பாதங்களில் எனது வணக்கத்தைக் காணிக்கை ஆக்குகின்றேன்.

மக்களுக்கு அன்பான, மக்களுக்கு நட்பான, மக்களுக்குத் தேவையான, மக்களுக்கு ஆதரவான புதிய புதிய அறிவிப்புகளை, புதிய புதிய சலுகைகளை, உதவிகளை மாண்புமிகு அம்மா அவர்கள் இங்கே தினம் தினம் அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் அறிவுரைப்படி, அவர்களின் வழிகாட்டுதலின்படி ஒவ்வொரு நாளும், துறைதோறும், தமிழகத்தின் நலனுக்காக, தமிழக மக்களின் நலனுக்காக, புதிய முன்னேற்றத் திட்டங்களும், முனைப்பான சலுகைகளும் மக்களுக்கு உரித்தாக்கிட இங்கே சமைக்கப்பட்டு வருகின்றன. இந்தப் புதுமைத் திட்டங்களுக்கெல்லாம் அடித்தளமாக, ஆதார நாதமாகத் திகழ்ந்து கொண்டிருப்பவர் எங்கள் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

"தொட்டதெல்லாம் துலங்க வைக்கும் தெய்வீக மணிக் கரம்,
கண் பட்டதெல்லாம் துளிர்க்க வைக்கும் தூய ஒளிக் கீற்று."

தனித்த சொல்லாற்றலும், தனிப்பெரும் செயலாற்றலும், அன்னை தந்த வரமாகப் பெற்றிருக்கும் எங்கள் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா

அவர்கள், தமிழகத்தை முதல் மாநிலமாக, இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக உருவாக்கிட பலப் பல திட்டங்களை வகுத்து, அந்தத் திட்டங்களையெல்லாம் வெற்றிகரமாகச் செயல்படுத்தி, தான் எண்ணிய இலட்சியத்தை எய்திட அரும் பாடுபட்டு வருகிறார்கள். வள்ளுவரின் வார்த்தைகளுக்குச் சொல் விளக்கம் சொல்பவர் அல்ல எங்கள் அம்மா. செயல் விளக்கமாய் திகழ்பவர்தான் எங்கள் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

*"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்*
*திண்ணிய ராகப் பெறின்"*

என்கின்ற வள்ளுவரின் வாக்குக்கிணங்க, மற்றவர்களால் முடிக்க முடியாது என்கின்ற செயல்களையெல்லாம் எண்ணியாங்கு எய்தி முடித்துக் காட்டுகின்ற தலைவர்தான் எங்கள் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தங்களால் செய்ய முடியாது என்று ஏனைய தலைவர்கள் செய்யத் தயங்குகின்ற திட்டங்களை, எவராலும் செய்து முடிக்க முடியாது என்று அவர்கள் கூறுகின்ற செயல்களை, தமிழக மக்களின் நலன் கருதி, துணிந்து செயலாற்றி வெற்றி காண்பவர் எங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்கள் நிகழ்த்திய சாதனைகளை ஒவ்வொன்றாகச் சொல்லிக் கொண்டே போகலாம். நாள் முழுக்க விவரித்துக் கொண்டே போகலாம். சுருக்கமாகச் சொன்னால், தமிழகத்தின் நலன் காக்கவும், தமிழக மக்களின் நலன் பேணவும், இதுபோன்ற ஒரு தலைவரை, இதுபோன்ற ஒரு முதல்வரை இந்த நாடு இதுவரை கண்டதில்லை (மேசையைத் தட்டும் ஒலி) என்று வரலாறு கூறும் வகையில் தமிழகத்தை வழிநடத்திக் கொண்டிருக்கிறார்கள் எங்கள் அம்மா அவர்கள்.

ஏழை எளிய மக்களின் இன்னல்களை நீக்கி, அவர்கள் ஏற்றம் பெற வழிகளையும் நன்கு அறிந்தவர் எங்கள் அம்மா அவர்கள். அதனால்தான் அம்மா அவர்கள் வகுக்கின்ற திட்டங்களெல்லாம், ஏழை எளிய மக்களின் வாழ்க்கை மேம்பாட்டை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

சிறப்புக்கு மறு பெயராய், சிந்தனை ஆற்றலுக்கு மறு பெயராய், புதுமை, புரட்சி, துணிவு, தைரியம், அறிவாற்றல், சிந்தனைத் திறன், செயலாற்றல், மன உறுதி, மனித நேயம், வள்ளல் குணம், நம்பிக்கை ஆகிய மனித குலத்தின் பன்முக ஆற்றல்களை ஒருங்கே கொண்ட



மக்கள் சக்தி என்னும் பலம் மிகுந்த ஆற்றலோடு தமிழகத்தை வழி நடத்திக் கெண்டிருக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி எனது பதிலுரையை வழங்குகின்றேன்.

*பிற்பகல் 1–00*

வருவாய்த் துறை. நிகரற்ற சிந்தனையும், நேர்மை மிக்க செயல் திறனும் ஒருங்கே அமையப்பெற்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையின்கீழ் செயல்படும் தமிழக அரசின் பல்வேறு பணிகளைச் செம்மையாகச் செயல்படுத்தும் துறைகள் அனைத்திற்கும் முன்னோடியான துறை வருவாய்த் துறை ஆகும்.

சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பது, மாவட்ட நிர்வாகத்தை நடத்திச் செல்வது ஆகிய முக்கிய பணிகளுடன் நில வரி வசூல் செய்வது, அரசிற்குச் சேர வேண்டிய பல்வகையான நிலுவைகளை வருவாய் வசூல் சட்டத்தின்மூலம் வசூல் செய்வது, பொது நிர்வாகம், நில மேலாண்மை, பொது விநியோகம் மற்றும் பொது மக்களுக்குத் தேவையான சான்றிதழ்களை வழங்குதல் உள்ளிட்ட பணிகளுடன், பொதுத் தேர்தல்களை நடத்துதல், ஊராட்சித் தேர்தல்களை நடத்துதல், மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, வறட்சி, புயல் மற்றும் வெள்ளம், நிலச் சரிவு, நில நடுக்கம், சுனாமி போன்ற இயற்கைச் சீற்றங்களின்போது நிவாரணப் பணிகளை மேற்கொள்ளுதல் போன்ற முக்கிய பணிகளையும் வருவாய்த் துறை செயல்படுத்தி வருகிறது. எனவே, மாண்புமிகு அம்மா அவர்கள் மீண்டும் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், வருவாய்த் துறையின் செயல்பாட்டினை அப்போதைக்கப்போது ஆய்வு செய்து அறிவுரை வழங்கி, பணிகளை முடுக்கிவிட்டதன் காரணமாக, கடந்த 4 ஆண்டுகளில் வருவாய்த் துறை பல சாதனைகளைச் செய்துள்ளது.

மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற கடந்த 4 ஆண்டுகளில் சாதனைகளாக கிருஷ்ணகிரி மாவட்டம் உருவாக்கப்பட்டு, இம்மாவட்டத்திற்கு ஒருங்கிணைந்த மாவட்ட பெருந்திட்ட வளாகம் கட்டி முடிப்பதற்கு 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். கட்டடப் பணிகள் விரைந்து ஆரம்பிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், வருவாய்த் துறை மற்றும் பிற அரசுத் துறைகளுக்கும் புதிய கட்டடங்கள் கட்ட 74 கோடி ரூபாய் வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதில் 260 கட்டடங்களின் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 230 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள கட்டடங்கள் அனைத்தும் 31–3–2005–க்குள் முடிக்கப்படும். வருவாய்த் துறையின் வரலாற்றில் கட்டடங்கள் கட்டுவதற்காக இவ்வளவு பெரிய தொகை ஒதுக்கப்பட்டது மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில்தான் என்பதைத் (மேசையைத் தட்டும் ஒலி) தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

தமிழ்நாட்டிலும் 30 மாவட்டங்களில் 28 மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் அரசுக் கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றன. மீதமுள்ள 2 மாவட்டங்களில், பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடம் கட்டி முடிக்கும் தறுவாயில் உள்ளது. கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்டுவதற்கு ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டு, கூடிய விரைவில் பணிகள் தொடங்கப்படவுள்ளன. ஆக, தமிழ்நாட்டிலுள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் அனைத்தும் சொந்தக் கட்டடத்தில் இயங்குவதற்கு பெருமை தேடித் தந்தவர் நமது மாண்புமிகு அம்மா அவர்கள்தான் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல, 73 வருவாய் கோட்டாட்சியர் அலுவலகங்களுக்கும் சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டு இயங்கி வருகின்றன. 206 வட்டாட்சியர் அலுவலகங்களில் 188 அலுவலகங்கள் அரசுக் கட்டடங்களில் செயல்படுகின்றன. இவ்வாண்டு, எட்டையாபுரம், எடப்பாடி மற்றும் மணல்மேல்குடி ஆகிய மேலும் 3 வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

30 மாவட்ட ஆட்சியர்களில், 26 பேருக்கு அரசுக் கட்டடங்களில் முகாம் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் ஏற்கெனவே கட்டப்பட்டுள்ளன. பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் குடியிருப்புக் கட்டடம் முடியும் தறுவாயில் உள்ளது. கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் குடியிருப்பு விரைவில் கட்டப்படும்.

30 மாவட்ட வருவாய் அலுவலர்களில் 24 பேருக்கு அரசுக் கட்டடங்களில் முகாம் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. பெரம்பலூர் மாவட்ட வருவாய் அலுவலருக்கு குடியிருப்புக் கட்டடம் கட்டி முடியும் தறுவாயில் உள்ளது. கிருஷ்ணகிரி மாவட்ட வருவாய் அலுவலருக்குக் குடியிருப்பு விரைவில் கட்டப்படும்.



73 வருவாய்க் கோட்ட அலுவலர்களில் 65 பேருக்கு அரசுக் கட்டடங்களில் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. திருத்தணி வருவாய்க் கோட்ட அலுவலருக்கான குடியிருப்பு கட்டும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மீதமுள்ள 7 வருவாய்க் கோட்ட அலுவலர்களுக்கான குடியிருப்புகள் படிப்படியாகக் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

206 வட்டாட்சியர்களில் 179 பேருக்கு அரசுக் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. மீதமுள்ள வட்டாட்சியர்களுக்கான குடியிருப்புகள் படிப்படியாகக் கட்டி முடிக்கப்படும்.

முற்பகல் 1–0.5

வருவாய் ஆய்வாளர்கள் 1,120–ல் 1,084 பேருக்கு அரசுக் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. மீதமுள்ள வருவாய் ஆய்வாளர்களுக்குக் குடியிருப்புகள் படிப்படியாகக் கட்டிமுடிக்கப்படும்.

2001 ஆம் ஆண்டிற்கு முன்பு மொத்தம் 575 கிராம நிர்வாக அலுவலர்களுக்கு மட்டுமே அரசு அலுவலகக் கட்டடங்கள் இருந்தன. மாண்புமிகு அம்மா அவர்கள் மீண்டும் பதவி ஏற்ற பிறகு 2001 ஆம் ஆண்டிற்குப் பிறகு மட்டும் கிராம நிர்வாக அலுவலர்களுக்கு 11,683 கட்டடங்கள் கட்டப்பட்டு இயங்கி வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இது வருவாய்த் துறை வரலாற்றில் மாண்புமிகு அம்மா அவர்கள் நிகழ்த்திய சரித்திர சாதனையாகும்.

தொடர்ந்து தோட்டப் பயிர்களுக்கு ஆதார விலை கிடைக்காமல் அவதிப்பட்ட வேளாண் பெருமக்களுக்கு நிரந்தரமாக நிவாரணம் கிடைக்கும்பொருட்டு, வேளாண் வருமான வரியை அறவே இரத்து செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பொது மக்கள் குறை உடனுக்குடன் தீர்க்கப்படவேண்டும் என்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர் மாண்புமிகு அம்மா அவர்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்பேரில் கடந்த நான்கு ஆண்டுகளில் மனு நீதித் திட்டத்தின்மூலம் 8,21,133 மனுக்கள் பெறப்பட்டு, 6,08,241 மனுக்கள் முடிவு செய்யப்பட்டன. பொது மக்கள் குறை தீர்க்கும் நாட்களில் 14,53,101 மனுக்கள் பெறப்பட்டு 11,55,867 மனுக்கள் முடிவு செய்யப்பட்டன.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி நவீன தகவல் தொழில்நுட்பத்தின் மூலமாக அனைத்து நிலப் பதிவுருக்களையும் விவசாயிகள் எளிதில் பெறவேண்டும் என்பதற்காக நிலப் பதிவுருக்கள் முழுவதும் கணினி மயமாக்கப்பட்டுள்ளன என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்களின் அறிவுரைப்படி இதுவரை 31,95,000 நில அளவை ஆவண நகல்கள் கணினி மூலம் விநியோகம் செய்யப்பட்டு அரசுக்கு 6.6 கோடி ரூபாய் வருவாயும், மக்களுக்கு நல்ல பயனும் கிடைத்துள்ளன.

மாண்புமிகு அம்மா அவர்களின் அறிவுரைப்படி 127 வட்டங்களில் தொடுதிரை தகவல் மேடை அமைக்கப்பட்டுள்ளன. நில அளவை ஆவணங்கள் FMB கணினிமயமாக்க முன்னோடித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய செயற்கைக்கோள் துணையுடன் நில அளவை செய்யும் நிலையங்கள் Total Stations மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில்தான் அறிமுகம் செய்யப்பட்டன.

முன்பு எல்லாம் கிராம வரைபடங்கள் வாங்கவேண்டுமென்றால் பல நாட்கள் காலதாமதம் ஆகும். பொதுமக்கள் அலுவலக வாயில்களில் பல நாட்கள் காத்திருப்பது உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டதன் அடிப்படையில் அனைத்து கிராம வரைபடங்களையும் வேண்டிய பொழுதில் பெற்றுக்கொள்ள அவை scan செய்து கணினியில் பதிவு செய்யப்பட்டுள்ளன. நில அளவை ஆய்வாளர்களுக்கு நவீன தொழில்நுட்பத்தில் பயிற்சி அளிக்க C–Star என்னும் பயிற்சி நிலையம் நிறுவப்பட்டுள்ளது. இதன்மூலம் 8,500 நில அளவை ஆய்வாளர்களுக்குக் கணினி பயிற்சி வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சமுதாயத்தில் நலிந்த பிரிவினர்களுக்காக 2001 முதல் 2005 வரை 2 இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டபோதிலும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு வீட்டுமனை இல்லாத ஏழையெளிய, வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்களுக்கு கடந்த 4 ஆண்டுகளில் 3,68,380 வீட்டுமனைப் பட்டாக்களை மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு வழங்கியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



இந்த ஆண்டு 50 கோடி ரூபாய் செலவில் ஊரகப் பகுதிகளில் வாழும் ஏழை மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் புதிய திட்டம் ஒன்றை மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்கெனவே அறிவித்துள்ளார்கள். இத்திட்டத்தின்கீழ் வீட்டுமனைகள் தேவைப்படும் ஊரக ஏழை மக்கள் கண்டறியப்பட்டு, தேவையான நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு அவர்களுக்கு தக்க வீட்டுமனைகள் வழங்கப்படும். புதிய குடியிருப்புகளுக்கு முறையான சுகாதார வசதியுடன், தேவையான கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுக்கப்படுவதை உறுதி செய்வதற்காக இத்திட்டம் ஊரக மேம்பாட்டுத் திட்டத்துடன் இணைந்து செயல்படுத்தப்படும் என்றும், இந்தத் திட்டத்தின்கீழ் 2005–2006 ஆம் ஆண்டில் 2 இலட்சம் ஏழைக் குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படும் என்றும் மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

அதேபோல, நிலமற்ற ஏழை விவசாயப் பெருங்குடி மக்கள் பயன்பெற 2001–2005 ஆம் ஆண்டு வரை 13,000 ஏக்கர் நிலங்கள் ஒப்படை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டபோதிலும், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கடந்த 4 ஆண்டுகளில் 23,414 ஏக்கர் நிலங்களை ஏழையெளிய விவசாய மக்களுக்கு ஒப்படை செய்து சாதனை படைத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல, நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட உச்சவரம்பிற்கு மேல் நிலம் வைத்துள்ளோரின் 27,964 ஏக்கர் உபரி நிலங்கள் இவ்வாண்டு மட்டும் கண்டறியப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–10

விவசாய நிலமற்ற நகர்ப்புற நில வரி வசூல் முடுக்கிவிடப்பட்டதால் இவ்வாண்டு 11.48 கோடி ரூபாய் வசூல் செய்யப்பட்டுள்ளது. கடந்த 3 ஆண்டுகளாக தொடர் வறட்சியின் காரணமாக விவசாயப் பெருங்குடி மக்கள் பல்வேறு இன்னல்களைத் தாங்கிக்கொள்ள வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டபோது, 1412 பசலியில் 37.47 கோடி ரூபாயும், 1413 பசலியில் 60 கோடி ரூபாயும், ஆக மொத்தம் 97.47 கோடி ரூபாய் நில வரி மற்றும் அதன் தொடர்பான பிற வரிகள் ஆகியவற்றைத் தள்ளுபடி செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயப் பெருங்குடி மக்களுக்குக் கருணை காட்டியுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

குடிநீர். தொடர்ந்து 3 ஆண்டுக் காலம் வறட்சி ஏற்பட்டுள்ளதால், குடிநீர் வழங்குவது ஓர் அவசியத் தேவையாகிறது. ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்கள் எந்தப் பகுதியிலும் குடிநீர்த் தட்டுப்பாடு இல்லை என்னும் நிலையை உருவாக்கும் நோக்கோடு குடிநீர்ப் பற்றாக்குறையைத் தீர்த்து வைப்பதற்கு 2002 முதல் 2004 வரை 568.36 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து கருணையுள்ளத்தோடு தாகம் தணித்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதில் சென்னை மாநகராட்சிப் பகுதிகளுக்கு மட்டும் 292.20 கோடி ரூபாய் வழங்கி ஆணையிட்டுள்ளார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேற்படி நிதி ஒதுக்கீட்டின்மூலம் சென்னை நீங்கலாக தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் 18,268 குடிநீர்ப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அவற்றில் கைப்பம்புகள், சிறு மின்விசைப் பம்புகள், தேவையான இடங்களில் குடிநீர்க் குழாய்கள் பதித்தல் போன்ற 18,218 பணிகள் முடிக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2004–05 ஆம் ஆண்டில் சென்னை மாநகரின் குடிநீர்ப் பற்றாக்குறையைச் சமாளிக்க 207.90 கோடி ரூபாயில், ஒதுக்கீடு உட்பட, தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க இதுவரை 275.43 கோடி ரூபாய் மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நிதியொதுக்கீடு செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

வறட்சி. 3 ஆண்டுகளாக ஏற்பட்ட தொடர் வறட்சியின் காரணமாக நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்க வேண்டியது அரசின் கடமை என்று மாண்புமிகு அம்மா அவர்கள் கருதி, 2003–04 ஆம் ஆண்டில் வேலைக்கு உணவுத் திட்டத்தின்கீழ் 3.75 இலட்சம் டன் அரிசி பயன்படுத்தப்பட்டு, 93,285 பணிகள் எடுக்கப்பட்டு, 7.61 கோடி மனித வேலை நாட்கள் உருவாக்கப்பட்டு, அவர்களுக்கு வேலை உறுதி செய்யப்பட்டது. மேலும், 2004–05 ஆம் ஆண்டில் 28–1–2005 முடிய 3.04 இலட்சம் டன் அரிசி பயன்படுத்தப்பட்டு, 55,608 பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 4.34 கோடி மனித வேலை நாட்கள் உருவாக்கப்பட்டு, விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த விவசாயிகளுக்கு தற்போது மேலும் 1.5 இலட்சம் டன் அரிசியை மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) வேலைக்கு உணவு வழங்கும் திட்டத்திற்கு அரிசியுடன் அவர்களுக்கு



ரொக்கமாக வழங்குவதற்காக 45 கோடி ரூபாய் மாண்புமிகு அம்மா அவர்களால் வழங்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்குப் பயிரிழப்பு மானியம். 2004–05 ஆம் ஆண்டில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குப் பயிரிழப்பிற்கு இழப்பீடாக வழங்குவதற்கு 9.14 கோடி ரூபாயும் மற்றும் பட்டுப்போன பனை மரங்களுக்கு இழப்பீடு வழங்க 5.94 கோடி ரூபாயும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கீடு செய்துள்ளார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

வெள்ள நிவாரணப் பணிகள். 28–10–2004 முதல் 31–10–2004 வரை பெய்த பெருமழையின் காரணமாக விழுப்புரம், கடலூர், திருவாரூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு, பயிர்களும், சொத்துகளும் சேதமடைந்தன. உடனே மாண்புமிகு அம்மா அவர்களால் போர்க்கால அடிப்படையில் நிவாரணப் பணிகள் நடவடிக்கை எடுக்கப்பட்டு, மேற்கொள்ளப்பட்டன. 78 மனித உயிரிழப்புகளும், 92 கால்நடை உயிரிழப்புகளும் ஏற்பட்டன. ஆயிரக்கணக்கான குடிசைகள் பாதிப்புக்குள்ளாகின. உடனே, நிவாரணமாக 3.26 கோடி ரூபாய் வழங்கப்பட்டது. சாலைகள் செப்பனிட 20 கோடி ரூபாயும், மணிமுக்தா நதியின் குறுக்கே சேதமடைந்த பாலத்தைப் புதுப்பித்துக் கட்ட 5 கோடி ரூபாயும், தரைப் பாலம் ஒன்று அமைக்க 0.75 கோடி ரூபாயும், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உடனடி நிவாரணமாக 35.65 கோடி ரூபாயும் வழங்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கின்றார்கள்.

பிற்பகல் 1–15

இந்த நிவாரணம் மாநில அரசின் நிதியிலிருந்து வழங்கப்பட்டது என்பதனையும் நான் மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், 412 கோடி ரூபாய் நிவாரண உதவி கோரி நமது அரசு மத்திய அரசுக்கு அறிக்கை அனுப்பி, மத்தியக் குழுவினர் 17–12–2004 முதல் 20–12–2004 வரை வெள்ளப் பகுதிகளைப் பார்வையிட்டு, மத்திய அரசுக்கு அக்குழுவினர் தங்களது அறிக்கையை அளித்தும்கூட மத்திய அரசு இதுவரை வெள்ள நிவாரணத்திற்காக நிதி ஒன்றும் வழங்கவில்லை என்பதனையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இலவச வேட்டி, சேலை திட்டத்தின்கீழ் கடந்த கால ஆட்சியில் 74 இலட்சம் வேட்டிகளும், 81 இலட்சம் சேலைகளும் மட்டுமே வழங்கப்பட்டு வந்தன. சென்ற ஆண்டு பொங்கல் தினத்தை முன்னிட்டு மாண்புமிகு அம்மா அவர்கள் அதனை உயர்த்தி, 1 கோடியே 11 இலட்சம் வேட்டிகளும், 1 கோடியே 11 இலட்சம் சேலைகளும் ஏழையெளிய மக்களுக்கு வழங்கினார்கள் என்பதனை இம்மாமன்றத்திற்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வருவாய்த் துறை, நிருவாகப் பணி, சட்டம் ஒழுங்கைப் பராமரித்தல், துயர் துடைப்புப் பணி, தேர்தல் பணி, மக்கள்தொகை கணக்கெடுப்பு, நில வரி வசூல் செய்தல், பொது விநியோகம் மற்றும் பொதுமக்களுக்குத் தேவையான சான்றிதழ்களை வழங்குதல் போன்ற பணிகளில் இவ்வாறு சிறப்பான முறையில் பணியாற்றி வருகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக கடந்த டிசம்பர் 26 ஆம் தேதி யாரும் எதிர்பார்க்காத வகையில் சுனாமி பேரலை என்ற துயரச் சம்பவம் நடைபெற்ற உடனேயே மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி அனைத்து அரசுத் துறைகளும் சிறப்பாகப் பணியாற்றியதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சுனாமி துயரம் நிகழ்ந்த டிசம்பர் 26–ந்தேதி அன்று மாண்புமிகு அம்மா அவர்கள் கோடியக்கரையிலிருந்து சென்னைக்கு வடக்கிலுள்ள எண்ணூர் வரையிலும் விமானம் மூலம் ஆய்வு செய்தார்கள். கோடியக்கரை, வேளாங்கண்ணி, அக்கரப்பேட்டை, நாகப்பட்டினம், நாகூர், கடலூர், மரக்காணம், கல்பாக்கம், மாமல்லபுரம், நீலாங்கரை, கொட்டிவாக்கம், பெசன்ட் நகர், சீனிவாசபுரம், பட்டினப்பாக்கம், மெரினா கடற்கரை, சென்னைத் துறைமுகம், காசிமேடு மற்றும் எண்ணூர் ஆகிய பகுதிகளை ஆய்வு செய்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உடனடி மீட்புப் பணிகளை மேற்கொள்ள ஆணையிட்டார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல் துறை, தீ தடுப்பு மற்றும் மீட்புப் பணித் துறை, வருவாய்த் துறை, மக்கள் நல்வாழ்வுத் துறை போன்ற அனைத்துத் துறைகளையும் முடுக்கிவிட்டு உடனடி நிவாரண நடவடிக்கைகளை எடுத்தார்கள். இராணுவம், கடற்படை மற்றும் விமானப் படையும் நிவாரணப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டன. உடனடியாக பாதிக்கப்பட்ட மக்களை மீட்டு நிவாரண முகாம்களில் அவர்களைத் தங்க வைத்து அவர்களுக்கு நிவாரண முகாம்களில் தயார் செய்யப்பட்ட உணவு, உடை, பாதுகாக்கப்பட்ட குடிநீர், மருத்துவ வசதி அனைத்தும் உடனடியாகச் செய்து தரப்பட்டன.



27–12–2004 அன்று மத்திய உள் துறை அமைச்சர் அவர்களைச் சந்தித்த பின்னர் மாண்புமிகு அம்மா அவர்கள் மீண்டும் கன்னியாகுமரி மாவட்டத்திற்குச் சென்று விமானம்மூலம் கன்னியாகுமரி, மண்டைக்காடு, முட்டம், கொளச்சல் ஆகிய பாதிக்கப்பட்ட பகுதிகளை ஆய்வு செய்த பின்பு, நாகர்கோவிலில் கோட்டார் மற்றும் வேப்பமோடு நிவாரண முகாம்களில் தங்கியிருந்த இன்னுயிர்களை இழந்த குடும்பத்தினரையும் சந்தித்து ஆறுதல் கூறினார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் சுனாமி பேரலைகளால் ஏற்பட்ட கடும் சேதத்தை நேரடியாகப் பார்வையிட்டு துயர் துடைப்புப் பணிகள் மூன்று கட்டமாக மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் ஆணையிட்டார்கள். இறந்தவர்களின் சடலங்களை அகற்றுதல், பசியால் வாடுபவர்களுக்கு உணவு, உடை வழங்குதல், தொற்றுநோய் ஏற்படாத வகையில் மருத்துவ வசதிகள் அளித்தல் ஆகியவற்றில் உடனடியாக நடவடிக்கை எடுத்து நிவாரணம் அளிக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள்.

கன்னியாகுமரி மாவட்டம், ஆசாரிப்பள்ளம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குச் சென்று காயம் அடைந்தவர்களை நேரடியாகச் சந்தித்து ஆறுதல் கூறினார்கள். அன்றையதினமே நாகப்பட்டினம் சென்று பாதிக்கப்பட்ட குடும்பத்தினரைச் சந்தித்து அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்படுமென்று பாதிக்கப்பட்ட மக்களிடம் மாண்புமிகு அம்மா அவர்கள் உறுதியளித்தார்கள். நாகப்பட்டினம் மருத்துவமனைக்குச் சென்று காயம் அடைந்தவர்களுக்கும் ஆறுதல் கூறினார்கள். நிவாரணப் பணிகளை மேற்பார்வையிட அமைச்சர்களையும், இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகளையும் உடனடியாக பாதிக்கப்பட்ட கடலோர மாவட்டங்களுக்குச் சென்று அங்கேயே தங்கியிருந்து நிவாரணப் பணிகளைச் செயல்படுத்தி கண்காணிக்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள். அதன் அடிப்படையில் அமைச்சர்களும், பாதிக்கப்பட்ட இடங்களில் முகாமிட்டு நேரடியாக நிவாரணப் பணிகளைச் சிறப்பான முறையில் செய்து முடித்தார்கள் என்பதையும் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

இதைப்போலவே, சில தொண்டு நிறுவனங்களும் அரசோடு சேர்ந்து நிவாரணப் பணிகளில் சிறப்பாக ஈடுபட்டார்கள் என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் 28–12–2004 அன்று சுனாமியால் இறந்தவர்களின் குடும்பத்திற்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.1 இலட்சம் வீதம் இறந்தவர்களின்

எண்ணிக்கையின் அடிப்படையில் வழங்குவதற்கு கருணை உள்ளத்தோடு ஆணையிட்டுள்ளார்கள் என்பதனையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1-20*

அதோடுமட்டுமல்லாமல், மாண்புமிகு அம்மா அவர்கள் 28 ஆம் தேதியே உடனடி நிவாரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தலா ஒரு வேட்டி, ஒரு சேலை, 2 போர்வைகள், 60 கிலோ அரிசி, 3 லிட்டர் மண்ணெண்ணெய், பருப்பு, எண்ணெய் மற்றும் சமையலுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் வாங்குவதற்கு 1,000 ரூபாயும், பாத்திரங்கள் மற்றும் அடுப்பு வாங்குவதற்கு 1,000 ரூபாயும், தற்காலிகக் குடிசை அமைப்பதற்கு 2,000 ரூபாயும் வழங்கவேண்டும் என்று ஆணையிட்டார்கள்.

31-12-2004 அன்று சுனாமியால் பாதிக்கப்பட்டு, தங்கள் வீடுகளை இழக்காமல் தங்கள் வாழ்வாதாரங்களை இழந்த 1.5 இலட்சம் குடும்பங்களுக்கு, ஒரு குடும்பத்திற்கு ஒரு வேட்டி, ஒரு சேலை, 2 போர்வைகள், 60 கிலோ அரிசியும், 3 லிட்டர் மண்ணெண்ணெய், பருப்பு, எண்ணெய் மற்றும் சமையலுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் வாங்குவதற்கு ரூபாய் 1,000-மும், பாத்திரங்கள் மற்றும் அடுப்பு வாங்குவதற்கு ரூபாய் 1,000-மும், ஆக மொத்தம் ரூபாய் 2,912 வழங்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

அரசால் நியமிக்கப்பட்ட நிவாரணப் பணிக் குழு உடனடியாக பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை போன்றவையுடன் இணைந்து JCB, Tipper lorry போன்றவற்றைப் பயன்படுத்தி இடிபாடுகளை அகற்றுதல், சடலங்களை நல்லடக்கம் செய்தல், காயமுற்றவர்களை அரசினர் மருத்துவமனைக்கு அனுப்புதல், காணாமல் போனவர்களைப் பற்றிய விவரங்களை அறிதல் போன்ற பணிகளை மேற்கொள்ள மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள். சடலங்களை அடக்கம் செய்வதில் துப்புரவுப் பணியாளர்களின் பணி சிறப்பாகவும், பாராட்டும் விதமாகவும் இருந்தது என்பதனையும் இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

காவல் துறை, மக்கள் நல்வாழ்வுத் துறை, பொதுப் பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை, மின் வாரியம், மீன்வளத் துறை, உள்ளாட்சித் துறை, சமூக நலத் துறை, போக்குவரத்துத் துறை, இராணுவம், கடலோரக் காவல் படை, தமிழ்நாடு சிறப்பு அதிரடிப் படை, தமிழ்நாடு



தீயணைப்புத் துறை, தொண்டு நிறுவனங்கள் ஆகிய அனைத்துப் பிரிவுகளும் இணைந்து நிவாரணப் பணிகளில் அனைவரும் பாராட்டும் விதமாகக் கடமையாற்றினார்கள் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த அனைத்துப் பிரிவினரும் அமைச்சர்கள், இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் இணைந்து நிவாரணப் பணிகளை மேற்கொண்டார்கள் என்பதனையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த ஆழிப்பேரலை தாக்குதலால் 13 மாவட்டங்களில் 373 கிராமங்கள் பாதிக்கப்பட்டன. மேலும், 8,018 மனித உயிரிழப்புகளும், 17,404 கால்நடை உயிரிழப்புகளும் ஏற்பட்டன. 3,432 நபர்கள் மிகப் பலத்த காயம் அடைந்தனர். சுமார் 1.5 இலட்சம் வீடுகள் சேதம் அடைந்தன. 35,530 கட்டுமரங்கள், 11,118 வள்ளங்கள், 4,430 மின்விசைப் படகுகள் மற்றும் சுமார் 2,000 மெட்ரிக் டன் மீன்பிடி வலைகள் பாதிக்கப்பட்டன.

பாதிக்கப்பட்ட 13 மாவட்டங்களும் சுனாமி பேரழிவால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக அரசு அறிவித்தது. இப்பேரழிவால் ஏற்பட்ட இழப்புகளுக்கு நிவாரணம் வழங்குவதற்காக பல்வேறு இனங்களின்கீழ் கூடுதல் நிவாரணமாக 4,800 கோடி ரூபாயும், பாதிக்கப்பட்ட மக்கள் இயல்பான வாழ்க்கைக்குத் திரும்பும் வரை 54,000 மெட்ரிக் டன் உணவுத் தானியங்கள் வழங்கவும் 4-1-2005 அன்று மத்திய அரசுக்கு மாண்புமிகு அம்மா அவர்களால் கோரிக்கை அனுப்பி வைக்கப்பட்டது. மத்திய அரசின் உயர்மட்டக் குழு 4-1-2005 அன்று மாண்புமிகு அம்மா அவர்களைச் சந்தித்தது. மத்தியக் குழுவினரிடம் மாண்புமிகு அம்மா அவர்கள் எதிர்காலத்தில் எடுக்கப்பட வேண்டிய உடனடி நிவாரண நடவடிக்கைகள் குறித்தும், மொத்த சேதாரங்கள் பற்றியும் நிவாரணமாக மத்திய அரசு தரவேண்டிய நிதி உதவிகள் பற்றியும் விரிவாக எடுத்துக்கூறினார்கள்.

மத்திய அரசின் உயர்மட்டக் குழு 4-1-2005 முதல் 6-1-2005 வரை தமிழகத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களைப் பார்வையிட்டு, சேதங்களை நேரில் ஆய்வு செய்து மதிப்பீடு செய்தனர். பின்னர், அக்குழுவினர் அரசுத் துறைச் செயலாளர்கள் மற்றும் துறையின் அலுவலர்களுடன் நிவாரணப் பணிகளை ஆய்வு செய்தனர். 7-1-2005 அன்று அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் இப்பிரச்சினை குறித்து ஆய்வு செய்யப்பட்டது. சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அரசு மேற்கொண்ட உடனடி நிவாரண நடவடிக்கைகளை விரிவாக

மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்துக்கூறினார்கள். கூட்டத்தில் கலந்துகொண்ட அனைத்துக் கட்சித் தலைவர்களும் அரசையும் மாண்புமிகு அம்மா அவர்கள் மேற்கொண்ட நிவாரணப் பணிகளையும் பாராட்டினார்கள். மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து தக்க ஆலோசனைகளையும் வழங்கினார்கள். மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் 7–1–2005 அன்று சுனாமியால் ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பாக அம்மா அவர்களுடன் ஆலோசனை நடத்தினார்கள். இக்கூட்டத்தில் பாதிப்புகளின் விவரங்கள் விளக்கப்பட்டு, தமிழகத்திற்குத் தாராளமாக நிதியுதவி வழங்க வலியுறுத்தப்பட்டது.

தமிழகக் கடலோரப் பகுதிகள் நெடுகிலும் 5,000 கோடி ரூபாய் செலவில் தடுப்புச் சுவர், கற்குவியல் மற்றும் மாங்குரோவ் காடுகள் அமைக்க மத்திய அரசு உதவ வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்டது. மத்திய அரசால் இடைக்கால நிவாரணமாக 250 கோடி ரூபாய் நிதி தமிழகத்திற்கு விடுவிக்கப்பட்டது.

பிற்பகல் 1–25

மாண்புமிகு அம்மா அவர்கள், பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் சென்றடைவதில் காலதாமதம் ஆகக்கூடாது என்ற கருணையுள்ளத்தோடு, மாநில அரசின் நிதியாதாரத்திலிருந்து, அனைத்து நிவாரணங்களுக்கும் மத்திய அரசு நிதியை அனுப்புவதற்கு முன்பாகவே, பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதுவரை 902 கோடி ரூபாய் அளவிற்கு நிதி ஒதுக்கியுள்ளார்கள் என்பதனை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

13 கடலோர மாவட்டங்களில் வீடுகளை இழந்து பாதுகாப்பு மையங்களில் வாழும் ஒரு இலட்சம் குடும்பங்களில், 50 ஆயிரம் குடும்பங்களுக்கு அரசும், 50 ஆயிரம் குடும்பங்களுக்குத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலமும் தற்காலிகக் குடியிருப்புகள் கட்டித் தர முடிவு செய்து, 50 ஆயிரம் குடும்பங்களுக்குத் தற்காலிக இருப்பிடங்கள் கட்டித் தர, ஒரு தற்காலிக இருப்பிடத்திற்கு 8 ஆயிரம் ரூபாய் வீதம் ரூ.40 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். மேலும், நிவாரணத் தொகுப்புகளாக, வள்ளத்திற்கு gill வலை மாற்றியமைக்க, வலைக்கு 20 ஆயிரம் ரூபாய் வீதம், 10 ஆயிரம் வலைகளுக்கு 20 கோடி ரூபாயும், கட்டுமரங்களுக்கு gill வலை மாற்றியமைக்க, தலா ரூ.10 ஆயிரம் வீதம்,



20 ஆயிரம் கட்டுமரங்களுக்கு 20 கோடி ரூபாயும், வள்ளம் சரிசெய்யவும் அல்லது மாற்றியமைக்கவும், 15 ஆயிரம் ரூபாய் வீதம் 10 ஆயிரம் படகுகளுக்கு 15 கோடி ரூபாயும், கட்டுமரம் சரிசெய்ய அல்லது மாற்றியமைக்க, தலா 5 ஆயிரம் வீதம் 10 கோடி ரூபாயும் மாண்புமிகு அம்மா அவர்களால் வழங்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) உடைமைகளைப் பாதுகாக்க ஒரு இரும்புப் பெட்டி, சமைக்க ஒரு மண்ணெண்ணெய் ஸ்டவ், குடிநீர் வைத்துக்கொள்ள ஒரு எவர்சில்வர் குடம் ஆகியவை சுமார் 1.5 இலட்சம் மக்களுக்கு 14–1–2005 அன்று பொங்கல் திருநாள் முதல் மாண்புமிகு அம்மா அவர்களால் வழங்கப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி)

சுனாமி ஆழிப் பேரலையால் அனாதைகள் ஆக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் வளர் இளம் பெண்கள் ஆகியோருக்கு, அவர்களின் எதிர்கால நலன் கருதி, அவர்கள் ஒவ்வொருவரின் பெயரிலும் 5 இலட்சம் ரூபாய்க்கான வைப்பீட்டினை ஏற்படுத்த தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, 18 வயதிற்கு மேற்பட்ட திருமணம் ஆகாத அனாதையாகிவிட்ட பெண்களுக்கும் தலா 3 இலட்சம் ரூபாய் அவர்களது பெயரில் (மேசையைத் தட்டும் ஒலி) வைப்பீட்டினை ஏற்படுத்தவும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மேலும், மாண்புமிகு அம்மா அவர்களால் மானிலப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து சுனாமியால் காயமுற்றோருக்குக் கருணைத் தொகையாக கண் மற்றும் கை, கால்கள் இழந்தவர்களுக்கு 25 ஆயிரம் ரூபாயும், பெரிய அளவில் காயமடைந்து மருத்துவமனையில் ஒரு வாரத்திற்கு மேலாக தங்கி சிகிச்சை பெற்றவர்களுக்கு 5 ஆயிரம் ரூபாயும், மொத்தமாக 3.5 கோடி ரூபாய் வழங்க ஆணையிட்டிருக்கின்றார்கள். பாதிக்கப்பட்டவர்களுக்கு மாற்று இடமும், அந்த இடத்தில் போதுமான உள்கட்டமைப்பு வசதியுடன் வீடு கட்டிக் கொடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சுனாமி ஆழிப் பேரலையால் சேதமடைந்த பயிர்களுக்காக, பாதிப்படைந்த விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கும்பொருட்டு, 1.8 கோடி ரூபாய் மாண்புமிகு அம்மா அவர்களால் வழங்கப்பட்டது. சுனாமியால் பாதிக்கப்பட்ட படகுகளில் பொருத்தப்பட்டிருந்து, பாதிப்படைந்த 1,560 இயந்திரங்களைப் பழுதுபார்க்க, இயந்திரம்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2005 மார்ச் 23

ஒன்றுக்கு 5 ஆயிரம் ரூபாய் வீதம், 78 இலட்சம் ரூபாய் மாண்புமிகு அம்மா அவர்களால் வழங்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தர மறுவாழ்வுப் பணிகள் சென்றடைய, 13 கடலோர மாவட்டங்களில், மாவட்ட அளவிலும், ஊராட்சி மற்றும் வார்டு அளவிலும் சுனாமி பேரலை நிவாரணக் குழுக்கள் நிறுவப்பட்டன. இக்குழுக்கள் அமைப்பதையும், அவை செயல்படுவதையும் கண்காணிக்குமாறு மாநில நிவாரண ஆணையர் கேட்டுக்கொள்ளப்பட்டார்.

சுனாமியால் கோழி உள்பட கால்நடைகளை இழந்த உரிமையாளர்களுக்கு, கடலூர், நாகப்பட்டினம், கன்னியாகுமரி, திருநெல்வேலி, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய 6 மாவட்டங்களில் இழப்பீட்டுத் தொகையாக நிவாரணம் வழங்கும்பொருட்டு, 2.80 கோடி ரூபாய் மாண்புமிகு அம்மா அவர்களால் வழங்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு மீண்டும் அவர்தம் தொழிலை நன்முறையில் தொடங்கி செய்யும்வண்ணம், மாண்புமிகு அம்மா அவர்கள் கருணையுள்ளத்தோடு முழுவதும் சேதமடைந்த 26,943 கட்டுமரங்களை மாற்றியமைக்க, ஒரு இனத்திற்கு 32 ஆயிரம் ரூபாய் மானியம்வீதம், மொத்தம் 141.45 கோடி ரூபாய் மானியத் தொகையாகவும், (மேசையைத் தட்டும் ஒலி) முழுவதும் சேதமடைந்த...

பிற்பகல் 1–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின் அனுமதியுடன் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாக்கியத்தை நிறைவு பண்ணிவிடுங்கள். பதிலுரையின் மீதியை நாளைக்கு வைத்துக்கொள்ளலாம். வாக்கியத்தை நிறைவு பண்ணிவிடுங்கள். இல்லையென்றால், ஒரு பக்கத்தை முடிக்க வேண்டுமென்றால் முடித்துவிடுங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** சரி. பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு மீண்டும் அவர்தம் தொழிலை நன்முறையில் தொடங்கி செய்யும்வண்ணம் மாண்புமிகு அம்மா அவர்கள் கருணையுள்ளத்தோடு, முழுவதும் சேதமடைந்த 26,943 கட்டுமரங்களை மாற்றியமைக்க ஒரு இனத்திற்கு ரூ.32,000 மானியம் வீதம் மொத்தம் ரூ.141.45 கோடி மானியத் தொகையாக வழங்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)





## 7. அரசினர் தீர்மானங்கள்–தொடர்ச்சி

### (ஆ) விதி 32–ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாளை (24–03–2005) வினாக்கள்–விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்–விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32–ஐ நாளை, 24–03–2005 வியாழக்கிழமை அன்று தளர்த்தி அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை (24–3–2005) வினாக்கள்–விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் நாளை (24–03–2005) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–31 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

70. 2003–2004 ஆம் ஆண்டிற்கான திருவாரூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. (1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்

[2005 மார்ச் 23

(தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

71. 2003–2004 ஆம் ஆண்டிற்கான திருவள்ளூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. (1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

72. 2003–2004 ஆம் ஆண்டிற்கான வேலூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. (1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

73. 2003–2004 ஆம் ஆண்டிற்கான விழுப்புரம் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. (1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

74. 2003–2004 ஆம் ஆண்டிற்கான விருதுநகர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

107. சிறைகள் பற்றிய மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் போது மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள். (தமிழ்)

108. பொதுப் பணித் துறை பற்றிய மானியக் கோரிக்கைமீதான விவாதத்தின்போது மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள். (தமிழ்)

109. மானியக் கோரிக்கை எண் 11– வணிக வரித் துறை– முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)



2005 மார்ச் 23]

110. மானியக் கோரிக்கை எண் 29 – செய்தி மற்றும் சுற்றுலாத் துறை– எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)

111. மானியக் கோரிக்கை எண் 36–மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)

112. மானியக் கோரிக்கை எண் 39–வருவாய்த் துறை மற்றும் மானியக் கோரிக்கை எண் 49–இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)

113. மானியக் கோரிக்கை எண் 34–பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)

## இணைப்பு I

*(448 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 11

## வணிக வரித் துறை—

## முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2005-2006

பொதுமக்கள் தங்களது சொத்து பரிமாற்றங்களை முறைப்படுத்த வசதியாக பதிவுத் துறை சமீப காலங்களில் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டண விகிதங்கள் பொதுமக்கள் நலனுக்காகக் குறைக்கப்பட்டு சீரமைக்கப்பட்டுள்ளன. ஆவணப் பதிவிலும், முத்திரைத் தீர்வை நிர்வாகத்திலும் தகவல் தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டதால் பதிவு நடைமுறைகள் எளிமையாக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல் காலதாமதமும் வெகுவாகக் குறைந்துள்ளது. நிர்வாகம் வெளிப்படையாகவும் பொதுமக்கள் அணுகுவதற்குத் தடையின்றியும் உள்ளது. விரைவான வெளிப்படையான தங்கு தடையற்ற பணிகளின் மூலம் பதிவுத் துறை முன்னிருந்த நிலை மாறி, நவீன சேவை ஆற்றும் துறையாக மாற்றம் பெற்றுள்ளது. இத்துறை, வணிக வரி மற்றும் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறைகளுக்கு அடுத்தபடியாக அரசு வருவாயை ஈட்டித் தருவதில் மூன்றாவது பெரிய துறையாக விளங்குகிறது.

### 1. அ. பதிவுத் துறை நிர்வகிக்கும் சட்டங்கள்

1. 1908 ஆம் ஆண்டு பதிவுச் சட்டம் (மத்திய சட்டம் 16/1908)
2. 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் (மத்திய சட்டம் 2/1899)
3. 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம் (மத்திய சட்டம் 40/1982)
4. 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 27/1975)

[2005 மார்ச் 23

5. 1972 ஆம் ஆண்டு வணிகம் அல்லாத நிறுமங்கள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 16/1972)

**ஆ. கீழ்க்கண்ட சட்டங்களின்கீழ் சில வரையறுக்கப்பட்ட பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன:-**

1. 1932 ஆம் ஆண்டு இந்திய கூட்டு பங்காண்மைச் சட்டம் (மத்திய சட்டம் 9/1932)
2. 1886 ஆம் ஆண்டு பிறப்பு இறப்பு மற்றும் திருமணச் சட்டம் (மத்திய சட்டம் 6/1886)
3. 1936 ஆம் ஆண்டு பார்சி திருமணம் மற்றும் விவாகரத்து சட்டம் (மத்திய சட்டம் 3/1936)
4. 1969 ஆம் ஆண்டு பிறப்பு இறப்புச் சட்டம் (மத்திய சட்டம் 18/1969)
5. 1954 ஆம் ஆண்டு சிறப்பு திருமணச் சட்டம் (மத்திய சட்டம் 43/1954)
6. 1955 ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டம் (மத்திய சட்டம் 25/1955)
7. 1872 ஆம் ஆண்டு இந்திய கிறித்துவ திருமணச் சட்டம் (மத்திய சட்டம் 15/1872)
8. 1961 ஆம் ஆண்டு வரதட்சிணைத் தடுப்புச் சட்டம் (மத்திய சட்டம் 28/1961)

**2. நிர்வாக அமைப்பு**

**அ. தலைமையிடம்**

பதிவுத் துறைக்கு இந்திய ஆட்சிப் பணியைச் சார்ந்த அலுவலர் ஒருவர் தலைவராக உள்ளார். அவர் கீழ்க்கண்ட வகைகளிலும் பணியாற்றுகிறார் :

அ. 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டத்தின்கீழ் முதன்மை வருவாய் கட்டுப்பாட்டு அலுவலர்.

ஆ. 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிச் சட்டத்தின்கீழ் சீட்டுப் பதிவாளர்.

இ. 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்களின் பதிவுச் சட்டத்தின்கீழ் சங்கப் பதிவாளர்.



2005 மார்ச் 23]

ஈ. 1972 ஆம் ஆண்டு வணிகம் அல்லாத நிறுமங்கள் சட்டத்தின்கீழ் பதிவாளர்.

இவருக்கு உதவியாக தலைமையகத்தில் பின்வரும் அலுவலர்கள் பணியாற்றி வருகின்றனர்:

(1) கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (முத்திரை மற்றும் பதிவு)

(2) கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (வழிகாட்டி)

(3) கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (புலனாய்வு)

(4) கூடுதல் சீட்டு மற்றும் சங்கங்களின் பதிவாளர்

(5) பதிவுத் துறைத் தலைவர் அவர்களின் நேர்முக உதவியாளர் (பொது)

(6) பதிவுத் துறைத் தலைவர் அவர்களின் நேர்முக உதவியாளர் (சீட்டு)

(7) மாவட்டப் பதிவாளர் (வழிகாட்டி)

(8) மாவட்டப் பதிவாளர் (ஆய்வு)

(9) கணக்கு அலுவலர்

**ஆ. கள அலுவலகங்கள்**

**(1) மண்டல அலுவலகங்கள்**

சென்னை, வேலூர், கடலூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, சேலம், கோவை, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டு 9 பதிவு மண்டலங்கள் உள்ளன. ஒவ்வொரு மண்டலமும் துணைப் பதிவுத் துறைத் தலைவர் ஒருவரால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. மண்டலம் முழுவதையும் நிர்வகித்தல், வருவாய் ஈட்டுதல், திடீர் ஆய்வு செய்தல், தம் மண்டலத்திற்குள் உள்ள வட்டார பதிவுத் துறை அலுவலகங்கள், மாவட்டப் பதிவகங்கள் மற்றும் சார்பதிவாளர் அலுவலகங்களின் பணிகளை மேற்பார்வையிடுதல், ஆய்வு செய்தல், விசாரணை நடத்துதல் ஆகிய பணிகள் மண்டலத் தலைவரின் பணிகளாகும். இவர் 1982 ஆம் ஆண்டு சீட்டுநிதிகள் சட்டத்தின்கீழ் இணைப் பதிவாளராகவும் முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் நியமனத்தில் உதவி பதிவுத் துறைத் தலைவர் அல்லது மாவட்டப் பதிவாளர் பிறப்பிக்கும் ஆணையின்மீது மேல்முறையீட்டு அலுவலராகவும் உள்ளார்.

### (2) வட்டார அலுவலகங்கள்

சென்னை, திருச்சிராப்பள்ளி, கோவை, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் 5 உதவி பதிவுத் துறைத் தலைவர்கள், துணைப் பதிவுத் துறை தலைவர் அலுவலகங்களில் செயல்படுகின்றனர். சார்பதிவகங்களை ஆய்வு செய்தல், புகார் மனுவின்மீது விசாரணை செய்தல், தணிக்கை மாவட்டப் பதிவாளரால் செய்யப்படும் தணிக்கைப் பணியின்மீது சோதனை ஆய்வு செய்வது ஆகியவை இவர்களது முக்கியப் பணிகளாகும். மேலும், இவர்கள் சங்கங்கள் மற்றும் சீட்டு நிறுவனங்களையும் ஆய்வு செய்கின்றனர்.

### (3) மாவட்ட அலுவலகங்கள்

மாநிலம் 50 பதிவு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டமும், மாவட்டப் பதிவாளர் ஒருவரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. பணிப் பளு மற்றும் சிக்கலான தன்மை கொண்ட பணிகளைக் கருத்தில் கொண்டு 12 பதிவு மாவட்டங்கள் ஒவ்வொன்றும் ஒரு உதவி பதிவுத் துறைத் தலைவர் நிலை அலுவலரால் நிர்வகிக்கப்படுகின்றது. இவர்கள் சங்கங்களின் பதிவாளராகவும், சீட்டு நிதி சட்டத்தின்கீழ் துணைப் பதிவாளராகவும், திருமணங்கள், கூட்டு வணிக நிறுவனங்கள் ஆகியவற்றின் பதிவாளராகவும் பணியாற்றுகின்றனர். மாவட்டப் பதிவாளர்கள், முத்திரைத்தாள் விற்பனையாளர் உரிமம் வழங்கும் அதிகாரிகளாவர்.

### (4) தணிக்கைக் குழுக்கள்

இத்துறையில் கட்டுக்கோப்பான கால வரையறைக்குட்பட்ட துறைத் தணிக்கைப் பிரிவு இயங்கிவருகிறது. மாநிலத்திலுள்ள எல்லா சார்பதிவாளர் அலுவலகங்களையும் 100 சதவிகிதம் துறைத் தணிக்கை செய்ய 45 தணிக்கைக் குழுக்கள் செயல்படுகின்றன. ஒவ்வொன்றும் ஒரு மாவட்டப் பதிவாளர் (தணிக்கை) தலைமையில் இயங்குகின்றன.

### (5) சார்பதிவகங்கள்

மாநிலம் முழுவதும் 558 சார்பதிவகங்கள். உள்ளன. ஆவணங்கள் பதிவு தவிர இந்துத் திருமணச் சட்டம் மற்றும் சிறப்புத் திருமணச் சட்டம் ஆகிய சட்டங்களின்கீழ் திருமணப் பதிவாளராகவும் சார்பதிவாளர் செயல்படுகிறார். மேலும், 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு சீட்டு நிதி சட்டத்தின்கீழ் உதவிப் பதிவாளராகவும் செயல்படுகின்றார்.





### (6) பதிவுத் துறை பயிற்சி நிலையம், சென்னை

1996 முதல் செயல்பட்டு வரும் இப்பயிற்சி மையம் பதிவுத் துறையில் நிர்வகிக்கப்படும் முத்திரைச் சட்டம், பதிவுச் சட்டம் மற்றும் பல்வேறு சட்டங்கள் குறித்து பதிவு அலுவலர்களுக்கும், ஏனைய அலுவலர்களுக்கும் பயிற்சி அளித்து வருகிறது. இப்பயிற்சி நிலையம் துணைப் பதிவுத் துறைத் தலைவர் நிலையிலுள்ள இயக்குநர் தலைமையில் இயங்கிவருகிறது. உதவிப் பதிவுத் துறைத் தலைவர் மற்றும் மாவட்டப் பதிவாளர் நிலையில் இரண்டு விரிவுரையாளர்கள் அலுவலர்களுக்குப் பயிற்சி அளித்து வருகின்றனர். இதுவரை 2,852 பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

ஸ்டார் (எளிய மற்றும் வெளிப்படையான பதிவு நிர்வாகம்) எனும் தகவல் தொழில்நுட்பப் பயிற்சி பணியாளர்களுக்கு இந்நிலையம் வழங்குகின்றது. பவானிசாகர் பயிற்சி நிலையம் போன்று இளநிலை உதவியாளர்களுக்கு இந்நிலையம் அடிப்படை பயிற்சியும் அளிக்கின்றது.

## 3. துறையின் சிறப்புப் பணிகள்

### (அ) முதன்மை வருவாய் கட்டுப்பாட்டு அலுவலர்

இந்திய முத்திரைச் சட்டத்தின்கீழ் பதிவுத் துறைத் தலைவர் முதன்மை வருவாய் கட்டுப்பாட்டு அலுவலராவார். வருவாய் வாரியம் கலைக்கப்பட்ட பின்பு, பதிவுத் துறைத் தலைவர், முதன்மை வருவாய் கட்டுப்பாட்டு அலுவலராகச் செயல்பட்டு வருகிறார். இந்திய முத்திரைச் சட்டத்தின்கீழ் ஆட்சியரின் செயல்பாடுகளைக் கண்காணிக்கும்/ சீராய்வு செய்யும் அதிகாரமும் முதன்மை வருவாய் கட்டுப்பாட்டு அலுவலருக்கு உள்ளது. மேலும், இந்திய முத்திரைச் சட்டப் பிரிவு 47(A)-ன்கீழ் தனித் துணை ஆட்சியரால் (முத்திரை) மதிப்பு நிர்ணயம் செய்து பிறப்பிக்கப்படும் ஆணையின்மீது மேல் முறையீட்டு அலுவலராகவும் உள்ளார். மாநில வருவாய் பாதிக்கும் அளவில் தனித் துணை ஆட்சியர் பிறப்பிக்கும் ஆணைகளைத் தன்னிச்சை சீராய்வு செய்யும் அதிகாரமும் இவரிடம் உள்ளது.

### (ஆ) வழிகாட்டி குழு

ஆவணத்தில் சந்தை மதிப்பு சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்துகொள்ள பதிவு அலுவலர்களுக்கு வழிகாட்டி மதிப்புப் பதிவேடுகள் வழங்கப்பட்டுள்ளன.

[2005 மார்ச் 23

வழிகாட்டி மதிப்புப் பதிவேடுகள் தயாரித்தல், மதிப்புகள் திருத்தியமைத்தல் மற்றும் முரண்பாடுகள் களைதல் ஆகிய பணிகளுக்கு கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் ஒருவரின்கீழ் "வழிகாட்டி மதிப்புக் குழு" இயங்கிவருகிறது. வழிகாட்டி மதிப்பினைச் சரியாகவும், விஞ்ஞானபூர்வமாகவும் நிர்ணயித்திட மற்றும் வழிகாட்டி மதிப்பு குழுவிற்கு ஆலோசனை வழங்க அந்தந்த மாவட்ட வருவாய் அலுவலர்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். தலைமையிட மாவட்டப் பதிவாளர் (வழிகாட்டி) செயலாளராகவும் சம்பந்தப்பட்ட மண்டலத் துணைப் பதிவுத் துறைத் தலைவர் மற்றும் மாவட்டப் பதிவாளர் குழுவின் உறுப்பினர்களாகவும் உள்ளனர்.

மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும ஆளுகைக்குட்பட்ட பகுதிகளுக்கும், நகர பஞ்சாயத்துக்கள், 1971 ஆம் ஆண்டு கிராம மற்றும் நகர்ப்புற திட்ட சட்டத்தின் பிரிவு 10(1)-ன்கீழ் உள்ளாட்சி திட்டப் பகுதி என அறிவிக்கப்பட்ட பகுதிகளிலும் உள்ள சொத்துக்களின் வழிகாட்டி மதிப்பு ஒவ்வொரு ஆண்டும், இதர கிராமப்புறங்களில் உள்ள சொத்துக்களின் மதிப்பு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறையும் திருத்தியமைக்கப்படுகின்றன.

வழிகாட்டி மதிப்பினை அனைவரும் அறிந்திடும் நோக்குடன் சொத்துக்களின் வழிகாட்டி மதிப்பு பதிவேட்டின் நகல் ஒன்று அந்தந்தப் பகுதிகளில் உள்ள வர்த்தகர் சங்கத்திற்கும், விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகளுக்கும் மற்றும் ஊராட்சி மன்றங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. அனைத்துப் பகுதிகளுக்கான வழிகாட்டி மதிப்புகள் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. இணையதள முகவரி www.tnreginet.net

வருவாய் சீரமைப்பு மற்றும் வருவாய் பெருக்க ஆணையம், வழிகாட்டி மதிப்புகளை நிர்ணயிக்கும் பொருட்டு மாவட்ட அளவில் குழுக்களையும், தலைமையிடத்தில் ஒரு குழுவையும் அமைக்க பரிந்துரைத்துள்ளது. இதனடிப்படையில் வழிகாட்டி மதிப்புகளில் உள்ள முரண்பாடுகளைக் களையவும் வழிகாட்டி மதிப்புகளைச் சீரமைக்கவும் உரிய பரிந்துரைகளைச் செய்ய ஒவ்வொரு வட்ட அளவில் ஒரு குழுவும், ஒவ்வொரு மாவட்ட அளவில் ஒரு குழுவும் மற்றும் பதிவுத் துறைத் தலைவர் தலைமையில் மாநில அளவிலான ஒரு ஒருங்கிணைப்புக் குழுவும் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.



2005 மார்ச் 23]

**(இ) புலனாய்வுக் குழு**

கட்டடங்களின் மதிப்பை நிர்ணயிக்கும் பொருட்டு அவற்றை ஆய்வு செய்திடவும், முத்திரைத் தீர்வை ஏய்ப்பைத் தடுக்கும் பொருட்டும், புலனாய்வுக் குழு ஒன்று கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் தலைமையில் 8 மாவட்டப் பதிவாளர்களையும், 4 சார்பதிவாளர்களையும், இரண்டு உதவி செயற்பொறியாளர்களையும் கொண்டு செயல்பட்டு வருகின்றது. இவர்கள் கட்டடக் கள ஆய்வு செய்து வருவாய் இழப்பைத் தடுக்கும் நடவடிக்கை மேற்கொள்கின்றனர். அதிக அளவில் நிலுவை ஆவணங்கள் கள ஆய்வுக்காகத் தேங்கியுள்ள நிலையில் ஆவணங்களை விரைவில் திரும்ப வழங்கிட ஏதுவாக, அனைத்து பதிவு அலுவலர்களும் கள ஆய்வு மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

**(ஈ) விழிப்புக் குழு**

துறையில் ஊழல் முறைகேடுகள் மற்றும் இதர ஒழுங்கீனங்கள் நடைபெறாமல் தடுத்திட ஒரு உதவிப் பதிவுத் துறைத் தலைவரை தலைவராகவும் ஒரு சார்பதிவாளரை உறுப்பினராகவும் கொண்ட விழிப்புக் குழு செயல்படுகின்றது.

**4. வருவாய் ஈட்டல்**

பதிவுத் துறை அலுவலர்களின் சீரிய கண்காணிப்பாலும், விழிப்புணர்வினாலும் 1968-69 ஆம் ஆண்டில் இத்துறையின் மூலம் ரூ.40 கோடியாக இருந்த அரசு வருவாய் 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.1732.91 கோடியாக உயர்ந்துள்ளது. நடப்பாண்டில், பிப்ரவரி 2005 முடிய 15,70,820 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டு ரூ.1626.24 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

**கடந்த 10 ஆண்டுகளில் வருவாய் விவரம்**

| ஆண்டு | ஆவணங்கள் பதிவு | தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1994-95 | 12,65,287 | 586.34 |
| 1995-96 | 13,61,036 | 748.50 |
| 1996-97 | 12,89,947 | 748.58 |
| 1997-98 | 13,32,377 | 806.26 |
| 1998-99 | 13,69,688 | 854.30 |

[2005 மார்ச் 23

| | | |
|---|---|---|
| 1999-2000 | 15,03,181 | 1019.71 |
| 2000-2001 | 13,83,593 | 1094.14 |
| 2001-2002 | 13,90,394 | 1264.20 |
| 2002-2003 | 15,81,764 | 1648.86 |
| 2003-2004 | 15,92,934 | 1732.91 |
| 2004-2005 (பிப்ரவரி முடிய) | 15,70,820 | 1626.24 |

**5. தனித் துணை ஆட்சியர் (முத்திரை) மதிப்பு நிர்ணயம்**

இந்திய முத்திரைச் சட்டத்தின்படி, சொத்து விற்பவர்கள் ஆவணத்தில் சொத்தின் உண்மையான சந்தை மதிப்பைக் குறிப்பிட வேண்டும். சொத்தின் சரியான சந்தை மதிப்பு ஆவணத்தில் குறிக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்துகொள்ள வழிகாட்டி மதிப்பு பதிவேடுகள் பதிவு அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பு வழிகாட்டிப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பைவிடக் குறைவாக இருந்து, ஆவணம் பதிய வருபவர் உரிய முத்திரைத் தீர்வையைச் செலுத்த மறுத்தால், இந்திய முத்திரைச் சட்டப் பிரிவு 47(ஏ)(1)-ன்கீழ் அச்சொத்தின் உண்மையான சந்தை மதிப்பினை நிர்ணயிப்பதற்காக பதிவு அலுவலர் அந்த ஆவணத்தை தனித் துணை ஆட்சியருக்கு (முத்திரை) அனுப்பி வைப்பார். தனித் துணை ஆட்சியர் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தின் சந்தை மதிப்பை நிர்ணயம் செய்து அதன்மீது செலுத்தப்பட வேண்டிய முத்திரைத் தீர்வையை நிர்ணயிக்கிறார். இத்தகைய தனித் துணை ஆட்சியர்கள் சென்னை, கோவை, திருச்சி, மதுரை, சேலம், வேலூர், கடலூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் விருதுநகர் ஆகிய 11 இடங்களில் உள்ளனர்.

இந்தப் பணியின் முக்கியத்துவம் கருதி, சென்னை மற்றும் கோவை அலகுகளில் தனித் துணை ஆட்சியர் (முத்திரை) பணியிடங்கள் மாவட்ட வருவாய் அலுவலர் தரத்துக்கு உயர்த்தப்பட்டுள்ளன. பணிகளை விரைவில் மேற்கொள்ள இவ்விரு அலுவலர்களுக்கும் சிருந்துகள் வழங்கப்பட்டுள்ளன.



2005 மார்ச் 23]

**6. சமாதானத் திட்டம்**

இந்திய முத்திரைச் சட்டப் பிரிவு 47(ஏ)(1)-ன்கீழ் சந்தை மதிப்பை நிர்ணயம் செய்யும்பொருட்டு தனித் துணை ஆட்சியர் (முத்திரை) அலுவலகங்களில் அதிக அளவில் ஆவணங்கள் நிலுவையாக இருந்தமையால் ஒரு புதிய "சமாதானத் திட்டத்தை" அரசு கொண்டு வந்துள்ளது. இத்திட்டம் 28-12-2004 முதல் 27-3-2005 வரை அமலில் இருக்கும். இத்திட்டத்தின்படி சார்பதிவாளர் முன்மொழிந்த மதிப்பின்படி செலுத்த வேண்டிய முத்திரைத் தீர்வைக்கும், ஏற்கெனவே செலுத்தப்பட்டுள்ள முத்திரைத் தீர்வைக்கும் உள்ள வித்தியாசத் தொகையில் 60 விழுக்காடு முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் செலுத்தி பொதுமக்கள் எவ்வித இடையூறுமின்றி தங்கள் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். நிலுவையாக உள்ள 51,434 ஆவணங்களில் பிப்ரவரி 2005 வரை 13,572 ஆவணங்கள் தீர்வு செய்யப்பட்டு ரூ. 33.26 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது.

**7. நிர்வாகச் சீர்திருத்தங்கள்-சட்டத் திருத்தங்கள்**

**(அ) பதிவுச் சட்டம்**

1. பதிவுக் கட்டண கணக்கீட்டு முறையை எளிதானதாகவும், வெளிப்படையானதாகவும் ஆக்கிட பதிவுச் சட்ட கட்டணப் பட்டியல் திருத்தியமைக்கப்பட உள்ளது.

2. பொது அதிகார ஆவணம் மற்றும் உரிமை ஆவணங்கள் ஒப்படைப்பு ஆவணங்கள் ஆகியவற்றைக் கண்டிப்பாகப் பதிவு செய்ய வேண்டுமென்று சட்டத் திருத்தம் செய்வது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

**(ஆ) தமிழ்நாடு முத்திரைச் சட்டம்**

மகாராஷ்டிரா, கர்நாடகா மற்றும் கேரளா மாநிலங்கள் தங்கள் மாநில முத்திரைச் சட்டத்தை இயற்றியுள்ளன. தமிழ்நாட்டில் 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. எனவே, சமீபத்திய திருத்தங்களை உள்ளடக்கிய தமிழ்நாடு முத்திரைச் சட்டம் இயற்றிட அரசு கருதியுள்ளது.

[2005 மார்ச் 23

## 8. முத்திரைத் தீர்வை / மாற்றுத் தீர்வை குறைப்பு

2004-2005ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டவாறு கீழ்க்கண்ட ஆவணங்கட்கு முத்திரைத் தீர்வை/ பதிவுக் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது / உயர்ந்தபட்ச கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது:

**(அ) அடமானம்:** முத்திரைத் தீர்வை, கடன்தொகை மீது 4 சதவிகிதத்திலிருந்து 1 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டு அதிகபட்ச முத்திரைத் தீர்வை ரூ.20,000/- எனவும், பதிவுக் கட்டணம், கடன் தொகை மீது 1 சதவிகிதம் என்பதற்கு அதிகபட்ச கட்டணம் ரூ.5,000 எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**(ஆ) ஒப்படைப்புடன் கூடிய அடமானம்:** முத்திரைத் தீர்வை 4 சதவிகிதத்திலிருந்து 3 சதவிகிதமாகவும், மாற்றுத் தீர்வை கடன் தொகையில் 5 சதவிகிதத்திலிருந்து 1 சதவிகிதமாகவும் குறைக்கப்பட்டுள்ளன. பதிவுக் கட்டணம் 1 சதவிகிதம் என்பதற்கு அதிகபட்ச கட்டணம் ரூ.2 இலட்சம் எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**(இ) அசல் ஆவணங்கள் ஒப்படைப்பு:** முத்திரைத் தீர்வை கடன் தொகை மீது 0.5 சதவிகிதம் என்பதற்கு அதிகபட்ச தீர்வை ரூ.5,000/- எனவும், பதிவுக் கட்டணம் கடன் தொகை மீது 1 சதவிகிதம் என்பதற்கு அதிகபட்சம் ரூ.1,000/- எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(ஈ) குத்தகை ஆவணங்கட்கான முத்திரைத் தீர்வை கீழ்க்கண்டவாறு குறைக்கப்பட்டுள்ளது:

| குத்தகை காலம் | முத்திரைத் தீர்வை விகிதம் |
|---|---|
| 30 ஆண்டுகளுக்குக் கீழ் | மொத்தத் தொகை மீது 1 சதவிகிதம் (வாடகை, தவணைத் தொகை, தண்டத் தொகை மற்றும் முன்பணம்) |
| 30 ஆண்டு முதல் 99 ஆண்டுகள் வரை | மொத்தத் தொகை மீது 4 சதவிகிதம் (வாடகை தவணைத் தொகை, தண்டத்தொகை மற்றும் முன்பணம்) |
| 100 ஆண்டுகள் மற்றும் அதற்கு மேலும் | மொத்தத் தொகை மீது 8 சதவிகிதம் (வாடகை தவணைத் தொகை, தண்டத்தொகை மற்றும் முன்பணம்) |



2005 மார்ச் 23]

பதிவுக் கட்டணம் அதிகபட்சம் ரூ.5,000/- என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**(உ)** வங்கிகள், சொத்துக்களைப் பிணையமாகப் பெற்று கடன்கள் வழங்குகின்றன. சில நேரங்களில், இந்தக் கடன்கள் முறையாக திருப்பிச் செலுத்தப்படாததால், இவை பயனளிக்காத சொத்துக்களாக (Non-Performing Assets) ஆகிவிடுகின்றன. இதுபோன்ற பயனளிக்காத சொத்துக்களை புனரமைக்கும் வகையிலும், அச்சொத்துக்களைப் புனரமைக்கும் நிறுவனங்களுக்கு மாற்ற ஏதுவாகவும் மத்திய அரசு 2002 ஆம் ஆண்டு நிதிச் சொத்துக்களை புனரமைத்தல் மற்றும் பிணைய உரிமையை செயலாக்கும் சட்டத்தை (Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002), இயற்றியுள்ளது. இத்தகைய சொத்து மாற்றத்திற்கு தமிழ்நாட்டில் 6 சதவிகித முத்திரைத் தீர்வை வசூலிக்கப்படுகிறது. இந்த உயரளவு முத்திரைத் தீர்வையால் இதுபோன்ற ஆவணங்கள் தமிழ்நாட்டில் பதிவுக்கு வருவதில்லை. இவ்வாறான ஆவணங்களின் பதிவினை ஊக்குவிக்கவும், மாநிலத்தின் முத்திரைத் தீர்வை வருவாயினை அதிகரிக்கவும், 2005-06 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டவாறு இத்தகைய ஆவணங்களுக்கான முத்திரைத் தீர்வை விகிதம் 0.1 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டு, அதிகபட்ச முத்திரைத் தீர்வை ரூபாய் 1 இலட்சம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும், பதிவுக் கட்டண விகிதம் 0.1 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டு, அதிகபட்ச கட்டணமாக ரூபாய் 20,000/- என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## 9. குடும்ப உறுப்பினர்களுக்கிடையே ஏற்படும் சொத்து மாற்றங்களுக்குக் குறைக்கப்பட்ட முத்திரைத் தீர்வை

உயர்ந்த விகித முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் காரணமாக குடும்ப உறுப்பினர்களுக்கிடையே சொத்து மாற்றங்கள் பதிவு செய்யப்படுவதில்லை. இந்நிலையை நீக்கி குடும்ப உறுப்பினர்களிடையே சொத்து மாற்றங்களைப் பதிவு செய்திட ஊக்குவிக்கும் வண்ணம் ஏற்பாடு, விடுதலை, பாகப்பிரிவினை மற்றும் கூட்டுரிமை கலைப்பு ஆவணங்கட்கான முத்திரைத் தீர்வை குறைக்கப்பட்டு சொத்தின் சந்தை மதிப்பின்மீது 1 சதவிகிதமாகவும், அதிகபட்ச முத்திரைத் தீர்வை ரூ.10,000 எனவும் பதிவுக் கட்டணம் அதிகபட்சம் ரூ.2,000 எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பாகப்பிரிவினை

[2005 மார்ச் 23

ஆவணங்களைப் பொறுத்து இந்த உச்சவரம்பு ஒவ்வொரு பங்கிற்கும் பொருந்தும்.

### 10. உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாற்றுத் தீர்வை

விற்பனை, பரிவர்த்தனை, நன்கொடை, நிலையான குத்தகை ஆகிய ஆவணங்களைப் பொறுத்தவரையில் முத்திரைத் தீர்வையுடன் 2 சதவிகிதம் மாற்றுத் தீர்வை கூடுதலாக வசூலிக்கப்படுகிறது. அனுபவ உரிமையுடன் கூடிய அடமான ஆவணங்களுக்கு 1 சதவிகித மாற்றுத் தீர்வை வசூலிக்கப்படுகிறது. மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளைப் பொறுத்தவரை, மாற்றுத் தீர்வையாக வசூலிக்கப்படும் தொகையில் 5 சதவிகித தொகையை வசூல் கட்டணமாக பதிவுத் துறை வைத்துக்கொண்டு, எஞ்சிய 95 சதவிகிதத் தொகையை சம்பந்தப்பட்ட நகராட்சி மற்றும் மாநகராட்சிகளுக்கு வழங்குகின்றது. அதேபோன்று பேரூராட்சிகள், உள்ளாட்சி மன்றங்களுக்கு வழங்கப்படும் மாற்றுத் தீர்வையில் 3 சதவிகிதம் இத்துறை வசூல் கட்டணமாக எடுத்துக்கொள்கிறது. மீதமுள்ள 97 சதவிகிதம் சம்பந்தப்பட்ட பேரூராட்சிகளுக்கும், உள்ளாட்சி மன்றங்களுக்கும் வழங்கப்படுகிறது.

### 11. முத்திரை வில்லைகள் / முத்திரைத்தாள்கள் விநியோகம்

தமிழ்நாடு முழுவதற்கும் நீதித் துறை மற்றும் நீதித் துறை சாரா முத்திரைத்தாள்களின் தேவையை முத்திரைத்தாள் கண்காணிப்பாளர் மதிப்பீடு செய்து காலாண்டுக்கொருமுறை அதனை நாசிக் மற்றும் ஹைதராபாத்தில் உள்ள இந்திய பாதுகாப்பு அச்சகத்திற்கு அனுப்பி வைக்கிறார். கருவூலக் கணக்குகள் துறை மண்டல துணை இயக்குநர், முத்திரைத்தாள் உதவி கண்காணிப்பாளர் ஒருவரின் உதவியுடன் அலுவல் முறையில் முத்திரைத்தாள் கண்காணிப்பாளராக செயல்படுகின்றார்.

பொதுமக்களுக்கு முத்திரைத்தாள் விற்பனை செய்திட முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் நியமனம் செய்யப்படுகின்றனர். முத்திரைத்தாள் விற்பனையாளர்களின் செயல்பாட்டினை மாவட்டப் பதிவாளர்களும், பதிவுத் துறை உயர் அலுவலர்களும் மேற்பார்வையிடுகின்றனர். 31-1-2005 அன்றுள்ளவாறு மாநிலத்தில் 2,535 முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் உள்ளனர்.

சார்பதிவாளர்கள் அலுவல் முறையில் முத்திரைத்தாள்கள் விற்கும் விற்பனையாளர்களாக செயல்பட்டு வருகின்றனர். சிறப்பு ஒட்டு



2005 மார்ச் 23]

முத்திரை வில்லைகளில் ஒப்பமிடும் அலுவலராகவும், இந்திய முத்திரைச் சட்டம் பிரிவு 41-ன் கீழ் முத்திரைத் தீர்வையினை எவ்வித உச்சவரம்பின்றி ரொக்கமாகப் பெற்று, ஆவணத்தில் தீர்வை செலுத்தியதற்கான சான்று சேர்க்க அதிகாரம் பெற்றவர்களாகவும் உள்ளனர். இந்நிலை, பொதுமக்கள் முத்திரைத்தாட்கள் பெறுதலில் ஏற்படும் சிரமத்தைக் குறைத்திடும்.

போலி முத்திரைத்தாட்கள் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும் பொருட்டு அனைத்து சார்பதிவகங்களுக்கும் போலி முத்திரைத்தாட்களைக் கண்டறிய புற ஊதா விளக்குகள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது போலி முத்திரைத்தாட்களைத் தடுக்க வங்கிகளிலேயே முத்திரைத்தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் செலுத்தும் முறையை அமல்படுத்த பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

போலி முத்திரைத்தாட்கள் உபயோகத்தினைத் தடுக்கும் வகையில் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது :

1. முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணத்தை வரம்பு ஏதுமின்றி வங்கி வரைவோலையாக செலுத்திட அனுமதிக்கப்பட்டுள்ளது.
2. ரூ.1,000/- மற்றும் ரூ.5,000/- மதிப்புடைய நீதிசாரா முத்திரைத்தாட்களில் வரிசை எண்களோ, புறஊதா பிரதிபலிப்பு அம்சங்களோ இல்லாததால், அவற்றின் உண்மைத்தன்மையை உறுதி செய்துகொள்ள கருவூல அலுவலர்கள் அனைத்து முத்திரைத்தாள்களிலும் சுருக்கொப்பமிட்டு அலுவலக முத்திரை பதிக்க வேண்டுமென ஆணையிடப்பட்டுள்ளது.
3. முத்திரைத்தாள் விற்பனைக் கணக்கினை சரிபார்க்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.
4. சார்பதிவகத்தில் முத்திரைத்தாள் இருப்பு வரம்பை ரூ. 1.5 இலட்சமாக உயர்த்தி நேரடி விற்பனை செய்ய ஆணையிடப்பட்டுள்ளது. போலி முத்திரைத்தாள் புழக்கத்தை ஒழிக்கவும், முத்திரைத்தாள் விற்பனையாளர்களால் செயற்கையாக பற்றாக்குறையை உருவாக்கப்படுவதைத் தடுக்கவும் இவ்வாறு வரம்பு உயர்த்தப்பட்டுள்ளது.
5. போலி முத்திரைத்தாள் புழக்கத்தை அறவே ஒழித்திட கீழ்க்கண்ட கருத்துருக்கள் தீவிர பரிசீலனையில் உள்ளன:

[2005 மார்ச் 23

(அ) ரூ.100/- முக மதிப்புள்ள முத்திரைத்தாட்களை மட்டுமே பயன்படுத்துதல்.

(ஆ) ஒரு ஆவணத்திற்கு ரூ.5/- மதிப்புள்ள ஒட்டுவில்லை மட்டும் பயன்படுத்தும் வகையில் கட்டுப்படுத்துதல்.

(இ) ஒரு சார்பதிவக எல்லைக்குள் பெறும் முத்திரைத்தாட்களை அச்சார்பதிவக எல்லைக்குள் மட்டும் பயன்படுத்தும் வகையில் கட்டுப்படுத்துதல் மற்றும்

(ஈ) முத்திரைத்தாட்களின்மீது ஹோலோகிராம் முத்திரையிடல் என்ற கூடுதல் பாதுகாப்பு முறை.

6. போலி முத்திரைத்தாட்களை கண்டறிவது குறித்தும், முத்திரைத்தாட்களில் உள்ள பாதுகாப்பு அம்சங்கள் குறித்தும் ஒரு பயிற்சியை இந்திய பாதுகாப்பு அச்சகம் 20-5-2004 முதல் 22-5-2004 வரை நடத்தியது. பதிவுத் துறை சார்பில் 4 அலுவலர்கள் இப்பயிற்சிக்கு அனுப்பப்பட்டனர். இவ்வலுவலர்கள் அனைத்து சார்பதிவாளர்களுக்கும் இப்பயிற்சியை அளித்துள்ளனர்.

முத்திரைத்தாள் விற்பனையாளர்களின் நடவடிக்கைகள் மாவட்டப் பதிவாளர்களால் காலமுறை ஆய்வு மற்றும் திடீராய்வு செய்யப்படுகின்றன. முத்திரைத்தாள் விற்பனையாளர்களின் கணக்குகளையும், இருப்பையும் சார் பதிவாளர்கள் சரிபார்க்கின்றனர். புகார் ஏதும் வரப்பெறின், மாவட்டப் பதிவாளர்கள் விரிவான விசாரணை நடத்தி, முத்திரைத்தாள் விற்பனையாளர்மீது உரிய நடவடிக்கை எடுக்கின்றனர். இதன் விளைவாக 2003 முத்திரைத்தாள் விற்பனையாளர்களின் உரிமங்கள் உரிம விதி மீறலுக்காக இரத்து செய்யப்பட்டுள்ளன. மேலும் 46 வழக்குகள் மாநில குற்றப் புலனாய்வுத் துறையில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

## 12. ஆவண எழுத்தர்கள் மற்றும் நகல் எழுத்தர்கள்

1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆவண எழுத்தர் உரிம விதிகளின்படி முத்திரைச் சட்டம் மற்றும் பதிவுச் சட்டம் ஆகியவற்றின்கீழ் வகுக்கப்பட்ட விதிகள் குறித்து அரசு நடத்தும் அறிவுத்திறன் தேர்வில் தேர்ச்சி பெற்றவர் மட்டுமே ஆவண எழுத்தர் உரிமம் பெறத் தகுதியுடையவர் ஆவார். மாநில அளவிலான உரிமம், பதிவு மாவட்ட அளவிலான உரிமம், சார்பதிவக அளவிலான உரிமம் என மூன்று வகை உரிமங்கள் வழங்கப்படுகின்றன. 31-1-2005 முடிய 7,906 ஆவண எழுத்தர் உரிமதாரர்கள் உள்ளனர்.



2005 மார்ச் 23]

இந்திய பதிவு (உண்மை நகல் கோர்வை) விதிகள், 1967-ன்படி பதிவுக்குத் தாக்கல் செய்யப்படும் ஆவணத்துடன் அதன் நகலையும் தாக்கல் செய்ய வேண்டும். கணினிமயமாக்கப்பட்ட அலுவலகங்களில் நகல் தாக்கல் செய்ய வேண்டியதில்லை. ஆவணங்களுக்கு நகல் எழுதவும், தட்டச்சு நகல் எடுக்கவும் வரையறுக்கப்பட்ட தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு ஆவண/ நகல் எழுத்தர் உரிமங்களும் மற்றும் வரையறுக்கப்பட்ட தட்டச்சுத் தேர்வு தகுதி பெற்றவர்களுக்கு தட்டச்சர்களுக்கான உரிமங்களும் வழங்கப்பட்டு வருகின்றன. 31-1-2005 முடிய 5,275 நகல் எழுத்தர் உரிமதாரர்கள் உள்ளனர்.

## 13. பட்டா பாஸ் புத்தகம்

விவசாய நிலம் சம்பந்தப்பட்ட விற்பனை, தானம், அடமானம், பரிவர்த்தனை, செட்டில்மெண்டு அல்லது இதரவகையிலான ஆவணப் பதிவுக்கு முன்னர் பதிவு அலுவலரிடம் பட்டா பாஸ் புத்தகத்தினை தாக்கல் செய்ய, தமிழ்நாடு பட்டா பாஸ் புத்தக சட்டம் பிரிவு 5-ன்படி வலியுறுத்தப்பட்டுள்ளது. அனைத்து பட்டாதாரர்களுக்கும் பட்டா பாஸ் புத்தகம் வழங்கப்படாத நிலையில், விவசாயிகள் சொத்து மாற்றங்களின் போது சந்திக்க வேண்டிய இடையூறுகளைக் கருத்திற்கொண்டு இவ்வரையறையை நீக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 14. சங்கங்கள்

1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்படி பதிவுத் துறைத் தலைவர் மற்றும் அனைத்து நிர்வாக மாவட்டப் பதிவாளர்கள் சங்கங்களின் பதிவாளர் ஆவர். பதிவுத் துறைத் தலைவருக்கு இச்சட்டத்தின்கீழான பணிகளைக் கண்காணிக்கும் அதிகாரமும் மேல்முறையீடுகள் மீது இறுதியாணையிடும் அதிகாரமும் உள்ளன.

சங்கங்கள், காலதாமதமாக ஆவணங்களைக் கோர்வை செய்தாலும், அவற்றை ஏற்றுக்கொள்வதற்கு ஏதுவாக சட்டத்தின் சில பிரிவுகளிலிருந்து விலக்களிக்கும் அதிகாரத்தை பதிவுத் துறைத் தலைவர் மற்றும் மாவட்டப் பதிவாளர்களுக்கு வழங்க பிரிவு 49 மற்றும் அதற்குரிய பிரிவுகளைத் திருத்துவதற்கான செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது. 31-1-2005 அன்றுள்ளபடி தமிழ்நாட்டில் மொத்தம் 1,22,892 பதிவு பெற்ற சங்கங்கள் உள்ளன.

[2005 மார்ச் 23

## 15. சீட்டுகள்

தமிழ்நாட்டில் சீட்டு நிதி அமைப்புகளின் செயல்பாடுகள் 1982 ஆம் ஆண்டு மைய சீட்டு நிதிச் சட்டம் மற்றும் அதன்கீழ் வரையறுக்கப்பட்ட தமிழ்நாடு சீட்டு நிதி விதிகளின்படி நிர்வகிக்கப்படுகின்றன. பதிவுத் துறைத் தலைவர் சீட்டுப் பதிவாளராக நியமிக்கப்பட்டுள்ளார். கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் நிலையில் ஒரு கூடுதல் சீட்டுப் பதிவாளரும், மாவட்டப் பதிவாளர் நிலையில் ஒரு நேர்முக உதவியாளரும் (சீட்டு) சீட்டு நிதிப் பணிகளில் பதிவுத் துறைத் தலைவருக்கு உதவி புரிகின்றனர்.

துணைப் பதிவுத் துறைத் தலைவர் மற்றும் மாவட்டப் பதிவாளர்கள் முறையே இணை சீட்டுப் பதிவாளர்கள் மற்றும் துணை சீட்டுப் பதிவாளர்களாக அவரவர் எல்லைக்குள் நியமிக்கப்பட்டுள்ளனர். மாவட்டங்களில் சீட்டுப் பணியை கவனிக்க 47 சார்பதிவாளர்கள், சீட்டு ஆய்வாளர்களாக செயல்படுகின்றனர். சீட்டு வழக்குகளைத் தீர்க்க சென்னை (வடக்கு), சென்னை (தெற்கு மற்றும் மையம்) மற்றும் கோவை ஆகிய இடங்களில் சீட்டு நடுவர்கள் மூவர் செயல்படுகின்றனர்.

மோசடி நோக்கங்கொண்ட சீட்டு நிறுவனங்களிடமிருந்து பொதுமக்களைப் பாதுகாக்க, சீட்டு நடைமுறையில் உள்ள காலத்தில் ஒருமுறையாவது ஆய்வு நடத்த அரசு அறிவுறுத்தியுள்ளது. பதிவு செய்யப்படாத சீட்டுக்கள் நடைபெறுவதைத் தடுக்க துறை தீவிர கவனம் செலுத்தி நடவடிக்கை எடுத்து வருகிறது. அங்கீகாரமற்ற மற்றும் பதிவு செய்யப்படாத சீட்டு நடைபெறுவதை கண்டுபிடித்திடவும் அதன்மீது உரிய நடவடிக்கை எடுத்திடவும் கூடுதல் சீட்டுப் பதிவாளர் தலைமையில் ஒரு சீட்டு விழிப்புக் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்குழு நேர்முக உதவியாளர் (சீட்டு) வடசென்னை, தென்சென்னை மற்றும் மத்திய சென்னை மாவட்ட சீட்டு ஆய்வாளர்களை உறுப்பினர்களாகக் கொண்டு செயல்படுகிறது.

## 16. கூட்டு நிறுவனங்கள்

இந்திய கூட்டு வணிகச் சட்டத்தின்படி மாவட்டப் பதிவாளர்கள் அனைவரும் பதிவாளர்கள் ஆவர். இச்சட்டத்தின்கீழ் படிவம்-I-ல் அறிக்கை தாக்கல் செய்து கூட்டு வணிக நிறுவனம் பதிவு செய்யப்பட வேண்டும். நிறுவனத்தால் தாக்கல் செய்யப்படும் அறிக்கைகள் நிறுவனப் பதிவேட்டில் தேவையான குறிப்புகள் செய்தபின் பதிவாளர் கோர்வை செய்வார். நிறுவனத்தில் நிலவும் எவ்வித மாற்றமும் பதிவாளருக்கு



2005 மார்ச் 23]

தெரிவிக்கப்படவேண்டும். இந்தச் சட்டத்தின்கீழ் பதியப்படும் நிறுவனங்கள், பதிவு செய்த பிறகு தொடர்ந்து செயல்பட்டுவருவது குறித்து, ஒவ்வொரு ஆண்டும் உறுதிமொழியைக் கட்டாயம் கோர்வை செய்திட 1932 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டு வணிக நிறுவனம் (கூட்டு வணிக நிறுவனங்கள் பதிவு) விதிகளுக்கு திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

31-1-2005-ல் உள்ளபடி 4,53,430 நிறுவனங்கள் இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

## 17. திருமணப் பதிவு

### (அ) 1955 ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டம்

இந்துக்களிடையே ஏற்கெனவே நடைபெற்ற திருமணங்கள் இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படுகின்றன. பதிவு செய்யப்பட்ட திருமணங்கள் தொடர்பான வடிப்புகள் சார்பதிவாளர்களால் வழங்கப்படுகின்றன. இச்சட்டத்தின்கீழ் அனைத்து சார்பதிவாளர்களும் திருமணப் பதிவாளர்கள் ஆவார்கள்.

### (ஆ) 1954 ஆம் ஆண்டு சிறப்பு திருமணச் சட்டம்

இச்சட்டத்தின்கீழ் எத்தகைய வடிவிலான திருமணங்களும் பதிவு செய்யப்படுகின்றன. அனைத்து மாவட்டப் பதிவாளர்கள் மற்றும் சார்பதிவாளர்கள் இச்சட்டத்தின்கீழ் திருமண அலுவலர்களாக அவர்கள் எல்லையைப் பொறுத்து நியமிக்கப்பட்டுள்ளனர். திருமண அலுவலரிடம் உத்தேசிக்கப்பட்டுள்ள திருமணத்திற்கான அறிவிப்பு அளிக்கப்படல் வேண்டும். 30 நாட்கள் கழித்து திருமணத்திற்கு எவ்வித எதிர்ப்பும் வராத பட்சத்தில் திருமணம் முறைப்படுத்தப்படும்.

### (இ) கிறித்துவ திருமணச் சட்டம்

கிறித்துவ பாதிரியார்களாலும், உரிமம் பெற்றவர்களாலும் இந்திய கிறித்துவ திருமணங்கள் பதிவு செய்யப்படுகின்றன. இச்சட்டத்தின்கீழ் திருமண வடிப்புகள் பதிவுத் துறைத் தலைவர் அலுவலகத்தில் வழங்கப்படுகின்றன.

[2005 மார்ச் 23

**18. பதிவுத் துறையில் தகவல் தொழில்நுட்ப செயல்பாடுகள்**

தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி விரைவான மற்றும் வெளிப்படையான சேவையை பொதுமக்களுக்கு வழங்கும் பொருட்டு மாநிலத்திலுள்ள 558 சார்பதிவகங்களில் 300 சார்பதிவகங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன மற்றும் 50 மாவட்டப் பதிவகங்கள் முழுமையாக கணினிமயமாக்கப்பட்டுள்ளன.

**கணினி செயல்பாடுகளின் சிறப்பம்சங்கள்:**

- ஆவணங்கள் பாதுகாப்பு: ஸ்கேன் செய்யப்பட்டு குறுவட்டுக்களில் சேமித்தல்
- வில்லங்கச் சான்றுகள் வழங்கல்
- ஆவணங்களின் சான்றிட்ட நகல்கள் வழங்கல்
- சொத்து மதிப்பீடு அறிக்கை தயார் செய்தல்
- திருமணப் பதிவு/ சங்கப் பதிவு/ நிறுவனங்கள் பதிவு/ சீட்டுப் பதிவுகள்
- இணையதளத்தில் வழிகாட்டி மதிப்பு மற்றும் பதிவு தொடர்பான நடைமுறைகளை வெளியிடுதல். இணையதள முகவரி www.tnreginet.net
- இணையதளம் வழியாக விண்ணப்பித்து வில்லங்கச் சான்று வீட்டிலேயே பெறுதல்.

தகவல் தொடர்பு வழியான செயல்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டதன் விளைவாக, பதிவுத் துறை தனது சேவைத்தரத்தை பல மடங்கு மேம்படுத்தியுள்ளது. இந்த விரைவான செயல்பாட்டின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :—

| செயல் | கணினி மயமாக்கப் படுவதற்கு முன் | கணினி மயமாக்கப்பட்ட பின் |
|---|---|---|
| வில்லங்கச் சான்று வழங்கல் | 8 நாட்கள் | 5 நிமிடங்கள் |
| சொத்து மதிப்பிடல் | 30 நிமிடங்கள் | 5 நிமிடங்கள் |
| சான்று நகல் | 4 நாட்கள் | 5 நிமிடங்கள் |
| ஆவணப் பதிவு திரும்பப் பெறல் | 4 நாட்கள் | 60 நிமிடங்கள் |
| திருமணப் பதிவுச் சான்று | 1 நாள் | 15 நிமிடங்கள் |



2005 மார்ச் 23]

**'ரெஜிநெட்'**

'ரெஜிநெட்' என்பது தகவல் தொடர்பு தொழில்நுட்ப முன்னேற்றங்களை பயன்படுத்தி ஏற்படுத்தப்பட்ட தனிப்பட்ட ஒரு வலைப்பின்னல் (network) ஆகும். வலைப்பின்னல் இணைப்பின் பயனால் தகவல்கள் பரிமாற்றம் மற்றும் எந்த ஒரு அலுவலகத்தின் தகவல்களும் வேறு அலுவலகத்தில் பார்க்கலாம். இதன் விளைவாக எந்த ஒரு சொத்தைப் பொறுத்த வில்லங்கச் சான்றும் கணினிமயமாக்கப்பட்ட எந்த அலுவலகத்திலும் பெறலாம்.

இணையதளம் வழி, வில்லங்கச் சான்று/ பதிவுற்ற ஆவணங்களின் நகல்/ சங்கங்கள்/ சீட்டு நிறுவனங்களால் கோர்வை செய்யப்பட்ட படிவங்களின் நகல்கள்/ இந்து திருமண பதிவு வடிப்புகள் ஆகியவை பெற மனுச் செய்திட வசதி செய்யப்பட்டுள்ளது. மனுதாரரால் அளிக்கப்படும் தகவல்கள் சம்பந்தப்பட்ட அலுவலகத்தில் பரிசீலிக்கப்பட்டு சான்றுகள் தயார் நிலையில் வைக்கப்படுகிறது. மனுதாரர்கள் தேவையான கட்டணத்தை மையத்தில் நேரடியாக செலுத்தி சான்று பெறலாம். அல்லது வில்லங்கச் சான்று மனுதாரரின் வீட்டிலேயே கோரிக்கைப்படி கூரியர் சேவை வழி, உரிய கட்டணம் மற்றும் அனுப்புகை செலவுகள் வசூலிக்கப்பட்டு வழங்கப்படும்.

துறைக்கென தனிப்பட்ட இணையதளம் (http://www.tnreginet.net) அமைக்கப்பட்டுள்ளது. பதிவுச் செயல்பாடுகளை வெளிப்படையாக்கும் நோக்குடன், மாநிலத்தில் அனைத்து பகுதிகளின் வழிகாட்டி மதிப்புகள் இத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. பொதுவான தகவல்கள் மட்டுமின்றி பதிவு நடைமுறை விவரங்கள் பொது பயன்பாட்டு படிவங்கள் மற்றும் மாதிரி ஆவண படிவங்கள் ஆகியவை இத்தளத்தில் பொதுமக்கள் பயன்பெற அளிக்கப்பட்டுள்ளன. ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட பதிவுற்ற சங்கங்களின் சமீபத்திய நிலையை துறையின் இணையதளத்தில் அறிந்திடலாம். இந்த இணையதளம் பதிவுற்ற சீட்டு விவரங்களையும் அளிக்கிறது. இதன்படி பொதுமக்கள் தாம் சேர உத்தேசித்துள்ள சீட்டின் உண்மைத்தன்மையை அறிந்திடலாம்.

தனிப்பட்ட **ரெஜிநெட் சேவை மையம்** சென்னை, ஈரோடு மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் செயல்படுகின்றது. இந்த மையத்தில் பதிவு நடைமுறையைத் தவிர இதர அனைத்து சேவைகளும் அளிக்கப்படுகின்றன.

[2005 மார்ச் 23

மீதமுள்ள சார்பதிவகங்களையும் கணினிமயமாக்கி மாநிலம் முழுமையும் இணைத்திடவும், வருவாய்த் துறையுடன் இணைப்பு வசதி செய்து கணினி வழியாகவே பட்டா மாற்றம் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. பொதுமக்களுக்குத் தேவைப்படும் மேலும் பல பயனுள்ள சேவைகளை இணையதளம்மூலம் நிறைவேற்றிடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### 19. 2005-2006 ஆம் ஆண்டுக்கான பகுதி 2 திட்டம்

2005-2006 ஆம் ஆண்டுக்கான பகுதி 2 திட்டத்தின்கீழ், கீழ்க்கண்ட திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது:

1. ரூ.45 இலட்சம் செலவில் 50 நகல் எடுக்கும் கருவிகள் சார்பதிவகங்களுக்கு வழங்குதல். இது பொதுமக்களுக்கு விரைவான மற்றும் தெளிவான ஆவண நகல்கள் வழங்க வழிவகுக்கும்.
2. ரூ.36 இலட்சம் செலவில், சீரிய நிர்வாக மேம்பாட்டிற்கென 9 நிர்வாக மாவட்டப் பதிவாளர்களுக்கு வாகன வசதி அளித்தல்.
3. திருவல்லிக்கேணி சார்பதிவகம், மத்திய சென்னை மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்) மற்றும் (தணிக்கை) அலுவலகங்களைக் கொண்ட அலுவலக வளாகம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கென ரூ.33.80 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.



2005 மார்ச் 23]

## இணைப்பு II

(448 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

### மானியக் கோரிக்கை எண் 29

### எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை

### கொள்கை விளக்கக் குறிப்பு, 2005-2006

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் ஆணையரகம், சென்னையில் இயங்கி வருகிறது. ஆணையரகத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் தமிழகத்தில் கீழ்க்கண்ட அலகுகள் செயல்பட்டு வருகின்றன:

1. அரசு மைய அச்சகம், சென்னை
2. எழுதுபொருள் கிடங்கு, சென்னை
3. அரசு கிளை அச்சகம், உயர் நீதிமன்ற வளாகம், சென்னை
4. அரசு கிளை அச்சகம், மதுரை
5. அரசு கிளை அச்சகம், சேலம்
6. அரசு கிளை அச்சகம், திருச்சிராப்பள்ளி
7. அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை
8. அரசு கிளை அச்சகம், விருத்தாசலம்

அரசு மைய அச்சகம் நவீனமயமாக்கப்பட்டதன் தொடர்ச்சியாக அரசு கிளை அச்சகங்களான மதுரை, சேலம் மற்றும் புதுக்கோட்டை ஆகிய கிளை அச்சகங்கள் நவீனமயமாக்கப்பட்டுள்ளன.

திருச்சி மற்றும் விருத்தாசலம் கிளை அச்சகங்களில் மட்டும் அச்சு எழுத்து மூலம் அச்சடிக்கும் லெட்டர் பிரஸ் இயந்திரங்களை கொண்டு இயங்கி வருகின்றன.

மாநில அரசின்கீழ் இயங்கும் அனைத்துத் துறைகளுக்கும் தேவையான எழுதுபொருட்கள், தட்டச்சுப் பொறிகள், படிப்பெருக்கிகள் கொள்முதல் செய்து இத்துறை வழங்கி வருகிறது.

இத்துறையில் **2,631** பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இவர்களில் பெண்கள் **493**, கண்பார்வையற்றவர்கள் **37** (ஆண்கள் **27** மற்றும் பெண்கள் **10**), உடல் ஊனமுற்றவர்கள் **84** (ஆண்கள் **68** மற்றும் பெண்கள் **16**), காதுகேளாதோர்/வாய் பேசாதவர் **9** (ஆண்கள் **7** மற்றும் பெண்கள் **2**) பேர்கள் ஆவார்கள்.

**எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரகம், சென்னை :**

தனித்தனியே இயங்கி வந்த எழுதுபொருள் கிடங்கு மற்றும் அச்சகங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையாக இயங்கி வருகிறது. இந்திய ஆட்சிப் பணி அலுவலர் ஒருவரின் தலைமையின்கீழ் இணை இயக்குநர், பொது மேலாளர், இரண்டு பணி மேலாளர்கள், ஒன்பது துணைப் பணி மேலாளர்கள், இருபத்தேழு உதவிப் பணி மேலாளர்கள், ஒன்பது உதவி இயக்குநர்கள், ஒரு முதன்மைக் கணக்கு அலுவலர், ஒரு துணை இயக்குநர், ஒரு விலை மதிப்பீட்டுக் கணக்கு அலுவலர் மற்றும் ஒரு தொழிலாளர் நல அலுவலர் ஆகியோர் பணியாற்றி வருகிறார்கள். சென்னையில் அமைந்துள்ள இவ்வாணையரகத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் அரசு அச்சகங்களும், விற்பனை நிலையங்களும் மற்றும் எழுதுபொருள் கிடங்கு அலுவலகமும் இயங்கி வருகின்றன.

**அரசு மைய அச்சகம், சென்னை :**

சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் **1831** ஆம் ஆண்டு அரசுக்குத் தேவையான அச்சுப் பணிகளை நிறைவேற்றும் பொருட்டு **10** பணியாளர்களைக் கொண்டு அரசு அச்சகம் ஆரம்பிக்கப்பட்டது. புனித ஜார்ஜ் கோட்டையில் இயங்கி வந்த அச்சகம், **1888** ஆம் ஆண்டு தங்கசாலைக்கு மாற்றப்பட்டு தற்போது இரண்டு பணி மேலாளர்களின் கட்டுப்பாட்டின்கீழ் **1,571** பணியாளர்களைக் கொண்டு இயங்கி வருகிறது. இங்குள்ள பணியாளர்கள் மூன்று முறை மாற்றங்களில் பணிபுரிந்து வருகிறார்கள்.

தமிழக அரசின் எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையில் அச்சு எழுத்துக்கள் மூலம் அச்சடிக்கும் லெட்டர் பிரஸ் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு வந்தன. உலக அரங்கில் ஏற்பட்ட விஞ்ஞான வளர்ச்சிக்கேற்ப அச்சுத் துறையிலும் நவீன இயந்திரங்கள் அவ்வப்போது புகுத்தப்பட்டதன் தொடர்ச்சியாக, **1992** ஆம் ஆண்டு அரசு மைய அச்சகத்தில் ஆறு யூனிட்களுடன் இயங்கும் பல வண்ணங்களில்





அச்சிடும் அதிவேக வெப்-ஆப்செட் இயந்திரங்களும், ஆப்செட் இயந்திரங்களும், ஈய எழுத்துக்கள் தயாரிக்கும் இயந்திரங்களுக்கு பதிலாக கணினியும், முதன் முறையாக நிறுவப்பட்டன. மேலும் கவின் கலை அச்சுக்கு தொடர்பான பிளேட் எக்ஸ்போசர், பிளேட் பிராசஸர் போன்ற நவீன இயந்திரங்களும் அரசு மைய அச்சகத்தில் நிறுவப்பட்டு நவீனமயமாக்கப்பட்ட வரவு-செலவு பிரிவு செயல்பட்டு வருகின்றது.

**எழுதுபொருள் கிடங்கு, சென்னை :**

எழுதுபொருள் கிடங்கு தற்போது ஒரு உதவி இயக்குநரின்கீழ் **159** பணியாளர்களுடன் இயங்கி வருகிறது. மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து அரசு அலுவலகங்களுக்குத் தேவையான எழுதுபொருட்கள், தமிழ் மற்றும் ஆங்கில தட்டச்சுப் பொறிகள், படிப்பெருக்கிகள், கணக்கீட்டுப் பொறிகள் மற்றும் அச்சகப் பொருட்கள் ஆகியவை ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகளின்படி ஆண்டுதோறும் ஒட்டுமொத்தமாக கொள்முதல் செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகின்றன. அரசு அலுவலகங்களுக்கு பெரும்பாலும் தமிழ் தட்டச்சுப் பொறிகளே வழங்கப்படுகின்றன. ஆங்கில தட்டச்சுப் பொறிகள் அரசின் ஆணை பெற்ற பின்னரே வழங்கப்படுகின்றன. தட்டச்சுப் பொறிகள், படிப்பெருக்கிகள், கணக்கீட்டுப் பொறிகள் ஆகியவை தலைமை இயக்குநர் விநியோகம் மற்றும் ஒதுக்கீடு அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு கொள்முதல் செய்யப்படுகின்றன.

தமிழ்நாடு முழுவதுமுள்ள **3,474** கேட்பு அலுவலகங்களுக்கு (இலவசமாக **3,342**, முன்கூட்டியே பணம் செலுத்துதல் **132**) ஆண்டுதோறும் எழுதுபொருட்கள் இத்துறை மூலம் வழங்கப்படுகிறது. நடப்பு ஆண்டில் இதுவரை **1,695** அலுவலகங்களுக்கு எழுதுபொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. **219** தமிழ் தட்டச்சுக்கள் நடப்பு ஆண்டில் அரசு அலுவலகங்களுக்கு இத்துறை மூலம் வழங்கப்பட்டது.

**2004-2005** ஆம் ஆண்டுக்கு காகிதம் மற்றும் அட்டைகள் கொள்முதல் செய்ய ரூ.*18.91* கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்திலிருந்து (T.N.P.L.) ரூ.*16.40* கோடி மதிப்பிற்கான காகிதம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. ரூ.*2.51* கோடி மதிப்பிற்கான சிறப்பு வகைக் காகிதம் மற்றும் கார்பன் காகிதம், படிபெருக்கியின் மை போன்ற எழுதுபொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

[2005 மார்ச் 23

**அரசு கிளை அச்சகம், உயர் நீதிமன்ற வளாகம், சென்னை :**

உயர் நீதிமன்றத்தின் அன்றாட வழக்குப் பட்டியல் அச்சிடும் பணிக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் 1923 ஆம் ஆண்டு உயர்நீதிமன்ற வளாகத்திற்குள் நிறுவப்பட்டு, ஒரு துணைப் பணி மேலாளரின்கீழ் 173 பணியாளர்களுடன் இரண்டு முறைமாற்றங்களில் இயங்கி வருகிறது. தினசரி வழக்குப் பட்டியலுக்கு முன்னுரிமை அளித்து இரவு முறைமாற்றத்தில் அச்சிடப்பட்டு, அடுத்த நாள் நீதிமன்றம் செயல்பட வழிவகுப்பது இக்கிளை அச்சகத்தின் சிறப்பாகும். உயர் நீதிமன்றத்திற்கு தேவையான படிவங்கள் மற்றும் பதிவேடுகள் ஆகியவைகளை உடனுக்குடன் அச்சிட்டு உயர் நீதிமன்றத்திற்கு வழங்குவது இவ்வச்சகத்தின் பணியாகும்.

**அரசு கிளை அச்சகம், மதுரை :**

அரசு கிளை அச்சகம், மதுரை 1976 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு, இரு முறைமாற்றங்களில் இயங்கி வருகிறது. தற்போது 173 பணியாளர்களுடன் ஒரு துணைப் பணி மேலாளர் மற்றும் ஒரு உதவிப் பணி மேலாளர் பணிபுரிகின்றனர்.

வருவாய்த் துறை, கருவூலத் துறை, காவல் துறை, பதிவுத் துறை, மருத்துவத் துறை மற்றும் வணிகவரித் துறை ஆகிய துறைகளின் படிவங்களும், பதிவேடுகளும், வேளாண்மைத் துறையின் விதைச்சான்று அட்டைகளும், அட்டவணைகளும், பொதுப் பணித் துறைக்கான விலைப்பட்டியல்களும் இங்கு அச்சிடப்படுகின்றன.

அரசு கிளை அச்சகம், மதுரையில் 1-1-2002 முதல் கணினி முறை அறிமுகப்படுத்தப்பட்டு, மதுரை, தேனி, விருதுநகர், திருநெல்வேலி, திண்டுக்கல் ஆகிய ஐந்து மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்கள் செயலாக்கப்பட்டு அச்சிட்டு வழங்கப்படுகின்றன.

**அரசு கிளை அச்சகம், சேலம் :**

இக்கிளை அச்சகம் 1966 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. தற்போது ஒரு கிளை மேலாளர் மற்றும் ஒரு உதவிப் பணி மேலாளரின்கீழ் 80 பணியாளர்களுடன் இரு முறைமாற்றங்களில் இயங்கி வருகின்றது. தமிழ்நாடு கருவூல விதித்தொகுப்புப் படிவங்கள், மருத்துவத் துறைப் படிவங்கள், அரசுத் தேர்வுப் பணிகளுக்கான படிவங்கள், ஆகியவை இக்கிளை அச்சகத்தில் அச்சிடப்படுகின்றன.



2005 மார்ச் 23]

சேலம், கோயம்புத்தூர், ஈரோடு, நாமக்கல், நீலகிரி மற்றும் தருமபுரி ஆகிய ஆறு மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்களும் இந்த அச்சகத்தில் கணினி முறையில் செயலாக்கப்பட்டு அச்சிடப்படுகின்றன.

**அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை :**

புதுக்கோட்டை ஸ்ரீ பிரகதாம்பாள் மாநில அச்சகம் இத்துறையுடன் 1949 ஆம் ஆண்டு இணைக்கப்பட்டது. இவ்வச்சகத்தில் கீழே குறிப்பிட்டுள்ள 12 மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்களும் கணினி முறையில் செயலாக்கப்பட்டு அச்சிடப்படுகின்றன:—

| | | |
|---|---|---|
| 1. இராமநாதபுரம் | 2. கன்னியாகுமரி | 3. சென்னை |
| 4. காஞ்சிபுரம் | 5. திருவள்ளூர் | 6. திருவண்ணாமலை |
| 7. தஞ்சாவூர் | 8. புதுக்கோட்டை | 9. தூத்துக்குடி |
| 10. திருவாரூர் | 11. நாகப்பட்டினம் | 12. சிவகங்கை |

தற்போது 99 பணியாளர்களுடன் ஒரு கிளை மேலாளரின்கீழ் இரு முறைமாற்றங்களில் இவ்வச்சகம் இயங்கி வருகிறது. ஆதிதிராவிடர் நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை, காவல் துறை, மருத்துவத் துறை, ஓய்வூதியத் துறை மற்றும் வனத் துறை சார்பான நிலைப்படுத்தப்பட்ட படிவங்களும், பதிவேடுகளும் இங்கு அச்சிடப்படுகின்றன.

**அரசு கிளை அச்சகம், திருச்சி :**

1965 ஆம் ஆண்டில் திருச்சி அரியமங்கலத்தில் வாடகைக் கட்டடத்தில் துவங்கப்பட்டு, தற்போது துவாக்குடியில் சொந்த கட்டடத்தில் ஒரு கிளை மேலாளரின்கீழ் 99 பணியாளர்களுடன் இரு முறை மாற்றங்களில் இயங்கி வருகிறது. இதில் அனைத்து அரசு அலுவலகங்களுக்குத் தேவையான நிலைப்படுத்தப்பட்ட பொதுப் படிவங்களும், பதிவேடுகளும், தன்பதிவேடுகளும், ரொக்கப் பதிவேடுகளும் மற்றும் அளவைப் பதிவேடுகளும் அச்சிடப்படுகின்றன.

திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர் மற்றும் கரூர் ஆகிய மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்களும் இங்கு அச்சிடப்படுகின்றன.

[2005 மார்ச் 23

**அரசு கிளை அச்சகம், விருத்தாசலம் :**

1966 ஆம் ஆண்டு வாடகைக் கட்டடத்தில் துவங்கப்பட்ட இக்கிளை அச்சகம், 1969 ஆம் ஆண்டு முதல் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. கீழே குறிப்பிட்டுள்ள மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்களும் இங்கு அச்சிடப்படுகின்றன :

1. விழுப்புரம் 2. வேலூர் 3. கடலூர்

தற்போது 78 பணியாளர்களுடன் ஒரு துணைப் பணி மேலாளரின் கீழ் இரு முறைமாற்றங்களில் இயங்கி வரும் இவ்வச்சகத்தில் வேளாண்மை, பொதுப் பணி, காவல், தீயணைப்பு, தேசிய மாணவர் படை, வனம், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு, கால்நடை பராமரிப்பு, மருத்துவம், கூட்டுறவு, புள்ளியியல், தொழில் மற்றும் வணிகம் ஆகிய துறைகளுக்கான படிவங்களும் பதிவேடுகளும் அச்சிடப்படுகின்றன.

**2004-05 ஆம் நிதியாண்டில் பிப்ரவரி மாதம் வரை எழுதுபொருள் அச்சுத் துறையினால் செயலாக்கப்பட்ட முக்கிய பணிகளின் விவரம் :**

எழுதுபொருள் அச்சுத் துறையின்கீழ் இயங்கும் அரசு மைய அச்சகம், சென்னை மற்றும் கிளை அச்சகங்களில் 84 அரசுத் துறைகளின் 1,329 கேட்பு அலுவலகங்களுக்கு 2,675 வகையான 38 கோடி நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள் மற்றும் பதிவேடுகள் கீழ்க்கண்டவாறு அச்சிட்டு வழங்கப்படுகின்றன :

| வ. எண் | அலகு | துறைகளின் எண்ணிக்கை | அச்சிடப்பட்ட படிவங்கள்/ பதிவேடுகள் வகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | அரசு மைய அச்சகம், சென்னை-79 | 38 | 1,176 |
| 2. | அரசு கிளை அச்சகம், உயர் நீதிமன்ற வளாகம், சென்னை-104 | 5 | 369 |
| 3. | அரசு கிளை அச்சகம், மதுரை | 8 | 298 |
| 4. | அரசு கிளை அச்சகம், சேலம் | 5 | 60 |
| 5. | அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை | 8 | 239 |
| 6. | அரசு கிளை அச்சகம், திருச்சி | 5 | 101 |
| 7. | அரசு கிளை அச்சகம், விருத்தாசலம் | 15 | 432 |
| | மொத்தம் | 84 | 2,675 |



2005 மார்ச் 23]

மேலும் 2004-05 அரசுத் தேர்வு துறைக்கான சுமார் 4 கோடி விடைத்தாட்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் அச்சிட்டு வழங்கப்பட்டன மற்றும் நிலைப்படுத்தப்படாத படிவங்கள்/பதிவேடுகள் அவசரம் மற்றும் முக்கியத் தேவைக்கேற்ப உடனுக்குடன் அச்சிட்டு வழங்கப்படுகின்றன.

2004-05 ஆம் ஆண்டில் சுமார் 30 கோடி ரூபாய் மதிப்புள்ள அச்சுப் பணிகள் செயலாக்கம் செய்யப்பட்டு, அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் அனுப்பப்பட்டு வருகிறது. மாநில கணக்காய்வுத் துறைக்கான அறிக்கைகள், ஓய்வுதாரர்களுக்கான விவரங்களை பராமரிக்கும் அட்டை போன்றவைகளை ரூ.14.55 இலட்சம் அளவில் ஒவ்வொரு ஆண்டும் அச்சிட்டு வழங்கப்படுகிறது. மேலும், அரசு நிறுவனங்களிடமிருந்து ஒவ்வொரு ஆண்டும் ரூ.27 இலட்சம் மதிப்பீட்டில் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் அச்சிட்டு வழங்கப்படுகின்றன.

அரசு மைய அச்சகத்தில் பொது மக்களுக்கு தேவைப்படும் சாதிச் சான்றிதழ்கள் ஒவ்வொரு வருடமும், சுமார் 8 இலட்சம் முதல் 10 இலட்சம் பிரதிகள் அச்சிடப்படுகின்றன.

பொது மக்களின் பயன்பாட்டிற்கென பொது விநியோக திட்டத்திற்கான குடும்ப அட்டை தாட்கள் 3.9 இலட்சம் பிரதிகள், குடும்ப அட்டைக்கான 2005 ஆம் ஆண்டுக்கான உள் தாள்கள் 1.53 கோடி பிரதிகள், குடும்ப அட்டைக்கான 1.78 கோடி விண்ணப்ப படிவம் மற்றும் 1.78 கோடி ஒப்புதல் படிவம் போன்றவை அச்சிடப்பட்டன.

சட்டத் துறையின் புத்தகங்கள், இந்திய அரசின் தமிழாக்க சட்ட புத்தகங்கள், சீருடை பணியாளர் தேர்வுக்கான விடைத் தாட்கள், அழைப்பு கடிதம், தகுதிநீக்க சீட்டு போன்றவை 1.13 கோடி பிரதிகள் அச்சிடப்பட்டன.

உயர் நீதிமன்றத்தின் அன்றாட வழக்குப் பட்டியல், வழக்கு அட்டைகள் போன்றவை வருடத்திற்கு 18 இலட்சம் பிரதிகள் அச்சடிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டன.

மாண்புமிகு அமைச்சர்களுக்கான லெட்டர் பேடுகள், உறைகள் மற்றும் சட்டமன்ற பேரவை உறுப்பினர்களுக்கான லெட்டர் பேடுகள், உறைகள் போன்றவை அரசு மைய அச்சகத்தில் அச்சிடப்படுகின்றன.

மாண்புமிகு தலைமை நீதியரசர் மற்றும் நீதியரசர்களுக்கான லெட்டர் பேடுகள், உறைகள், வாழ்த்துச் செய்திகள் போன்றவை அரசு மைய அச்சகத்தில் அச்சிடப்படுகின்றன.

[2005 மார்ச் 23

போக்குவரத்து துறைக்கான காலாண்டு, அரையாண்டு, ஆண்டு வரி போன்ற 13 வகையான வில்லைகள் (Tax Token) அரசு மைய அச்சகத்தில் அச்சிடப்படுகின்றன. தேர்தல் துறைக்கான சுவரொட்டிகள், கையேடுகள், சின்னங்களின் புத்தகம், வாக்காளர் சேர்க்கைக்கான படிவம் போன்ற 9.56 கோடி பிரதிகள், தேர்வாணையத் துறைக்கு தேவையான லெட்டர் பேடுகள், சின்னம் பொறித்த தலைப்பு தாட்கள், துறைத் தேர்வுக்கான அறிவிக்கைகள், படிவங்கள் மதிப்பெண் சான்றிதழ், தலைமைச் செயலக பொதுத் துறையின் சுதந்திர தின விழா, குடியரசு தின விழா, அமைச்சரவை பதவியேற்பு விழா, விழாவிற்கான பத்திரிகை நிருபர், தொலைக்காட்சி நிருபர், கார் போன்றவற்றிற்கான அனுமதிச்சீட்டு, தொலைபேசி கையேடு, இந்திய ஆட்சி பணி அலுவலர்களின் பணியமைப்பு பட்டியல், இந்திய காவல் பணி அலுவலர்களின் பணியமைப்பு பட்டியல், இந்திய வன பாதுகாப்பு அலுவலர்களின் பணியமைப்பு பட்டியல், குடியுரிமை பணியாளர்களின் பட்டியல், தலைமைச் செயலக அலுவலர் பட்டியல் போன்ற சுமார் 13.94 இலட்சம் பிரதிகள் அச்சிடப்படுகின்றன.

**அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம், சென்னை :**

அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம் சென்னை அண்ணா சாலையில் ஆணையரக வளாகத்தில் இயங்கி வருகிறது. இதன் கிளை விற்பனை நிலையம் ஒன்று உயர் நீதிமன்றக் கிளை அச்சகத்தில் இயங்கி வருகிறது. இவ்விற்பனை நிலையங்கள் மூலம் அரசு வெளியீடுகளான சட்டம் மற்றும் விதி நூல்கள், விதிக் கோவைகள், நடைமுறை நூல்கள், அரசிதழ்கள், செய்தி அறிவிப்பு வெளியீடுகள் மற்றும் பணிப்பதிவேடுகள் போன்றவை விற்பனை செய்யப்படுகின்றன. மேலும் இந்திய அரசின் வெளியீடுகளை விற்பனை செய்யும் முகவர் அமைப்பாகவும் இவ்விற்பனை நிலையங்கள் இயங்கி வருகின்றன. அனுமதி பெற்ற 32 முகவர்கள்மூலமாகவும் அரசு வெளியீடுகள் அனைத்து மாவட்டங்களிலும் விற்பனை செய்யப்படுகின்றன.

2004-05 ஆம் நிதியாண்டில் ரூ.84,31,605/- பிரசுரக் கட்டணமாகவும், ரூ.12,14,126/- அரசிதழ்கள் மற்றும் அரசு வெளியீடுகள் விற்பனை மூலமாகவும், 31-1-2005 வரை மொத்தம் ரூ.96,45,731/- வருவாயாக ஈட்டப்பட்டுள்ளது. இவ்வருவாயானது இந்தத் துறையின்மூலம் அரசுக்கு வரும் நிதி ஆதாரங்களில் ஒரு வகையாகும்.



2005 மார்ச் 23]

**தொழிலாளர் நலன் :**

1962 ஆம் ஆண்டு சென்னை, தண்டையார்பேட்டையில் 300 அரசு அச்சகப் பணியாளர்களுக்கு கட்டித் குடியிருப்புகள் தரப்பட்டுள்ளன. சென்னையில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலனைக் கவனிப்பதற்காக தொழிலாளர் நல அலுவலர், உதவி தொழிலாளர் நல அலுவலர் மற்றும் சுகாதார மேற்பார்வையாளர் ஆகியோர் இத்துறையில் பணிபுரிகின்றனர். அரசு மைய அச்சகத்தில் மருந்தகம் ஒன்றும் இயங்கி வருகின்றது. இதில் பணிபுரியும் மருத்துவ அலுவலர் வாரந்தோறும் சென்னை மாநகரிலுள்ள ஆணையரகம் உள்ளிட்ட அனைத்து அலகுகளுக்கும் சென்று மருத்துவப் பரிசோதனை செய்து அனைத்து தொழிலாளர்கள், பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்குத் தேவையான மருத்துவ சிகிச்சை அளித்து வருகிறார்.

இத்துறையில் பணியாற்றும் ஒவ்வொரு தொழிலாளருக்கும் தேநீர் மற்றும் ரொட்டிப்படி பிரதிமாதம் ரூ.100 வீதம் வழங்கப்படுகிறது. இது தவிர ஈயப்புகை வெளியேறும் பிரிவில் பணிபுரியும் ஒவ்வொரு தொழிலாளருக்கும் பல சத்துள்ள வைட்டமின் மாத்திரைகளும் மற்றும் பால்படியாக நாளொன்றுக்கு ரூ. 2 வீதம் வழங்கப்படுகின்றன. ஆணையரகம், எழுதுபொருள் கிடங்கு, அரசு மைய அச்சகம் மற்றும் அனைத்து அரசு கிளை அச்சகங்களிலும் குளிர் குடிநீர் சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

ஆண் தொழிலாளர்களுக்கு இரண்டாண்டிற்கு ஒருமுறை மூன்று ஜோடி பாலியஸ்டர் சீருடைகள் வழங்கப்பட்டு, அதற்கு தையற்கூலியாக ஜோடிக்கு ரூ. 100 வீதம் மூன்று ஜோடிக்கு ரூ. 300 வழங்கப்படுகிறது. பெண் தொழிலாளர்களுக்கு மூன்று பாலியஸ்டர் புடவைகளும், ரவிக்கைத் துணிகளும் இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை வழங்கப்படுகிறது. ரவிக்கை தைப்பதற்கு தையற்கூலியாக ஒரு ரவிக்கைக்கு ரூ. 20 வீதம் மூன்று ரவிக்கைகளுக்கு ரூ. 60 வழங்கப்படுகிறது. சென்னை அரசு மைய அச்சகம், எழுதுபொருள் கிடங்கு மற்றும் மதுரையில் உள்ள அரசு கிளை அச்சகம் ஆகியவற்றில் தொழிலாளர்களுக்கெனச் சிற்றுண்டிச்சாலைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அரசு மைய அச்சகத்தில் இயங்கிவரும் தமிழ்நாடு எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், சங்க உறுப்பினர்களுக்கு ரூ. 1,50,000/- வரையில் கடன் தொகை வழங்கி வருகிறது.

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையில் பணியாற்றும் அனைத்து பணியாளர்களுக்கும் ஒரு நாட்காட்டியும், ஒரு நாட்குறிப்பேடும் இலவசமாக வழங்கப்படுகின்றன.

இத்துறையில் பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் தொழிற் பழகுநர் பணியிடங்கள் நிரப்பப்படுகின்றன.

தொழில்நுட்பப் பணியாளர் நலன் கருதி தினசரி மாலை 4 மணி முதல் 5 மணி வரை யோகாசனம் செய்ய மைய அச்சகத்தில் இடவசதி செய்யப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டில் ஆயுத பூஜை கொண்டாடுவதற்காக தொழிலாளர்களுக்கு ரூ.1,660/-ம், சுதந்திர தினம் கொண்டாடுவதற்காக ரூ.900/-ம், விளையாட்டு சாதனங்கள் கொள்முதல் செய்ய ரூ.4,440/-ம் ஆக மொத்தம் ரூ.7,000/- அரசு ஆணை எண் 1469, போக்குவரத்து துறை, நாள் 22-8-1986-ன்படி செலவிடப்பட்டது.

**அச்சக மேம்பாட்டுத் திட்டம்:**

தற்போது பழைய லெட்டர் பிரஸ் அச்சு இயந்திரங்களை மேலும் பயன்படுத்த இயலாத நிலையில், மாறிவரும் புதிய விஞ்ஞான மாற்றங்களை கருத்திற்கொண்டு தொலைநோக்குப் பார்வையுடன் அரசு அச்சகங்களைப் படிப்படியாக நவீனமயமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அரசு அச்சகங்கள் நவீனமயமாக்கப்படுவதனால் சில பிரிவுகளில் தேவைக்கு மிகையாகப் பணியாற்றும் பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் அச்சகங்களில் அவ்சியப்படும் பிற பிரிவுகளில் பரவலமர்த்தம் முறையில் பணியமர்த்தப்பட்டு வருகின்றனர். 174 ஆண்டுகளுக்கு முன்னர் தொடங்கப்பெற்ற அரசு அச்சகம் தனது பணியினை மிகச்சிறப்பாகத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

2004-05 ஆம் ஆண்டிற்கான எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரகத்தின் நிர்வாக அமைப்பு மற்றும் பணியாளர்கள் விவரம் அட்டவணைப்படுத்தப்பட்டு பிற்சேர்க்கைகளில் தரப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டுகளில் மதுரை, சேலம் மற்றும் புதுக்கோட்டை ஆகிய கிளை அச்சகங்கள் நவீனமயமாக்கப்பட்டதன் பயனாக, பணியாளர்களின் எண்ணிக்கை கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் 50 விழுக்காட்டிற்குக் குறைந்த போதிலும், இத்துறையின் உற்பத்தி தற்போது இரு மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் அச்சின் தரமும் மேம்பாடு அடைந்துள்ளது.





2003-04-இல் இருவண்ண ஆப்செட் அச்சு இயந்திரம் ரூ.43.00 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்பட்டு, அரசு மைய அச்சகம், சென்னையில் நிறுவப்பட்டுள்ளது.


2004-05 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் ரூ.30.74 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கீழ்க்காணும் இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டன :

1. டிட்டிப்பி சிஸ்டம் மற்றும் அதன் உபகரணங்கள்
2. ஹைட்ராலிக் ட்ராலி
3. ஃபோர்க் லிப்ட்
4. டீசல் ஜெனரேட்டர்
5. ஃபாக்ஸ் இயந்திரம்
6. காகித சோதனை உபகரணங்கள்

அரசு அச்சகங்கள் படிப்படியாக நவீனமயமாக்கப்பட்டதன் தொடர்ச்சியாக அனைத்து அரசுப் பணிகளும் பலரும் பாராட்டும் வகையில் அரசு நிர்ணயம் செய்யும் காலக்கெடுவிற்குள் மிகுந்த தரத்துடன் அச்சிட்டு வழங்கி வருகின்றது. அச்சமுத்த வேலைத்திறனை அதிகப்படுத்தியும், அரசின் முக்கியமான ஆவணங்கள் மற்றும் கமுக்கத்தன்மை வாய்ந்த ஆவணங்களின் இரகசியங்கள் காப்பாற்றப்பட்டு தொடர்ந்து சிறப்பாக, இத்துறை செயல்பட்டு வருகின்றது.

## அட்டவணை - அ

நிருவாக அமைப்பு






## அட்டவணை - ஆ

1-2-2005-ல் பணியாளர்களின் எண்ணிக்கை

| வரிசை எண் | அலகு | ஒப்பளிப்பு செய்யப்பட்ட பணியிடங்கள் (1-4-1984) | 1-4-2005ல் மொத்த பணியாளர்கள் | அலுவலர்கள் | அமைச்சுப் பணியாளர்கள் | இதர பிரிவு பணியாளர்கள் |
|---|---|---|---|---|---|---|
| 1. | ஆணையரகம் (அரசு வெளியீடுகள், விற்பனை நிலையம் உட்பட) | 291 | 199 | 07 | 126 | 66 |
| 2. | அரசு எழுதுபொருள் அலுவலகம், சென்னை-1. | 326 | 159 | 01 | 43 | 115 |
| 3. | அரசு மைய அச்சகம், சென்னை-79. (ஆணைக்கார தோட்டம் அச்சகம் உட்பட) | 4254 | 1571 | 17 | 108 | 1446 |
| 4. | அரசு கிளை அச்சகம், (உயர் நீதிமன்ற வளாகம்) சென்னை-104. | 237 | 173 | 04 | 12 | 157 |
| 5. | அரசு கிளை அச்சகம், மதுரை. | 336 | 173 | 02 | 11 | 160 |
| 6. | அரசு கிளை அச்சகம், சேலம். | 141 | 80 | 02 | 11 | 67 |
| 7. | அரசு கிளை அச்சகம், திருச்சி. | 166 | 99 | 01 | 09 | 89 |
| 8. | அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை. | 256 | 99 | 01 | 11 | 87 |
| 9. | அரசு கிளை அச்சகம், விருத்தாசலம். | 158 | 78 | 01 | 08 | 69 |
| | மொத்தம் .. | 6165 | 2631 | .36 | 339 | 2256 |

# இணைப்பு III

*(448 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 36

## மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006

### 1. முன்னுரை

*1.1* தமிழ்நாட்டில் மதுவிலக்குச் சட்டத்தை தீவிரமாக அமல்படுத்துவதன் மூலம் கள்ளச்சாராயத்தையும், தீர்வை செலுத்தப்படாத மற்றும் போலி மதுபானங்களின் விற்பனையையும் முற்றிலுமாக ஒழிக்கவும் மற்றும் ஆயத்தீர்வையின் வருவாயைப் பெருக்கவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையின்கீழ் அமைந்துள்ள இந்த அரசு பல்வேறு சிறப்பான கொள்கை முடிவுகளை எடுத்துச் செயல்படுத்தி வருகிறது. கள்ளச்சாராயம் மற்றும் போலி மதுபானங்களை அருந்துவதன்மூலம் சமுதாயத்தின் அடிமட்டத்திலுள்ள ஏழை எளிய மக்களின் உடல் நலமும் மற்றும் பொருளாதாரமும் வெகுவாகப் பாதிக்கிறது என்பதை இந்த அரசு நன்கு உணர்ந்துள்ளது. கள்ளச்சாராயம் மற்றும் போலி மதுபானங்களின் சீரழிவுகளிலிருந்து அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்கிற கொள்கையில் இந்த அரசு உறுதியாக உள்ளது. அதே சமயத்தில் மதுபானங்கள்மீது உரிய அளவு ஆயத்தீர்வையையும், வரியையும் விதித்து, அதன் அடிப்படையில் மதுபானங்கள் விற்பனைமூலம் கிடைக்கக்கூடிய வருவாயையும் புறக்கணிக்க இயலாது என்பதையும் இந்த அரசு கருத்தில் கொண்டு செயல்படுகிறது. அரசு பொதுத் துறை நிறுவனமான தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (TASMAC), மாநில திட்ட வளர்ச்சிக்கு உறுதுணையாக அரசுக்கு வருவாய் ஈட்டித்தரும் பல வழிகளை ஆராய்ந்து, வருவாயைப் பெருக்குவதில் முன்னோடி நிறுவனமாக இயங்கி வருகிறது.

*1.2* கள்ளச்சாராயம், தீர்வை செலுத்தப்படாத மற்றும் போலி மதுபானத் தயாரிப்பாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள்மீது கடுமையான நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையின்கீழ் அமைந்துள்ள இந்த அரசு தொடர்ந்து மேற்கொள்ளும். கள்ளச்சாராயம், தீர்வை செலுத்தப்படாத மற்றும்

போலி மதுபானங்களை ஒழிக்கின்ற அதேவேளையில், அத்தொழிலில் ஈடுபட்டுள்ள குடும்பங்களின் மறுவாழ்வுக்கான அனைத்து புனரமைப்பு நடவடிக்கைகளை செய்வதிலும் இந்த அரசு முனைப்பாக உள்ளது. அரசு எடுத்த கடுமையான நடவடிக்கைகள் காரணமாக, மெத்தனால் அல்லது பிற நச்சுப் பொருட்கள் கலந்த மதுபானங்கள் அருந்துவதால் ஏற்படக்கூடிய உயிர் இழப்புகள் முற்றிலும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

## 2. மதுபானச் சில்லறை விற்பனை

2.1 2002–2003ஆம் ஆண்டு சிறப்புரிமைக் கட்டணத்தை முன்னதாக செலுத்தி சில்லறை விற்பனையை மேற்கொண்ட உரிமதாரர்கள், 2003–2004 ஆம் ஆண்டில் சில்லறை விற்பனையை நடத்துவதற்கு புதிய திட்டத்தின்கீழ் அறிவிக்கை செய்த கடைகளில் 45 சதவீத கடைகளுக்கு மேல் விண்ணப்பிக்க முன்வரவில்லை. அரசு வழங்கிய பல்வேறு வாய்ப்புகளையும் பயன்படுத்தாமல் தொடர்ந்து தங்களுக்குள் கூட்டணி அமைத்துக்கொண்டு அரசுக்கு சிறப்புரிமைக் கட்டணம் மூலம் வரவேண்டிய ஆயத்தீர்வை வருவாயை (Excise Revenue) தடுத்து, அரசின் வருவாய்க்கு இழப்பு ஏற்படுத்த எத்தனித்தனர். இந்த முயற்சியை முறியடிக்கும் வகையில், ஏற்கெனவே மொத்த விற்பனையை மேற்கொண்டிருந்த அரசு நிறுவனமான டாஸ்மாக் மூலமே சில்லறை விற்பனையையும் 29–11–2003 முதல் நேரடியாக நடத்திட, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்தார்கள். தொலைநோக்குப் பார்வையோடு எடுக்கப்பட்ட துணிச்சலான இந்த முடிவானது அரசுக்கு அதிக வருவாய் ஈட்டித்தந்து மிகப் பெரிய வெற்றியடைந்துள்ளது .

### டாஸ்மாக் மதுபான சில்லறை விற்பனை மதிப்பு அளவு (Sales Turnover)

2.2. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (TASMAC) 29–11–2003 முதற்கொண்டு மதுபானச் சில்லறை விற்பனையை வெற்றிகரமாக செய்து வருகிறது. சில்லறை விற்பனையை தனியார் நடத்திய காலமான 29–11–2002 முதல் 28–11–2003 வரையில் டாஸ்மாக்கின் மதுபான விற்பனை மதிப்பு ரூபாய் 3,877 கோடியாகும். மதுபானச் சில்லறை விற்பனையை டாஸ்மாக் நிறுவனம் மேற்கொண்ட பிறகு, இதற்கு இணையான ஒரு வருட காலத்தில் அதாவது 29–11–2003 முதல் 28–11–2004 வரையில் மதுபான விற்பனை மதிப்பு ரூபாய் 5,441 கோடியாகும். இவ்வாறு டாஸ்மாக் மதுபானச் சில்லறை விற்பனையை மேற்கொண்ட ஓராண்டு காலத்தில் விற்பனையான மதுபானத்தின்





கூடுதல் மதிப்பு மட்டும் ரூபாய் 1,564 கோடியாகும். இது முந்தைய தனியார் விற்பனையோடு ஒப்பிடும்போது 40.34% வளர்ச்சியாகும். 2004 ஏப்ரல் முதல் 2005 பிப்ரவரி வரையிலான 11 மாத காலத்தில் நடைபெற்ற விற்பனையின் மதிப்பு ரூபாய் 5,340 கோடியாகும். முந்தைய நிதியாண்டில் இதற்கு இணையான காலத்தில் நடைபெற்ற மதுபான விற்பனையின் மதிப்பு ரூபாய் 3,826 கோடி மட்டுமே ஆகும். இவ்வாறு நடப்பு நிதியாண்டில் கடந்த 11 மாதங்களில் மட்டும் நடைபெற்ற விற்பனையின் கூடுதல் மதிப்பு ரூபாய் 1,514 கோடியாகும்.

### டாஸ்மாக்கின் மதுபான விற்பனை அளவு (Sales Volume)


2.3. மதுபானச் சில்லறை விற்பனையை தனியார் நடத்திய 29–11–2002 முதல் 28–11–2003 வரையிலான ஓராண்டு காலத்தில் மதுபான விற்பனையின் அளவு 149.79 இலட்சம் பெட்டிகளாகும். டாஸ்மாக் நிறுவனம் மதுபானச் சில்லறை விற்பனையை மேற்கொண்ட பிறகு இதற்கு இணையான காலத்தில், அதாவது 29–11–2003 முதல் 28–11–2004 வரையில் மதுபானச் சில்லறை விற்பனை 183.16 இலட்சம் பெட்டிகள் வரை உயர்ந்துள்ளது. இவ்வகையில் விற்பனை அளவில் ஏற்பட்ட கூடுதல் மட்டும் 33.37 இலட்சம் பெட்டிகளாகும். இது 22.27 விழுக்காடு வளர்ச்சியாகும். டாஸ்மாக் தொடங்கிய கடந்த 22 ஆண்டுகளில் நடைபெற்ற விற்பனையில் இதுதான் மிக அதிகபட்ச அளவாகும். நடப்பு நிதியாண்டில் 2004 ஏப்ரல் முதல் 2005 பிப்ரவரி வரையில், மதுபான விற்பனை அளவு 176.16 இலட்சம் பெட்டிகளாகும். முந்தைய நிதியாண்டில் இதற்கு இணையான காலத்தில் 143.06 இலட்சம் பெட்டிகள் மட்டுமே விற்பனையானது. இவ்வாறு, நடப்பு நிதியாண்டில் கடந்த 11 மாதங்களில் மட்டும் 33.10 இலட்சம் பெட்டிகள் கூடுதலாக விற்பனையாகியுள்ளது. இந்த மகத்தான சாதனையானது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் துணிச்சலான மற்றும் தூய்மையான நிர்வாகத் திறனுக்குச் சான்றாகும்.

### டாஸ்மாக்கின் மூலமாக அரசின் வருவாய்


2.4. மதுபான விற்பனையின் மூலம் வசூலாகும் ஆயத்தீர்வை (Excise Duty), மொத்த விற்பனையாளரின் விற்பனைக் கட்டணம் (Vend Fee), சிறப்பு உரிமைக் கட்டணம் (Special Privilege Fee) மற்றும் விற்பனை வரி (Sales Tax) ஆகியவற்றின் மூலம் அரசுக்கு வருவாய் கிடைக்கிறது.

2.5. சில்லறை விற்பனையை தனியார் நடத்திய காலமான 29–11–2002 முதல் 28–11–2003 வரையில் மதுபான விற்பனையில்

டாஸ்மாக் விற்பனை அளவு (மதுபானம்) (பெட்டிகள் இலட்சத்தில்)





டாஸ்மாக் விற்பனை அளவு ( ரூபாய்-கோடியில் )






மொத்த வருவாய்
( ரூபாய்-கோடியில் )




ஆயத்தீர்வை மற்றும் விற்பனை வரி ஆகியவற்றின் மூலம் கிடைத்த வருவாய் ரூபாய் 3,825.99 கோடியாகும் [இதில் சில்லறை விற்பனையாளர்கள் முன்னதாகச் செலுத்திய உரிமைத்தொகை (Privilege amount) மற்றும் மது அருந்தும் கூடத்தின் (Bar) உரிமக் கட்டணம் (Licence Fee) மற்றும் உரிமைத் தொகை (Privilege amount) ஆகிய வகையில் வசூலிக்கப்பட்ட ரூபாய் 679.51 கோடியும் அடங்கும்.] இதற்கு இணையான காலத்தில், டாஸ்மாக் நிறுவனம் மதுபானச் சில்லறை விற்பனையை மேற்கொண்ட பிறகு அதாவது 29–11–2003 முதல் 28–11–2004 வரையிலான காலத்தில் கிடைத்த வருவாய் ரூபாய் 4,441.88 கோடியாகும். டாஸ்மாக் நிறுவனம் மதுபானச் சில்லறை விற்பனையை மேற்கொண்ட பிறகு ஓராண்டு காலத்தில் அரசுக்குக் கிடைத்த கூடுதல் வருவாய் மட்டும் ரூபாய் 615.89 கோடியாகும். நடப்பு நிதியாண்டில், அதாவது 2004 ஏப்ரல் முதல் 2005 பிப்ரவரி வரையிலான காலத்தில், முந்தைய நிதியாண்டின் இதற்கு இணையான காலத்தைக் (அதாவது 2003 ஏப்ரல் முதல் பிப்ரவரி 2004 வரை) காட்டிலும், ரூபாய் 1,151.66 கோடி கூடுதல் வருவாய் அரசுக்குக் கிடைத்துள்ளது.

2.6. மதுபான விற்பனை, டாஸ்மாக் நிறுவனத்தின் வணிகம், அரசின் வருவாய் ஆகியவற்றில் ஏற்பட்ட கூடுதல் வருவாய் குறித்த விவரங்கள் விளக்கப்படங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

### 3. மாநில ஆய வில்லைகள்

இம்மாநிலத்தில் போலி மதுபானங்கள் கள்ளத்தனமாகக் கடத்தி வரப்படுவதையும், விற்பதையும் தடுத்து, இதன் வாயிலாக அரசின் ஆயத்தீர்வை வருவாயைப் பாதுகாக்கும் பொருட்டு, இரண்டாம் முறையாகப் பயன்படுத்த முடியாத அதிகப் பாதுகாப்பு அம்சங்கள் கொண்ட பாலியஸ்டரைஸ்டு ஹோலோகிராம் ஆயவில்லைகள் (Polyesterised Hologram Excise labels) மார்ச் 2004 முதற்கொண்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இப்புதிய வகையிலான ஆயவில்லைகள் இயந்திரத்திற்கு இயைபுடையதான அம்சங்கள் மிக்கதாக உள்ளபடியால், அவை இயந்திரத்தின் மூலம் இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்கள் மற்றும் பீர் பாட்டில்களின்மீது ஒட்டப்படுகின்றன.

### 4. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் நிர்வாக அமைப்பு மற்றும் செயல்பாடுகள்

4.1. தலைமைச் செயலகத்தில் அரசுச் செயலாளரின் நிர்வாகத் தலைமையின்கீழ் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை இயங்கி வருகிறது. அவருக்குத் துணையாக ஒரு துணைச் செயலாளர் மற்றும் ஐந்து சார்புச் செயலர்கள் பணிபுரிந்து வருகின்றனர். தலைமைச் செயலகத்தில் அரசின் கொள்கைகளை வகுப்பதிலும் மற்றும் செயல் திட்டங்களைக் கண்காணிப்பதிலும் இத்துறை சிறப்பாகச் செயல்படுகிறது. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின்கீழ் பின்வரும் மூன்று பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன:

1. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரகம்
2. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்
3. மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு

### மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரகம்

4.2. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை ஆணையாளர் இத்துறையின் தலைவர் ஆவார். தலைமையிடத்தில் இவருக்கு உதவியாக இணை ஆணையாளர்கள் இருவர், நிதிக் கட்டுப்பாட்டு அலுவலர் ஒருவர், (நிதித் துறையின் அரசு இணைச் செயலாளர் நிலையில்) உதவி ஆணையாளர்கள் நால்வர் ஆகியோர் பணிபுரிகின்றனர். திடீர்





ஆய்வுகள் மேற்கொள்ள ஒரு உதவி ஆணையாளர் தலைமையில் பறக்கும்படை ஒன்றும் உள்ளது.

4.3. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையாளர். அவர்கள், மதுவிலக்கு குறித்த கொள்கைகளை உருவாக்குவதிலும் அவற்றைச் செயல்படுத்துவதிலும் அரசுக்கு உறுதுணையாக செயல்பட்டு வருகிறார். 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தையும் (தமிழ்நாடு சட்டம் 10/1937) மேற்படி சட்டத்தின்கீழ் இயற்றப்பட்ட தமிழ்நாடு இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான (தயாரிப்பு) விதிகள் 1981, தமிழ்நாடு வடிப்பாலை விதிகள், 1981, தமிழ்நாடு புருவெரி விதிகள், 1983, தமிழ்நாடு இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம் (மொத்த விற்பனை) விதிகள், 1983, தமிழ்நாடு மதுபானம் (உரிமம் மற்றும் அனுமதி) விதிகள் 1981 மற்றும் தமிழ்நாடு மதுபானச் சில்லறை விற்பனை (கடைகள் மற்றும் பார்கள்) விதிகள் 2003 ஆகியவற்றைச் செயல்படுத்துகிறார்.

4.4. வடிசாலைகள் அமைப்பதற்கு மற்றும் சாராவி தயாரிப்பதற்குரிய உரிமைகள் மற்றும் உரிமங்களை அரசின் முன் அனுமதியுடன் வழங்கும் அதிகாரம் ஆணையாளருக்கு வழங்கப்பட்டுள்ளது. அதைப்போலவே, அரசின் முன் அனுமதியுடன், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் மற்றும் பீர் வகைகளைத் தயாரிக்கும் தொழிற்சாலைகள் அமைப்பதற்கான உரிமைகள் மற்றும் உரிமங்களையும் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையாளர் வழங்குவதற்கு சட்டத்தில் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில் அமைக்கப்பட்டுள்ள தொழிற்சாலைகளின் உரிமங்களை ஆண்டுதோறும் புதுப்பிக்கும் அதிகாரமும் அவருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

### மாவட்ட ஆயத்தீர்வை நிர்வாக அமைப்பு

4.5. மாவட்ட அளவிலான ஆயத்தீர்வை நிர்வாகத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் கண்காணிக்கிறார். மதுவிலக்குச் சட்டம் மற்றும் விதிகளின்கீழ் வழங்கப்பட்டுள்ள பல்வேறு சட்டவழியான அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் அவரிடம் உள்ளன. சென்னை மற்றும் கோயம்புத்தூர் தவிர மற்ற மாவட்டங்கள் அனைத்திலும் துணை ஆட்சியர் நிலையில் ஒரு ஆயத்தீர்வை உதவி ஆணையாளர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உதவியாகப் பணியாற்றி வருகின்றார். சென்னை மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் ஆயத்தீர்வைத் துணை ஆணையாளர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உதவியாகப் பணியாற்றி வருகின்றனர். துணை

ஆட்சியர் நிலையில், வடிசாலை அலுவலர்கள் மற்றும் கலால் மேற்பார்வை அலுவலர்கள் முறையே வடிசாலைகள் மற்றும் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் உற்பத்தித் தொழிற்சாலைகள் ஆகியவற்றில் அலுவலர்களாக நியமிக்கப்படுகிறார்கள். 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் மற்றும் 1955 ஆம் ஆண்டு மருந்து மற்றும் ஒப்பனைப் பொருட்கள் தயாரிப்புச் சட்டம், அவற்றின்கீழ் உருவாக்கப்பட்ட விதிகளின்கீழ், உரிமங்கள் வழங்கப்பட்டுள்ள இரசாயன தொழிற்சாலைகள் மற்றும் பிணைமுறை கிடங்குகள் (Bonded manufactories) ஆகியவற்றில் சாராவி முறையாகப் பயன்படுத்தப்படுவதைக் கண்காணித்தல் மற்றும் ஆயத்தீர்வை விதிக்கப்பட வேண்டிய பொருட்களுக்கு ஆயத்தீர்வை விதித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்வதற்காகக் கலால் மேற்பார்வை அலுவலர்கள் மற்றும் பிணைமுறி அலுவலர்களாக (Bonded Manufactory Officers) வட்டாட்சியர்கள் மற்றும் துணை வட்டாட்சியர்கள் நிலையில் உள்ள வருவாய்த் துறை அலுவலர்கள் பணிபுரிகின்றனர்.

4.6. துணை ஆட்சியர்கள் பதவி நிலையில், வடிசாலைகளில் 13 வடிசாலை அலுவலர்களும், இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம் மற்றும் பீர் உற்பத்தித் தொழிற்சாலைகளில் 8 ஆயத்தீர்வை மேற்பார்வை அலுவலர்களும், டி.எல். உரிம வளாகங்களில் (இயல்பு மாற்றப்பட்ட சாராவியைப் பயன்படுத்தும் இரசாயனத் தொழிற்சாலைகள்) வட்டாட்சியர்கள் பதவி நிலையில் 5 கலால் மேற்பார்வை அலுவலர்களும், துணை வட்டாட்சியர் பதவி நிலையில் 4 கலால் மேற்பார்வை அலுவலர்களும், தெளிந்த சாராவியைப் பயன்படுத்தும் இரசாயனத் தொழிற்சாலை ஒன்றில் வட்டாட்சியர் பதவி நிலையில் ஒரு கலால் மேற்பார்வை அலுவலரும் பிணைமுறித் தயாரிப்பு கிடங்குகளில் வட்டாட்சியர் நிலையில் 3 பிணைமுறி அலுவலர்களும் உள்ளனர்.

### சர்க்கரை ஆலைகள் மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு

4.7. தமிழ்நாட்டில் 38 சர்க்கரை ஆலைகள் உள்ளன (19 தனியார் ஆலைகள், 16 கூட்டுறவுத் துறை ஆலைகள் மற்றும் 3 பொதுத் துறை ஆலைகள்). சர்க்கரையைத் தயாரிக்கும்பொழுது, கருப்பஞ்சாற்றுக் கசண்டு துணைப் பொருளாகக் கிடைக்கின்றது. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையாளர் கருப்பஞ்சாற்றுக் கசண்டு கட்டுப்பாடு அலுவலராகவும் செயல்படுகிறார்.



4.8. நொதித்தல் மற்றும் வடித்தல் என்ற முறை வழியாக, கருப்பஞ்சாற்றுக் கசண்டிலிருந்து சாராவி தயாரிக்கப்படுகிறது. கருப்பஞ்சாற்றுக் கசண்டின் மீதான கட்டுப்பாடு நீக்கப்பட்டதனால், சர்க்கரை ஆலைகள், கருப்பஞ்சாற்றுக் கசண்டினைப் பயன்படுத்த உரிமம் பெற்றுள்ளவர்களுக்கு உரிமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அளவிற்கு கருப்பஞ்சாற்றுக் கசண்டினை விற்பனை செய்யலாம். அக்டோபர் 2003 முதல் செப்டம்பர் 2004 வரையிலான கருப்பஞ்சாற்றுக் கசண்டு ஆண்டில் மொத்தம் 4.68 இலட்சம் மெட்ரிக் டன் கருப்பஞ்சாற்றுக் கசண்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 2003–2004 மற்றும் 2004-2005 ஆம் ஆண்டுகளில் மாநிலத்தில் நிலவிய வறட்சி நிலைமையின் காரணமாக தமிழ்நாட்டில் கரும்பு உற்பத்தி வெகுவாகப் பாதிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து சர்க்கரை ஆலைகளில் சர்க்கரை உற்பத்தியும், கருப்பஞ்சாற்றுக் கசண்டு உற்பத்தியும் பாதிக்கப்பட்டது. உள்ளூர் தொழிற்சாலைகளின் நலன் கருதி கருப்பஞ்சாற்றுக் கசண்டினை ஏற்றுமதி செய்வதை அரசு அனுமதிக்கவில்லை. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உரிய நேரத்தில் கவனமாக எடுத்த சரியான முடிவின் காரணமாக கருப்பஞ்சாற்றுக் கசண்டின் கையிருப்பு நிலைமை திருப்திகரமாக அமைந்துள்ளது.

### வடிப்பாலை மற்றும் சாராவி

4.9. தமிழ்நாட்டில், 12 தனியார் வடிப்பாலைகளும், 2 கூட்டுறவு வடிப்பாலைகளும் கருப்பஞ்சாற்றுக் கசண்டிலிருந்து சாராவியை உற்பத்தி செய்கின்றன.

4.10. இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகள், வேதியியல் பொருள்கள் மற்றும் வார்னிஷ் தயாரிப்பதற்கு சாராவி மூலப் பொருளாகப் பயன்படுகிறது. கல்விக்கூடங்கள், ஆய்வுக்கூடங்கள் மற்றும் ஆராய்ச்சிக்கூடங்கள் ஆகியவற்றிலும் சாராவி பயன்படுத்தப்படுகிறது.

4.11. மத்திய அரசு, 1993 ஆம் ஆண்டில் ஈதைல் ஆல்கஹால் (விலைக்கட்டுப்பாடு) ஆணையை இரத்து செய்தபின் ஆல்கஹால் (சாராவி) மீது தற்போது விலைக்கட்டுப்பாடு ஏதும் கிடையாது. இதனைத் தொடர்ந்து, இம்மாநிலத்தில் சாராவி நடமாட்டத்திற்கும், உரிமதாரர்கள் வைத்திருப்பதற்கும், பயன்படுத்துவதற்கும் விரிவான வழிகாட்டு நெறிமுறைகளை இம்மாநில அரசு 1993 ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளது. சாராவியை விற்றல், வைத்திருத்தல், பயன்படுத்துதல்,

இறக்குமதி செய்தல், ஏற்றுமதி செய்தல் மற்றும் எடுத்துச்செல்லுதல் போன்ற பல்வேறு நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவதை, 2000 ஆம் ஆண்டின் தமிழ்நாடு தெளிந்த சாராவி விதிகள், 1959 ஆம் ஆண்டின் தமிழ்நாடு இயல்பு மாற்றப்பட்ட சாராவி மெத்தில் ஆல்கஹால் மற்றும் வார்னிஷ் (பிரெஞ்ச் பாலிஷ்) விதிகள் ஆகியவற்றினால் முறைப்படுத்தப்படுகின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளாக இம்மாநிலத்தில் ஏற்பட்ட வறட்சியின் காரணமாக கருப்பஞ்சாற்றுக் கசண்டு உற்பத்தியில் கணிசமாக வீழ்ச்சி ஏற்பட்டது. அதன் தொடர்ச்சியாக சாராவி உற்பத்தியிலும் பற்றாக்குறை ஏற்பட்டது. இப்பிரச்சினையைச் சமாளிக்க வேதியியல் தொழிற்சாலைகள் மற்ற நாடுகளிலிருந்து இயல்பு மாற்றப்பட்ட சாராவியினை இறக்குமதி செய்ய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

## இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம் மற்றும் பீர் உற்பத்தித் தொழிற்சாலைகள்

4.12. இம்மாநிலத்தில் ஆறு இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான உற்பத்தித் தொழிற்சாலைகளும், மூன்று பீர் தயாரிக்கும் தொழிற்சாலைகளும் இயங்கி வருகின்றன. அவை தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கு இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்கள் மற்றும் பீர் வகைகளை விநியோகம் செய்து வருகின்றன.

## எத்தனால்

4.13. மத்திய அரசு எத்தனால் கலந்த பெட்ரோலை அறிமுகப்படுத்த எடுத்த முடிவினைத் தொடர்ந்து, ஐந்து வடிப்பாலைகளுக்கு எத்தனால் (நீர்த்தன்மை நீக்கப்பட்ட சாராவி) உற்பத்தி செய்ய மாநில அரசு அனுமதி வழங்கியுள்ளது. எண்ணெய் நிறுவனங்களுக்கு ஆறு இடங்களில் உரிமங்கள் வழங்கப்பட்டு எண்ணெய் நிறுவனங்கள் 91.70 இலட்சம் லிட்டர் எத்தனால் எடுத்து பயன்படுத்தியுள்ளன.

## சர்க்கரைச் சோளம் மற்றும் சர்க்கரைக் கிழங்கிலிருந்து சாராவி

4.14. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் சர்க்கரைச் சோளம் மற்றும் சர்க்கரைக் கிழங்கினை சாராவி தயாரிப்பதற்கு மாற்றுப் பயிர்களாக ஊக்குவிக்க அறிவித்ததைத் தொடர்ந்து, சோதனை முறையில் சர்க்கரைச் சோளத்திலிருந்து சாராவி தயாரிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.



## 21 வயதுக்குக் குறைவாக உள்ளவர்களுக்கு மது விற்பனை செய்வதற்குத் தடை

4.15. எதிர்கால சமுதாயத்தை உருவாக்கும் இன்றைய இளைய தலைமுறையை மது அருந்துவதால் ஏற்படும் தீமைகளிலிருந்து பாதுகாக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன், 21 வயதிற்குக்கீழ் உள்ளவர்களுக்கு மதுவினை விற்பனை செய்வதற்குத் தடை விதித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இந்த ஆணை தீவிரமாக தமிழகம் முழுவதும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## மதுவிலக்கு குற்றவாளிகளுக்கு மறுவாழ்வு

4.16. கள்ளச்சாராயம் சம்பந்தப்பட்ட தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற மதுவிலக்கு குற்றவாளிகளுக்கு நிலையான மறுவாழ்வு அளிப்பதன் மூலம் கள்ளச்சாராய உற்பத்தி மற்றும் விற்பனையைத் தடுக்க முடியும் என்பதில் இந்த அரசு உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளது. அதற்கென 2003–2004 ஆம் ஆண்டில் ரூபாய் 1.78 கோடி வழங்கியது. மேலும் 10–08–2004 அன்று நடந்த மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகள் கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2004–2005 ஆண்டுக்காக ரூ.2.50 கோடி வழங்க ஆணை பிறப்பித்தார்கள்.

## மாநிலம் தழுவிய விழிப்புணர்வுப் பணி

4.17. கள்ளச்சாராயம் மற்றும் மெத்தனால் அருந்துவதால் ஏற்படும் அபாயங்களை மக்களுக்கு விளக்கும் வகையில் மாநிலம் தழுவிய விழிப்புணர்வுப் பணி 2002–2003 ஆம் ஆண்டில் அரசால் மேற்கொள்ளப்பட்டது. பல தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் இந்தப் பணியில் துடிப்புடன் தங்களை ஈடுபடுத்திக் கொண்டன. இத்தகைய விழிப்புணர்வுப் பணி 2004–2005 ஆம் ஆண்டிலும் தொடரப்பட்டது. அரசு ஆணை நிலை எண் 324, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் (7) துறை, 10–9–2004 நாளிட்ட ஆணையின்படி ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூபாய் ஒரு இலட்சம் வீதம் ரூபாய் 30 இலட்சம் வழங்க அரசு அனுமதித்தது. இந்த நிதியானது கள்ளச்சாராய விற்பனையினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களிலுள்ள இடங்களில் நடைப்பயணம், விழாக்கள், தெரு நாடகங்கள், கருத்தரங்குகள் நடத்த

[2005 மார்ச் 23

உபயோகப்படுத்தப்பட்டன. பத்திரிகை மற்றும் தொலைக்காட்சி சாதனங்கள் இந்த விழிப்புணர்வு பணிக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

**ஆயத்தீர்வைத் துறையில் கணினிமயம்**

4.18. சீரிய நிர்வாகத்திற்கு சிறந்த தகவல் தொடர்பு முறை மற்றும் தவறில்லாத அடிப்படை விவரக் குறிப்பு அவசியமானதாகும். இக்குறிக்கோளை அடைவதற்கு மாநில மற்றும் மாவட்ட அளவில் உள்ள மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை அலுவலகங்களைக் கணினிமயமாக்குதல் இன்றியமையாததாகும்.

4.19. ரூபாய் 13.80 இலட்சம் செலவில் தலைமைச் செயலகத்தில் உள்ள மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்துடன் (TASMAC) மின்னணு முறையில் ஏற்கெனவே இணைக்கப்பட்டுள்ளது.

4.20. ரூபாய் 5 இலட்சம் செலவில் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரின் அலுவலகத்தை தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்துடனும் மற்றும் தலைமைச் செயலகத்தில் உள்ள மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையுடனும் ஒன்றோடொன்று கணினிமூலம் உடனுக்குடன் தொடர்புகொண்டிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

4.21. சில தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களை மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை ஆணையர் அலுவலகத்துடன் கணினிமூலம் தொடர்புகொள்ள பகுதி இரண்டு (Part II scheme) திட்டத்தின்கீழ் ரூ.10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

4.22. தலைமைச் செயலகத்தில் உள்ள மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் தடுப்புக் காவல் மற்றும் ஆயத்தீர்வைப் பிரிவுகள் கணினிமயமாக்கப்பட்டு உள்ளன.

**5. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (TASMAC)**

5.1. அரசுக்கு முழுவதும் சொந்தமான தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (டாஸ்மாக்), 23-5-1983 அன்று 1956 ஆம் ஆண்டைய கம்பெனிகள் சட்டத்தின்கீழ் நிறுவப்பட்ட நிறுவனமாகும். இந்த நிறுவனம், இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்களை இம்மாநிலம் முழுமைக்கும் மொத்தமாகவும் மற்றும் சில்லறையாகவும் விற்பனை செய்வதற்காக



2005 மார்ச் 23]

முறையே 1937 ஆம் ஆண்டைய தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் பிரிவுகள் 17-C (1-A) (a) மற்றும் 17-C (1-B)- ன்படி தனித்த சிறப்புரிமையைப் பெற்றுள்ளது. அரசுக்கு அதிக வருவாய் ஈட்டல் என்பது தொலைநோக்கு விவர அறிக்கை (Vision Statement) ஆகவும் மற்றும் தடையற்ற மதுபான வழங்கல், மதுபான கையிருப்பு நோக்குதல், சீரான நிதி ஓட்டத்தை நிர்வகிப்பதற்காக சிறந்த தொழில் நுட்பம் மற்றும் மேலாண்மை யுக்திகளைக் கையாண்டு சிறப்பான நிர்வாகத்தை ஏற்படுத்துதல் ஆகியன குறிக்கோள் விவர அறிக்கை (Mission Statement) ஆகவும், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தினை செயல்படுத்தும் உந்து சக்திகளாகத் திகழ்கின்றன.

**நிதி கட்டமைப்பு**

5.2. டாஸ்மாக் நிறுவனம் ரூபாய் 15 கோடி அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனத்தைக் கொண்டுள்ளது. இந்த பங்கு மூலதனமான ரூபாய் 15 கோடியையும் அரசே வழங்கியுள்ளது.

**தமிழ்நாடு மாநில வாணிபக் கழக தலைமையகம்**

5.3. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இத்தலைமையகத்தில், தலைவர், மேலாண்மை இயக்குநர் ஆகியோர்க்கு உதவியாக, மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் ஒருவரும், கூட்டுறவு இணைப் பதிவாளர் நிலையில் ஒருவரும், ஆக இரண்டு பொது மேலாளர்களும், பொது மேலாளர் (நிதி) – நிறுவனச் செயலரும் மற்றும் இதர சார்புப் பணியாளர்களும் பணிபுரிகின்றனர்.

**மண்டல அலுவலகங்கள், மாவட்ட மேலாளர் அலுவலகங்கள் மற்றும் கிடங்குகள்**

5.4. மாவட்ட வருவாய் அலுவலர்கள் நிலையில் முதுநிலை மண்டல மேலாளர்களின் தலைமையின்கீழ் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் ஐந்து மண்டல அலுவலகங்கள் உள்ளன. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கு மாநிலம் முழுவதும் உள்ள பணிகளை கண்காணிக்க 33 மாவட்ட மேலாளர் அலுவலகங்கள் உள்ளன. 41 மதுபான விற்பனைக் கிடங்குகள் உள்ளன. இக்கிடங்குகள் வட்டாட்சியர் தரத்திலுள்ள மேலாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ளன.

[2005 மார்ச் 23

### மதுபான சில்லறை விற்பனைக் கடைகள்

5.5. இம்மாநிலம் முழுவதும் 6,870 மதுபான சில்லறை விற்பனைக் கடைகள் உள்ளன. இவற்றுள் 3,159 மதுபானக் கடைகள் நகரப் பகுதிகளிலும், 3,711 மதுபானக் கடைகள் ஊரகப் பகுதிகளிலும் அமைக்கப்பட்டுள்ளன. இந்தக் கடைகளில் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட 7,332 கடை மேற்பார்வையாளர்களும் 19,171 விற்பனையாளர்களும் பணியாற்றி வருகின்றனர்.

### மது அருந்தும் கூடங்கள்

5.6. 4,016 மதுபானக் கடைகளில், மது அருந்தும் கூடங்கள் உள்ளன. இந்த மது அருந்தும் கூடங்களில் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட 1,801 மேற்பார்வையாளர்களும், 5,296 மது பரிமாறுபவர்களும் பணியாற்றி வருகின்றனர்.

### வேலைவாய்ப்புகள்

5.7. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், மதுபான சில்லறை விற்பனை கடைகளிலும், மது அருந்தும் கூடங்களிலும் மற்றும் மாவட்ட மேலாளர் அலுவலகங்களிலும் 33,600 பணியாளர்களை அமர்த்தியதன் மூலம் அவர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கியுள்ளது.

### சில்லறை விற்பனை பணியாளர்களுக்கான நலத் திட்டங்கள்

5.8. ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட சில்லறை விற்பனைப் பணியாளர்களுக்கு தொழிலாளர் பொது சேம நிதித் திட்டம், ஊக்கத் தொகை மற்றும் போனஸ் ஆகிய நலத் திட்டங்கள் செயலாக்கப்படுகின்றன.

## 6. போதை மருந்துகள் புலனாய்வுப் பிரிவு

இம்மாநிலத்தில், மாநில அரசின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள மாவட்ட காவல் துறை, இரயில்வே காவல் துறை, மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறையின் போதைப்பொருள் புலனாய்வுப் பிரிவு ஆகியவையும், மத்திய அரசின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவு, சுங்கத் துறை, வருவாய் உளவுத் தகவல் சேகரிப்பு இயக்ககம் ஆகியவையும் போதைப் பொருள் தடுப்புச் சட்டங்களை செயல்படுத்தி வருகின்றன. 2004 ஆம் ஆண்டில் போதைப்பொருள் நுண்ணறிவுப் பிரிவு 1,285 வழக்குகளில் ரூபாய் 1.91 கோடி மதிப்புள்ள 3821.900 கிலோ



2005 மார்ச் 23]

எடையுள்ள உலர்ந்த கஞ்சாவைக் கைப்பற்றியது. மற்றும் 41 வழக்குகளில் ரூபாய் 34.38 கோடி மதிப்புள்ள 1,37,510 கிலோ எடையுள்ள கஞ்சாச் செடிகள் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டன. மேலும் 36 வழக்குகளில், 40.736 கிலோ எடையுள்ள ரூபாய் 40.74 கோடி மதிப்புள்ள ஹெராயின் பறிமுதல் செய்யப்பட்டது.

## 7. காணொலி திருட்டு (Video Piracy)

காணொலி திருட்டானது (Video Piracy) பொது ஒழுங்கினை பேணி வருவதற்கு ஊறுவிளைவிக்கும் செயலாக உள்ளது. இக்காணொலி திருட்டானது திரைப்படத் தொழிலில் ஈடுபட்டுள்ள தயாரிப்பாளர்களுக்கும், விநியோகஸ்தர்களுக்கும், திரை அரங்கு உரிமையாளர்களுக்கும் வருவாய் இழப்பினை ஏற்படுத்தி திரைப்படத் தொழில் துறையானது கடுமையான நெருக்கடியை எதிர் கொண்டிருந்தது. இந்த அச்சுறுத்தலை, வேரோடு அழிக்க வேண்டும் என்றும், திரைப்படத் தொழில் துறையை மீண்டும் புத்துணர்வு பாதையில் செலுத்தவேண்டும் என்றும் திரைப்படத் தொழில் துறையின் வெவ்வேறு சங்கங்களின் பிரதிநிதிகள் அரசுக்கு பல்வேறு முறையீடுகளை செய்தனர். இதனை கருத்தில்கொண்ட தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலி திருட்டுக்களைத் தடுக்கும் பொருட்டு அத்தொழிலில் ஈடுபட்டுள்ளோரை தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் காவலில் வைப்பதற்கு தொடர்புள்ள அதிகார அமைப்புகளுக்கு இயலும் வகையில் 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்து சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 14/1982) திருத்த ஆணை பிறப்பித்தார்கள். அதன்படி, 2004 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் ஒன்றாம் தேதி முதல் இச்சட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது.

## 8. மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு

8.1. கள்ளச்சாராயம் காய்ச்சுதல், கடத்துதல் மற்றும் விற்பனை செய்தலை அடியோடு ஒழிப்பதற்காகவும், போலி மற்றும் ஆயத்தீர்வை செலுத்தப்படாத இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்களைப் பிற மாநிலங்களிலிருந்து கடத்தி வந்து விற்பனை செய்வதைத் தடுப்பதற்காகவும் உறுதியான கோட்பாட்டுடன் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு தீவிரமாக செயல்பட்டு வருகிறது.

8.2. மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு, கூடுதல் காவல் இயக்குநர் தலைமையின்கீழ் செயல்பட்டு வருகிறது. அமலாக்கப் பிரிவு கூடுதல் காவல் இயக்குநருக்கு உதவியாக காவல் கண்காணிப்பாளர், மத்திய புலனாய்வுப் பிரிவு, சென்னை, காவல் கண்காணிப்பாளர்கள், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு, சென்னை, சேலம், மற்றும் மதுரை ஆகிய இடங்களில் நான்கு காவல் கண்காணிப்பாளர்கள் செயல்பட்டு வருகின்றனர். மதுவிலக்கு மத்திய புலனாய்வுப் பிரிவு காவல் கண்காணிப்பாளரின் தலைமையில் செயல்பட்டு வரும் புலனாய்வுப் பிரிவில் 2 துணை காவல் கண்காணிப்பாளர்களும், 6 காவல் ஆய்வாளர்களும், 8 உதவி ஆய்வாளர்களும் மற்றும் 1 தலைமைக் காவலரும் பணிபுரிந்து வருகின்றனர். இப்பிரிவு நுண்ணறிவுப் (Intelligence) பணியையே தலையாயப் பணியாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

8.3. தமிழ்நாட்டில் மொத்தம் 94 மதுவிலக்கு அமலாக்கப் பிரிவுகள் ஆய்வாளர்களின்கீழ் இயங்கி வருகின்றன. மதுவிலக்கு அமலாக்க முழுப் பொறுப்பையும் ஏற்றுள்ள மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் காவல் ஆணையர்கள் ஆகியோரது நேரடி மேற்பார்வையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் / நகரத்திலுமாக மொத்தம் 38 மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர்களும் 38 மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளர்களும் பணியாற்றி வருகின்றனர். 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தை அமல்படுத்துவதற்கு ஏதுவாக மதுவிலக்கு அமலாக்கப் பிரிவுகள் காவல் நிலையங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

### மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு எடுத்துள்ள நடவடிக்கைகள்

8.4. விஷச் சாராயத்தினால் ஏற்படும் விபரீதங்களுக்கு மிக முக்கியக் காரணம் மெத்தனால் என்று அறியப்பட்டுள்ளதால் மெத்தனால் எளிதில் கிடைப்பதைத் தடுக்கும் வகையில் வழிகளும், முறைகளும் வகுக்கப்பட்டுள்ளன. மெத்தனாலை, 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் கொண்டு வந்ததன் மூலமாகவும், 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயல்பு மாற்றப்பட்ட சாராவி, மெத்தில் ஆல்கஹால் மற்றும் வார்னிஷ் (பிரெஞ்ச் பாலிஷ்) விதிகளுக்கு உரிய திருத்தம் கொண்டு வந்ததன் மூலமாகவும், மெத்தனாலைத் தவறாகப் பயன்படுத்துவதைத் தடுப்பதில் உறுதியான நிலையை



அரசு எடுத்துள்ளது. கள்ளச்சாராயம் மற்றும் மெத்தனால் அருந்துவதால் ஏற்படும் அபாயங்களை மக்களுக்கு விளக்கும் வகையில் மாநிலம் தழுவிய விழிப்புணர்வு நடவடிக்கைகள் 2004–2005 ஆம் வருடத்திலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன.

8.5. 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் பறிமுதல் செய்யப்படும் வாகனங்களை ஏலம் மூலம் விற்பனை செய்வதற்காக குழுக்கள் (Auction Committees) அமைக்க, அரசு ஆணை நிலை எண் 315, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (5) துறை, நாள் 25–8–2004–ல் ஆணையிடப்பட்டது. இதுவரையிலும் 724 வாகனங்கள் ஏலம் விடப்பட்டு அரசுக்கு ரூ.1.36 கோடி வருவாயாக ஈட்டப்பட்டுள்ளது.

8.6. கர்நாடகம், பாண்டிச்சேரி மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களிலிருந்து போலி மற்றும் தீர்வை செலுத்தப்படாத இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம், கள்ளச் சாராயம், தெளிந்த சாராவி ஆகியவை தமிழ்நாட்டுக்குக் கடத்தப்படுவதைத் தடுக்கும் வகையில் தற்போது நாகப்பட்டினம், கடலூர், விழுப்புரம், தர்மபுரி, சேலம், நீலகிரி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் 21 சோதனைச் சாவடிகள் இயங்கி வருகின்றன. 10–8–2004 அன்று நடந்த மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகளின் மாநாட்டில், மாவட்டத்திற்கு ஒன்று என்ற வீதத்தில் நாகப்பட்டினம், கடலூர், விழுப்புரம், கிருஷ்ணகிரி, திருவள்ளூர் மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் 6 நடமாடும் சோதனைச் சாவடிகளை காவல் ஆய்வாளர்கள் தலைமையின்கீழ் அமைப்பதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இசைவு தெரிவித்ததன்படி அரசு ஆணை நிலை எண் 332, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, நாள் 27–9–2004–ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

### செயல்பாடுகள் மற்றும் சாதனைகள்

8.7. போலியான, தீர்வை செலுத்தப்படாத இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்கள் மற்றும் கள்ளச் சாராயம் வடித்தல், கடத்துதல், வைத்திருத்தல் மற்றும் விற்பனை செய்தல் ஆகியவற்றை அடியோடு ஒழிக்க வேண்டுமென்ற அரசின் தலையாய கொள்கையை நிறைவேற்றுவதற்கு மாவட்டக் காவல் துறை, மதுவிலக்கு அமலாக்கப் பிரிவினர் மற்றும் மதுவிலக்கு மத்திய புலனாய்வுப் பிரிவினர் எல்லா வகையான முயற்சிகளையும் எடுத்து வருகின்றனர்.

[2005 மார்ச் 23

**2004-2005 ஆம் ஆண்டில் (ஏப்ரல் 2004 முதல் பிப்ரவரி 2005 வரை) அடைந்த சாதனைகள்**

8.8.
- 561 முக்கிய மதுவிலக்குக் குற்றவாளிகள் தமிழ்நாடு தடுப்புக் காவல் சட்டம் 14/1982-ன்கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர்.
- 77.95 இலட்சம் லிட்டர் கள்ளச் சாராயம் கைப்பற்றப்பட்டது.
- கர்நாடகா மற்றும் பிற மாநிலங்களிலிருந்து கடத்தி வரப்பட்ட 3.26 இலட்சம் சாராயப் பாக்கெட்டுகள் கைப்பற்றப்பட்டன.
- 2.98 இலட்சம் லிட்டர் தெளிந்த சாராவி கைப்பற்றப்பட்டது.
- 4,379 மோட்டார் வாகனங்கள், 321 நான்கு சக்கர வாகனங்கள் உட்பட கைப்பற்றப்பட்டன.
- 58.84 இலட்சம் லிட்டர் சாராய ஊறல் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டது.
- 5,338 கள்ளச் சாராயம் வடித்தல் குற்ற வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டன.
- 1.52 இலட்சம் கள்ளச் சாராய வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு 1.43 இலட்சம் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர்.
- கர்நாடகம் மற்றும் பாண்டிச்சேரி வழியாக கடத்தி வரப்பட்ட போலி / தீர்வை செலுத்தப்படாத 45,566 லிட்டர் இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம் கைப்பற்றப்பட்டது.
- இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம் கடத்தல் குற்றத்தில் 1,874 குற்ற வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டன.
- 3.05 இலட்சம் லிட்டர் அளவுள்ள கள் கைப்பற்றப்பட்டது.
- 1.14 இலட்சம் லிட்டர் மதுக்கஷாயம் கைப்பற்றப்பட்டது.
- கள்ளச் சாராய வழக்குகளில் இணக்கக் கட்டணம் வசூலித்த வகையிலும் நீதிமன்றங்களால் விதிக்கப்பட்ட அபராதத் தொகை மூலமும் அரசுக்கு ரூபாய் 2.64 கோடி வருவாயாகக் கிடைக்கப் பெற்றது.

8.9. 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் திருத்தப்பட்ட பிரிவுகள் 4 (1-A) (விஷச் சாராயம்), 4(1) (aa) மற்றும்



2005 மார்ச் 23]

4(1) (aaa) (கள்ளச் சாராயம் அதிக அளவில் வைத்திருத்தல்)-ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, 42,957 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.


8.10. அனைத்து கரும்புள்ளி கிராமங்களிலும் மதுவிலக்கு விழிப்புணர்வு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் அனைத்து காவல் நிலைய மற்றும் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவுகளிலும் கரும்புள்ளி கிராமங்கள் குறித்த பதிவேடுகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் கள்ளச் சாராய குற்றவாளிகளின் செயல்பாடுகளை விழிப்புடன் கண்காணிப்பதுடன் கள்ளச் சாராயமற்ற கிராமங்கள் உருவாகவும், அமலாக்கப் பிரிவு முனைப்புடன் செயலாற்றி வருகிறது.

**9. நிறைவுரை**

திறமைமிக்க, தொலைநோக்குப் பார்வை கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஒப்பற்ற தலைமையின்கீழ் செயல்படும் இந்த அரசு தமிழ்நாட்டில் கள்ளச் சாராயத்தை அறவே ஒழிக்கவும், கள்ளச் சாராயம் மற்றும் போலி மதுபானங்கள் அருந்துவதிலிருந்து, ஏழை, எளிய மக்களைப் பாதுகாப்பதிலும், கள்ளச் சாராயத் தொழிலில் ஈடுபட்டு மனம் திருந்தி வாழ விரும்புகின்றவர்களுக்கு, நல வாழ்வு உதவி வழங்குவதிலும், மிகுந்த அக்கறை கொண்டு செயல்படுகிறது. கள்ளச் சாராயம் மற்றும் போலி மதுபானங்களை அருந்துவதால் ஏற்படும் தீமைகளைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு மேற்கொள்ளும். தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காகப் பயன்படும் வகையில் பல்வேறு வளர்ச்சிப் பணிகளுக்காக ஆயத்தீர்வை வருவாயைப் பெருக்குவதற்கும் இந்த அரசு அயராது தொடர்ந்து பாடுபடும்.

## இணைப்பு-1

### மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் அமைப்பு வரைபடம்





- ஆ.ம.ஆ — ஆணையர், மதுவிலக்கு–ஆயத்தீர்வை
- த.மா.வா.க — தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்
- ம.அ.பி — மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு





## இணைப்பு-2


### மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரின் அலுவலக அமைப்பு வரைபடம்




- இ.ஆ. — இணை ஆணையர்
- நி.க.அ. — நிதிக் கட்டுப்பாட்டு அலுவலர்
- து.ஆ. — துணை ஆணையர்
- உ.ஆ. — உதவி ஆணையர்
- இ.த.அ.ம. — இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம்
- ப.ப. — பறக்கும் படை
- உ.க.அ. — உதவிக் கணக்கு அலுவலர்
- ஆ.மே. — ஆய மேற்பார்வையாளர்

## இணைப்பு-3

### மதுவிலக்கு அமலாக்கப் பிரிவின் அமைப்பு வரைபடம்





| | |
|---|---|
| • கா.க. | காவல் கண்காணிப்பாளர் |
| • கா.க. (அ) | காவல் கண்காணிப்பாளர் (அமலாக்கம்) |
| • ம.பு.பி. | மத்திய புலனாய்வுப் பிரிவு |
| • மா.கா.க. | மாவட்ட காவல் கண்காணிப்பாளர் |
| • கூ.கா.க. | கூடுதல் காவல் கண்காணிப்பாளர் |
| • து.கா.க. | துணை காவல் கண்காணிப்பாளர் |
| • ம.அ.பி. | மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு |
| • கூ.து.ஆ. | கூடுதல் துணை ஆணையர் |
| • உ.ஆ. | உதவி ஆணையர் |



## இணைப்பு - 4

### தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்




- பொ.மே.(மொ.வி.ம.நி) பொது மேலாளர்(மொத்த விற்பனை மற்றும் நிர்வாகம்)
- பொ.மே.(நிதி) மற்றும் நி.செ. பொது மேலாளர் (நிதி) மற்றும் நிறுவன செயலர்

## இணைப்பு-5

### இம்மாநிலத்தில் உள்ள சர்க்கரை ஆலைகள் மற்றும் அவற்றின் கருப்பஞ்சாற்றுக் கசண்டு சேமிப்புத் திறன் பற்றிய விவரங்கள்

| தொடர் எண். | சர்க்கரை ஆலையின் பெயர் | கருப்பஞ் சாற்றுக் கசண்டு சேமிப்புத் திறன் (மெட்ரிக் டன்களில்) |
|---|---|---|
| | **கூட்டுறவுத் துறை** | |
| 1 | அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 11,000 |
| 2 | மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 15,000 |
| 3 | திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 14,000 |
| 4 | தருமபுரி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 15,000 |
| 5 | சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 12,000 |
| 6 | நேஷனல் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 17,000 |
| 7 | ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 7,000 |
| 8 | திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 10,000 |
| 9 | வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 21,000 |
| 10 | செங்கல்வராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 16,000 |
| 11 | கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம், அலகு-1 | 15,000 |
| 12 | எம்.ஆர்.கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 12,000 |
| 13 | கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம், அலகு-2 | 12,000 |
| 14 | சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 19,000 |
| 15 | என்.பி.கே.ஆர்.ராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 18,000 |
| 16 | செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 12,000 |
| | **மொத்தம்** | **2,26,000** |



| தொடர் எண். | சர்க்கரை ஆலையின் பெயர் | கருப்பஞ் சாற்றுக் கசண்டு சேமிப்புத் திறன் (மெட்ரிக் டன்களில்) |
|---|---|---|
| | **பொதுத் துறை** | |
| 17 | மதுரா சுகர்ஸ் | 6,000 |
| 18 | அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை நிறுவனம் | 14,000 |
| 19 | பெரம்பலூர் சர்க்கரை ஆலை நிறுவனம் | 12,000 |
| | **மொத்தம்** | **32,000** |
| | **தனியார் துறை** | |
| 20 | எஸ்.வி.சுகர் மில்ஸ் நிறுவனம் | 9,200 |
| 21 | இராஜஸ்ரீ சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 12,000 |
| 22 | தரணி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம், அலகு-1 | 12,600 |
| 23 | சக்தி சுகர்ஸ் நிறுவனம், அலகு-2 | 12,000 |
| 24 | பண்ணாரி அம்மன் சுகர்ஸ் நிறுவனம் | 12,000 |
| 25 | சக்தி சுகர்ஸ் நிறுவனம் | 18,000 |
| 26 | ஸ்ரீ அம்பிகா சுகர்ஸ் நிறுவனம், துகிலி | 22,500 |
| 27 | இ.ஐ.டி.பாரி (இந்தியா) நிறுவனம், நெல்லிக்குப்பம் | 18,600 |
| 28 | சவுத் இந்தியா சுகர்ஸ் நிறுவனம் | 16,500 |
| 29 | பொன்னி சுகர்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் நிறுவனம் | 8,400 |
| 30 | திரு ஆரூரான் சுகர்ஸ் நிறுவனம், அலகு-1 | 14,500 |
| 31 | திரு ஆரூரான் சுகர்ஸ் நிறுவனம், அலகு-2 | 12,000 |
| 32 | காவேரி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 7,000 |
| 33 | இ.ஐ.டி.பாரி (இந்தியா) நிறுவனம், புகலூர் (டெக்கான்) | 14,700 |
| 34 | கோத்தாரி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 13,300 |
| 35 | தரணி சுகர்ஸ், அலகு-2 | 10,000 |
| 36 | அம்பிகா சுகர்ஸ் நிறுவனம், பெண்ணாடம் | 25,000 |
| 37 | இ.ஐ.டி.பாரி (இந்தியா) நிறுவனம், குறும்பூர் | 5,000 |
| 38 | அருணாசலம் சுகர்ஸ் | 6,000 |
| | **மொத்தம்** | **2,49,300** |
| | **ஒட்டு மொத்தம்** | **5,07,300** |

# இணைப்பு-6

## வடிசாலை — சாராவி உற்பத்தி

(சாராவி ஆண்டு: டிசம்பர்-நவம்பர்)

| தொடர் எண். | வடிசாலையின் பெயர் | கருப்பஞ்சாற்றுக் கசண்டு வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்ட அளவு (மெட்ரிக் டன்களில்) | கருப்பஞ்சாற்றுக் கசண்டு சேமிக்கும் திறனளவு (மெட்ரிக் டன்களில்) | 2003–2004 ஆம் சாராவி ஆண்டில் சாராவி உற்பத்தி அளவு (கோடி லிட்டர்களில்) | 2004–2005 ஆம் சாராவி ஆண்டில் (பிப்ரவரி 2005 வரை) சாராவி உற்பத்தி அளவு(கோடி லிட்டர்களில்) |
|---|---|---|---|---|---|
| | தனியார் துறையிலுள்ள வடிசாலைகள் | | | | |
| | திருவாளர்கள் | | | | |
| 1. | திரு ஆரூரான் சுகர்ஸ் நிறுவனம் | 82,500 | 24,722 | 1.32 | 0.35 |
| 2. | பன்னாரி அம்மன் சுகர்ஸ் நிறுவனம் | 71,350 | 22,800 | 1.25 | 0.38 |
| 3. | கெம்ப்ளாஸ்ட் சன்மார் நிறுவனம், மரிகம்பள்ளி, அலகு-1 | 60,000 | 15,046 | 0.00 | 0.00 |
| 4. | கெம்ப்ளாஸ்ட் சன்மார் நிறுவனம், காட்டம்புலியூர், அலகு-2 | 1,10,000 | 26,800 | 1.67 | 0.44 |
| 5. | தாரணி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 36,000 | 12,600 | 0.80 | 0.22 |
| 6. | இ.ஐ.டி.பாரி (இந்தியா) நிறுவனம் | 60,000 | 14,077 | 0.31 | 0.30 |
| 7. | கோத்தாரி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 60,000 | 6,000 | 0.84 | 0.34 |
| 8. | இராஜஸ்ரீ சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 40,000 | 12,480 | 0.81 | 0.15 |
| 9. | சதர்ன் அக்ரிபுரேன் இண்டஸ்ட்ரிஸ் நிறுவனம் | 25,000 | 4,758 | 0.28 | 0.10 |
| 10. | சக்தி சுகர்ஸ் நிறுவனம் | 1,19,260 | 18,600 | 2.63 | 0.78 |
| 11. | திருச்சி டிஸ்டிலரீஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 1,10,000 | 33,300 | 1.07 | 0.03 |
| 12. | மோகன் புரூவரீஸ் மற்றும் டிஸ்டிலரீஸ் நிறுவனம் | 45,000 | 11,646 | 0.83 | 0.22 |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கூட்டுறவுத் துறைகளிலுள்ள வடிசாலைகள் | | | | |
| 13. | சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 55,000 | 12,000 | 0.77 | 0.25 |
| 14. | அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 55,000 | 12,000 | 0.55 | 0.22 |
| | மொத்தம் | 9,29,110 | 2,26,829 | 13.13 | 3.78 |

## இணைப்பு-7

### இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம் மற்றும் பீர் உற்பத்தி பற்றிய விவரம்

| ஆண்டு | உற்பத்தி அளவு (கோடி பல்க் லிட்டர்களில்) |
|---|---|
| இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம் | |
| 1994-1995 | 8.10 |
| 1995-1996 | 8.13 |
| 1996-1997 | 12.78 |
| 1997-1998 | 10.90 |
| 1998-1999 | 9.81 |
| 1999-2000 | 11.74 |
| 2000-2001 | 12.43 |
| 2001-2002 | 13.32 |
| 2002-2003 | 11.62 |
| 2003-2004 | 14.04 |
| 2004-2005 (பிப்ரவரி 2005 வரை) | 15.23 |
| பீர் | |
| 1994-1995 | 4.18 |
| 1995-1996 | 5.79 |
| 1996-1997 | 5.33 |
| 1997-1998 | 5.25 |
| 1998-1999 | 5.29 |
| 1999-2000 | 4.23 |
| 2000-2001 | 5.76 |
| 2001-2002 | 5.06 |
| 2002-2003 | 4.32 |
| 2003-2004 | 5.95 |
| 2004-2005 (பிப்ரவரி 2005 வரை) | 6.90 |



## இணைப்பு-IV

*(448 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## கோரிக்கை எண் 39—வருவாய்த் துறை
## கோரிக்கை எண் 49—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 2005-2006

### அத்தியாயம்-1

### முன்னுரை

வருவாய்த் துறை அனைத்து நிர்வாகத் துறைகளின் தாயாக விளங்குகின்றது என்று சொல்லலாம். மனித வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் அநேகமாக வருவாய்த் துறை தொடர்புடையதாக இருக்கிறது. இத்துறையின் பணி எங்கும் பரவியுள்ளது. கட்டுக்கோப்பான சமுதாய மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கு வருவாய்த் துறையின் பங்கு மிகப் பெரியதாகும்.

அனைத்து நிலங்களுக்கும் காப்பாளர் வருவாய்த் துறையே. மேலும் அனைத்து நில மாற்றங்கள் தொடர்பான வேலையும் இத்துறையை சார்ந்ததே. நில ஒப்படை, நில எடுப்பு, நில உரிமை மாற்றம், நில வருவாய் ஆவணங்களைப் பராமரித்தல் மற்றும் மேம்படுத்துதல், நிலச் சீர்திருத்தம், நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரி நிர்ணயிப்பதுடன் அதை வசூல் செய்யும் பணி போன்றவை வருவாய்த் துறையின்மூலம் நிர்வகிக்கப்படுகின்றன.

இதுவரை கண்டிராத சுனாமி, வறட்சி மற்றும் வெள்ளம் போன்ற இயற்கை இடர்பாடுகள் ஏற்படும் காலகட்டங்களில் வருவாய்த் துறை தான் முதலில் மக்களை நாடிச் செல்கிறது. சுனாமி சோகத்தினை வருவாய்த் துறை மிக நல்ல முறையில் கையாண்டது. பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு சென்று, அவர்களுக்கு உணவு, உடை, உறைவிடம் அளிப்பதுடன் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கி உதவித் தொகைகளையும் வருவாய்த் துறை வழங்கி வருகின்றது.

பொதுமக்களின் வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் வருவாய்த் துறையின் பங்கினைக் குறைத்து மதிப்பிட முடியாது எனலாம். சமூகம் அல்லது மக்களுக்குச் சிறந்த முறையில்

பணியாற்றுவதற்கு ஏதுவாக, வருவாய்த் துறை பலதரப்பட்ட அலுவலர்களைக் கொண்ட அமைப்பாகவுள்ளது. மாநில அளவில், வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறை தொடர்பான பணிகள் வருவாய் நிர்வாக ஆணையரிடமும், நில நிர்வாகம் தொடர்பான பணிகள் நில நிர்வாக ஆணையரிடமும், நிலச் சீர்திருத்தம் தொடர்பான பணிகள் நிலச் சீர்திருத்த ஆணையரிடமும், நில அளவை மற்றும் நில வரித் திட்டம் தொடர்பான பணிகள் நில அளவை மற்றும் நில வரித் திட்ட ஆணையரிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

## அத்தியாயம் - 2

### மாவட்ட வருவாய் நிர்வாகம்

அரசின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கிக் கொண்டிருக்கும் பல துறைகளில் மக்களின் நேரடி தொடர்புக்குட்பட்ட இன்றியமையாத் துறையாக வருவாய் நிர்வாகத் துறை இயங்கி வருகிறது. சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரின் தலைமையில் இயங்கி வரும் வருவாய் நிர்வாகத் துறையில் மாவட்ட வருவாய் மற்றும் பொது நிர்வாகம், நிலவரி மற்றும் தொடர்புடைய மேல் வரிகள் விதித்தல் மற்றும் வசூலித்தல், இயற்கை சீற்றங்களால் பாதிக்கப் பட்டவர்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வு அளித்தல், பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணித்தல், சமூக நலப் பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்துதல் போன்ற பணிகள் கவனிக்கப் படுகின்றன. இத்துறையின் பெயர், வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறை என மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சியர் முதன்மை அதிகாரியாக இருந்து சட்டம் ஒழுங்கு மற்றும் நிலம் சம்பந்தப்பட்ட அனைத்துப் பணிகள் மட்டுமல்லாது அனைத்து வளர்ச்சிப் பணிகள் மற்றும் பல்வேறு துறைகளின் மூலமாக செயல்படுத்தப்படும் திட்டங்களின் செயலாக்கத்திற்கும் பொறுப்பாவார். வருவாய்த் துறையின் மற்ற அலுவலர்களைப் பொறுத்தமட்டில், சட்டம்-ஒழுங்கு பராமரிப்பு தவிர பிற முக்கியப் பணிகளான சட்டமன்ற மற்றும் பாராளுமன்ற பொதுத் தேர்தல்கள் பணிகள் உள்ளிட்ட அனைத்து தேர்தல் பணிகள், நிலவரி வசூலித்தல் மற்றும் அதனைச் சார்ந்த பணிகள், பொது மக்களுக்குத் தேவைப்படும் பல்வேறு சான்றிதழ்கள் வழங்குதல், முதியோர்





உதவித் தொகை திட்டங்களைச் செயல்படுத்துதல், பொது விநியோகத் திட்டத்தைக் கண்காணித்தல், குழந்தைகளுக்கும் மற்றும் முதியோர் ஓய்வூதியம் பெறுவோருக்கும் மதிய உணவு வழங்கும் திட்டங்களை மேற்பார்வையிடுதல் போன்ற பணிகளுக்கு அவர்கள் பொறுப்பாவார்கள். பொது மக்களின் குறைகளை நிவர்த்தி செய்யும் வகையில் வருவாய்த் துறை அலுவலர்கள் மக்களுடன் நேரடித் தொடர்புடையவர்கள். பொதுமக்களின் குறைகளுக்குத் தீர்வு காணுவது இவர்களது பிரதானப் பணிகளில் ஒன்றாகும். புயல், வெள்ளம், வறட்சி, தீ போன்ற இயற்கை இடர்பாடுகளை விரைவாகவும் திறம்படவும் சமாளிப்பது வருவாய்த் துறையின் தலையாய பணிகளில் ஒன்றாகும்.

மாவட்ட நிர்வாகத்தில் எந்தவொரு பணியாவது நேரடியாக ஒரு குறிப்பிட்ட துறைக்கு ஒதுக்கப்படாவிட்டாலும் அப்பணி பொது மக்களுக்கு நேரடித் தொடர்பு உள்ளவையாக இருப்பின் அப்பணி இறுதியாக வருவாய்த் துறையின் பராமரிப்பிற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

### 2.2. மனு நீதித் திட்டம்

மாவட்ட நிர்வாகம், மக்கள் குறைகளை நேரடியாக பெற்று விரைந்து தீர்ப்பதற்காக மனு நீதித் திட்டம் தொடங்கப்பட்டது. மாவட்ட நிர்வாகம் கிராமங்களுக்கு நேரடியாகச் சென்று மக்களின் குறைகளைக் கேட்டறிந்து இயன்ற அளவிற்கு அங்கேயே அவர்களது குறைகளைக் களைவதே இத்திட்டத்தின் தனித்தன்மை வாய்ந்த சிறப்பு அம்சமாகும். இத்திட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர்கள் மற்றும் துணை ஆட்சியர் நிலையில் உள்ளவர்களது தலைமையில் பிற துறை அலுவலர்கள், வங்கி அலுவலர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் பங்கேற்று முனைப்புடன் நடத்தப்படுகிறது. இத்திட்டம் ஒவ்வொரு மாதமும் இரண்டாவது புதன்கிழமையன்று கிராமங்களில் நடத்தப்பட்டு வருகிறது. மூன்றாண்டு கால சுழற்சி முறைக்குள் மாவட்டத்திலுள்ள அனைத்து கிராமங்களும் இத்திட்டத்தினால் பயன்பெறும் வண்ணம் நடத்தப்பட்டு வருகிறது. பொதுவாக இத்திட்டம் தொலை தூரங்களில் உள்ள கிராமங்களில் வட்டாட்சியர்களால் போதுமான முன் ஏற்பாடுகள் செய்யப்பட்டு நடத்தப்பெறுகிறது. இத்திட்டத்தை நடத்த ஏற்படும் செலவினத்திற்காக அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் (சென்னை மாவட்டம் நீங்கலாக) அரசு ரூ.16,53,000/- வழங்கியுள்ளது. மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் துணை ஆட்சியர்

[2005 மார்ச் 23

நிலை அலுவலர்கள் தலைமையில் மனு நீதித் திட்டம் நடத்தும் செலவிற்கு முறையே ரூ.1000/-, ரூ.750/-, ரூ.500/- என அரசு அனுமதித்துள்ளது.

இத்திட்டம் தொடர்பான மாதாந்திர காலமுறை அறிக்கை ஒவ்வொரு மாதமும் 25 ஆம் தேதிக்குள் சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் அலுவலகத்தில் பெறப்பட்டு ஆய்வு செய்யப்படுகிறது. இதற்கென பராமரிக்கப்படும் பதிவேடுகள் மாவட்ட ஆட்சியர் மற்றும் துறைத் தலைவர்கள் ஆகியோரால் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும்போது தணிக்கை செய்யப்படுகிறது.

2004 ஆம் ஆண்டில் ஜனவரி மாதம் முதல் 2005 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரை 2,49,957 மனுக்கள் பெறப்பட்டு அவற்றில் 2,26,118 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

### 2.3. பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள்

ஒவ்வொரு திங்கட்கிழமைதோறும் பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள் அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற்று வருகிறது. மாவட்ட ஆட்சியர்கள் / வருவாய்க் கோட்ட அலுவலர்கள், வட்டாட்சியர்கள் அவர்களது தலைமையிடங்களில் தங்கி பொதுமக்களிடமிருந்து மனுக்களைப் பெற்று அவற்றின் மீது ஆய்வு மேற்கொண்டு அதற்கான அறிக்கைகளை சார்நிலை அலுவலர்கள் மற்றும் இதர துறை அலுவலர்களிடமிருந்து பெற்று தக்க பதிலை முடிந்தவரை அன்றே அல்லது குறிக்கப்பட்ட நாளுக்குள் மனுதாரர்களுக்கு அளிக்கிறார்கள். பொதுமக்கள் குறை தீர்க்கும் பிரிவு அனைத்து மாவட்ட ஆட்சியரகங்களிலும் ஏற்படுத்தப்பட்டு, அவை மாவட்ட ஆட்சியர்களது கட்டுப்பாட்டில் பணிபுரியும் தனித் துணை ஆட்சியர்கள் (மக்கள் குறை தீர்க்கும் குழு) பொறுப்பில் செயல்பட்டு வருகிறது.

தூய, ஒளிவு மறைவற்ற மற்றும் நேர்மையான நிருவாகம் நடைபெறவும் பொதுமக்களின் குறைகள் சம்பந்தப்பட்ட மனுக்களைத் துரிதமாக முடிவு செய்யவும் பல அறிவுரைகளை அரசு வழங்கியுள்ளது. இதில் பொதுமக்களின் மனுக்களைப் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதல் 5 தினங்களுக்குள் அளிக்கவும் மற்றும் மனுக்களின் மீதான முடிவான பதிலை 90 நாட்களுக்குள் தெரிவிக்கவும், இதுகுறித்து அப்போதைக்கப்போது உள்ள நிலவரத்தைக் கணினியில் பதிவு செய்து இப்பணியினை ஆய்வு செய்யவும் அரசு அறிவுரைகள் வழங்கியுள்ளது.



2005 மார்ச் 23]

இத்திட்டம் தொடர்பான காலாண்டு காலமுறை முன்னேற்ற அறிக்கை மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து பெறப்பட்டு முடிவு செய்யப்பட்ட மனுக்களின் விவரம் குறித்து சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையரால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2004 ஆம் ஆண்டு ஜனவரி முதல் 2005 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முடிய 5,33,293 மனுக்கள் பெறப்பட்டு அவற்றில் 4,30,360 மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது.

### 2.4. மாண்புமிகு அமைச்சர்கள் / நாடாளுமன்ற உறுப்பினர்கள் / சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள்

மாண்புமிகு அமைச்சர்கள், நாடாளுமன்ற மக்களவை, மாநிலங்களவை உறுப்பினர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களது தொகுதிகளைப் பார்வையிடச் செல்லும்போது பொது மக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள், மாவட்ட ஆட்சியர்களுக்குத் தேவையான நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்படுகின்றன. இதற்கென தனிப் பதிவேடுகள் பராமரிக்கப்பட்டு மனுக்களின் விவரங்கள் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தொகுதிவாரியாக பதியப்பட்டு சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பி மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு இவற்றின் முடிவுகள் மனுதாரர்களுக்குத் தெரிவிக்கப் படுகிறது.

இந்நேர்வு தொடர்பான முன்னேற்ற அறிக்கை ஒவ்வொரு மாதமும் 25 ஆம் தேதிக்குள் சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகத்தில் பெறப்பட்டு பணி முன்னேற்றம் ஆய்வு செய்யப்படுகிறது.

2004 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் 2005 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரை 36,367 மனுக்கள் பெறப்பட்டு அவற்றில் 25,663 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

### 2.5. சான்றுகள்

பொதுமக்களுக்குத் தேவையான கீழ்க்கண்ட பன்னிரண்டு வகையான சான்றுகள் வருவாய்த் துறையின்மூலம் வழங்கப்பட்டு வருகின்றன:

(1) சாதிச் சான்று

(2) பிறப்பிட/இருப்பிடச் சான்று

[2005 மார்ச் 23

(3) வருமானச் சான்று

(4) நாட்டினச் சான்று

(5) வாரிசுச் சான்று

(6) சொத்து மதிப்புச் சான்று

(7) பிறப்பு / இறப்புச் சான்று

(8) ஆதரவற்ற குழந்தைச் சான்று

(9) ஆதரவற்ற விதவைச் சான்று

(10) கலப்புத் திருமணச் சான்று

(11) பள்ளிச் சான்றுகள் தொலைந்ததற்காக வழங்கப்படும் சான்று

(12) கணவனால் கைவிடப்பட்டவர் சான்று

**சாதிச் சான்று**

பொதுமக்களின் தேவையற்ற அலைச்சலைக் குறைக்கும் நோக்கத்துடனும், வருவாய்த் துறையின் வேலைப் பளுவைக் குறைக்கும் நோக்கத்துடனும், அச்சடிக்கப்பட்ட நிரந்தர சாதிச் சான்று அட்டைகள் வழங்கும் திட்டத்தை 1988ஆம் ஆண்டு அரசு அறிமுகப்படுத்தியது. அனைத்து கல்வி மற்றும் தொழிற் கல்வி நிலையங்களில் சேரவும், அரசின் கல்வி உதவித் தொகை பெறவும், அரசு மாணவ / மாணவியர் விடுதிகளில் சேரவும், பொதுமக்கள் அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ் வழங்கப்படும் கடன்கள், கூட்டுறவு நிறுவனங்கள், வங்கிகள், தாட்கோமூலம் கடனுதவி பெறுவதற்காகவும் மத்திய, மாநில, பொதுத் துறை, தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெறுவதற்கும் இந்நிரந்தர சாதிச் சான்றுகள் பெரிதும் உதவியாக உள்ளன.

இத்திட்டத்தின்படி ஒவ்வொரு ஆண்டும் அரசு ஆணையின்படி தேவையான நிரந்தர சாதிச் சான்று அட்டைகள் சென்னை அரசு மைய அச்சகத்தில் அச்சிடப்பட்டு, அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களின்மூலம் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. 2004-2005 ஆம் ஆண்டிற்கு 7,00,000 நிரந்தர சாதிச் சான்று அட்டைகள் அச்சிடப்பட்டு, அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் அனுப்பப் பட்டுள்ளன. சாதிச் சான்றுகள் கோரி வரப்பெற்ற விண்ணப்பங்கள்மீது உரிய விசாரணைக்குப் பிறகு தகுதியானவர்களுக்கு சாதிச் சான்று அட்டைகள் வழங்கப்படுகின்றன. பிற்பட்டோர் / மிகவும் பிற்பட்டோர்



2005 மார்ச் 23]

மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு சான்றுகள் கூடுதல் / தலைமை இடத்து துணை வட்டாட்சியர் / மண்டல துணை வட்டாட்சியர் மற்றும் தனித் துணை வட்டாட்சியர் (சான்றுகள்) ஆகியோர்களால் வழங்கப்படுகின்றன. ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் மற்றும் இதர பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு (OBC)சாதிச் சான்றிதழ் வட்டாட்சியரால் வழங்கப்படுகிறது. பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு சாதிச் சான்றிதழ் வருவாய்க் கோட்ட அலுவலர் / சார் ஆட்சியர் மற்றும் மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலர்களாலும் வழங்கப்படுகிறது. சென்னை மாவட்டத்தில் பழங்குடியினர் சான்று மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) மற்றும் மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலரால் வழங்கப்படுகிறது.

வட்டாட்சியர் அலுவலகங்களில் இத்தகைய சான்றிதழ்களைப் பெறுவதற்காக பள்ளி மாணவ / மாணவியர்கள் காத்திருப்பதைத் தவிர்க்கும் பொருட்டு பள்ளிகள் மூலமாக சான்றிதழ்கள் வழங்கும் புதிய முறையை, அரசு ஆணை எண் 165, வருவாய்த் துறை நாள் 1-4-1999-ன் மூலம், அரசு அறிமுகப்படுத்தியது. இந்த முறையின்படி 10 அல்லது 12 ஆம் வகுப்பில் படிக்கும் மாணவ / மாணவியர் அதுவரையில் சாதிச் சான்றிதழ் பெறவில்லை எனில், சான்றிதழ் வழங்கக் கோரி பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை மாணவர்களிடமிருந்து பெற்று தலைமை ஆசிரியர்கள் அவர்களின் சான்றொப்பத்துடன் சம்பந்தப்பட்ட வட்டாட்சியர்களுக்கு அனுப்ப வேண்டும். வருவாய்த் துறை அலுவலர்களின் உரிய விசாரணைக்குப் பின் நிரந்தர சாதிச் சான்றிதழ்கள் தயாரிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட பள்ளிகளுக்கு மொத்தமாக அனுப்பப்படுகின்றன. பள்ளிப் படிப்பு முடிந்தவுடன், அந்தச் சான்றிதழ்கள் மற்ற சான்றிதழுடன் சேர்த்து மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது.

28-2-2005 வரை கோட்டம் மற்றும் வட்ட அலுவலகங்கள் மூலமாக பொதுமக்களுக்கும், 10 ஆம் மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர்களுக்கும் தற்போதுள்ள புதிய முறையின்படி பள்ளிகளின் மூலமாக 12,60,202 சாதிச் சான்றிதழ்கள் வழங்கப் பட்டுள்ளன.

**பிறப்பிட / இருப்பிடச் சான்று**

பிறப்பிடம் என்பது ஒருவர் பிறந்த இடத்தினையும், இருப்பிடம் என்பது ஒருவர் தொடர்ந்து வசிக்கும் இடத்தினையும் குறிப்பிடுவதாகும்.

இச்சான்றுகள் கோருபவர் இரண்டு ரூபாய்க்கான கட்டண வில்லையுடன் விண்ணப்பிக்க வேண்டும். இச்சான்றிதழ், பள்ளிகளில் சேரவும், வேலை வாய்ப்பில் முன்னுரிமை பெறவும் உதவுகின்றன. பிறப்பிடச் சான்று பெற வேண்டுமாயின் மனுதாரர் தொடர்ந்து ஐந்து ஆண்டுகளுக்கு மேல் அவர் கோரும் இடத்தில் வசித்திருக்க வேண்டும். இருப்பிடச் சான்று பெற வேண்டுமாயின் ஒருவர் தொடர்ந்து மூன்று ஆண்டுக்கு மேலாக அந்த இடத்தில் வசித்திருக்க வேண்டும். வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ளவர்கள் ரூ.10/- கட்டணம் செலுத்தி இச்சான்றினைப் பெற வேண்டும்.

**வருமானச் சான்று**

கல்வி உதவித் தொகை பெறுவதற்கும், பள்ளி / கல்லூரிகளிலும், மாணவர் விடுதிகளிலும் சேரவும், இச்சான்று வட்டாட்சியரால் வழங்கப்படுகிறது. வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ளவர்கள் ரூ.10/- கட்டணம் செலுத்தி இச்சான்றினைப் பெற வேண்டும்.

**நாட்டினச் சான்று**

ஒருவர் இந்த நாட்டைச் சார்ந்தவர் என்று வட்டாட்சியரால் முறையான விசாரணைக்குப்பின் வழங்கப்படும் சான்றாகும். இச்சான்று கடவுச் சீட்டு, நுழைவிசைவு ஆகியவை பெறுவதற்காக பயன்படும்.

**வாரிசுச் சான்று**

பொதுவாக, ஒரு குடும்பத்தின் தலைவரோ, அல்லது அந்தக் குடும்பத்தில் உள்ள உறுப்பினர் எவரேனும் காலமாகிவிட்டால், அவரது பெயரில் உள்ள மின் இணைப்பு, வீட்டு வரி, தொலைபேசி இணைப்பு, பட்டா, வங்கிக் கணக்கு ஆகியவைகளை மாற்றம் செய்யவும், இறந்தவர் அரசு ஊழியராக இருப்பின் அவரது வாரிசுதாரர் கருணை அடிப்படையில் பணி நியமனம் பெறவும், குடும்ப ஓய்வூதியம் பெறவும், இறந்தவரின் நேரடி வாரிசுதாரர்களான, மனைவி அல்லது கணவர், மகன், மகள், தாய் ஆகியோருக்கு வாரிசுச் சான்று வழங்கப்படுகிறது. இறப்புச் சான்றின் அசல் பிரதியுடன், இரண்டு ரூபாய்க்கான கட்டண வில்லையுடன் விண்ணப்பிக்க வேண்டும். இது தொடர்பாக கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர் தரும் விசாரணை அறிக்கையின் அடிப்படையில், வாரிசுதாரர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு இச்சான்று வட்டாட்சியரால் வழங்கப்படுகிறது.



**சொத்து மதிப்புச் சான்று**

ஒப்பந்தக்காரராக பதிவு செய்யவும், ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலங்களில் பங்கு பெறவும் இச்சான்று தேவைப்படுகிறது. இச்சான்று கோருபவர் ரூ.10/-க்கான கட்டண வில்லையுடன் வட்டாட்சியருக்கு விண்ணப்பிக்க வேண்டும். சொத்து மதிப்பு ரூ.50,000/- வரை ரூ.100/-ம் அதற்கு மேல் ஒவ்வொரு ரூ.50,000/-க்கும் ரூ.200/- வீதமும் கட்டணமாக கருவூலத்தில் செலுத்தப்பட வேண்டும்.

**பிறப்பு / இறப்புச் சான்று**

வட்டாட்சியர் அலுவலகத்தில் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் பிறப்பு மற்றும் இறப்புப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ள விவரங்களின் அடிப்படையில் இச்சான்று தலைமையிடத்து துணை வட்டாட்சியரால் வழங்கப்படுகிறது. இதற்கான கட்டணமாக ரூ. 5/- வசூலிக்கப்படுகிறது. நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் ஆணையரின் மூலமும், சிறப்பு ஊராட்சிப் பகுதிகளில் செயல் அலுவலர் மூலமும் இச்சான்று வழங்கப்படுகிறது.

**ஆதரவற்ற குழந்தைச் சான்று**

ஆதரவற்ற குழந்தைகள் கருணை / காப்பு இல்லங்களில் சேருவதற்கு இச்சான்று வழங்கப்படுகிறது. விண்ணப்பத்தின்பேரில், குழந்தையின் தாய் / தந்தையரைப் பற்றிய விவரமும், உண்மையில் அந்தக் குழந்தை ஆதரவற்றதுதானா என்ற விவரமும், குழந்தை உண்மையில் பாதுகாவலரின் பாதுகாப்பில் உள்ளதா போன்ற விவரங்கள் குறித்து தீர விசாரித்த பின்னர் இச்சான்று, வட்டாட்சியரால் வழங்கப்படுகிறது.

**ஆதரவற்ற விதவைச் சான்று**

ஆதரவற்ற விதவைகள் அரசு வேலை வாய்ப்பில் முன்னுரிமைப் பெறுவதற்காக இச்சான்று வழங்கப்படுகிறது. விண்ணப்பதாரரின் கணவரின் இறப்பு விவரம் மற்றும் விண்ணப்பதாரர் மறுமணம் புரிந்துள்ளாரா, விண்ணப்பதாரருக்கு உறவினர் ஆதரவு உள்ளதா என்று விசாரித்த பின்னர் இச்சான்று வழங்கப்படுகிறது. வட்டாட்சியரின் அறிக்கையின் அடிப்படையில் வருவாய்க் கோட்ட அலுவலரால் இச்சான்று வழங்கப்படுகிறது.

[2005 மார்ச் 23

**கலப்புத் திருமணச் சான்று**

இரண்டு மாறுபட்ட இனத்தைச் சார்ந்தவர்கள் (ஒருவர் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் இனமாகவும், மற்றொருவர் வேறு இனத்தைச் சேர்ந்தவராகவும் இருந்து) புரிந்து கொள்ளும் திருமணம் கலப்புத் திருமணம் ஆகும். அரசு பணி வாய்ப்பில் முன்னுரிமை பெறவும், இவர்களின் குழந்தைகளைப் பள்ளியில் சேர்க்கவும், அரசின் சலுகைகளைப் பெறவும் இச்சான்று வட்டாட்சியரால் வழங்கப்படுகிறது.

**பள்ளிச் சான்று தொலைந்ததற்காக வழங்கப்படும் சான்று**

பள்ளி / கல்லூரிகளில் வழங்கப்படும் அசல் சான்று தொலைந்துவிட்டால், அச்சான்றின் நகலினைப் பெறுவதற்கு சம்பந்தப்பட்ட துறைக்கு விண்ணப்பிக்க, விண்ணப்பதாரருக்கு வட்டாட்சியரால், மேற்படி சான்று தொலைந்தது உண்மை என்று சான்று வழங்கப்படுகிறது. விண்ணப்பதாரர் இச்சான்று தொலைந்தது தொடர்பாக, காவல் நிலையத்தில் வழங்கப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் பிரதியுடன் இச்சான்று கிடைக்கப் பெறவில்லையென்ற காவல் நிலையத்தின் அறிக்கையுடனும் வட்டாட்சியருக்கு விண்ணப்பிக்க வேண்டும். வட்டாட்சியரால் தக்க விசாரணைக்குப் பின்பு இச்சான்று வழங்கப்படுகிறது.

**கணவனால் கைவிடப்பட்டவர் சான்று**

கணவனால் புறக்கணிக்கப்பட்ட திருமணமான பெண் அவரது கணவரை விட்டுப் பிரிந்து அவரிடமிருந்து எவ்விதத் தொடர்பும் இன்றி தொடர்ந்து ஐந்து ஆண்டிற்கும் மேலாக தனித்து வாழ்ந்து வந்தால், அவர் கணவனால் கைவிடப்பட்டவராக கருதப்படுவார். இச்சான்று வழங்குவதற்கு முன், விண்ணப்பதாரர் நிலையாக தனித்து வாழ்கிறாரா அல்லது தற்காலிகமாக பிரிந்து வாழ்கிறாரா என விசாரித்து வட்டாட்சியரால் இச்சான்று வழங்கப்படுகிறது. அரசின் சலுகைகளைப் பெற இச்சான்று உதவுகிறது.

**2.8 நிர்வாக அமைப்பு**

இம்மாநிலம் 30 வருவாய் மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு அதில் 73 வருவாய் கோட்டங்கள், 206 வட்டங்கள், 1,120 உள்வட்டங்கள் மற்றும் 17,244 கிராமங்கள் அடங்கியதாகும். மாவட்ட வாரியாக கோட்டங்கள்,



2005 மார்ச் 23]

வட்டங்கள், உள்வட்டங்கள் மற்றும் கிராமங்களின் விவரங்கள் பின்வருமாறு:—

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | வருவாய் கோட்டத்தின் பெயர் | வட்டத்தின் பெயர் | மொத்த உள் வட்டங்களின் எண்ணிக்கை | மொத்த வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1. | சென்னை | | 1. கோட்டை—தண்டையார் பேட்டை | 4 | |
| | | | 2. புரசைவாக்கம்—பெரம்பூர் | 4 | |
| | | | 3. எழும்பூர்—நுங்கம்பாக்கம் | 4 | 55 |
| | | | 4.மயிலாப்பூர்—திருவல்லிக்கேணி | 4 | |
| | | | 5.மாம்பலம்—கிண்டி | 4 | |
| | | | | 20 | |
| 2. | காஞ்சிபுரம் | 1.காஞ்சிபுரம் | 1.காஞ்சிபுரம் | 9 | |
| | | | 2.உத்திரமேரூர் | 6 | |
| | | | 3.ஸ்ரீபெரும்புதூர் | 9 | |
| | | 2. செங்கல்பட்டு | 4.செங்கல்பட்டு | 8 | |
| | | | 5.திருக்கழுக்-குன்றம் | 4 | 1210 |
| | | | 6. தாம்பரம் | 3 | |
| | | 3.மதுராந்தகம் | 7.மதுராந்தகம் | 9 | |
| | | | 8.செய்யூர் | 7 | |
| | | | | 55 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3. | திருவள்ளூர் | 1.பொன்னேரி | | | |
| | | | 1.அம்பத்தூர் | 5 | |
| | | | 2.பொன்னேரி | 8 | |
| | | | 3.கும்மிடிப்பூண்டி | 4 | |
| | | 2.திருத்தணி | 4.திருத்தணி | 6 | |
| | | | 5.பள்ளிப்பட்டு | 5 | 840 |
| | | 3.திருவள்ளூர் | 6. திருவள்ளூர் | 9 | |
| | | | 7 .ஊத்துக்-கோட்ட்ட | 5 | |
| | | | 8. பூந்தமல்லி | 4 | |
| | | | | **46** | |
| 4. | வேலூர் | 1.இராணிப்-பேட்டை | 1. ஆற்காடு | 5 | |
| | | | 2. வாலாஜா | 5 | |
| | | | 3. அரக்கோணம் | 8 | |
| | | 2.வேலூர் | 4. வேலூர் | 9 | 843 |
| | | | 5. குடியாத்தம் | 5 | |
| | | | 6. காட்பாடி | 5 | |
| | | 3.திருப்பத்தூர் | 7. திருப்பத்தூர் | 7 | |
| | | | 8. வாணியம்பாடி | 8 | |
| | | | | **52** | |
| 5. | திருவண்ணா மலை | 1.செய்யார் | 1.செய்யார் | 9 | |
| | | | 2.வந்தவாசி | 10 | |
| | | | 3.ஆரணி | 6 | |
| | | 2திருவண்ணா-மலை | 4.திருவண்ணா-மலை | 10 | 1067 |
| | | | 5.போளூர் | 9 | |
| | | | 6.செங்கம் | 8 | |
| | | | | **52** | |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6. | கடலூர் | 1.சிதம்பரம் | 1. சிதம்பரம் | 6 | |
| | | | 2. காட்டுமன்னார் கோயில் | 5 | |
| | | 2.கடலூர் | 3. கடலூர் | 5 | |
| | | | 4. பண்ருட்டி | 4 | 901 |
| | | 3.விருத்தாச்சலம் | 5. விருதாச்சலம் | 7 | |
| | | | 6. திட்டக்குடி | 5 | |
| | | | | **32** | |
| 7. | விழுப்புரம் | 1.கள்ளக்குறிச்சி | 1.கள்ளக்குறிச்சி | 7 | |
| | | | 2.சங்கராபுரம் | 5 | |
| | | 2.திருக்கோயிலூர் | 3.திருக்கோயிலூர் | 7 | |
| | | | 4. உளுந்தூர்பேட்டை | 7 | |
| | | 3. திண்டிவனம் | 5. திண்டிவனம் | 9 | 1490 |
| | | | 6. செஞ்சி | 7 | |
| | | 4.விழுப்புரம் | 7. விழுப்புரம் | 8 | |
| | | | 8. வானூர் | 4 | |
| | | | | **54** | |
| 8. | தஞ்சாவூர் | 1. தஞ்சாவூர் | 1. தஞ்சாவூர் | 7 | |
| | | | 2. திருவையாறு | 5 | |
| | | | 3. ஒரத்தநாடு | 8 | |
| | | 2. கும்பகோணம் | 4. கும்பகோணம் | 5 | |
| | | | 5. திருவிடை-மருதூர் | 5 | 906 |
| | | | 6.பாபநாசம் | 6 | |
| | | 3பட்டுக்கோட்டை | 7.பட்டுக்கோட்டை | 10 | |
| | | | 8.பேராவூரணி | 4 | |
| | | | | **50** | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9. | நாகப்-பட்டினம் | 1.நாகப்பட்டினம் | 1. நாகப்பட்டினம் | 5 | |
| | | | 2. வேதாரண்யம் | 3 | |
| | | | 3. கீழ்வேளூர் | 4 | |
| | | | 4. திருக்குவளை | 3 | 519 |
| | | 2.மயிலாடுதுறை | 1. மயிலாடுதுறை | 6 | |
| | | | 2. தரங்கம்பாடி | 4 | |
| | | | 3. சீர்காழி | 5 | |
| | | | | 30 | |
| 10 | திருவாரூர் | 1.மன்னார்குடி | 1. மன்னார்குடி | 6 | |
| | | | 2. நீடாமங்கலம் | 3 | |
| | | | 3. திருத்துறைப்பூண்டி | 4 | |
| | | 2.திருவாரூர் | 4. திருவாரூர் | 2 | |
| | | | 5. நன்னிலம் | 4 | 574 |
| | | | 6. குடவாசல் | 5 | |
| | | | 7. வலங்கைமான் | 3 | |
| | | | | 27 | |
| 11. | திருச்சிராப்-பள்ளி | 1. திருச்சிராப்-பள்ளி | 1. திருச்சிராப்பள்ளி | 5 | |
| | | | 2. ஸ்ரீரங்கம் | 5 | |
| | | | 3. மணப்பாறை | 7 | |
| | | 2. லால்குடி | 4. லால்குடி | 6 | |
| | | | 5. மணச்சநல்லூர் | 3 | 507 |
| | | 3. முசிறி | 6. முசிறி | 6 | |
| | | | 7. தொட்டியம் | 3 | |
| | | | 8. துறையூர் | 6 | |
| | | | | 41 | |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| 12 | கரூர் | 1. கரூர் | 1. கரூர் | 6 | |
| | | | 2. அரவக்குறிச்சி | 5 | |
| | | 2. குளித்தலை | 3. குளித்தலை | 3 | 203 |
| | | | 4. கிருஷ்ணராயபுரம் | 5 | |
| | | | | 19 | |
| 13 | பெரம்பலூர் | 1.பெரம்பலூர் | 1. பெரம்பலூர் | 2 | |
| | | | 2. குன்னம் | 5 | |
| | | | 3. வேப்பந்தட்டை | 3 | |
| | | 2.அரியலூர் | 4. அரியலூர் | 5 | 347 |
| | | 3.உடையார்-பாளையம் | 5. உடையார்-பாளையம் | 7 | |
| | | | 6. செந்துறை | 3 | |
| | | | | 25 | |
| 14 | புதுக்-கோட்டை | 1.புதுக்-கோட்டை | 1. கொளத்தூர் | 5 | |
| | | | 2. இலுப்பூர் | 6 | |
| | | | 3. ஆலங்குடி | 6 | |
| | | | 4. புதுக்கோட்டை | 2 | |
| | | | 5. கந்தர்வக்-கோட்டை | 3 | 757 |
| | | | 6. திருமயம் | 8 | |
| | | 2.அறந்தாங்கி | 7. அறந்தாங்கி | 6 | |
| | | | 8. ஆவுடையார் கோயில் | 4 | |
| | | | 9. மணமேல்குடி | 4 | |
| | | | | 44 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 15 | மதுரை | 1. மதுரை | 1. மதுரை(தெற்கு) | 7 | |
| | | | 2. மதுரை(வடக்கு) | 12 | |
| | | | 3. மேலூர் | 8 | |
| | | | 4. வாடிப்பட்டி | 7 | |
| | | 2. உசிலம்பட்டி | 5. உசிலம்பட்டி | 5 | 664 |
| | | | 6. திருமங்கலம் | 6 | |
| | | | 7. பேரையூர் | 6 | |
| | | | | 51 | |
| 16 | தேனி | 1.பெரியகுளம் | 1. பெரியகுளம் | 2 | |
| | | | 2. தேனி | 2 | |
| | | | 3. ஆண்டிபட்டி | 4 | |
| | | 2. உத்தமபாளையம் | 1. உத்தமபாளையம் | 6 | 113 |
| | | | 2. போடி-நாயக்கனூர் | 3 | |
| | | | | 17 | |
| 17 | திண்டுக்கல் | 1. திண்டுக்கல் | 1. திண்டுக்கல் | 10 | |
| | | | 2. நத்தம் | 3 | |
| | | | 3. நிலக்கோட்டை | 5 | |
| | | 2. பழனி | 4. பழனி | 6 | 358 |
| | | | 5. ஒட்டன்சத்திரம் | 5 | |
| | | | 6. வேடசந்தூர் | 7 | |
| | | 3. கொடைக்கானல் | 7. கொடைக்கானல் | 3 | |
| | | | | 39 | |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| 18 | இராமநாத-புரம் | 1.இராமநாதபுரம் | 1. இராமநாதபுரம் | 7 | |
| | | | 2. இராமேஸ்வரம் | 1 | |
| | | | 3. திருவாடானை | 8 | |
| | | 2. பரமக்குடி | 4. முதுகுளத்தூர் | 6 | 400 |
| | | | 5. கமுதி | 5 | |
| | | | 6. பரமக்குடி | 6 | |
| | | | 7. கடலாடி | 6 | |
| | | | | 39 | |
| 19 | சிவகங்கை | 1. தேவகோட்டை | 1. திருப்பத்தூர் | 8 | |
| | | | 2. காரைக்குடி | 5 | |
| | | | 3. தேவகோட்டை | 4 | |
| | | 2. சிவகங்கை | 4. சிவகங்கை | 9 | 521 |
| | | | 5. மானாமதுரை | 6 | |
| | | | 6. இளையான்குடி | 5 | |
| | | | | 37 | |
| 20 | விருதுநகர் | 1. சிவகாசி | 1.ஸ்ரீவில்லிபுத்தூர் | 6 | |
| | | | 2. ராஜபாளையம் | 5 | |
| | | | 3. சாத்தூர் | 4 | |
| | | | 4. சிவகாசி | 4 | |
| | | 2. அருப்புக்-கோட்டை | 5. அருப்புக்-கோட்டை | 5 | 600 |
| | | | 6. காரியாப்பட்டி | 4 | |
| | | | 7. விருதுநகர் | 4 | |
| | | | 8. திருச்சுழி | 4 | |
| | | | | 36 | |

[2005 மார்ச் 23

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 21. | திருநெல்-வேலி | 1. திருநெல்வேலி | 1. பாளையங்-கோட்டை | 4 | |
| | | | 2. சங்கரன்கோயில் | 10 | |
| | | | 3. திருநெல்வேலி | 6 | |
| | | 2. சேரன்மாதேவி | 4. அம்பாசமுத்திரம் | 8 | |
| | | | 5. நாங்குநேரி | 6 | |
| | | | 6. ராதாபுரம் | 7 | |
| | | 3. தென்காசி | 7. தென்காசி | 4 | 628 |
| | | | 8. செங்கோட்டை | 3 | |
| | | | 9. வீரகேரளம்புதூர் | 4 | |
| | | | 10. ஆலங்குளம் | 5 | |
| | | | 11. சிவகிரி | 4 | |
| | | | | 61 | |
| 22 | தூத்துக்குடி | 1. தூத்துக்குடி | 1. தூத்துக்குடி | 4 | |
| | | | 2. ஸ்ரீவைகுண்டம் | 6 | |
| | | 2. திருச்செந்தூர் | 1. திருச்செந்தூர் | 4 | |
| | | | 2. சாத்தான்குளம் | 3 | |
| | | 3. கோவில்பட்டி | 3. கோவில்பட்டி | 6 | 468 |
| | | | 4. ஓட்டப்பிடாரம் | 6 | |
| | | | 5. விளாத்திகுளம் | 6 | |
| | | | 6. எட்டையபுரம் | 5 | |
| | | | | 40 | |
| 23 | சேலம் | 1. சேலம் | 1. சேலம் | 7 | |
| | | | 2. ஏற்காடு | 3 | |
| | | | 3. வாழப்பாடி | 4 | |



2005 மார்ச் 23]

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 2. ஆத்தூர் | 4. ஆத்தூர் | 5 | |
| | | | 5. கங்கவல்லி | 5 | |
| | | 3. மேட்டூர் | 6. மேட்டூர் | 6 | |
| | | | 7. ஓமலூர் | 5 | 621 |
| | | 4. சங்ககிரி | 8. சங்ககிரி | 4 | |
| | | | 9. எடப்பாடி | 3 | |
| | | | | 42 | |
| 24 | நாமக்கல் | 1. நாமக்கல் | 1. நாமக்கல் | 11 | |
| | | | 2. ராசிபுரம் | 6 | |
| | | 2. திருச்செங்கோடு | 3. திருச்செங்கோடு | 8 | 391 |
| | | | 4. பரமத்திவேலூர் | 5 | |
| | | | | 30 | |
| 25 | தருமபுரி | 1. தருமபுரி | 1. தருமபுரி | 5 | |
| | | | 2. அரூர் | 4 | |
| | | | 3.பாப்பிரெட்டிபட்டி | 4 | 470 |
| | | | 4. பென்னாகரம் | 4 | |
| | | | 5. பாலக்கோடு | 5 | |
| | | | | 22 | |
| 26 | கிருஷ்ண-கிரி | 1. கிருஷ்ணகிரி | 1. கிருஷ்ணகிரி | 8 | |
| | | | 2. ஊத்தங்கரை | 4 | |
| | | | 3. போச்சம்பள்ளி | 4 | 636 |
| | | 2. ஓசூர் | 4. ஓசூர் | 6 | |
| | | | 5. தேன்கனிக்கோட்டை | 7 | |
| | | | | 29 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 27 | கோயம்புத்தூர் | 1. கோயம்புத்தூர் | 1. கோயம்புத்தூர் (வடக்கு) | 6 | 481 |
| | | | 2. கோயம்புத்தூர் (தெற்கு) | 7 | |
| | | | 3. மேட்டுப்பாளையம் | 2 | |
| | | 2.திருப்பூர் | 4. பல்லடம் | 7 | |
| | | | 5. திருப்பூர் | 5 | |
| | | | 6. அவினாசி | 5 | |
| | | 3.பொள்ளாச்சி | 7. பொள்ளாச்சி | 11 | |
| | | | 8. வால்பாறை | 1 | |
| | | | 9. உடுமலைப்பேட்டை | 6 | |
| | | | | **50** | |
| 28 | ஈரோடு | 1. ஈரோடு | 1. ஈரோடு | 9 | 539 |
| | | | 2. பெருந்துறை | 7 | |
| | | 2. தாராபுரம் | 3. தாராபுரம் | 7 | |
| | | | 4. காங்கேயம் | 4 | |
| | | 3. கோபிச்செட்டி-பாளையம் | 5. பவானி | 7 | |
| | | | 6. கோபிச்செட்டி-பாளையம் | 7 | |
| | | | 7. சத்தியமங்கலம் | 6 | |
| | | | | **47** | |
| 29 | நீலகிரி | 1. கூடலூர் | 1. கூடலூர் | 2 | 54 |
| | | | 2. பந்தலூர் | 2 | |
| | | 2. குன்னூர் | 3. உதகமண்டலம் | 3 | |
| | | | 4. குந்தா | 2 | |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | 5. குன்னூர் | 3 | |
| | | | 6. கோத்தகிரி | 3 | |
| | | | | **15** | |
| 30 | கன்னியாகுமரி | 1. நாகர்கோவில் | 1. தோவாளை | 3 | 81 |
| | | | 2. அகஸ்தீஸ்வரம் | 4 | |
| | | 2. பத்மநாபபுரம் | 3. கல்குளம | 6 | |
| | | | 4. விளவங்கோடு | 5 | |
| | | | | **18** | |
| | மொத்தம் | | | 1,120 | |

| சுருக்கம் | |
|---|---|
| மாவட்டங்கள் | 30 |
| வருவாய்க் கோட்டங்கள் | 73 |
| வட்டங்கள் | 206 |
| உள்வட்டங்கள் | 1,120 |
| வருவாய் கிராமங்கள் | 17,244 |

2001ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மாநிலத்தின் மொத்த மக்கள் தொகை 6,21,10,839 ஆகும். இதில் 3,12,68,654 (51%) ஆண்களும் 3,08,42,185 (49%) பெண்கள் ஆவர். மாவட்ட வாரியாக மக்கள் தொகை விவரம் பின்வருமாறு:

[2005 மார்ச் 23

| வ.எண் | மாவட்டத்தின் பெயர் | மொத்த நபர்கள் | ஆண்கள் | பெண்கள் |
|---|---|---|---|---|
| 1. | சென்னை | 42,16,268 | 21,61,605 | 20,54,663 |
| 2. | கோயம்புத்தூர் | 42,24,107 | 21,56,280 | 20,67,827 |
| 3. | கடலூர் | 22,80,530 | 11,48,729 | 11,31,801 |
| 4. | தருமபுரி | 12,86,552 | 6,66,428 | 6,20,124 |
| 5. | திண்டுக்கல் | 19,18,960 | 9,66,201 | 9,52,759 |
| 6. | ஈரோடு | 25,74,067 | 13,06,039 | 12,68,028 |
| 7. | காஞ்சிபுரம் | 28,69,920 | 14,55,302 | 14,14,618 |
| 8. | கன்னியாகுமரி | 16,39,763 | 8,29,543 | 8,10,220 |
| 9. | கரூர் | 9,33,791 | 4,64,489 | 4,69,302 |
| 10. | கிருஷ்ணகிரி | 15,46,700 | 7,95,718 | 7,50,982 |
| 11. | மதுரை | 25,62,279 | 12,95,124 | 12,67,155 |
| 12. | நாகப்பட்டினம் | 14,87,055 | 7,38,287 | 7,48,768 |
| 13. | நாமக்கல் | 14,95,661 | 7,60,409 | 7,35,252 |
| 14. | நீலகிரி | 7,64,826 | 3,79,610 | 3,85,216 |
| 15. | பெரம்பலூர் | 11,81,029 | 5,88,441 | 5,92,588 |
| 16. | புதுக்கோட்டை | 14,55,269 | 7,20,847 | 7,34,422 |
| 17. | இராமநாதபுரம் | 10,83,320 | 5,82,068 | 5,01,252 |
| 18. | சேலம் | 29,92,754 | 15,51,357 | 14,41,397 |
| 19. | சிவகங்கை | 11,50,753 | 5,65,594 | 5,85,159 |
| 20. | தஞ்சாவூர் | 22,05,375 | 10,91,557 | 11,13,818 |
| 21. | தேனி | 10,94,724 | 5,53,118 | 5,41,606 |
| 22. | திருவாரூர் | 11,59,213 | 5,78,870 | 5,80,343 |
| 23. | தூத்துக்குடி | 15,65,743 | 7,64,087 | 8,01,656 |
| 24, | திருச்சிராப்பள்ளி | 23,88,831 | 11,94,133 | 11,94,698 |
| 25. | திருநெல்வேலி | 28,01,194 | 13,72,082 | 14,29,112 |
| 26. | திருவள்ளூர் | 27,38,866 | 13,90,292 | 13,48,574 |
| 27. | திருவண்ணாமலை | 21,81,853 | 10,93,191 | 10,88,662 |
| 28. | வேலூர் | 34,82,970 | 17,43,871 | 17,39,099 |
| 29. | விழுப்புரம் | 29,43,917 | 14,84,573 | 14,59,344 |
| 30. | விருதுநகர் | 17,61,548 | 8,70,820 | 8,90,728 |
| | மொத்தம் | 6,21,10,839 | 3,12,68,654 | 3,08,42,185 |



2005 மார்ச் 23]

## 2.7 வருவாய்த் துறை கட்டடங்கள்

### உள்கட்டமைப்பு வசதிகள்

வருவாய்த் துறை பொது நிர்வாகத்தின் முதுகெலும்பு என்பதால், வருவாய்த் துறை பொதுமக்களின் தேவைகளை உடனுக்குடன் நிறைவு செய்யும் வகையிலும், மேலும் திறம்பட செயல்பட முறையான உள்கட்டமைப்பு வசதிகளை அமைத்துக் கொடுக்க வேண்டிய அவசியத்தை கருத்தில் கொண்டும், மாவட்ட ஆட்சியர்கள் முதல் கிராம நிர்வாக அலுவலர்கள் வரை அலுவலகக் கட்டடங்கள், அலுவலகங்களுடன் கூடிய குடியிருப்புக் கட்டடங்கள் மற்றும் குடியிருப்புகள் கட்டுவதற்கு அரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது.

இத்துறையில் பெருகி வரும் பணிகளை விரைந்து செவ்வனே ஆற்றும் பொருட்டு புதிய அலுவலக மற்றும் குடியிருப்புக் கட்டடங்கள் கட்டுவதற்கும், அலுவலக மற்றும் குடியிருப்பு கட்டடங்களை பராமரிப்பதற்கும், மற்றும் புதிய சீருந்துகள், ஈப்புகள், கணினிகள், தொலைபேசிகள், செல்போன்கள், நகல் மற்றும் நிகரி மின் சாதனங்கள், தளவாடங்கள், மின் ஆக்கிகள் ஆகியவற்றை வாங்குவதற்கும் மற்றும் பராமரிப்பதற்கும் ஒவ்வொரு ஆண்டும் அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**பதினோராவது நிதிக்குழு மானியத்தின்கீழ் எடுக்கப்பட்ட உள்கட்டமைப்பு வசதிப் பணிகள்:—**

பதினோராவது நிதிக்குழுவின் பரிந்துரையின்படி, 01-04-1993-க்குப் பிறகு, புதிதாக உருவாக்கப்பட்ட திருவள்ளூர், விழுப்புரம், கரூர், பெரம்பலூர், நாமக்கல், தேனி மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் உள்கட்டமைப்பு வசதிகள் உருவாக்க மானியமாக மைய அரசு ரூ.44 கோடி அளித்துள்ளது. இதற்கு இணையான தொகை மாநில அரசின் பங்காக அளிக்கப்பட வேண்டும். இத்திட்டத்தின் காலம் 2000-2005 முடிய ஐந்து ஆண்டுகள் ஆகும். அரசாணை நிலை எண் 78, வருவாய்த் துறை, நாள் 13-02-2002-ல் 2001-2002 முதல் 2003-2004 வரையிலான ஆண்டுகளில் செலவிடப்படுவதற்கு ரூ.73.96 கோடிக்கு நிர்வாக மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

பதினோராவது நிதிக்குழு பரிந்துரையின்படி மேற்கண்ட தொகையில் வருவாய்த் துறைக்கு 70 சதவிகிதமும், பிற துறைகளுக்கு 30 சதவிகிதமும் வழங்கப்பட வேண்டும். எனவே, மேற்கண்ட 7 மாவட்டங்களுக்கு வருவாய்த் துறையின்கீழ் உள்ள அலுவலகங்களுக்கு உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவதற்கும், அலுவலகக் கட்டடங்கள் மற்றும் குடியிருப்பு கட்டடங்கள் கட்டுவதற்கும், வருவாய்த் துறை அல்லாத பிற துறைகளுக்கு அலுவலகக் கட்டடங்கள் மற்றும் குடியிருப்பு கட்டடங்கள் கட்டுவதற்கும் முறையே ரூ. 47.58 கோடியும் ரூ.26.38 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

**கூடுதல் உள்கட்டமைப்பு வசதிப் பணிகள்**

பதினோராம் நிதிக்குழு மானியத்தின்கீழ் வரும் 7 மாவட்டங்களிலுள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடங்களில் முக்கிய அரசுத் துறைகள் இயங்க போதிய இடவசதி இல்லாததாலும், பல அரசுத் துறை அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருவதாலும், பொதுமக்கள் ஓரிடத்திலேயே தங்களது தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளும் வண்ணம், மாவட்ட பெருந்திட்ட வளாகங்களில் பல அடுக்கு மாடி கட்டடம் ஒன்றை கட்டி பிற துறைகளுக்கு ஒதுக்கீடு செய்ய அரசால் முடிவு செய்யப்பட்டது. அரசாணை எண் 36, வருவாய்த் துறை நாள் 30-01-2004-ல் கட்டுமானப் பணிகள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவதற்கு நிர்வாக (மற்றும்) நிதி ஒப்பளிப்பு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. கரூர், நாமக்கல், தேனி ஆகிய மூன்று மாவட்டங்களில் உள்ள மாவட்ட





பெருந்திட்ட வளாகங்களில் தலா ரூ.275.00 இலட்சங்களிலும், அரியலூரில் ரூ.225.00 இலட்சங்களிலும் பல அடுக்கு மாடி அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கும், திருவள்ளூர், திருத்தணி, திண்டிவனம், ஆண்டிப்பட்டி, மற்றும் பெரம்பலூர் ஆகிய இடங்களில் சுற்றுலா மாளிகைகள் கட்டுவதற்கும் மேற்கண்ட அரசாணையில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. மேலும், அவ்வரசாணையில், பதினோராவது நிதிக்குழு மானியத்தின்கீழ் வரும் 18 வருவாய் கோட்ட அலுவலகங்களுக்கும், 42 வட்டங்களுக்கும் கணினிகள் வாங்குவதற்கும், 20 புதிய சீருந்துகள் மற்றும் 55 புதிய ஈப்புகள் வாங்குவதற்கும் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் கிருஷ்ணகிரியில், அரசால் தேர்வு செய்யப்பட்ட இடத்தில் மாவட்ட பெருந்திட்ட வளாகம் அமைக்கவும் மற்றும் மாவட்ட ஆட்சியரின் முகாம் அலுவலகம் கட்டுவதற்கும் ரூ.10.00 கோடி பதினோராம் நிதிக்குழு மானியத்தின்கீழ் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

09-08-2004 முதல் 11-08-2004 வரை நடைபெற்ற அனைத்து மாவட்ட ஆட்சியர்களின் மாநாட்டில், வருவாய்த் துறை கட்டடங்கள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் தொடர்பாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டவைகளுள் பதினோராவது நிதிக் குழு மானியத்தின்கீழ் விழுப்புரம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு ரூ.115 இலட்சம் செலவில் புதிய கட்டடம் கட்டுவதற்கும், 7 மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கு செல்போன்கள் வழங்குவதற்கும், 18 வருவாய் கோட்ட அலுவலகங்களுக்கு நிகரி மற்றும் நகல் எடுக்கும் கருவிகள் வழங்குவதற்கும் மற்றும் 42 வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு நிகரி வாங்குவதற்கும், 42 வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு இணையதள இணைப்பிற்காக கூடுதல் தொலைபேசி இணைப்புகள் வழங்குவதற்கும், மேலும் அரியலூர், கரூர், நாமக்கல், பெரியகுளம், திருவள்ளூர், திருத்துறைப்பூண்டி மற்றும் உளுந்தூர்பேட்டையில் கூடுதல் வட்டாட்சியர் அலுவலகம் கட்டுவதற்கும் மொத்தம் ரூ.280 இலட்சம் செலவில் நிர்வாக அனுமதி வழங்கி ஆணைகள் பிறப்பிக்கப் பட்டுள்ளன.

மொத்தத்தில் பதினோராவது நிதிக்குழு மானியத்தின்கீழ் வரும் 7 மாவட்டங்களில் வருவாய்த் துறை மற்றும் பிற அரசுத் துறைகளுக்கும் சேர்த்து 260 கட்டடங்களின் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 231 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள கட்டடங்கள் அனைத்தும் 31-03-2005-க்குள் முடிக்கப்படும்.

[2005 மார்ச் 23

## மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் புதிய வருவாய்த் துறை கட்டடங்கள் மற்றும் உள் கட்டமைப்பு வசதிகள் தொடர்பாக அறிவித்தவை

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மாவட்ட ஆட்சியர்களின் மாநாட்டின்போது மேலும் வருவாய்த் துறைக்குத் தேவையான கட்டடங்கள் கட்டவும் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவது தொடர்பாக சேலம், திருநெல்வேலி, கடலூர் ஆகிய மாவட்டங்களில் கூடுதல் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் கட்டவும், திருவண்ணாமலை மாவட்ட பெருந்திட்ட வளாகத்தில் பிற அரசுத் துறை அலுவலகங்களுக்கு புதிய கூடுதல் அடுக்குமாடி கட்டடம் கட்டவும், ஈரோடு மாவட்டத்தில், சத்தியமங்கலம் வட்டாட்சியர் அலுவலகம் கட்டவும், 23 மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கு செல்போன்கள் வழங்கவும், 55 வருவாய்க் கோட்ட அலுவலகங்களுக்கு நிகரி மற்றும் நகல் எடுக்கும் கருவிகள் வழங்கவும், 164 வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு நிகரி வழங்கவும், 164 வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு இணையதளத்திற்கான இணைப்பிற்காக கூடுதல் தொலைபேசி இணைப்புகள் வழங்கவும், 55 வருவாய் கோட்ட அலுலகங்களுக்கு கணினிகள் வழங்கவும் அறிவிப்பு செய்தார்கள். அதன்படி, 23 மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கு செல்போன்கள் வழங்குவதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு அவை வழங்கப் பட்டுள்ளன. சிவகங்கை மாவட்டம், இளையான்குடி வட்டாட்சியர் குடியிருப்பில் உள்ள பழுதுபார்க்கும் பணிகளை மேற்கொள்ள ரூ.2.60 இலட்சம் வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் ஈரோடு மாவட்டத்தில் சத்தியமங்கலம் வட்டாட்சியர் அலுவலகம் கட்டுவதற்கு ரூ.115.00 இலட்சம் வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. சேலம், திருவண்ணர்மலை மற்றும் கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகங் களுக்குக் கூடுதல் கட்டடங்கள் கட்டுவதற்கும், திருவண்ணாமலை மாவட்ட பெருந்திட்ட வளாகத்தில் பிற அரசுத் துறை அலுவலகங்களுக்குப் புதிய கூடுதல் அடுக்குமாடி கட்டுவதற்கும் விரைவில் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை பிறப்பிக்கப்படவுள்ளது.

### அலுவலகக் கட்டடங்கள்

### மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடங்கள்

மாநிலத்தில் மொத்தமுள்ள 30 மாவட்டங்களில், 28 மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் தற்போது அரசுக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. மீதமுள்ள இரு மாவட்டங்களில் பெரம்பலூர் மாவட்ட



2005 மார்ச் 23]

பெருந்திட்ட வளாகத்தில் பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட பெருந்திட்ட வளாகத்தில் கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகமும் கட்டும் பணிகள் பதினோராவது நிதிக்குழு மானியத்தின்கீழ் ஒப்பளிக்கப்பட்டுள்ளன.

### வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள்

தமிழ்நாட்டிலுள்ள 73 வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகங்களும் அரசு கட்டடங்களில் இயங்கி வருகின்றன.

### வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள்

தமிழ்நாட்டிலுள்ள மொத்தமுள்ள 206 வட்டாட்சியர் அலுவலகங்களில் 188 வட்டாட்சியர் அலுவலகங்கள் அரசுக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. மேலும், 2005-2006 ஆம் ஆண்டு பகுதி 2 திட்டத்தின்கீழ் மணமேல்குடி, எடப்பாடி மற்றும் எட்டயபுரம் ஆகிய மூன்று வட்டாட்சியர் அலுவலகங்கள் கட்டப்படவுள்ளன. மீதமுள்ள வட்டாட்சியர் அலுவலகங்களுக்குக் கட்டடம் கட்டும் பணி வருங்காலத்தில் நிதி நிலைக்கேற்ப படிப்படியாக மேற்கொள்ளப்படும்.

### குடியிருப்புக் கட்டடங்கள்

### மாவட்ட ஆட்சியர்களுக்கு முகாம் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள்

மொத்தமுள்ள 30 மாவட்ட ஆட்சியர்களில் 26 மாவட்ட ஆட்சியர்களுக்கு அரசுக் கட்டடங்களில் முகாம் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்பு வசதி செய்து தரப்பட்டுள்ளது.

மீதமுள்ள 4 மாவட்டங்களில், பதினோராவது நிதிக்குழு மானியத்தின்கீழ் பெரம்பலூர் மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியருக்கு முகாம் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புக் கட்டடம் கட்டும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. அதே போல் கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியருக்கான முகாம் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புக் கட்டடம் அரசால் தேர்வு செய்யப்பட்ட கிருஷ்ணகிரி மாவட்ட பெருந்திட்ட வளாகத்தில் மேற்கொள்ளப்படும். நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் தற்போது துறைமுகத்திற்கு சொந்தமான கட்டடத்தில் குடியிருந்து வருகிறார். அக்கட்டடத்தை அரசுக்கு சொந்தமாக்கவும், அக்குடியிருப்பில் தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் குடியிருக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும்

[2005 மார்ச் 23

சென்னை மாவட்ட ஆட்சியருக்கு முகாம் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்பு கட்டும் பணி இடம் தேர்வு செய்த பின்னர் நிதி நிலைக்கேற்ப வருங்காலத்தில் மேற்கொள்ளப்படும்.

**மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கு முகாம் அலுவலகத்துடன்கூடிய குடியிருப்புகள்**

மொத்தமுள்ள 30 மாவட்ட வருவாய் அலுவலர்களில், 24 மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கு முகாம் அலுவலகத்துடன்கூடிய குடியிருப்புகள் உள்ளன. மீதமுள்ள 6 மாவட்டங்களில், பதினோராவது நிதிக்குழு மானியத்தின்கீழ் பெரம்பலூர், மாவட்ட வருவாய் அலுவலருக்கு முகாம் அலுவலகத்துடன்கூடிய குடியிருப்பு கட்டடத்தின் கட்டுமானப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கிருஷ்ணகிரி மாவட்ட வருவாய் அலுவலருக்கான முகாம் அலுவலகத்துடன் குடியிருப்பு மாவட்ட பெருந்திட்ட வளாகத்தில் கட்டப்படவுள்ளது.

மீதமுள்ள நீலகிரி, நாகப்பட்டினம், சென்னை மற்றும் திருவண்ணாமலை ஆகிய 4 மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கான முகாம் அலுவலகத்துடன்கூடிய குடியிருப்பு கட்டடங்கள் கட்டும் பணி வருங்காலத்தில் நிதி நிலைக்கேற்ப மேற்கொள்ளப்படும்.

**வருவாய்க் கோட்ட அலுவலர்களின் குடியிருப்புக் கட்டடங்கள்**

மொத்தமுள்ள 73 வருவாய்க் கோட்ட அலுவலர்களில், 65 வருவாய்க் கோட்ட அலுவலர்களுக்கு அரசு குடியிருப்புகள் உள்ளன. மீதமுள்ள 8 வருவாய்க் கோட்ட அலுவலர்களில் பதினோராம் நிதிக்குழு மானியத்தின்கீழ் திருத்தணி (திருவள்ளூர்) வருவாய்க் கோட்ட அலுவலருக்கான குடியிருப்பு கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மீதமுள்ள ஏழு வருவாய்க் கோட்ட அலுவலர்களுக்கான குடியிருப்புகள் கட்டும் பணி வருங்காலத்தில் நிதிநிலைக்கேற்ப மேற்கொள்ளப்படும்.

**வட்டாட்சியர்கள் குடியிருப்புகள்**

மொத்தமுள்ள 206 வட்டாட்சியர்களில் 179 வட்டாட்சியர்களுக்கு அரசு குடியிருப்புகள் உள்ளன. மீதமுள்ள வட்டாட்சியர்களுக்கு குடியிருப்புகள் கட்டும் பணி வருங்காலத்தில் நிதிநிலைக்கேற்ப படிப்படியாக மேற்கொள்ளப்படும்.



2005 மார்ச் 23]

**வருவாய் ஆய்வாளர்களுக்கு அலுவலகத்துடன்கூடிய குடியிருப்புகள்**

மொத்தமுள்ள 1,120 வருவாய் ஆய்வாளர்களில் 1,084 வருவாய் ஆய்வாளர்களுக்கு அரசுக் குடியிருப்புகள் உள்ளன. மீதமுள்ள வருவாய் ஆய்வாளர்களுக்கு அலுவலகத்துடன்கூடிய குடியிருப்புகள் கட்டும் பணி வருங்காலத்தில் நிதிநிலைக்கேற்ப படிப்படியாக மேற்கொள்ளப்படும்.

**கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அலுவலகங்கள் மற்றும் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள்**

இம்மாநிலத்தில் மொத்தம் 12,506 கிராம நிர்வாக அலுவலர்கள் உள்ளனர். இவர்கள் அனைவருக்கும் அலுவலகத்துடன்கூடிய குடியிருப்பு வசதிகள் படிப்படியாகச் செய்துதர, அரசு முடிவு செய்தது. முதற்கட்டமாக மலைப் பகுதிகளில் உள்ள கிராமங்களில் 1993-1996 ஆண்டுகளில், பகுதி 2 திட்டத்தின்கீழ் 60 கிராம நிர்வாக அலுவலர்களுக்கும், பதினோராவது நிதிக் குழு மானியத்தின்கீழ் 166 கிராம நிர்வாக அலுவலர்களுக்கும், அலுவலகத்துடன்கூடிய குடியிருப்புகள் (2000-2005) கட்டப்பட்டுள்ளன. ஏற்கெனவே 349 கிராம நிர்வாக அலுவலர்களுக்கு, அலுவலகக் கட்டடங்கள் உள்ளன. இவ்வாறாக 575 கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அலுவலகக் கட்டடங்கள் அமைந்துள்ளது போக எஞ்சியுள்ளவை 11,931 ஆகும்.

2001-2002 ஆம் ஆண்டில் அரசின் திருத்திய கொள்கையின் அணுகுமுறையின்படி மூன்று நிதியாண்டுகளில் 2001-2004 வரை ஆண்டுதோறும் 4,000 கிராம நிர்வாக அலுவலர்களுக்கு ஊராட்சி மன்றக் கட்டடத்துடன் இணைத்து அலுவலகக் கட்டடங்கள் கட்டித்தர அரசு ஆணை பிறப்பித்தது. அதன்படி இம்மூன்றாண்டுகளில் மொத்தம் 11,683 கட்டடங்கள் மேற்கொள்ளப்பட்டு, 11,337 முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள கிராம நிர்வாக அலுவலர்களின் அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணி விரைவில் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வி.எச்.எஃப். / எச்.எஃப். சாதனங்கள் நிறுவுதல்**

கடலோர மாவட்டங்களான 12 மாவட்டங்களில் வி.எச்.எஃப். சாதனங்கள் நிறுவப்பட்டுள்ளன. அவை தற்போது உபயோகப் படுத்தப்படுகின்றன. அக்கடலோர மாவட்டங்களின் மாவட்ட ஆட்சியர்கள் இந்த இருவழித் தொலைத் தொடர்பு சாதனங்கள் பொருத்தப்பட்டது மிகவும் உபயோகமாக உள்ளது என்று கருதுகிறார்கள். இந்த இருவழித் தொலைத் தொடர்பு வசதியினை

வட்டாட்சியர்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கும் (Block Development Officers) உதவும்வகையிலும் மற்றும் கடலோர மாவட்டங்கள் தவிர மீதமுள்ள மாவட்டங்களிலும் பயன்படுத்துவதற்கு இவ்வசதியை ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. அதனால் வெள்ளம்/வறட்சி நிலவும் நேரங்களிலும் மற்றும் அவசரக் காலங்களிலும் கோட்ட அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும் மிகவும் சிறந்த முறையில் இந்தத் தொலைத் தொடர்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கு ஒரு திறனாய்வு ஆராய்ச்சிக் குழு (a Study Group) நியமிக்கப்பட்டுள்ளது. இக்குழு துரிதமாக, குறைந்த செலவில் செயல்திறன் மிக்க இருவழித் தொலைத் தொடர்பு வசதிகள் ஏற்படுத்துவது குறித்து ஆய்வு செய்து ஆலோசனை வழங்கும்.

### நிரந்தர கட்டுப்பாட்டு அறை

பேரிடர் மேலாண்மை தொடர்பான செயலாக்கம் ஆண்டு முழுவதும் கண்காணிக்க நிரந்தர கட்டுப்பாட்டு அறை ஒன்று வருவாய் நிர்வாக ஆணையரகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இதே நோக்கத்திற்காக, அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஒரு கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டு, ஒரு நான்கு இலக்க தொலைபேசி இணைப்பும் (4 digit telephone line) வழங்கப்பட்டுள்ளன. நான்கு இலக்க தொலைபேசி எண் "1070" சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் கட்டுப்பாட்டு அறைக்கும், அனைத்து மாவட்ட ஆட்சியர் கட்டுப்பாட்டு அறைகளுக்கு "நான்கு இலக்க தொலைபேசி எண் "1077"-ம் பி.எஸ்.என்.எல். நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளது. இந்த நான்கு இலக்க தொலைபேசி மூலம் வெள்ளம் போன்ற இயற்கை இடர்பாடு நேரங்களில் தகவல் அறிக்கை கொடுக்க வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### மழை மானி

இந்திய வானிலை ஆராய்ச்சித் துறை, தனது ஆய்வு அறிக்கையில் 26 மாவட்டங்களில் புதிய மழை மானி நிலையங்களுக்கு மாற்று இடம்/சைமன் வடிவ மழை மானிகளை எஃப்.ஆர்.ப்பி. வடிவ மழை மானிகளாக மாற்றி அமைத்தல்/மழை மானி அளவுகளை (Measure Jar) கண்ணாடி ஜார்களாக மாற்றியமைத்தல் ஆகியவை மிகவும் அவசியம் என்று கருத்து வழங்கியுள்ளது. இது தொடர்பாக அரசிற்கு 17 மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து முன்மொழிவுகள் பெறப்பட்டு, கிருஷ்ணகிரி, கன்னியாகுமரி, திருச்சிராப்பள்ளி, தேனி, விருதுநகர், கடலூர்,





சிவகங்கை, வேலூர், நாகப்பட்டினம், விழுப்புரம், கோயம்புத்தூர், திண்டுக்கல், தஞ்சாவூர், தருமபுரி, புதுக்கோட்டை, நாமக்கல் மற்றும் சென்னை மாவட்டம் ஆகிய 17 மாவட்டங்களில் மேற்குறிப்பிட்டபடி எஃப்.ஆர்.ப்பி. வடிவ மழை மானிகளாக மாற்றுதல் / மழை மானி நிலையத்தில் பிளாட்பாரம் உயரம் அதிகரித்து, வேலி அமைத்துப் புதுப்பித்தல் பணிக்காக, பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.3,74,750/- வழங்கப்பட்டுள்ளது.

### 2.8 கிராம நிர்வாகம்

மாவட்ட வருவாய் நிர்வாகத்திற்கு முதன்மை ஆதாரமாகவும் மற்றும் அச்சாணியாகவும் கிராம நிர்வாக அமைப்பு தொடர்ந்து இருந்து வருகிறது. கிராம நிர்வாகம் 14-11-1980-க்கு முன்னர், பகுதிநேர கிராம அலுவலர்களின் உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வந்தது. 1980 ஆம் ஆண்டில் கிராம நிர்வாக அமைப்பை மாற்றம் செய்திட, அரசு முடிவெடுத்தது. அதன்படி, அவசரச் சட்டம் எண் 10/80, மேதகு ஆளுநர் அவர்களால் 13-11-1980 அன்று கொண்டு வரப்பட்டு, பகுதிநேர கிராம அலுவலர்களின் பதவிகளை ஒழிக்க பிரகடனம் செய்யப்பட்டது. தமிழ்நாடு பகுதிநேர கிராம அலுவலர்கள் ஒழிப்புச் சட்டத்தின்படி (எண் 3/81) இப்பதவிகள் 14-11-1980 முதல் ஒழிக்கப்பட்டன. பகுதிநேர கிராம அலுவலர்களுக்குப் பதிலாக முழுநேர கிராம நிர்வாக அலுவலர்கள், மாநிலத்தில் உள்ள அனைத்து வருவாய் கிராமங்களிலும் பணி நியமனம் செய்யப்பட்டனர்.

கிராம நிர்வாக அலுவலர் பதவிகள், அரசு ஆணை எண் 2747, வருவாய்த் துறை, நாள் 12-12-1980-ன்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வரையறைக்குள் கொண்டு வரப்பட்டு இப்பதவிகளுக்கான நியமனம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்மூலம் நேரடியாக நியமனம் செய்யப்படல் வேண்டும் என விதிகளுக்குத் திருத்தங்கள் செய்யப்பட்டன. அதன்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்மூலம் கிராம நிர்வாக அலுவலர்கள் நேரடி நியமனம் செய்யப்பட்டனர்.

இதற்கிடையில், கிராம நிர்வாக அலுவலர்களது பணி நியமனம் தொடர்பாக முன்னாள் பகுதிநேர கிராம அலுவலர்கள், கிராம நிர்வாக அலுவலர் பதவி கோரி வழக்குகளைத் தொடர்ந்ததன் விளைவாக, இந்திய உச்ச நீதிமன்றம் வழங்கிய வழிகாட்டலின்படி 14-11-1980 அன்று பதவி இழந்து குறைந்தபட்சக் கல்வித் தகுதி பெற்றிருந்த முன்னாள் பகுதிநேர கிராம அலுவலர்கள் கீழ்க்கண்ட அரசு ஆணைகளின்படி கிராம நிர்வாக அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டார்கள்.

(i) அரசு ஆணை எண் 1195, வருவாய்த் துறை, நாள் 6-7-1982-இன்படி 14-11-1980 அன்று பதவியில் இருந்து 20-2-1982-ல் குறைந்த பட்சக் கல்வித் தகுதி பெற்றிருந்த முன்னாள் கிராம அலுவலர்கள் (வகைப்பாடு எண் 1) தகுதிகாண் குழு (Screening Committee) மூலம் கிராம நிர்வாக அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டனர். (ii) அரசு ஆணை எண் 1287, வருவாய்த் துறை, நாள் 6-7-1988-ல், 14-11-1980 அன்று பதவியில் இருந்து 20-2-1982-க்குப் பின்னர் எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்ற முன்னாள் கிராம அலுவலர்கள் (வகைப்பாடு எண் 2) வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் பரிந்துரைக்கப்பட்டு கிராம நிர்வாக அலுவலர்களாக பொது விதி 10(ஏ)(1)ன்கீழ் சில நிபந்தனைகளுக்குட்பட்டு நியமனம் செய்யப்பட்டார்கள். (iii) மேலும், தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயம் வழங்கிய நெறிமுறைகளின்படி அரசு ஆணை எண் 954, வருவாய்த் துறை, நாள் 16-10-1997-ல், 14-11-1980 அன்று பதவியில் இல்லாமல், ஆனால், அதற்கு முன்னர் குறுகிய காலம் பணிபுரிந்து, குறைந்தபட்சக் கல்வித் தகுதி மற்றும் இதர தகுதிகள் பெற்ற முன்னாள் கிராம அலுவலர்களை (வகைப்பாடு எண் 3) அவர்களது பணிக்கால அளவின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட முதுநிலைப் பட்டியலின்படி, அப்போதுள்ள காலியிடங்களிலோ அல்லது அதன்பின் எழக்கூடிய காலியிடங்களிலோ கிராம நிர்வாக அலுவலர்களாக நியமனம் செய்யவும் அரசு ஆணையிட்டது.

தற்போதுள்ள கிராம நிர்வாக அமைப்பானது, மேலே தெரிவிக்கப்பட்டுள்ள முன்னுரிமையின்படி, தகுதிகாண் குழுமூலமும் மற்றும் இதர வகைகள்மூலமும், கிராம நிர்வாக அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்ட முன்னாள் கிராம அலுவலர்கள் மட்டுமின்றி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்மூலம் தெரிவு செய்யப்பட்டு நியமனம் செய்யப்பட்டவர்களையும் கொண்டதாக விளங்கி வருகிறது.

**கிராம நிர்வாக அலுவலர்களுக்குப் பதவி உயர்வு**

(ii) அரசாணை (நிலை) எண் 781, வருவாய், நாள் 25-5-1985-ன்படி ஐந்து வருடங்களுக்குக் குறையாமல் பணியாற்றிய கிராம நிர்வாக அலுவலர்கள், பணி மாறுதலில் ஒவ்வொரு ஆண்டும் மாவட்டத்தில் ஏற்படும் இளநிலை உதவியாளர் காலியிடங்களில் 20 விழுக்காடு இளநிலை உதவியாளர்களாக நியமனம் செய்ய ஆணையிடப்பட்டது.





பின்னர், மேற்கூறிய அரசாணையை இரத்து செய்து, அரசாணை (நிலை) எண் 386, வருவாய் (பணி7-1) துறை, நாள் 1-10-2001-ல் 10 வருடம் பணி முடித்திருக்கும் தேர்வுநிலை கிராம நிர்வாக அலுவலர்களை, நேரடியாக, உதவியாளர்களாக சில நிபந்தனைகளுக்குட்பட்டு மாவட்டங்களில் வருவாய்த் துறையில் ஏற்படும் உதவியாளர் காலிப் பணியிடங்களில் 10 விழுக்காடு மட்டுமே பதவி உயர்வு அளிக்க வரையறுக்கப்பட்டு ஆணையிடப்பட்டது. மேலும் இளநிலை உதவியாளர்களாக பணிமாற்றம் பெற்று பணிபுரிந்துவரும் கிராம நிர்வாக அலுவலர்களின் பணி மூப்பினை, தற்பொழுது உதவியாளர் பணி உயர்வுக்குத் தகுதி பெற்றிருக்கும் தேர்வுநிலை கிராம நிர்வாக அலுவலர்களின் பணி மூப்புடன் சேர்த்து ஒருங்கிணைந்த பணி மூப்புப் பட்டியல் தயாரிக்கப்பட வேண்டும் என்று அரசு வலியுறுத்தியது.

மேற்கண்ட அரசு ஆணையினைச் செயல்படுத்துவதில் சில நடைமுறை சிக்கல்கள் எழுந்ததையடுத்து, சில தெளிவுரை ஆணை வெளியிட அரசு கேட்டுக்கொள்ளப்பட்டது.

மேற்படி அரசாணைக்குத் திருத்தங்கள் வெளியிட்டு, அரசாணை நிலை எண் 330, (பணி 7-1) வருவாய்த் துறை நாள் 12-7-2004-ல் ஆணையிடப்பட்டது. இதன்படி, மாவட்டங்களில் வருவாய்த் துறையில் ஏற்படும் உதவியாளர் பணி காலியிடங்களில் 10 விழுக்காடு இடங்களில் மட்டுமே, தேர்வு நிலை கிராம நிர்வாக அலுவலர்களுக்கு உதவியாளர்களாகப் பதவி உயர்வு அளிக்க வேண்டும். மேலும், இளநிலை உதவியாளர்களாக ஏற்கெனவே பணி மாற்றம் பெற்ற கிராம நிர்வாக அலுவலர்களுக்கு வருவாய்த் துறையில், முறையாக நியமனம் செய்யப்பட்ட இளநிலை உதவியாளர்களுக்கு எவ்வாறு உதவியாளர்களாகப் பதவி உயர்வு வழங்கப்படுகிறதோ, அதேபோன்றே பதவி உயர்வு வழங்க வேண்டும் என மேற்படி அரசாணையில் வரையறுக்கப்பட்டுள்ளது.

**முன்னாள் கிராம அலுவலர்களுக்கு ஓய்வூதியம் வழங்குதல்**

1980 வரை கிராம அலுவலர்கள்மூலம் கிராம நிர்வாகம் நடத்தப்பட்டு வந்தது. கிராம நிர்வாகத்தைச் சீரமைக்கும் நோக்குடன் 10/80 அவசரச் சட்டம் 13-11-1980 அன்று பிரகடனம் செய்யப்பட்டதன்படி 14-11-1980 முதல் பகுதிநேர கிராம அலுவலர்கள் பதவிகள் அனைத்தும் ஒழிக்கப்பட்டன.

[2005 மார்ச் 23

பகுதிநேர கிராம அலுவலர் பதவிகள் 14-11-1980 முதல் ஒழிக்கப்பட்டதனால் பணியிழந்த முன்னாள் கிராம அலுவலர்களுக்கு சிறப்பு ஓய்வூதியம் 5-12-1986 முதல் வழங்கிட அரசாணை (நிலை) எண் 828, வருவாய் (இ-சிறப்பு) துறை, நாள் 23-8-1996-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அதன்படி, முன்னாள் பகுதிநேர கிராம அலுவலர்கள் கீழ்க்கண்டவாறு சிறப்பு ஊதியம் பெறத் தகுதியுடையவர்கள்:

1. முன்னாள் கிராம அலுவலர்களுக்கு, ஒவ்வொரு மாதமும் ரூ.175/- மற்றும் அதற்குரிய படிகளுடன் வழங்கப்பட்டுவந்த ஓய்வூதியத்தை, அரசாணை (பல்வகை) எண் 629, வருவாய்த் (பணி 7) துறை, நாள் 22-07-1998-ல் ரூ.250/- ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது. (1-7-2004 முதல் மாதம் ஒன்றுக்கு மொத்தம் ரூ.848/- சிறப்பு ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது.)

2. 14-11-1980 அன்று பணியிலிருந்து, பின்னர் உயிரிழந்த முன்னாள் கிராம அலுவலர்களின் குடும்பத்திற்கு மாதம் ரூ.100/- குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட்டு வந்ததை, அரசாணை (பல்வகை) எண் 629, வருவாய்த் (பணி 7) துறை, நாள் 22-7-1998-இல் ரூ.150/-ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.

3. 14-11-1980 அன்று தற்காலிகப் பணி நீக்கம்/ விடுப்பில் இருந்த முன்னாள் கிராம அலுவலர்களுக்கும் அரசாணை (பல்வகை) எண் 753, வருவாய்த் (பணி 7) துறை, நாள் 9-9-1998-இன்மூலம் இச்சிறப்பு ஓய்வூதியத் திட்டத்தை அரசு நீட்டித்துள்ளது.

4. 14-11-1980 அன்று பணியிழந்து, 20-2-1982-க்குப் பின்னர் குறைந்தபட்சக் கல்வித் தகுதி பெற்று, கிராம நிர்வாக அலுவலராக நியமனம் செய்யப்பட்ட முன்னாள் கிராம அலுவலர்களில், 10 ஆண்டு குறைந்தபட்சத் தகுதி பணி முடித்திடாமல் ஓய்வு பெற்றவர்களுக்கும் முன்னாள் கிராம அலுவலர்களுக்கான சிறப்பு ஓய்வூதியத் திட்டத்தை நீட்டித்து, அரசாணை (பல்வகை) எண் 121, வருவாய்த் (பணி 7) துறை, நாள் 13-3-2001-ல் ஆணையிடப்பட்டுள்ளது.

5. அரசாணை (பல்வகை) எண் 2261, வருவாய்த் துறை, நாள் 9-10-1978 ன்படி, 30-9-1980 அன்று 60 வயது பூர்த்தியாகி ஓய்வுபெற்ற கிராம அலுவலர்களுக்கும் முன்னாள் கிராம அலுவலர்களுக்குரிய சிறப்பு ஓய்வூதியத்தை வழங்கிட, அரசாணை (பல்வகை) எண் 294, வருவாய்த் (பணி 7) துறை, நாள் 30-8-2001-ல் ஆணையிடப்பட்டுள்ளது. இவ்வாறு 14-11-1980-க்கு முன்னர் ஓய்வு பெற்ற கிராம அலுவலர்களும் இச்சிறப்பு ஓய்வூதியத்தின் பலனைத் துய்க்க அனுமதிக்கப்பட்டனர்.



2005 மார்ச் 23]

**கிராம உதவியாளர்கள் பணியமைப்பு**

1-6-1995-க்கு முன்பாக பகுதிநேர கிராமப் பணியாளர்கள் தொகுப்பூதிய அடிப்படையில் பணிபுரிந்து வந்தனர். அரசாணை எண் 625, வருவாய்த் துறை, நாள் 6-7-1995 மூலம் பகுதிநேர கிராமப் பணியாளர்கள் 1-6-1995 முதல் முழுநேர அரசுப் பணியாளர்களாக அமர்த்தப்பட்டு, புதிய ஊதிய ஏற்ற முறையில் ரூ.600-10-750 ஆக ஊதியம் வழங்கப்பட்டது. ஆறாவது ஊதியக் குழு பரிந்துரைப்படி கிராம உதவியாளர் ஊதியம் ரூ.1800-20-2240 எனத் திருத்தியமைக்கப்பட்டது. அரசாணை எண் 521, வருவாய்த் துறை, நாள் 17-6-1998-ல் முழுநேர கிராம உதவியாளர்கள் பதவிக்குரிய பணி விதிமுறைகள் நிர்ணயம் செய்யப்பட்டன. அரசாணை எண் 362, வருவாய்த் துறை நாள் 7-7-1999-ன்படி பணி வரன்முறை செய்யப்பட்ட கிராம உதவியாளர்கள், பணியிலிருக்கும்போது மரணமடையும்பட்சத்தில், அவர்களது வாரிசுதாரர்கள் நடைமுறையில் உள்ள விதிகளின்படி, கருணை அடிப்படையில் அரசுப் பணியில் நியமனம் பெறத் தகுதியுடையவர்கள் ஆவர்.

**கிராமப் பணியாளர்கள்/கிராம உதவியாளர்கள் பணப் பயன்கள்**

அரசாணை(நிலை) எண் 1495, வருவாய்த் துறை, நாள் 1-9-1984-ன்படி 60 வயது பூர்த்தி அடைந்து, ஓய்வுபெறும் பகுதிநேர கிராமப் பணியாளர்களுக்கு அவர்கள் பணி செய்த மொத்த காலத்தினை கணக்கிற் கொண்டு ஒவ்வொரு வருடத்திற்கும் அரை மாத ஊதியம் எனக் கணக்கிட்டு ஒரு தொகை வழங்கப்பட வேண்டுமென ஆணையிடப்பட்டுள்ளது.

அரசு கடித (பல்வகை) எண் 112, வருவாய்த் (பணி 7-2) துறை, நாள் 4-3-2002-ல், 1-6-1995 முதல் 31-5-2000 வரையிலான காலத்தில் ஓய்வு பெற்ற கிராம உதவியாளர்களுக்கு அவர்கள் பணிபுரிந்த மொத்த

[2005 மார்ச் 23

பணிக் காலத்தைக் கருத்திற் கொண்டு, ஒவ்வொரு ஆண்டுக்கும் அரை மாத ஊதியத்தினைப் பணிக் கொடையாக வழங்கிடவும், 31-5-2000-க்குப் பின் ஓய்வு பெற்றவர்களுக்கு இறப்பு மற்றும் ஓய்வுகால பணிக்கொடையினைத் தமிழ்நாடு ஓய்வூதிய விதிகளின்படி வழங்கிடவும் ஆணையிடப்பட்டுள்ளது.

**2.9 நில வரி (பசலி 1413 )**

வருவாய் நிலை ஆணை 1-ன்படி ஒரு நிலத்தின் மண் வளம், நீர்ப்பாய்ச்சல் ஆதாரம் மற்றும் தரம் ஆகியவற்றின் அடிப்படையில் அடிப்படைத் தீர்வை நிர்ணயிக்கப்படுகிறது. அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட அடிப்படைத் தீர்வையை அடிப்படையாகக் கொண்டு தண்ணீர்த் தீர்வை, தல வரி, தல மேல்வரி போன்ற பிற வரிகளும் கணக்கிடப்பட்டு, அவற்றின் மொத்த கூட்டுத் தொகையினை நில வரி என்ற பெயரில் பட்டாதாரரிடமிருந்து வசூல் செய்யப்படுகின்றது. புன்செய் நிலங்களுக்கு விதிக்கப்படும் அடிப்படைத் தீர்வை 1-7-1967 முதல் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அதேபோல் 5 ஏக்கர் மற்றும் அதற்கும் குறைவாக தனிநபருக்குச் சொந்தமாக உள்ள நன்செய் நிலங்களுக்கு புன்செய் நிலத் தீர்வைக்குச் சமமான அடிப்படைத் தீர்வை 1-7-1971 முதல் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

நில வரி நிலப் பட்டாதாரர்களிடமிருந்து சுமுகமான முறையில் வசூல் செய்யப்படுகிறது. தற்போது அமலிலுள்ள அரசு ஆணையின்படி, நில வரி பாக்கிக்காக ஜப்தி நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதில்லை.

1413 ஆம் பசலியில் மாநிலத்தில் நிலவிய வறட்சியின் காரணமாக அரசு ஆணை எண் 78, வருவாய் (இ.இ.3) துறை, நாள் 16-02-2004-ன்படி சென்னை தவிர இதர 29 மாவட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக, தமிழக அரசால் அறிவிக்கப்பட்டன. அதன் காரணமாக, அரசாணை எண் 76, வருவாய்த் துறை, நாள் 13-2-2004-ல், பட்டாதாரர்களிடமிருந்து வசூல் செய்யப்பட வேண்டிய அடிப்படைத் தீர்வை, தல வரி, தல மேல்வரி, தண்ணீர்த் தீர்வை, கூடுதல் தீர்வை, கூடுதல் தண்ணீர்த் தீர்வை, சிறப்புத் தீர்வை, சிறப்புத் தண்ணீர்த் தீர்வை மற்றும் வணிகப் பயிர்த் தீர்வை ஆகியவற்றின் தொகை ரூ.60 கோடிக்குத் தள்ளுபடி செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மேற்கண்ட அரசாணைக்கிணங்க, 1413 பசலிக்கு அனைத்து பட்டாதாரர்கள் செலுத்த வேண்டிய அடிப்படைத் தீர்வை / தல வரி / தல மேல்வரி முதலான தீர்வைகளை உள்ளடக்கிய மொத்தத் தொகை



2005 மார்ச் 23]

ரூ.36.69 கோடி (ரூபாய் முப்பத்தாறு கோடியே அறுபத்தொன்பது இலட்சங்கள்) தள்ளுபடி செய்யப்பட்டது. விவரங்கள் பின்வருமாறு:-

(ரூபாய் இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 1. | அடிப்படைத் தீர்வை | 469.15 |
| 2. | தண்ணீர்த் தீர்வை | 37.39 |
| 3. | தல வரி | 481.39 |
| 4. | தல மேல்வரி | 2,429.63 |
| 5. | கூடுதல் தீர்வை | 171.60 |
| 6. | கூடுதல் தண்ணீர்த் தீர்வை | 79.55 |
| 7. | வணிகப் பயிர்த் தீர்வை | 0.19 |
| | **மொத்தம்** | 3,668.90 |

பசலி 1413-1414-க்கான நில வரி கேட்பு, வசூல் மற்றும் நிலுவை 28-2-2005 வரையிலான விவரம் கீழ்க்கண்டவாறு கொடுக்கப் பட்டுள்ளது :

(ரூபாய் கோடியில்)

| | | |
|---|---|---|
| 1. கேட்பு | | 74.42 |
| 2. தடையாணையின்படி நிலுவை | 9.87 | |
| 3. தள்ளுபடி (அரசாணை எண் 76, வருவாய்த் துறை, நாள் 13-2-2004) | 36.69 | |
| | | 46.56 |
| 4. வசூலிக்கக்கூடிய கேட்பு | | 27.86 |
| 5. 1-01-2004 முதல் 28-2-2005 வரை வசூல் | | 7.52 |
| 6. 28-2-2005 அன்றைய தேதியில் நிலுவை | | 20.34 |

## 2.10 இயற்கை இடர்பாடுகள்

### மழை / வெள்ளம்

தமிழ்நாட்டில் ஓர் ஆண்டிற்கு இயல்பாகப் பெய்யவேண்டிய மழை அளவு 979 மி.மீ ஆகும். தமிழ்நாட்டில் மழைக் காலமானது, குளிர் கால மழை, கோடைக்கால மழை, தென்மேற்குப் பருவகால மழை மற்றும் வடகிழக்குப் பருவகால மழை என நான்கு பருவமழை காலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதில், ஆண்டு சராசரி மழையளவில் தென்மேற்குப் பருவமழைக் காலத்தில் 33 சதவீதமும் வடகிழக்குப் பருவமழைக் காலத்தில் 48 சதவீதமும் தோராயமாக மழை பெய்திட வேண்டும்.

2004 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் ஜனவரி முதல் டிசம்பர் திங்கள் வரை பெய்துள்ள மழை அளவு 1126.91 மி.மீ. ஆகும். இது 17 சதவீதம் சராசரி ஆண்டு மழையளவை விட அதிகமானது ஆகும். குளிர்காலத்தில் (1-1-2004 முதல் 28-2-2004 வரை) 11.87 மி.மீ. மழையும் கோடைக் காலத்தில் (1-3-2004 முதல் 31-5-2004 வரை) 283.13 மி.மீ. மழையும், தென்மேற்குப் பருவமழைக் காலத்தில் (1-6-2004 முதல் 30-9-2004 வரை) 359.65 மி.மீ. மழையும் மற்றும் வடகிழக்குப் பருவமழைக் காலத்தில் (1-10-2004 முதல் 31-12-2004 வரை) 472.26 மி.மீ மழையும் பெய்துள்ளது.

**2004-ஆம் ஆண்டுக்கான மழை விவரம்**

| வ. எண் | மாவட்டம் | இயல்பான மழை (மி.மீ.) | பெய்த மழை (மி.மீ.) | % விலக்கம் |
|---|---|---|---|---|
| | **குறைவான மழை** | | | |
| 1 | தேனி | 833.5 | 575.6 | -31% |
| 2 | விருதுநகர் | 829.6 | 643.3 | -22% |
| | **இயல்பான மழை** | | | |
| 3 | காஞ்சிபுரம் | 1252.1 | 1129.2 | -10% |
| 4 | திருவள்ளூர் | 1152.8 | 1048.1 | -9% |
| 5 | நாமக்கல் | 776.5 | 729.3 | -6% |
| 6 | வேலூர் | 917.0 | 904.3 | -1% |
| 7 | சென்னை | 1298.1 | 1298.6 | 0% |
| 8 | கோயம்புத்தூர் | 694.4 | 711.9 | 3% |
| 9 | கன்னியாகுமரி | 1006.0 | 1039.1 | 3% |
| 10 | மதுரை | 840.0 | 911.0 | 8% |
| 11 | கரூர் | 742.2 | 818.3 | 10% |
| 12 | சேலம் | 898.0 | 1009.1 | 12% |
| 13 | ஈரோடு | 711.4 | 811.0 | 14% |
| 14 | பெரம்பலூர் | 949.6 | 1109.4 | 17% |
| 15 | நீலகிரி | 1695.7 | 1984.5 | 17% |
| | **அதிக மழை** | | | |
| 16 | தர்மபுரி | 855.9 | 1053.1 | 23% |
| 17 | தஞ்சாவூர் | 1053.0 | 1309.2 | 24% |
| 18 | திண்டுக்கல் | 831.6 | 1043.8 | 26% |
| 19 | சிவகங்கை | 876.0 | 1109.3 | 27% |
| 20 | புதுக்கோட்டை | 921.5 | 1171.1 | 27% |
| 21 | தூத்துக்குடி | 655.7 | 841.3 | 28% |
| 22 | கடலூர் | 1235.8 | 1625.9 | 32% |
| 23 | திருச்சிராப்பள்ளி | 761.5 | 1002.0 | 32% |
| 24 | நாகப்பட்டினம் | 1341.7 | 1794.2 | 34% |
| 25 | இராமநாதபுரம் | 821.2 | 1116.9 | 36% |
| 26 | திருவண்ணாமலை | 1046.6 | 1457.5 | 39% |
| 27 | திருநெல்வேலி | 736.9 | 1051.4 | 43% |
| 28 | விழுப்புரம் | 1029.4 | 1539.8 | 50% |
| 29 | திருவாரூர் | 1129.9 | 1842.1 | 63% |
| | **மாநில சராசரி** | **961.85** | **1126.91** | **17%** |

[2005 மார்ச் 23

தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 12 மாவட்டங்கள் தென்மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவகாலங்களில் வங்காள விரிகுடாவில் ஏற்படும் காற்றழுத்தத் தாழ்வு நிலை (Trough), காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் (Low Pressure / Depression) போன்றவற்றின் தாக்கத்தினால் ஒவ்வொரு ஆண்டும் பெரிதும் பாதிப்புக்குள்ளாகின்றன. வடகிழக்குப் பருவமழைக் காலத்தில் மழை, வெள்ளம், புயல், ஆகியவற்றால் ஏற்படும் எதிர்பாரா நிகழ்வுகளைச் சமாளிக்கும்பொருட்டு ஒவ்வொரு ஆண்டும் பேரழிவு தணிப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை திட்டம், அனைத்து மாவட்டங்களிலும் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் வடகிழக்குப் பருவமழைக் காலம் துவங்குவதற்கு முன்பாகவே அதனால் ஏற்படக்கூடிய இடர்பாடுகளைச் செவ்வனே சமாளிக்கும்பொருட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மற்றும் நிவாரண நடவடிக்கைகள் எடுக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவரால் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் (District Coordination Committee Meeting) நடத்தப்படுகிறது. கடந்த ஆண்டுகளில் இயற்கை இடர்பாடுகள் மேலாண்மையில் ஏற்பட்ட அனுபவங்களைக் கொண்டும், ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் பெறப்பட்ட ஆலோசனைகளின்படியும் மாவட்ட அளவில் அவசரகாலத் திட்டம் தயாரிக்கப்பட்டு, அதன்படி பேரழிவு தணிப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை திட்டம், மாவட்ட ஆட்சியர்களால் செயல்படுத்தப்படுகிறது. மேலும், அரசுத் தலைமைச் செயலர் தலைமையில், தொடர்புடைய துறை அலுவலர்கள் அடங்கிய மாநில அளவிலான உயர்மட்டக் குழுக் கூட்டம், வடகிழக்குப் பருவமழைக் காலத்திற்கு முன்பாகவே கூட்டப்பட்டு, மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்குத் தக்க அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

6-11-2002 அன்று சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மழையினால் ஏற்படும் சேதங்கள் குறித்து நிவாரண நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து மேற்கொள்ள நிவாரணக் குழு ஒன்றினை சென்னை மாநகராட்சி ஆணையரின் தலைமையில் அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது.



2005 மார்ச் 23]

வெள்ளம், புயல், தீ விபத்து போன்ற இயற்கைச் சீற்றங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பின்வருமாறு நிவாரணம் வழங்கப்படுகிறது:

(அ) உயிரிழந்த நபர்கள் ஒவ்வொருவரின் குடும்பத்திற்கும் நிவாரணமாக ரூ.15,000/-மாவட்டாட்சியர்களால் உடனடியாக வழங்கப்படுகிறது.

(ஆ) முழுமையாக பாதிக்கப்பட்ட குடிசை ஒன்றுக்கு ரூ. 2000/- வீதமும், பகுதியாக பாதிக்கப்பட்ட குடிசை ஒன்றுக்கு ரூ.1000/- வீதமும் நிவாரணத் தொகை வழங்கப்படுகிறது. மேலும், பாதிக்கப்பட்ட மக்களுக்குக் குடும்பத்திற்கு ஒரு வேட்டி, ஒரு சேலை, 5 கிலோ அரிசி மற்றும் ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் ஆகியவை இலவசமாக வழங்கப்படுகின்றன.

(இ) இறந்த கால்நடைகளுக்கு அதாவது, பசு, காளை மற்றும் எருமை ஒன்றுக்கு ரூ.5000/- வீதமும், பசு / எருமைக் கன்று ஒன்றுக்கு ரூ.3000/- வீதமும், செம்மறி ஆடு / வெள்ளாடு ஒன்றுக்கு ரூ.1000/- வீதமும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் இரண்டு கால்நடைகளுக்கு மிகாமல் நிவாரணம் வழங்கப்படுகிறது.

(ஈ) பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணத் தொகையினை உடனடியாக வழங்கும்பொருட்டு கருவூல விதி 27-ன்கீழ் மாவட்டாட்சியர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

(உ) வெள்ளம் / புயல் / வறட்சியால் பாதிக்கப்பட்ட பல்வகை பயிர்களுக்குப் பின்வருமாறு நிவாரணம் வழங்கப்படுகிறது:

**சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு உதவி வேளாண்மை இடு பொருள் மானியம் 50 சதவீதம் மற்றும் அதற்குமேல் பயிர் இழப்பிற்கு**

| | |
|---|---|
| வேளாண் பயிர்கள், தோட்டக் கலைப் பயிர்கள் மற்றும் வருடாந்திர பண்ணைத் தோட்டப் பயிர்கள் | மழையை நம்பி பயிர் செய்யப்படும் பகுதிகள் ஒரு ஹெக்டேருக்கு ரூ.1000/- |
| | உறுதியளிக்கப்பட்ட பாசன வசதியுள்ள பகுதிகள் ஒரு ஹெக்டேருக்கு ரூ.2500/- |
| ஆண்டு முழுவதும் உள்ள பயிர்கள் | ஒரு ஹெக்டேருக்கு ரூ.4000/- |

53-43—17

| | |
|---|---|
| முசுக்கொட்டை மரம் | ஒரு ஹெக்டேருக்கு ரூ.1500/- |
| சிறு, குறு விவசாயிகளல்லாத மற்ற விவசாயிகளுக்கு | ஹெக்டேருக்கு ரூ.1000/- வீதம் அதிகபட்சமாக இரண்டு ஹெக்டேருக்கு மட்டும் |

### தென்மேற்குப் பருவமழை 2004

தென்மேற்குப் பருவமழையின் இயல்பான காலம் ஜுன் மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரை ஆகும். 2004 ஆம் ஆண்டு தென்மேற்குப் பருவமழைக் காலத்தில் பெய்ய வேண்டிய இயல்பான மழை அளவான 331.48 மி.மீ.க்குப் பதிலாக 359.65 மி.மீ. மழை பெய்துள்ளது. ஆகவே, தமிழ்நாட்டில் தென்மேற்குப் பருவமழைக் காலத்தில் (1-6-2004 முதல் 30-09-2004) இயல்பான மழையே பெய்துள்ளது. கோயம்புத்தூர், திண்டுக்கல், கன்னியாகுமரி, கரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, தூத்துக்குடி, திருச்சி, திருநெல்வேலி மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்கள் கூடுதலாக மழை பெற்றுள்ளன. (19 சதவீதத்திற்கு மேல்) நாமக்கல் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்கள் குறைந்த அளவாக 36 சதவீதம் மற்றும் 22 சதவீதம் மழை பெற்றுள்ளன. சென்னை, கடலூர், தர்மபுரி, ஈரோடு, காஞ்சிபுரம், மதுரை, நீலகிரி, பெரம்பலூர், சேலம், தஞ்சாவூர், தேனி, வேலூர் விழுப்புரம் மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்கள் இயல்பான அளவு மழை பெற்றுள்ளன.

### வடகிழக்குப் பருவமழை 2004

வடகிழக்குப் பருவமழைக் காலம் அக்டோபர் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை ஆகும். 2004 ஆம் ஆண்டில் வடகிழக்குப் பருவமழை 18-10-2004 அன்று இயல்பாகத் தொடங்கவேண்டிய நாளில் தொடங்கியது. வடகிழக்குப் பருவமழைக் காலத்தில் பெய்ய வேண்டிய இயல்பான மழை அளவான 464.56 மி.மீ.-க்கு 472.26 மி.மீ. மழை பெய்துள்ளது. சென்னை, கோயம்புத்தூர், காஞ்சிபுரம், கன்னியாகுமரி, கரூர், திருவள்ளூர், வேலூர் மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்கள் இப் பருவமழைக் காலத்தில் குறைவான மழை அளவைப் பெற்றன. கடலூர், நாகப்பட்டினம், நீலகிரி, இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் அதிக மழை பெய்துள்ளது. தர்மபுரி, திண்டுக்கல், ஈரோடு, மதுரை, நாமக்கல், பெரம்பலூர், புதுக்கோட்டை, சேலம், சிவகங்கை, தஞ்சாவூர், தேனி,



திருச்சிராப்பள்ளி, திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் இயல்பான அளவு மழை பெய்துள்ளது. இப் பருவ-மழைக் காலத்தில் தமிழ்நாட்டில் 159 மனித உயிரிழப்புகள் மற்றும் 404 கால்நடை உயிரிழப்புகளும் ஏற்பட்டன. 5,355 குடிசைகள் முழுமையாகவும் 35,615 குடிசைகள் பகுதியாகவும் சேதமடைந்தன. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக மாவட்ட ஆட்சியர்களால் நிவாரணம் வழங்கப்பட்டது.

### 28-10-2004 முதல் 31-10-2004 வரை பெய்த கனமழையினால் ஏற்பட்ட பாதிப்புகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

வடகிழக்குப் பருவகாலம் தொடங்கிய சில நாட்களில், 28-10-2004 அன்று வங்காள விரிகுடாவில் ஏற்பட்ட காற்றழுத்தத் தாழ்வு மண்டலத்தினைத் தொடர்ந்து கடலோர மாவட்டங்களான சென்னை, விழுப்புரம், கடலூர், திருவாரூர், நாகை, தஞ்சாவூர் மாவட்டங்களிலும் மற்றும் நீலகிரி மாவட்டத்திலும் பலத்த கனமழையும், பெரம்பலூர் திருச்சி, இராமநாதபுரம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் பரவலான கனமழையும் 31-10-2004 வரை பெய்தது. இதன் விளைவாக விழுப்புரம், கடலூர், திருவாரூர், நாகை மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு, வேளாண் பயிர்கள் குறிப்பாக நெற்பயிர்கள் அதிக பரப்பளவில் வெள்ள நீரில் மூழ்கின. மேலும் வெள்ள நீர், குடியிருப்புப் பகுதிகளில் புகுந்ததால், குடிசைகளுக்குச் சேதமும், மனித உயிரிழப்புகளும், கால்நடைகள் உயிரிழப்புகளும் நிகழ்ந்ததுடன் நீர் ஆதாரங்கள், சாலைகள், கால்வாய்கள், பாலங்கள் மற்றும் அரசுக் கட்டடங்களுக்கு பலத்த சேதங்களையும் விளைவித்தது.

### வெள்ளத்தால் ஏற்பட்ட சேதங்கள்

வெள்ளப் பெருக்கினால், திருவாரூர், நாகை, தஞ்சை மாவட்டங்களில் உள்ள ஆறுகள் மற்றும் கால்வாய்களின் கரைகள், மதகுகள் போன்றவற்றிற்குக் கடுமையான சேதங்களை ஏற்படுத்தியது. இதனால், பல்லாயிரக்கணக்கான ஹெக்டேரில் உள்ள நெற்பயிர்கள் நீரில் மூழ்கின. கடலூர் மாவட்டத்திலுள்ள வீராணம் ஏரிக்கு அதிக நீர் வரத்து இருந்தமையாலும் ஏரியிலிருந்து அதிக உபரி நீர் வெளியேற்றப்பட்டதாலும், அம்மாவட்டத்தில் பெய்த கனமழையினால் ஏற்பட்ட வெள்ளத்தாலும், மாவட்டத்தில் சிதம்பரம் மற்றும் காட்டுமன்னார்கோயில் பகுதிகளில் பயிர் செய்யப்பட்டிருந்த நெற்பயிர்கள் நீரில் மூழ்கின. இந்தக் கடும் வெள்ளத்தால் கிராமப்

பகுதிகளில் வெள்ள நீர் புகுந்ததால், ஆயிரக்கணக்கான குடிசைகளில் வாழும் மக்கள் தங்கள் குடியிருப்பிலிருந்து பாதுகாப்பான இடத்திற்கு இடம் பெயர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. மேலும் விருத்தாசலம் வட்டத்தில் மணிமுக்தா ஆற்றின் குறுக்கே உள்ள பாலம் மேற்கண்ட பலத்த மழையினால் சேதமடைந்து போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இதுபோன்று விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள மணிமுக்தா அணைக்கு அதிக நீர்வரத்து வந்ததைத் தொடர்ந்து அதிக அளவு வெளியேற்றப்பட்ட உபரி நீருடன் வெள்ள நீரும் சேர்ந்து பாசன ஆதாரங்கள், அவற்றின் கரைகள், மதகுகள், விவசாய நிலங்கள், சாலைகள், பாலங்கள் மற்றும் அரசுக் கட்டடங்களுக்கு பலத்த சேதத்தினை விளைவித்தது.

கடும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஆறு மாவட்டங்களில் உள்ள 32 வட்டங்களும், அதிலுள்ள 1,728 கிராமங்களும், 1,622 கிராமப் பஞ்சாயத்துகளும், 37 சிறப்புக் கிராமப் பஞ்சாயத்துகளும், 16 நகராட்சிகளும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டன. இதனால் 28.56 இலட்சம் மக்கள் பாதிப்படைந்தார்கள். 1020 கிராமங்களில் வெள்ள நீர் சூழப்பட்டதால் 4.45 இலட்சம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டன. இதனால் 7.22 இலட்சம் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டார்கள். பாதிக்கப்பட்டவர்களுக்கு 10.69 லட்சம் உணவுப் பொட்டலங்களும், 2.21 இலட்சம் கிலோ அரிசியும், 17,870 லிட்டர் மண்ணெண்ணெயும், 20,923 சேலைகளும் 20,923 வேட்டிகளும் வழங்கப்பட்டன. மேலும் 2,755 குடிசைகள் முழுமையாகவும் 28,211 குடிசைகள் பகுதியாகவும் பாதிப்பிற்குள்ளாயின. 78 மனித உயிரிழப்புகளும், 92 கால்நடை உயிரிழப்புகளும் ஏற்பட்டன. இக்கடும் மழையின் காரணமாக பொதுப் பணித் துறையின் பராமரிப்புகளிலிருக்கும் பாசன ஆதாரங்களுக்குக் கடுமையான சேதம் ஏற்பட்டது. இதனால் 1,424 இடங்களில் ஆற்றின் கரைகள், பாசனக் கால்வாயின் கரைகளில் உடைப்பு ஏற்பட்டது. மேலும் 473 ஏரிகளில் உடைப்புகள் ஏற்பட்டன. இம்மாவட்டங்களில் 178.79 கி.மீ. தேசிய நெடுஞ்சாலைகளும், 688 கி.மீ. முக்கிய மாவட்டச் சாலைகளும், 1613.49 கி.மீ. பிற மாவட்டச் சாலைகளும், 1470.53 கி.மீ. மாநில நெடுஞ்சாலைகளும், 309.30 கி.மீ. நகராட்சிச் சாலைகளும், 1074.40 கி.மீ. ஊரகச் சாலைகளும், 3699.45 கி.மீ. ஊராட்சிக்குச் சொந்தமான சாலைகளும் 204.16 கி.மீ. சிறப்புக் கிராமப் பஞ்சாயத்துச் சாலைகளும், 374 சிறுபாலங்களும் 839 மின்சார கம்பங்களும், 508 அரசுக் கட்டடங்களும், 945 பொது கட்டடங்களும், சேதமடைந்ததாக மாவட்ட ஆட்சியர்கள் தெரிவித்துள்ளார்கள்.



இக்கடும் வெள்ளத்தால் பெரிதும் பாதிப்பிற்குள்ளானவர்கள் விவசாயிகளே ஆவார்கள். கடந்த மூன்று ஆண்டுகளில் கடுமையான வறட்சியின் காரணமாக, இம்மாவட்டங்களில் நெற்பயிர் சாகுபடி கடுமையான பாதிப்பிற்குள்ளாயின. இவ்வாண்டு மேட்டூர் அணையிலிருந்து காவிரி நீர்ப் பாசனத்திற்குத் திறந்துவிடப்பட்டதால் குறுவை / சம்பா சாகுபடி செய்தார்கள். அப்பயிர்கள் நல்ல நிலையில் இருந்தபோது, இக்கடும் மழையினால் பெரும்பான்மையான நெற்பயிர்கள் நீரில் மூழ்கி கடுமையான சேதத்தையும் இழப்பையும், சொல்ல முடியாத துயரத்தையும் காவிரி டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு ஏற்படுத்தியது. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குவதற்குப் பாதிக்கப்பட்ட நிலங்களின் பரப்புக்களை அறிவதற்கு மாவட்ட ஆட்சியர்கள் அறிக்கை அனுப்பும்படி கோரப்பட்டதில் 50 சதவீதத்திற்குமேல் பாதிப்படைந்த பயிரின் பரப்பளவு 1,76,864.43 ஹெக்டேர் என்று அறிக்கைகள் பெறப்பட்டன.

இவ்வியற்கை இடர்பாடுகளால் உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு உடனடி நிவாரணமாக தலா ரூ.15,000/- மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.50,000/- வழங்கப்பட்டது. மேலும் மாவட்ட ஆட்சியர்களால், முழுமையாக மற்றும் பகுதியாக பாதிக்கப்பட்ட குடிசை உரிமையாளர்களுக்குத் தலா ரூ.2,000/- மற்றும் ரூ.1,000/- வீதம் நிவாரணம் வழங்கப்பட்டது. மேலும் உயிரிழந்த கால்நடைகளின் உரிமையாளர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டது. மேலே தெரிவிக்கப்பட்ட இழப்புகளுக்கு உடனடி நிவாரணமாக மாவட்ட ஆட்சியர்களால் ரூ.3.26 கோடி உடனடி நிவாரணமாக வழங்கப்பட்டது. மேலும் அரசு வெள்ள நிவாரணப் பணிகளுக்காகக் கூடுதலாக சாலைகள் மற்றும் பாலங்களைச் செப்பனிட ரூ. 20 கோடியும், விருத்தாசலம் நகரத்தின் அருகில் ஓடும் மணிமுக்தா நதியின் குறுக்கேயிருந்த சேதமடைந்த பாலத்தினைப் புதுப்பிக்க ரூ. 5 கோடியும், அதனில் ஒரு தரைப்பாலம் அமைக்க ரூ. 0.75 கோடியும் மற்றும் பாசன ஆதாரங்களான ஏரிகள், ஆற்றின் கரைகள் உடைப்பு ஆகியவற்றினைச் சீர் செய்ய ரூ. 10 கோடியும் ஆக மொத்தம் ரூ. 35.75 கோடியும் வழங்கப்பட்டது. மேலும் நெல் மற்றும் இதர பயிர்கள் கடும் வெள்ளத்தினால் 50 சதவீதத்திற்கு மேல் பாதிப்படைந்ததால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உடனடி நிவாரணமாக அரசாணை எண் 29, வருவாய், நாள் 17-1-2005-ன் படி ரூ. 35.65 கோடி அரசால் வழங்கி ஆணையிடப்பட்டது.

[2005 மார்ச் 23

**மத்திய அரசுக்குக் கோரிக்கை மனு**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 1-11-2004 அன்று கடலோர மாவட்டங்களில் கடும் மழையினால் ஏற்பட்ட பாதிப்புகளைத் தொடர்ந்து, அம்மாவட்ட ஆட்சியர்கள் எடுத்த நடவடிக்கைகளை ஆய்வு செய்ததுடன், மேலும் என்ன நிவாரண நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதனைப் பற்றியும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுடன் ஆய்வு செய்து முதற்கட்டமாக ரூ. 5 கோடியினை பேரிடர் நிவாரண நிதியிலிருந்து உடனடி நிவாரணமாக பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு வழங்கினார்கள். மேலும், அக்கடும் வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்புகளின் தன்மையை அறியவும் மற்றும் எடுக்க வேண்டிய நிவாரண நடவடிக்கையைத் தெரிவிப்பதற்காகவும் ஒரு குழு அமைக்க ஆணையிட்டார்கள். அவ்வாணையின் அடிப்படையில், இரண்டு உயர் அலுவலர்கள் தலைமையில் குழுக்கள் அமைக்கப்பட்டு, ஒரு குழு திருவாரூர், நாகை மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களுக்கும் மற்றொரு குழு விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களுக்கும் அனுப்பப்பட்டன. அவ்வுயர்மட்ட அலுவலர் குழுக்கள், பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் விரிவாக ஆய்வு செய்து தங்களுடைய அறிக்கையினை அரசுக்கு அளித்தார்கள்.

இக்கடும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கையும், ஏற்பட்ட சேதமும் அதிகமாக இருந்ததால் இச்சேதங்கள் பற்றி கூடுதல் நிவாரணத் தொகை பெற மத்திய அரசுக்கு அறிக்கை அனுப்ப முடிவு செய்யப்பட்டது. அதனடிப்படையில் அம்மாவட்டங்களில் ஏற்பட்ட சேதங்களின் அடிப்படையில் மத்திய அரசுக்கு ரூ.412.00 கோடி கூடுதல் நிவாரண நிதி கோரும் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

**மத்தியக் குழு வருகை**

மத்திய அரசுக்கு அளிக்கப்பட்ட வெள்ள நிவாரணம் கோரும் கோரிக்கை மனுவின் அடிப்படையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் ஆய்வு செய்ய மத்திய அரசின் உள்துறை இணைச் செயலாளர், திரு. டி.எஸ். மிஷ்ரா, இ.ஆ.ப. அவர்களின் தலைமையில் பல்வேறு துறைகளைச் சார்ந்த 8 உயர் அலுவலர்கள் அடங்கிய குழு 17-12-2004 அன்று வருகை தந்தது. இம்மத்தியக் குழு உறுப்பினர்கள், இரண்டு குழுக்களாகப் பிரிந்து, 18-12-2004 மற்றும் 19-12-2004 ஆகிய இரு நாட்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில்



2005 மார்ச் 23]

ஆய்வுகள் மேற்கொண்டார்கள். முதல் குழு, நாகப்பட்டினம், திருவாரூ மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களையும், இரண்டாவது குழு கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களையும் ஆய்வு செய்தது. ஆய்விற்குப் பின் இக்குழுவினர் 20-12-2004 அன்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்தார்கள். மேலும் அரசின் பல்வேறு துறை அலுவலர்களுடன் வெள்ள பாதிப்பு பற்றி விவாதித்து பல்வேறு விவரங்களைப் பெற்றார்கள்.

**2.11 வறட்சி**

**நிலத்தடி நீர்மட்டம்**

2003-2004 ஆம் ஆண்டு மாநிலத்தில் நிலவிய கடும் வறட்சியின் காரணமாக நிலத்தடி நீர்மட்ட அளவில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படவில்லை. ஆனால், 2004 ஆம் ஆண்டு மே மாதத்தில் தென்மேற்குப் பருவ காலத்தில் பெய்த பரவலான மழை மற்றும் வடகிழக்குப் பருவ காலத்தில் பெய்த அதிக மழையின் காரணமாக நிலத்தடி நீர்மட்டம் கணிசமான அளவு உயர்ந்தது.

**பேரிடர் நிவாரண நிதியிலிருந்து குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்குதல்**

வறட்சியின் காரணமாக மாவட்டங்களில் நிலவி வந்த கடும் குடிநீர் பற்றாக்குறையினைச் சமாளிக்கும் பொருட்டு, 2004 ஆம் ஆண்டின் துவக்கத்திலிருந்தே பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு கோரி மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து முன்மொழிவுகள் வரப்பெற்றன. இத்தகைய முன்மொழிவுகள், சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களின் பரிந்துரையின்படி பேரிடர் நிவாரண நிதித் திட்டத்திற்கான மாநிலக் குழுவினரால் பரிசீலிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் மாவட்டங்களுக்கு அரசினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மாநிலத்தில் குடிநீர் வழங்கும் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு, 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து செப்டம்பர் வரை ரூ.18.73 கோடி தமிழக அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது தவிர, சென்னை மாநகரில் குடிநீர் வழங்கும் பொருட்டு சென்னைக் குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தினரால் மேற்கொள்ளப்பட்ட செலவினத் தொகையான ரூ.207.90 கோடி அவ்வப்போது இவ்வாரியத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் நிவாரணப் பணிகள் மேற்கொள்வதற்காக ரூ.222.63 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேற்படி நிதி ஒதுக்கீட்டின்மூலம் 2,273 குடிநீர் வழங்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அவற்றில் 2,181 பணிகள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளன. மீதமுள்ள 92 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

**கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் மீன்வளத் துறைக்கு நிதி ஒதுக்கீடு**

கால்நடை பராமரிப்புத் துறைக்கு வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொள்ளும்பொருட்டு, கால்நடைகளை வாய் மற்றும் பாத நோய்களிலிருந்து பாதுகாக்க ரூ.132 இலட்சமும், கால்நடை பராமரிப்பு நிலையங்களில் கால்நடைகளின் குடிநீர்த் தேவைக்கு 100 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்திட ரூ.75 இலட்சமும் மற்றும் கிராமங்களில் கால்நடை தீவன மேம்பாட்டிற்காக ரூ.24 இலட்சமும் ஆக மொத்தம் ரூ. 2.31 கோடி பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் 75,000 கால்நடைகளுக்கு அடர்தீவனம் வழங்கும் பொருட்டு ரூ. 1.80 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இப்பணி ஆவின் நிறுவனத்தின்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மீன் பண்ணைகளில் மீன் குஞ்சுகள் பெருக்கத் திட்டத்திற்கு ஒரு ஹெக்டருக்கு ரூ.2,000/- வீதம் 35 ஹெக்டருக்கு ரூ.70,000/- மானியமாக அளிக்க மீன்வளத் துறைக்கு வழங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது.

**சம்பூர்ண கிராமின் ரோஜ்கர் யோஜனா சிறப்புக்கூறு திட்டத்தின்கீழ் வேலைக்கு உணவு திட்டம்**

வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டி தமிழக அரசு கேட்டுக் கொண்டதன்பேரில், மத்திய அரசு சம்பூர்ண கிராமின் ரோஜ்கர் யோஜனா சிறப்புக்கூறு திட்டத்தின்படி வேலைக்கு உணவு திட்டத்தின்கீழ் பயன்படுத்து வதற்காக 2004-2005 ஆம் ஆண்டிற்கு அளித்த 3.04 இலட்சம் மெ.டன் அரிசி மாவட்டங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது. மேலும் இந்த அரிசி ஒதுக்கீட்டிற்கு நிகரான பண ஊதியமாக ரூ. 57.25 கோடியும் மாவட்டங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. இவற்றைக் கொண்டு, இது தொடர்பான நிவாரணப் பணிகள் சென்னை தவிர்த்து அனைத்து மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்டது. கிராமப்புறங்களில் வாழும் வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இத்திட்டம் அரிசி மற்றும் பணத்துடன்கூடிய வேலைவாய்ப்பை உறுதி செய்தது.



இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு பணியாளரும் ஒரு மனித வேலை நாளுக்குக் கூலியாக ரூ.54/- என்ற அளவில், ரூ.39.55 மதிப்புள்ள 7 கிலோ அரிசியும் ரொக்கமாக ரூ.14.45-ம் வழங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட 3.04 இலட்சம் மெட்ரிக் டன் அரிசியும் பயன்படுத்தப்பட்டுவிட்டது. இதன்மூலம் 49,263 பணிகள் மேற்கொள்ளப்பட்டு 48,077 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் 41,89,764 நபர்கள் பயனடைந்துள்ளனர் மற்றும் 4,39,55,440 மனித வேலை நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

**வறட்சி நிவாரண கோரிக்கை மனு 2004-2005**

மாநிலத்தில் நிலவிய கடும் வறட்சியினை சமாளிக்கும்பொருட்டு தேசிய பேரிடர் எதிர்பாரா செலவின நிதியிலிருந்து நிதி பெற அரசால் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி, நிதியுதவி மற்றும் உணவு தானியம் வேண்டி விரிவான வறட்சி நிவாரணக் கோரிக்கை மனு ஒன்று 2004 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் மத்திய அரசுக்குக் கூடுதல் நிதியாக ரூ.1,680 கோடியில் வேலைவாய்ப்புத் திட்டங்களை ஏற்படுத்த தேவைப்படும் கூடுதல் உணவு தானியம் 5.4 இலட்சம் டன்கள் அளிக்க சமர்ப்பிக்கப்பட்டது.

**மத்தியக் குழு வருகை - செப்டம்பர் 2004**

வறட்சியை சமாளிக்கும்பொருட்டு மத்திய அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கை மனுவின் அடிப்படையில் தமிழகத்தில் வறட்சி நிலையை நேரில் ஆய்வு செய்யும்பொருட்டு திரு. ஏ.கே. அகர்வால், இ.ஆ.ப., இணைச் செயலர், வேளாண்மை மற்றும் கூட்டுறவுத் துறை, புதுடெல்லி அவர்களது தலைமையில் எட்டு உயர் அலுவலர்களைக் கொண்ட மத்திய குழுவினர் 26-9-2004 அன்று தமிழகத்திற்கு வருகை தந்தனர். இக்குழு 27-9-2004 அன்று மாண்புமிகு தமிழக முதல்வருடன் வறட்சி நிலைமை குறித்து பேச்சுவார்த்தை நடத்தியது. பின்னர் இக்குழு இரு பிரிவுகளாகப் பிரிந்து வறட்சியால் பாதிக்கப்பட்ட சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், இராமநாதபுரம், விருதுநகர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் 28-09-2004 மற்றும் 29-09-2004 ஆகிய நாட்களில் சுற்றுப்பயணம் செய்து ஆய்வுப் பணிகளை மேற்கொண்டனர். 30-9-2004 அன்று இக்குழுவினர் பல்வேறு துறை அலுவலர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி விரிவான தகவல்களைப் பெற்றனர். மத்தியக் குழு வருகையின்போது, வறட்சி நிவாரண நிதியாக ரூ. 1,909 கோடி வேண்டி அரசால் மனு அளிக்கப்பட்டது.

[2005 மார்ச் 23

இது ஏற்கெனவே வறட்சி நிவாரணக் கோரிக்கை மனுவில் கோரப்பட்ட தொகையான ரூ. 1,080 கோடியைவிட ரூ. 229 கோடி அதிகமாகும். இதில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பனை விவசாயிகளுக்கு நிவாரண நிதியாக கோரப்பட்ட ரூ.58.62 கோடியும் அடங்கும்.

**மத்திய அரசின் நிதி உதவி**

மாநில அரசின் கோரிக்கைகளின் அடிப்படையில் மத்திய அரசு வறட்சி நிவாரண நிதியாக ரூ.156.84 கோடியும், 1.50 இலட்சம் டன் அரிசியையும் நிவாரணப் பணிக்காக ஒதுக்கீடு செய்து ஆணையிட்டது.

**பேரிடர் நிவாரண நிதியிலிருந்து தமிழ்நாட்டில் வறட்சி நிவாரணப் பணிகளுக்காக இதுவரையிலான ஒதுக்கீடு**

மாநிலத்தில் நிலவி வரும் வறட்சியினைச் சமாளிக்கும்பொருட்டு, பேரிடர் நிவாரண நிதி / தேசிய பேரிடர் எதிர்பாரா நிதியிலிருந்து வறட்சி நிவாரணத் திட்டங்களுக்கு 2004-2005 நிதியாண்டில் அரசு பல்வேறு ஆணைகள் வாயிலாக ரூ.287.99 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

**2.12 சுனாமிப் பேரலை**

தமிழகம் புயல், வெள்ளம், வறட்சி முதலிய இயற்கை இடர்பாடுகளையே பெரிதும் சந்தித்து, அதனால் ஏற்படும் பாதிப்பினை செவ்வனே சமாளிக்கும் அனுபவத்தினைப் பெற்றுள்ளது. ஆனால், சுனாமி என்ற ஆழிப்பேரலைகள் தாக்குதல் தமிழகம் இதுவரைக் கண்டிராத ஒரு புதிய பேரிடராகும்.

26-12-2004 அன்று காலை 6.28 மணிக்கு இந்தோனேசியாவின் சுமத்திரா கடலோரப் பகுதியில் 9.0 ரிக்டர் அளவில் ஏற்பட்ட மிகப் பெரிய நில நடுக்கத்தின் தாக்கத்தால் தென் இந்தியாவின் கடலோரப் பகுதிகள் சுனாமிப் பேரலைகளின் கடும் தாக்குதலுக்கு உள்ளாயின. இந்தப் பேரலைகள் தமிழகத்தின் கடலோரப் பகுதிகளை 26-12-2004 அன்று காலை 8.30 மணிக்குக் கடுமையாக தாக்கியது. இந்தப் பேரலைகளின் தாக்குதலால் 13 கடலோர மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களின் கடற்கரைப் பகுதியின் நெடுகிலும் அமைந்துள்ள கிராமங்களிலும், நகரங்களிலும் வாழுகின்ற மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர்.



2005 மார்ச் 23]

இதில் நாகப்பட்டினம், கன்னியாகுமரி மற்றும் கடலூர் மாவட்டங்களிலுள்ள கடலோரப் பகுதிகளில் மிகப் பலத்த சேதங்களையும், சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்ட கடலோரப் பகுதிகளில் பலத்த சேதங்களையும் ஏற்படுத்தியது. இந்த திடீர் தாக்குதலினால் கடலோரப் பகுதிகளில் வாழும் மீனவர்கள் பெரும் எண்ணிக்கையில் பாதிக்கப்பட்டனர். ஆயிரக்கணக்கானவர்கள் உயிர், வாழ்வாதாரங்களை இழந்தனர். இப்பேரழிவால் இலட்சக்கணக்கான மக்கள் வீடு மற்றும் குடிசைகளை இழந்தனர். இந்த ஆழிப் பேரலைகளால் கடலோரக் கிராமங்களில் வாழ்ந்து வந்த பெரும்பாலான மீனவர்களின் கட்டுமரங்கள், வள்ளங்கள், இயந்திரப் படகுகள் மற்றும் மீன்பிடி வலைகள் கடுமையான சேதத்திற்குள்ளானதோடு மீனவச் சமுதாயம் அல்லாத கடலோரப் பகுதிகளில் வாழ்ந்து வந்த இதர இனத்தவர்களின் உடைமைகளும் மற்றும் சொத்துக்களும் பெரும் சேதத்திற்கு உள்ளாயின.

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்த உடனடி நடவடிக்கைகள்**

சுனாமி ஆழிப் பேரலைகளால் ஏற்பட்ட பேரழிவு பற்றிய செய்தியினை அறிந்த உடனேயே தேடுதல், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை உடனடியாக மேற்கொள்ள மாநில அரசு இயந்திரத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் முடுக்கிவிட்டார்கள். பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர்களை உடனடியாக தொடர்பு கொண்டு வருவாய்த் துறை, காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறை, மருத்துவம் மற்றும் சுகாதாரப் பணிகள் துறை, கடலோர காவல் படை மற்றும் முப்படைகளின் உதவியுடன் போர்க்கால அடிப்படையில் தேடுதல், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை விரைவாக மேற்கொள்ள மாண்புமிகு முதல்வர் அறிவுறுத்தினார்கள். முன்னெச்சரிக்கை இல்லாமல் திடீரென நிகழ்ந்துவிட்ட இந்தத் துயர சம்பவத்தினால் பெரும் அதிர்ச்சி ஏற்பட்டபோதிலும், பாதிக்கப்பட்ட மாவட்டங்களைச் சார்ந்த அனைத்து நிர்வாகத் துறைகளும் தேடுதல் மற்றும் மீட்புப் பணிகளில் மிகுந்த அக்கறையுடனும் அர்ப்பணிப்பு உணர்வோடும் உடனடியாக ஈடுபட்டனர். தமிழ்நாடு அரசு மேற்கொண்ட இந்த அசாதாரணமான முயற்சியின் பயனாக, பாதிக்கப்பட்ட அனைத்துக் குடும்பங்களையும் பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்தி, நிவாரண முகாம்களில் உணவு, உறைவிடம் மற்றும் மருத்துவ உதவி வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதே நேரத்தில் போர்க்கால அடிப்படையில் தேடுதல் பணிகளும், மீட்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

[2005 மார்ச் 23

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்நிகழ்வு ஏற்பட்டவுடன் ஹெலிகாப்டர்மூலம் கோடியக்கரை முதல் சென்னையின் வட பகுதியில் அமைந்துள்ள எண்ணூர் வரை சுனாமிப் பேரலைகளால் ஏற்பட்ட சேதங்களைப் பார்வையிட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதலும் வழங்கினார்கள். 27-12-2004 அன்று சென்னை ஆளுநர் மாளிகையில் மத்திய உள் துறை அமைச்சர் திரு. சிவராஜ் பாட்டீல் அவர்களைச் சந்தித்து பேரழிவினால் ஏற்பட்ட சேதங்கள் பற்றிய விவரங்களையும் மற்றும் எடுக்கப்பட்ட நிவாரண நடவடிக்கைகளையும் தெரிவித்தார்கள். மீண்டும் கன்னியாகுமரி மாவட்டத்தில் பெரும் சேதம் ஏற்பட்ட மண்டைக்காடு, முட்டம் மற்றும் கொளச்சல் ஆகிய பகுதிகளை ஹெலிகாப்டர்மூலம் பார்வையிட்டு பின்பு நாகர்கோவிலில் பாதிக்கப்பட்ட குடும்பங்களை கோட்டார் மற்றும் வேப்பமோடு நிவாரண மையங்களிலும், காயம் அடைந்தவர்களை ஆசாரிபள்ளம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்கள். 27-12-2004 அன்று நாகப்பட்டினம் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டு அங்கு மேற்கொள்ளப்பட்ட மீட்புப் பணி மற்றும் நிவாரணப் பணிகள் பற்றி மீண்டும் ஆய்வு செய்தார்கள். நாகப்பட்டினத்திலுள்ள மாவட்ட அரசு மருத்துவமனைக்குச் சென்று காயமடைந்து சிகிச்சை பெறுபவர்களிடம் நலம் விசாரித்தார்கள். பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சந்தித்து, அவர்களுக்கு மறுவாழ்வு அளித்து, மீண்டும் பாதுகாப்பான புது வாழ்க்கை அமைவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் தமிழ்நாடு அரசு எடுக்கும் என்ற உறுதியையும், நம்பிக்கையையும் அளித்தார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் அரசு அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டு, இடைவிடாத மழை பெய்து வந்தபோதிலும் நிவாரணப் பணிகளை மேலும் முடுக்கி விடுமாறு உத்தரவிட்டார்கள். மேலும், நாகப்பட்டினத்திற்கும் கடலூருக்கும் இடைப்பட்ட பாதிக்கப்பட்ட பகுதிகளான பொறையார், பரங்கிப்பேட்டை ஆகிய பகுதிகளை ஹெலிகாப்டர்மூலம் பார்வையிட்டார்கள். கடலூரில் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சந்தித்து அவர்கள் முழு மறுவாழ்வு பெற்று இந்தச் சோகத்தில் இருந்து மீண்டு புதிய வாழ்க்கையைத் தொடங்குவதை உறுதிப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் தமிழ்நாடு அரசு மேற்கொள்ளும் என உறுதி அளித்தார்கள். மேலும் சுனாமிப் பேரலைகளால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் அனைத்திற்கும் தேவையான நிவாரணங்கள் அளிக்கப் படுவதை உறுதிப்படுத்துவது தலையாயக் கடமையாகக் கொண்டு கவனம் செலுத்தி, பாதிக்கப்பட்ட குடும்பங்கள் அனைத்தும் நிவாரண



2005 மார்ச் 23]

மையங்களில் தங்க வைக்கப்பட்டு அவர்களுக்கு உணவு அளித்திட தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் சம்பந்தப்பட்ட மாவட்ட நிருவாகம் எடுத்திட உத்தரவிட்டார்கள்.

**மாநில நிவாரண ஆணையர் அலுவலகத்தில் ஒருங்கிணைப்புப் பணி**

புயல், வெள்ளம், நில நடுக்கம், வறட்சி போன்ற இடர்பாடுகளால் ஏற்படும் சேதங்களுக்கு உடனடி நிவாரணம் அளிக்கும் ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புப் பணியினையும் மற்றும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஒருங்கிணைந்த நிவாரண நடவடிக்கைகளைத் தலைமைப் பொறுப்பேற்று செயல்படுத்துவதே மாநில நிவாரண ஆணையரின் தலையாயக் கடமையாகும். 26-12-2004 அன்று இந்தோனேஷியாவின் சுமத்திரா கடலோரப் பகுதியில் ஏற்பட்ட கடுமையான நில நடுக்கத்தின் விவரத்தினை அறிந்தவுடன் மாநில நிவாரண ஆணையர் உடனடியாக நில நடுக்கத்தால் மாவட்டங்களில் ஏதாவது சேதங்கள் ஏற்பட்டுள்ளதா என்பது பற்றி கடலோர மாவட்ட ஆட்சியர்களைத் தொடர்பு கொண்டு விசாரித்து அறிந்தார். இதனிடையில், திடீரென்று தாக்கிய சுனாமி ஆழிப் பேரலைகள் கடலோரப் பகுதிகளைத் தாக்கியதை அறிந்து, மாநில கட்டுப்பாட்டு அறையின்மூலம் சம்பந்தப்பட்ட மாவட்ட கட்டுப்பாட்டு அறைகளுக்கும் மற்றும் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களுக்கும் வேண்டிய அறிவுரைகள் வழங்கி மீட்புப் பணிகள் முன்னுரிமை அடிப்படையில் உடனடியாக தொடர தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேலும், மீட்புப் பணியினைத் துரிதப்படுத்த மாவட்டங்களில் பணியாற்றும் அனைத்து வருவாய்த் துறை மற்றும் அனைத்துத் துறை அலுவலர்களையும் மற்றும் பணியாளர்களையும் உடனடியாக பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அனுப்பி மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை விரைவுபடுத்த தக்க நடவடிக்கை எடுக்க அறிவுரைகள் வழங்கப்பட்டன. பாதிக்கப்பட்ட சில இடங்களில் மீட்புப் பணிகளில் ஏற்பட்ட தடைகளைக் களைய கனரக இயந்திரங்களை அனுப்பியும், முப்படைகளை மீட்புப் பணியில் ஈடுபடுத்தவும், பாதிக்கப்பட்ட மக்களைப் பாதுகாப்பான இடங்களில் தங்குவதற்கு நிவாரண மையங்களை உடனடியாக தொடங்கவும், மையத்திற்குத் தேவையான குடிநீர், உணவுப்பொருட்கள், மருத்துவ வசதிகள் மற்றும் உறைவிடத்திற்குத் தேவையான பொருள்கள் வழங்க நேரடி கண்காணிப்பின்மூலம் நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்பட்டன.

இப்பேரழிவினால் ஏற்பட்ட உயிரிழப்பு, வீடுகள் பாதிப்பு, கால்நடை உயிரிழப்பு, காயமடைந்தவர்கள், பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை,

பாதுகாப்பிற்காக அப்புறப்படுத்தப்பட்ட மக்களின் எண்ணிக்கை, நிவாரண மையங்களின் எண்ணிக்கை, மையங்களில் இருக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை மற்றும் பாதிக்கப்பட்ட படகுகள், மீன் பிடி வலைகள், சேதம் பற்றிய தகவல் அறிக்கைகளை மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து பெற்று அறிக்கை தயார் செய்து சம்பவம் நடந்த நாளிலிருந்து மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், மாண்புமிகு பாரதப் பிரதமர் அலுவலகம், மத்திய அமைச்சக உள் துறை மற்றும் சம்பந்தப்பட்ட அரசுத் துறைகளுக்கு, குறித்த காலத்திற்குள் அறிக்கையை விரைந்து அனுப்பிட அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு அளிக்க வேண்டிய உடனடி நிவாரணம் பற்றிய விவரங்கள் பற்றி அரசுக்கு உடனுக்குடன் அனுப்பி அதன்மீது அரசாணைகள் பெறவும், அவ்வாணைகளைச் செயல்படுத்த மாவட்ட ஆட்சியர்களுக்குத் தொகைகளை உடனடியாக பகிர்ந்தளித்து நிவாரணப் பணிகளைத் துரிதப்படுத்தி மற்றும் அதன்மீதான பணி முன்னேற்றமும் தொடர்ந்து ஆய்வு செய்யப்பட்டது.

**தகவல் மையம் அமைத்தல்**

இப்பேரழிவினால் ஏற்பட்ட சேதங்களைப் பற்றிய விவரங்களைப் பல்வேறு ஊடகங்களுக்குத் தகவல் அளிக்கவும், அரசு சாரா நிறுவனங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் கோரும் பல்வேறு தகவல்களை உடனுக்குடன் அளிப்பதற்காக 24 மணி நேரமும் இயங்கும் ஒரு தகவல் மையம் ஏற்படுத்தி அம்மையத்திற்குத் தேவையான தொலைபேசிகள் நிறுவப்பட்டு அதன் எண்கள் பத்திரிகைகள் மூலமாகவும், தொலைக்காட்சி மூலமாகவும் பொது மக்களுக்கு தெரிவிக்கப்பட்டது. இந்நடவடிக்கையின்மூலம் ஒவ்வொரு நாளும் பெறப்பட்ட நூற்றுக்கணக்கான தொலைபேசி விசாரிப்புகளுக்கு உடனடியாக தகவல்கள் வழங்கப்பட்டன.

**பொதுமக்கள் அளித்த நிவாரணப் பொருள்களைப் பெறுதல் மற்றும் விநியோகம் செய்தல்**

சுனாமி ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், பொதுமக்கள் மற்றும் மாநில அரசுகள் பெருமளவில் நிவாரணப் பொருள்களை ஆர்வத்துடனும், கருணையுடனும் அளிக்க முன்வந்தனர். அந்நிவாரணப் பொருள்களைப் பெறவும், சேகரிக்கவும், பின்பு தேவைப்பட்ட இடங்களுக்கு அனுப்பி வைக்கவும் தக்க நடவடிக்கை





எடுக்கப்பட்டது. அதன்படி சென்னை மாநகரம் மற்றும் மற்ற மாநிலங்களிலிருந்து அனுப்பப்படும் நிவாரணப் பொருட்களைச் சென்னையில் விருகம்பாக்கத்தில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குச் சொந்தமான கிட்டங்கியில் பெறவும் மற்றும் மாவட்டங்களில் நிவாரணப் பொருள்கள் அளிப்பவர்கள், அந்தந்த மாவட்ட ஆட்சியரிடம் ஒப்படைக்கவும் அறிவிக்கப்பட்டது. இதன் மூலம் நிவாரணப் பொருள்கள் முறையாக பெறப்பட்டு மேலும் வகையாய் பிரிக்கப்பட்டு தேவைப்படும் இடங்களுக்கு விரைந்து அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**சுனாமி தாக்குதலால் ஏற்பட்ட பாதிப்புகள்**

இந்த சுனாமி ஆழிப் பேரலைகளின் கடுமையான திடீர் தாக்குதலின் காரணமாக மிகவும் அதிகமாக பாதிக்கப்பட்டது மீனவச் சமுதாயமே ஆகும். இதனால் அவர்களது வீடுகள், உடைமைகள் அவர்கள் வாழ்க்கைக்கு ஆதாரமானவற்றை இழந்தது மட்டுமல்லாமல், அவர்களது வாழ்க்கைக்குத் தேவையான, அதாவது கட்டுமரங்கள், இயந்திரப் படகுகள், மீன்பிடி வலைகள் மற்றும் மீன்பிடி சாதனங்கள் ஆகியவை சில கண நேரத்தில் பலத்த சேதத்திற்கு உள்ளாயின. மேலும், அநேக மீனவர்கள் தங்கள் படகுகள் மற்றும் மீன்பிடி வலைகளை முழுமையாக இழந்துவிட்டனர்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் வசிக்கும் விவசாய மற்றும் உப்பளத் தொழிலாளர்கள், சிறு வியாபாரிகள், படகு மற்றும் மீன்பிடி வலைகள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் மற்றும் கடல் பொருள் சார்ந்த வியாபாரம் செய்பவர்கள் தங்கள் வீடுகள், அங்காடிகள், சிறு தொழில் கூடங்கள், கால்நடைகள் மற்றும் உடைமைகளை இழந்தனர். கடலோரப் பகுதிகளில் உள்ள விவசாய நிலங்களில் பேரலைகளினால் கடல் நீர் உட்புகுந்ததால் விவசாயப் பயிர்கள் சேதமுடைந்தன. மேலும் விளை நிலங்களில் உப்பு நீர் புகுந்ததாலும், மணல் மேடிட்டதாலும் விவசாய நிலங்கள் பாழடைந்தன.

26-12-2004 அன்று ஆழிப் பேரலைத் தாக்குதலால் 13 மாவட்டங்களில் 373 கிராமங்கள் பாதிக்கப்பட்டன. மேலும், 8,018 மனித உயிரிழப்புகளும், 17,404 கால்நடை உயிரிழப்புகளும் ஏற்பட்டன. 3,432 நபர்கள் மிகப் பலத்த காயமடைந்தனர். சுமார் 1.5 இலட்சம் வீடுகள் சேதமடைந்தன. 35,530 கட்டுமரங்கள், 11,118 வள்ளங்கள், 4,430 மின்விசைப் படகுகள் மற்றும் சுமார் 2,000 மெட்ரிக் டன் மீன்பிடி வலைகள் பாதிக்கப்பட்டன.

**தமிழக அரசால் எடுக்கப்பட்ட நிவாரண நடவடிக்கைகள்**

இப்பேரழிவால் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கும் வீடுகளையும் மற்றும் உடைமைகளையும் இழந்தவர்களுக்கும் உடனடியாக நிவாரணம் வழங்கும் பணியை அரசு மேற்கொண்டது. பாதிக்கப்பட்ட மக்கள் உடனடியாக பாதிக்கப்பட்ட நாளன்றே பத்திரமான இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு சுமார் 304 நிவாரண மையங்கள் தொடங்கப்பட்டு அதில் 2,37,000 மக்கள் தங்க வைக்கப்பட்டார்கள். பாதிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து 9.85 இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டதாகவும், அவர்களில் 5 இலட்சம் மக்கள் பாதுகாப்பான இடத்திற்குக் கொண்டு வரப்பட்டு 412 மையங்களில் 3.09 இலட்சம் மக்கள் தங்க வைக்கப்பட்டனர்.

பாதிக்கப்பட்டவர்களுக்குத் தொற்று நோய் முன்னெச்சரிக்கை சிகிச்சையும், பாதிக்கப்பட்ட இடங்கள் மற்றும் நிவாரண மையங்களில் பொது சுகாதாரத்தைப் பேணுவதற்காக அரசு மருத்துவர்கள் தலைமையில் 547 மருத்துவர்கள் கொண்ட குழுக்கள் அமைக்கப்பட்டு அவை பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவு பிறப்பித்ததன்பேரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத் தொகுப்புகளை வழங்கும் பொருட்டு அரசு கீழ்க்கண்ட ஆணைகளை வெளியிட்டது:-

➢ அரசாணை எண் 574, வருவாய் துறை, நாள் 28-12-2004-ன்மூலம் இறந்தவர்களின் குடும்பத்திற்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.1 இலட்சம் வீதம் இறந்தவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் வழங்க ஆணையிடப்பட்டது.

➢ அரசாணை எண் 575, வருவாய்த் துறை, நாள் 28-12-2004-ன் மூலம் பாதிக்கப்பட்ட ஒரு இலட்சம் குடும்பங்களுக்கு ரூ.49.12 கோடி செலவில், ஒரு குடும்பத்திற்கு ஒரு நிவாரணத் தொகுப்பில் ஒரு வேட்டி, ஒரு சேலை, இரண்டு போர்வைகள், 60 கிலோ அரிசி, 3 லிட்டர் மண்ணெண்ணெய், பருப்பு, எண்ணெய் மற்றும் சமையலுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் வாங்குவதற்கு ரூ.1,000-மும், பாத்திரங்கள் மற்றும் அடுப்பு வாங்குவதற்கு ரூ.1,000-மும் மற்றும் தற்காலிக குடிசை அமைப்பதற்காக ரூ. 2,000-மும் ஆக மொத்தம் தலா ரூ.4,912/- வீதம் நிவாரணத் தொகுப்பு வழங்க ஆணையிடப்பட்டது. மேலும், பாதிக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை





1 இலட்சத்திற்கும் அதிகமானதால் அரசாணை எண் 12, வருவாய்த் துறை, நாள் 7.1.2005-ல் மேற்குறிப்பிட்டவாறு நிவாரணத்தை மேலும் 50,000 பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்க ரூ.24.56 கோடி அனுமதிக்கப்பட்டது.

அரசாணை எண் 576, வருவாய்த் துறை, நாள் 28-12-2004-ன்மூலம் பாதிக்கப்பட்ட வள்ளம், படகு வைத்திருக்கும் மீனவர்களுக்கு மாற்று மீன்பிடி வலை வாங்குவதற்கு தலா ரூ. 20,000/- வீதம் 10,000 மீனவர்களுக்கு ரூ.20 கோடியும், கட்டுமரம் பயன்படுத்துபவர்களுக்கு மாற்று மீன்பிடி வலை வாங்குவதற்கு தலா ரூ.10,000/- வீதம் 20,000 மீனவர்களுக்கு மொத்தம் ரூ. 20 கோடியும், வள்ளம் படகுகளைப் பழுது பார்க்க / மறு கட்டுமானம் செய்ய ரூ.15,000/- வீதம் 10,000 படகுகளுக்கு ரூ.15 கோடியும் அதேபோல் சேதமடைந்த 20,000 கட்டுமரங்களுக்கு தலா ரூ.5,000/- வீதம் ரூ.10 கோடியும், ஆக மொத்தம் ரூ.65 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அரசாணை எண் 581, வருவாய்த் துறை, நாள் 31-12-2004-ன்படி பாதிக்கப்பட்ட 13 கடலோர மாவட்டங்களில் நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகளை மேற்கொள்ள ஏதுவாக அம்மாவட்டங்களை "சுனாமி" பேரழிவால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக அறிவித்து அரசிதழ் எண் 327, நாள் 31-12-2004-ல் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.

அரசாணை எண் 582, வருவாய்த் துறை, நாள் 31-12-2004-ன்படி பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு எதிர்பாரா செலவினங்களை மேற்கொள்ள நாகப்பட்டினம், கன்னியாகுமரி மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களுக்கு தலா ரூ.1.00 கோடியும், காஞ்சிபுரம், விழுப்புரம், திருவள்ளூர், தூத்துக்குடி மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்களுக்கு தலா ரூ.25 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அரசாணை எண். 29, வருவாய், நாள் 24-2-2005-ல் நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு ரூ.1 கோடியும், சென்னை மாவட்டத்திற்கு ரூ.10 இலட்சமும் அவசர செலவினங்களை மேற்கொள்வதற்காக கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது.

அரசாணை எண் 3, வருவாய்த் துறை, நாள் 3-1-2005-ன்மூலம் கை, கால் / கண் இழந்தவர்களுக்கு தலா ரூ.25,000/- வீதமும்,

கடுமையான காயமடைந்து ஒரு வாரத்திற்கு மேலாக மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற்றவர்களுக்கு ரூ.5,000/- வீதமும் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்க ரூ.3.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

➢ அரசாணை எண் 583, வருவாய்த் துறை, நாள் 31-12-2004-இல் மேற்படி பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஒரு குடும்பத்திற்கு ஒரு வேட்டி, ஒரு சேலை, இரண்டு போர்வைகள், 60 கிலோ அரிசியும், 3 லிட்டர் மண்ணெண்ணெய், பருப்பு, எண்ணெய் மற்றும் சமையலுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் வாங்குவதற்கு ரூ. 1,000-மும், பாத்திரங்கள் மற்றும் அடுப்பு வாங்குவதற்கு ரூ. 1,000-மும் ஆக மொத்தம் ரூ. 2,912/- அல்லது ரூ. 3,000/- நிவாரணத் தொகுப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டது. இந்த சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவ மற்றும் அது தொடர்பான சிறு தொழில் புரியும் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் 1.50 இலட்சம் ஆகும். வேலைவாய்ப்பு மற்றும் ஊதியத்தை இழந்த மேற்படி பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தங்களது இயல்பான வாழ்க்கைக்கு திரும்பும்வரை நிவாரண தொகுப்பு வழங்க அரசாணை எண் 583, வருவாய்த் துறை, நாள் 31-12-2004-ல் அனுமதிக்கப்பட்ட தொகை உட்பட ரூ.45 கோடி அரசாணை எண் 8, வருவாய்த் துறை, நாள் 5-1-2005-ல் அனுமதிக்கப்பட்டது. மேலும் கூடுதலாக ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட 24,764 மீனவக் குடும்பங்கள் மற்றும் கடலோரக் கிராமங்களில் வேலைவாய்ப்பு மற்றும் ஊதியத்தை இழந்தவர்களுக்கு குடும்பம் ஒன்றிற்கு ரூ.3,000/-வீதம் அரசாணை எண் 583, வருவாய், நாள் 31-12-2004-ல் நிர்ணயிக்கப்பட்ட நிவாரணத் தொகுப்பு வழங்குவதற்காக ரூ.7.43 கோடி அரசாணை எண் 120, வருவாய்த் துறை, நாள் 23-2-2005-ல் அனுமதிக்கப்பட்டது.

➢ 13 கடலோர மாவட்டங்களில் வீடுகளை இழந்து பாதுகாப்பு மையங்களில் வாழும் 1.00 இலட்சம் குடும்பங்களில் 50,000 குடும்பங்களுக்கு அரசும், 50,000 குடும்பங்களுக்கு தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலமும் தற்காலிக இருப்பிடங்கள் கட்டித் தர முடிவு செய்து அரசாணை எண் 10, வருவாய்த் துறை, நாள் 6-1-2005-ல் 50,000 குடும்பங்களுக்குத் தற்காலிக இருப்பிடங்கள் கட்டித் தர ஒரு தற்காலிக இருப்பிடத்திற்கு ரூ.8,000/- வீதம் ரூ.40 கோடி ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிட்டுள்ளது.





➢ சுனாமியினால் ஏற்பட்ட பாதிப்பின் தொடர்ச்சியாக எழும் அவசர நிவாரணப் பணிகளைக் கண்காணிக்க மாவட்ட ஆட்சியர்களுக்கு ஒத்துழைப்பு அளிக்க அரசு முடிவு செய்து நிவாரணப் பணிகளை போர்க்கால அடிப்படையில் செயல்படுத்த உயர்மட்ட அலுவலர்களை நியமனம் செய்து அரசாணை எண் 4921, பொதுத் துறை (சிறப்பு) நாள் 30-12-2004-ல் உத்தரவிட்டுள்ளது. மேலும் பாதிக்கப்பட்ட கடலோர மாவட்டங்களில் போர்க்கால அடிப்படையில் நடக்கும் நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகளைக் கண்காணிக்க மாநில அளவில் சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகத்தில் சிறப்பு அலுவலர் (நிவாரணம் மற்றும் மறுவாழ்வு), இணை ஆணையர் (நிவாரணம் மற்றும் மறுவாழ்வு) மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் ஒரு அலுவலரையும் நியமித்து அரசு ஆணையிட்டுள்ளது. மேற்படி அலுவலர்கள் மாவட்டங்களில் நடக்கும் நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகளைக் கண்காணித்து வருகின்றனர். மேலும் மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்ட நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் நிவாரணப் பணிகளுக்கு ஒத்துழைப்பு அளிக்க ஏதுவாக அருகில் உள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலிருந்து குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு மேற்படி மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டன.

➢ அரசாணை எண் 23, வருவாய்த் துறை, நாள் 12-01-2005-ன்படி பாதிக்கப்பட்ட குடும்பங்களின் நிலையைக் கருத்திற்கொண்டு அவர்களது உடைமைகளைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்காக ஒவ்வொரு பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கும் ஓர் இரும்புப் பெட்டி வழங்கவும் மேலும் அவர்கள் அன்றாட உணவு சமைக்கும் பணியைத் துவங்குவதற்கு ஒரு மண்ணெண்ணெய் ஸ்டவ் மற்றும் குடிநீர் வைத்துக் கொள்ள ஓர் எவர்சில்வர் குடம் வழங்கவும் அரசு ஆணையிட்டது. வீடுகளை இழந்து பாதிக்கப்பட்ட 1.5 இலட்சம் குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் இந்த நிவாரணப் பொருட்கள் வழங்கும் பணியினை 14-01-2005 பொங்கல் திருநாளன்று துவக்க வேண்டும் என மாவட்ட ஆட்சியர்களுக்கு ஆணையிடப்பட்டது. தமிழ் நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் மற்றும் தேசிய சிறுதொழில் வளர்ச்சிக் கழகம்மூலம் இந்நிவாரணப் பொருட்களைக் கொள்முதல் செய்து பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் மாவட்ட ஆட்சித்

சேதமடைந்த கட்டுமரங்களுக்குப் பதிலாக புதிய கண்ணாடி இழை கட்டுமரங்கள் வாங்க இனத்திற்கு ரூ.75,000/-க்கு மிகாமலும் மானியம் வழங்க மொத்தம் ரூ.141.45 கோடி மானியத் தொகை அனுமதிக்கப்பட்டுள்ளது.

(ii) முழுவதும் சேதமடைந்த 4,440 கண்ணாடி இழை கட்டுமரங்களை மாற்றியமைக்க இனம் ஒன்றுக்கு ரூ.52,500/- மானியம் வீதம் மொத்தம் ரூ.23.31 கோடி மானியத் தொகை அனுமதிக்கப்பட்டுள்ளது.

(iii) முழுவதும் பழுதடைந்த 8,140 படகு /கண்ணாடி இழை படகு/ வள்ளம் இவற்றை மாற்றியமைக்க இனம் ஒன்றுக்கு ரூ.52,500/- மானியம் வீதம் மொத்தம் ரூ.42.73 கோடி மானியத் தொகை அனுமதிக்கப்பட்டுள்ளது.

(iv) பழுதடைந்த 1,775 இயந்திரப் படகுகளை சரிசெய்ய இனம் ஒன்றுக்கு ரூ.3 இலட்சம் மானியம் வீதம், மொத்தம் ரூ.53.25 கோடி மானியத் தொகை அனுமதிக்கப்பட்டுள்ளது.

(v) முழுவதும் பாதிப்படைந்த அல்லது காணாமற்போன 2,655 படகுகளுக்கு இனம் ஒன்றுக்கு ரூ.5 இலட்சம் மானியம் வீதம் மொத்தம் ரூ.132.75 கோடி மானியத் தொகை அனுமதிக்கப்பட்டுள்ளது.

(vi) 4,147 கட்டுமரங்கள் பழுது பார்க்கவும்/மறுக் கட்டுமானம் செய்யவும், அரசு ஆணை எண் 576, வருவாய்த் துறை, நாள் 28-12-2004-இல் தெரிவிக்கப்பட்டபடி இனம் ஒன்றுக்கு ரூ.5,000/- வீதம் கூடுதல் நிதி உதவியாக ரூ.2.07 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

➢ முழுவதும் சேதமடைந்த கட்டுமரங்கள் மற்றும் கண்ணாடி இழை கட்டுமரங்கள், முழுவதும் பழுதடைந்த மரப்படகு / கண்ணாடி இழைப்படகு / வள்ளம் இவற்றின் மதிப்பு இனம் ஒன்றுக்கு ரூ.1.5 இலட்சம் எனக் கணக்கிடப்பட்டு, அதில் 35 சதவீதம் மானியமாக ரூ.52,500/- வீதம் கணக்கிடப்பட்டது. 35 சதவீத மானியத்தை 50 சதவீத மானியமாக அதாவது இனம் ஒன்றுக்கு எஞ்சின் மற்றும் வலை உட்பட ரூ.1.50 இலட்சமாக கணக்கிடப்பட்டு உச்சபட்சமாக 50 சதவீத மானியம் ரூ.75,000/- ஆக உயர்த்தி மானியத் தொகைக்கான இந்த பகுதி திருத்தம் அரசாணை எண்134, வருவாய்த் துறை நாள் 25-2-2005-ல் வெளியிடப்பட்டது.





➢ சுனாமிப் பேரலைகளால் ஏற்பட்ட துயரத்தினால் பாதிப்படைந்த குடும்பத்தினருக்கு இன்னும் அவர்கள் பிழைப்பு நடத்த காலதாமதம் ஆகும் என்ற நிலையில் முதலில் அரிசி, வேட்டி, சேலை, சமையல் பாத்திரங்கள் வழங்கியதுபோல், பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கு சமையல் பொருட்கள் உட்பட ரூ.1,000/- பணத்துடன் ஒரு குடும்பத்திற்கு மாதம் ஒன்றிற்கு ரூ.1,526/- வழங்க அரசாணை எண் 57, வருவாய், நாள் 4-2-2005-ல் ஆணையிடப்பட்டுள்ளது. இதனால் அரசிற்கு மேலும் ரூ.137 கோடி செலவாகும். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணப் பொருட்களை துணிப் பையில் வைத்து வழங்கும்பொருட்டு ஒரு பை ரூ.19.50 என்ற விலை வீதம், 2.70 இலட்சம் துணிப் பைகள் வாங்குவதற்கு ரூ.52.65 இலட்சம் நிதி அனுமதித்து அரசாணை எண்123, வருவாய், நாள் 23-2-2005-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

➢ துப்புரவுப் பணியாளர்கள், துப்புரவுப் பணி மேற்பார்வையாளர், ட்ராக்டர் ஓட்டுனர்கள் மற்றும் இதர பணியாளர்கள் தங்களது வழக்கமான பணிகள் அன்றி 26-12-2004 அன்று ஏற்பட்ட ஆழிப்பேரலையால் இறந்தவர்களின் உடலை அப்புறப்படுத்தும் பணியிலும் ஈடுபட்டனர். அவர்களது பணியைப் பாராட்டும் விதமாக, நபர் ஒருவருக்கு ரூ.2,500/-வீதம் மதிப்பூதியம் வழங்க ரூ.1,19,97,500/- (ரூபாய் ஒரு கோடியே பத்தொன்பது இலட்சத்து தொன்னூற்று ஏழாயிரத்து ஐநூறு மட்டும்) அனுமதித்து அரசாணை எண் 78, வருவாய், நாள் 10-2-2005-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

➢ சிறு வியாபாரிகள்/ கடை உரிமையாளர்கள்/ நடமாடும்/ தற்காலிக கடை உரிமையாளர்கள் ஆகியோருக்கு ஆழிப்பேரலையின்போது ஏற்பட்ட பாதிப்புக்கு தலா ரூ.2,000/-வீதமும், நிரந்தர கடை உரிமையாளர்களுக்கு பாதிப்புக்கு தலா ரூ.5,000/- வீதமும் நிவாரணம் வழங்க ஏதுவாக அரசாணை எண் 121, வருவாய், நாள் 23-2-2005-ல் ரூ.5 கோடி (ரூபாய் ஐந்து கோடி மட்டும்) நிதி அனுமதித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

➢ நாகப்பட்டினம், கன்னியாகுமரி, கடலூர், காஞ்சிபுரம் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் ஆழிப்பேரலையால் விவசாய நிலங்களில் துவர்ப்பு, உப்புநீர் கலப்பு ஏற்பட்டதால் அந்த விளை

சேதமடைந்த கட்டுமரங்களுக்குப் பதிலாக புதிய கண்ணாடி இழை கட்டுமரங்கள் வாங்க இனத்திற்கு ரூ.75,000/-க்கு மிகாமலும் மானியம் வழங்க மொத்தம் ரூ.141.45 கோடி மானியத் தொகை அனுமதிக்கப்பட்டுள்ளது.

(ii) முழுவதும் சேதமடைந்த 4,440 கண்ணாடி இழை கட்டுமரங்களை மாற்றியமைக்க இனம் ஒன்றுக்கு ரூ.52,500/- மானியம் வீதம் மொத்தம் ரூ.23.31 கோடி மானியத் தொகை அனுமதிக்கப்பட்டுள்ளது.

(iii) முழுவதும் பழுதடைந்த 8,140 படகு /கண்ணாடி இழை படகு/ வள்ளம் இவற்றை மாற்றியமைக்க இனம் ஒன்றுக்கு ரூ.52,500/- மானியம் வீதம் மொத்தம் ரூ.42.73 கோடி மானியத் தொகை அனுமதிக்கப்பட்டுள்ளது.

(iv) பழுதடைந்த 1,775 இயந்திரப் படகுகளை சரிசெய்ய இனம் ஒன்றுக்கு ரூ.3 இலட்சம் மானியம் வீதம், மொத்தம் ரூ.53.25 கோடி மானியத் தொகை அனுமதிக்கப்பட்டுள்ளது.

(v) முழுவதும் பாதிப்படைந்த அல்லது காணாமற்போன 2,655 படகுகளுக்கு இனம் ஒன்றுக்கு ரூ.5 இலட்சம் மானியம் வீதம் மொத்தம் ரூ.132.75 கோடி மானியத் தொகை அனுமதிக்கப்பட்டுள்ளது.

(vi) 4,147 கட்டுமரங்கள் பழுது பார்க்கவும்/மறுக் கட்டுமானம் செய்யவும், அரசு ஆணை எண் 576, வருவாய்த் துறை, நாள் 28-12-2004-இல் தெரிவிக்கப்பட்டபடி இனம் ஒன்றுக்கு ரூ.5,000/- வீதம் கூடுதல் நிதி உதவியாக ரூ.2.07 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

➢ முழுவதும் சேதமடைந்த கட்டுமரங்கள் மற்றும் கண்ணாடி இழை கட்டுமரங்கள், முழுவதும் பழுதடைந்த மரப்படகு / கண்ணாடி இழைப்படகு / வள்ளம் இவற்றின் மதிப்பு இனம் ஒன்றுக்கு ரூ.1.5 இலட்சம் எனக் கணக்கிடப்பட்டு, அதில் 35 சதவீதம் மானியமாக ரூ.52,500/- வீதம் கணக்கிடப்பட்டது. 35 சதவீத மானியத்தை 50 சதவீத மானியமாக அதாவது இனம் ஒன்றுக்கு எஞ்சின் மற்றும் வலை உட்பட ரூ.1.50 இலட்சமாக கணக்கிடப்பட்டு உச்சபட்சமாக 50 சதவீத மானியம் ரூ.75,000/- ஆக உயர்த்தி மானியத் தொகைக்கான இந்த பகுதி திருத்தம் அரசாணை எண்134, வருவாய்த் துறை நாள் 25-2-2005-ல் வெளியிடப்பட்டது.



➢ சுனாமிப் பேரலைகளால் ஏற்பட்ட துயரத்தினால் பாதிப்படைந்த குடும்பத்தினருக்கு இன்னும் அவர்கள் பிழைப்பு நடத்த காலதாமதம் ஆகும் என்ற நிலையில் முதலில் அரிசி, வேட்டி, சேலை, சமையல் பாத்திரங்கள் வழங்கியதுபோல், பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கு சமையல் பொருட்கள் உட்பட ரூ.1,000/- பணத்துடன் ஒரு குடும்பத்திற்கு மாதம் ஒன்றிற்கு ரூ.1,526/- வழங்க அரசாணை எண் 57, வருவாய், நாள் 4-2-2005-ல் ஆணையிடப்பட்டுள்ளது. இதனால் அரசிற்கு மேலும் ரூ.137 கோடி செலவாகும். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணப் பொருட்களை துணிப் பையில் வைத்து வழங்கும்பொருட்டு ஒரு பை ரூ.19.50 என்ற விலை வீதம், 2.70 இலட்சம் துணிப் பைகள் வாங்குவதற்கு ரூ.52.65 இலட்சம் நிதி அனுமதித்து அரசாணை எண்123, வருவாய், நாள் 23-2-2005-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

➢ துப்புரவுப் பணியாளர்கள், துப்புரவுப் பணி மேற்பார்வையாளர், ட்ராக்டர் ஓட்டுனர்கள் மற்றும் இதர பணியாளர்கள் தங்களது வழக்கமான பணிகள் அன்றி 26-12-2004 அன்று ஏற்பட்ட ஆழிப்பேரலையால் இறந்தவர்களின் உடலை அப்புறப்படுத்தும் பணியிலும் ஈடுபட்டனர். அவர்களது பணியைப் பாராட்டும் விதமாக, நபர் ஒருவருக்கு ரூ.2,500/-வீதம் மதிப்பூதியம் வழங்க ரூ.1,19,97,500/- (ரூபாய் ஒரு கோடியே பத்தொன்பது இலட்சத்து தொன்னூற்று ஏழாயிரத்து ஐநூறு மட்டும்) அனுமதித்து அரசாணை எண் 78, வருவாய், நாள் 10-2-2005-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

➢ சிறு வியாபாரிகள்/ கடை உரிமையாளர்கள்/ நடமாடும்/ தற்காலிக கடை உரிமையாளர்கள் ஆகியோருக்கு ஆழிப்பேரலையின்போது ஏற்பட்ட பாதிப்புக்கு தலா ரூ.2,000/-வீதமும், நிரந்தர கடை உரிமையாளர்களுக்கு பாதிப்புக்கு தலா ரூ.5,000/- வீதமும் நிவாரணம் வழங்க ஏதுவாக அரசாணை எண் 121, வருவாய், நாள் 23-2-2005-ல் ரூ.5 கோடி (ரூபாய் ஐந்து கோடி மட்டும்) நிதி அனுமதித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

➢ நாகப்பட்டினம், கன்னியாகுமரி, கடலூர், காஞ்சிபுரம் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் ஆழிப்பேரலையால் விவசாய நிலங்களில் துவர்ப்பு, உப்புநீர் கலப்பு ஏற்பட்டதால் அந்த விளை

[2005 மார்ச் 23

நிலங்கள் பாதிப்புக்கு உள்ளாயின. மேற்படி விவசாய நிலங்களைப் பண்படுத்துவதற்கு ஏதுவாக ஒரு ஹெக்டேருக்கு ரூ.12,500/- வீதம் செலவிட அனுமதித்து ரூ.1,696.16 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து, அரசாணை எண் 124, வருவாய், நாள் 23-2-2005-ல் ஆணை வெளியிடப்பட்டது.

- கன்னியாகுமரி மாவட்டத்தில் 26-12-2004-ல் ஏற்பட்ட ஆழிப்பேரலையால், அடித்துச் செல்லப்பட்ட கீழமணக்குடி மற்றும் மேலமணக்குடிக்கு இடையே இருந்த இணைப்புப் பாலத்தை மீண்டும் மேற்படி கிராமங்களை இணைப்பதற்கு ஏதுவாக இரும்புப் பாலம் அமைக்க ரூ.1.40 கோடி நிதி அனுமதித்து, அரசாணை எண் 125, வருவாய்த் துறை, நாள் 23-2-2005-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

- கடலூர் மாவட்டத்தில் ஆழிப்பேரலையின் காரணமாக இரால்/நண்டு பண்ணை உரிமையாளர்கள், மீன்குஞ்சு வளர்க்கும் பண்ணை உரிமையாளர்கள், மீன் போக்குவரத்து செய்யும் உரிமையாளர்கள், ஐஸ் கட்டிகள் தயாரிக்கும் நிறுவனங்கள் முதலியன பாதிப்புக்குள்ளாயின. இவற்றில் 40 இனங்களுக்கு மேற்படாத வகையில், சொத்து இழப்பீட்டு மதிப்பு அல்லது ரூ.25,000/- இவற்றில் எது குறைவோ அதை மானியமாக வழங்குவதற்கு ரூ.10 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) நிதி அனுமதித்து, அரசாணை எண் 130, வருவாய்த் துறை, நாள் 24-2-2005-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

- கன்னியாகுமரி மாவட்டத்தில் சின்னமுட்டம் படகுத் துறையைப் பழுதுபார்க்க ரூ.5 இலட்சமும், கன்னியாகுமரி படகுத் துறையைப் பழுது பார்க்க ரூ.1,89,000/-(ரூபாய் ஒரு இலட்சத்து எண்பத்தொன்பதாயிரம் மட்டும்) மானியமாக நிதி அனுமதித்து, அரசாணை எண் 131, வருவாய், நாள் 24-2-2005-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

- சுனாமி தாக்குதலால் பாதிப்புக்குள்ளான மீன்பிடி துறைமுகங்கள், மீன்பிடி மையங்களைப் பழுதுபார்த்தல், நதி முகத்துவாரங்களில் தூர்வாருதல், மீன்பிடி தொழிலை மீண்டும் மேற்கொள்ள ஏதுவாக நடவடிக்கை மேற்கொள்வதற்கென ரூ.6.635 கோடி நிதி அனுமதித்து அரசாணை எண் 143, வருவாய்த் துறை, நாள் 3-3-2005-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.



2005 மார்ச் 23]

இத்தொகை கீழ்க்கண்டவாறு மாவட்டங்களுக்குப் பகிர்ந்தளிக்கப் பட்டுள்ளது:-

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | வழங்கப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | கடலூர் | 52.00 |
| 2. | நாகப்பட்டினம் | 447.00 |
| 3. | புதுக்கோட்டை | 55.00 |
| 4. | இராமநாதபுரம் | 20.00 |
| 5. | தூத்துக்குடி | 17.50 |
| 6. | கன்னியாகுமரி | 72.00 |
| | **மொத்தம்** | **663.50** |

**கோரிக்கை குறிப்பு**

இப்பேரழிவால் உயிரிழந்த நபர்களின் குடும்பத்தாருக்கு நிவாரணம் வழங்கவும், வீடுகள் மற்றும் உடைமைகளை இழந்தவர்களுக்கு நிவாரணத் தொகை அளிக்கவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு தற்காலிக நிவாரணம் அளிக்க ஆகும் செலவினங்களை, நேரடியாக மற்றும் மறைமுகமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு குறுகிய மற்றும் நிரந்தர நிவாரணம் வழங்கவும் மற்றும் அரசுக்குச் சொந்தமான பல்வேறு அடிப்படை ஆதாரங்களைச் சீர் செய்யவும் அரசுக்குப் பெருமளவில் நிதி ஆதாரம் தேவைப்படுகிறது. இப்பாதிப்பு தேசியப் பேரழிவாக அறிவிக்கப்பட்டதால் மத்திய அரசிடமிருந்து போதிய கூடுதல் நிதி ஒதுக்கீடு பெறுவதற்காக இனம்வாரியாகவும், துறைவாரியாகவும் சேதங்கள் மதிப்பீடுகள் செய்யப்பட்டன. அதனடிப்படையில் பல்வேறு இனங்களின்கீழ் கூடுதல் நிவாரணமாக ரூ.4,800 கோடியும் பாதிக்கப்பட்ட மக்கள் இயல்பான வாழ்க்கைக்குத் திரும்பும் வரை உணவு அளிக்க 54,000 டன் உணவு தானியங்கள் வழங்கக் கோரும் கோரிக்கை மனுவினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 4-1-2005 அன்று மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தார்கள்.

2. பேரிடர் இன்னல் மேலாண்மைத் திட்டம் மற்றும் நகர்ப்புற நில நடுக்க பாதிப்பு தணிக்கும் திட்டம் ஆகியவை பற்றி இந்திய பொறியாளர்கள் நிறுவனம், கூர் உணர்வுபடுத்தும் கூட்டம் ஒன்றை 25-12-2003 அன்று நடத்தியது.

3. இந்திய கட்டடக் கலை நிபுணர்கள் நிறுவனம் மற்றும் இந்திய பொறியாளர்கள் நிறுவனம் ஆகியவற்றின் உறுப்பினர்களுக்கு சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் ஒரு கூர் உணர்வூட்டும் கூட்டத்தை 30-12-2003 அன்று நடத்தியது.

4. 19-1-2004 அன்று சென்னை மாநகராட்சியும், கோயம்புத்தூர் மாவட்ட நிர்வாகமும் கட்டடங்களின் பாதிப்பு தன்மையைக் கணிப்பது பற்றியும், கட்டடங்கள் மறு சீரமைப்பு பற்றியும் அரசு பொறியாளர்களுக்கு ஒரு பயிற்சி நிகழ்ச்சியை நடத்தின.

5. 19-1-2004 அன்று இந்திய தொழில் கூட்டமைப்பு, நில நடுக்கத்தை எதிர்கொள்ள எடுக்க வேண்டிய முன் நடவடிக்கைகள் பற்றி ஒரு கூர் உணர்வூட்டும் நிகழ்ச்சியை நடத்தியது.

6. 17-7-2004 அன்று சென்னையில் நில நடுக்கத்திற்கு முன்பாக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றி இந்திய தொழில் கூட்டமைப்போடு சேர்ந்து ஒரு கூர் உணர்வூட்டும் நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

7. இந்திய அரசின் உள் விவகாரத் துறை அமைச்சக திறன் கூட்டு ஆலோசகர் (நில நடுக்க பாதிப்பு தணித்தல்) பேராசிரியர் ஏ.எஸ். ஆர்யா அவர்கள் நகராட்சி, ஊரக வளர்ச்சி, காவலர் வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மற்றும் பொதுப் பணித் துறை பொறியாளர்களுக்கு 17-7-2004 அன்று சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தில் கட்டடங்களை விரைவாக பார்வை மூலம் பரிசோதித்தல் பற்றி கூர் உணர்வு நிகழ்ச்சியை நடத்தினார்கள்.

8. கோயம்புத்தூரில் 7-8-2004 மற்றும் 8-8-2004 ஆகிய நாட்களில் தொழில்புரியும் பொறியாளர்கள், கட்டடக் கலை நிபுணர்கள், கட்டடம் கட்டுபவர்கள், அரசுப் பொறியாளர்கள் ஆகியோர்க்கு ஒரு பயிற்சி நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டு, நில நடுக்க பொறியியலில் பயிற்சி அளிக்கப்பட்டது.



9. கோயம்புத்தூர் பெருநகரில் அனைத்து அரசுக் கட்டடங்களும் நில நடுக்கப் பாதுகாப்பிற்காக ஆய்வு செய்யப்பட்டன.

10. நில நடுக்கத்தை எதிர்கொள்ளும் தன்மை கொண்ட கட்டுமானம் தொடர்பாக முழுமையான தொடர் பயிற்சி நிகழ்ச்சிகள் கோயம்புத்தூரில் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

11. நில நடுக்க இன்னல் மேலாண்மையில் பொறியாளர்களுக்கும் கட்டடக் கலை நிபுணர்களுக்கும் திறன் கூட்டுவதற்காக தேசிய அளவில் இரண்டு திட்டங்கள் முன்னேற்றத்தில் உள்ளன. இத்திட்டங்களின்கீழ் மாநில ஆதார நிலையங்களின் பயிற்சி நிபுணர்களுக்கு தேசிய ஆதார நிலையத்தில் பயிற்சி அளிக்கப்படும். இவ்வாறு பயிற்சி அளிக்கப்பட்ட பயிற்சி நிபுணர்கள் அரசு மற்றும் தனியார் துறை பொறியாளர்கள் மற்றும் கட்டடக்கலை நிபுணர்களுக்கு நில நடுக்க பாதுகாப்பு கட்டடங்கள் கட்டுதல் பற்றி பயிற்சி அளிப்பார்கள்.

12. இந்திய அரசின் உள் விவகார அமைச்சகம் கட்டட வரன்முறைகள் மற்றும் துணைச் சட்டங்களுக்கு திருத்தங்களை முன்மொழிந்துள்ளது. திட்டமிடுதலிலும், கட்டுமானத்திலும் பேரிடர் எதிர்ப்பு தொழில்நுட்பத்தை புகுத்தவேண்டி நடைமுறையில் உள்ள கட்டட சட்டதிட்டங்களுக்கு பொருத்தமான திருத்தங்களை உருவாக்கி பரிந்துரை செய்ய ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

**மாவட்ட அளவில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்**

1. மாவட்ட ஆட்சியர்கள் மாவட்ட ஒருங்கிணைப்பு அதிகாரியாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

2. பேரிடர் இன்னல் மேலாண்மைத் திட்டம் தொடர்பான பணிகளைக் கவனிப்பதற்காக தனியாக மாவட்ட திட்ட அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

3. மாவட்டம், வட்டாரம், ஊராட்சி மற்றும் கிராம அளவில் பேரிடர் மேலாண்மைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

4. பேரிடர் இன்னல் மேலாண்மை திட்டம் பற்றி 15,792 அரசு அலுவலர்கள் மற்றும் பேரிடர் மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் கூர் உணர்வு செய்யப்பட்டுள்ளனர்.

[2005 மார்ச் 23

5. பேரிடர் இன்னல் மேலாண்மைத் திட்டம் பற்றி 869 ஊராட்சி நிறுவன உறுப்பினர்கள் கூர் உணர்வுபடுத்தப்பட்டுள்ளனர்.

6. ஊராட்சி மற்றும் கிராம அளவில் 841 பேரிடர் மேலாண்மைத் திட்டங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன.

**மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள்**

- மாநில மற்றும் 6 பேரிடர் இன்னல் மேலாண்மைத் திட்ட மாவட்டங்களில் அவசர கால நடவடிக்கை மையங்கள் கட்டுதல்.
- தமிழில் கையேடுகள், பயிற்சி நூல்கள், தகவல், கல்வி மற்றும் தொடர்பு நூல்கள் தயாரித்தல்.
- பேரிடர் மேலாண்மை பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்த தெருமுனை நாடகங்களை உருவாக்குதல்.
- கிராம ஊராட்சி, வட்டார மற்றும் மாவட்ட அளவில் பேரிடர் மேலாண்மைத் திட்டங்களைத் தயாரித்தல்.
- வட்டார முதன்மை பயிற்சியாளர்கள் அணியினைக் கண்டறிந்து பயிற்சியளித்தல்.
- வட்டாரத்திற்கு 200 தொண்டர்களைக் கண்டறிந்து பேரிடர் மேலாண்மையின் பல்வேறு தன்மைகளில் பயிற்சியளித்தல்.
- முன்னெச்சரிக்கை, மீட்பு மற்றும் அப்புறப்படுத்துதல், சேதக்கணிப்பு, நிவாரண மேலாண்மை, உயிர்நீத்த உடல்களை அப்புறப்படுத்துதல், முதலுதவி, குடியிருப்பு மேலாண்மை மற்றும் குடிநீர், சுகாதாரம், அவசர நேர ஆலோசனை மற்றும் விழிப்புணர்வு மற்றும் சுற்றுக்காவல் ஆகியவற்றிற்காக 9 வகையான பேரிடர் மேலாண்மை அணிகளை ஏற்படுத்துதல்.
- ஒவ்வொரு திட்ட மாவட்டத்திலும் பாதிப்புக்கு உள்ளாகும் தன்மைகொண்ட ஒரு வட்டாரம் தேர்ந்தெடுக்கப்பட்டு, முதல்கட்டமாக அனைத்து பேரிடர் மேலாண்மை அணிகளின் உறுப்பினர்களுக்கும் பயிற்சியளித்தல்.
- பேரிடர் மேலாண்மையைக் கல்வித் திட்டத்தில் சேர்த்தல், பள்ளிக் குழந்தைகளுக்கு பேரிடர் தயார்நிலை தொடர்பாக கையேடுகள் தயாரித்தல் மற்றும் பேரிடர் தயார்நிலை கையேட்டைப் பயன்படுத்துவது பற்றியும் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட கல்வித் திட்டத்திலும் ஆசிரியர்களுக்குப் பயிற்சியளித்தல்.



2005 மார்ச் 23]

- அரசு ஊழியர்களுக்கும் பேரிடர் மேலாண்மையில் கூர் உணர்வு ஏற்படுத்த மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் மற்றும் பவானிசாகரில் உள்ள தமிழ்நாடு அரசு அலுவலர் பயிற்சி நிலைய பயிற்சித் திட்டங்களில் பேரிடர் மேலாண்மையை ஒரு பொருளாக சேர்த்தல்.
- இந்திய அரசின் உள் துறை அமைச்சகத்தால் அளிக்கப்படும் பயிற்சிக்காக வேறுபட்ட துறைகள் / பிரிவுகள் நிறுவனங்களிலிருந்து நிபுணர்களைக் கண்டறிதல்.
- பல்வேறு நிலைகளில் மாதிரிப் பயிற்சிகளை நடத்துதல்.

## 2.14 தமிழ்நாடு குடும்ப துயர் துடைப்புத் திட்டம்

அரசாணை (நிலை) எண் 470, (மு.அ.பொ.நி.நி) நிதித் துறை, நாள் 23-5-1989-ன்படி இத்திட்டம் தொடங்கப்பட்டபோது ஆண்டு வருமானம் ரூ.5,000/-க்குட்பட்டு பொருளீட்டும் குடும்பத் தலைவரை இழந்து தவிக்கும் குடும்பத்திற்கு ரூ.2,000/- நிவாரணத் தொகை வருவாய்த் துறை மூலம் வழங்கப்பட்டு வந்தது. அரசாணை (நிலை) எண் 726, வருவாய்த் துறை, நாள் 5-8-1996-ல் ஆண்டு வருமானம் ரூ.7,200/- வரை பெறும் குடும்பங்கள் இத்திட்டத்தின்கீழ் பயன்பெறலாம் என ஆணையிடப்பட்டது.

இத்திட்டம் ஆரம்பித்தபோது அனைத்து செலவுத் தொகையையும் மாநில அரசு ஏற்றுக் கொண்டது. பின்பு 2-10-1995-லிருந்து செலவுத் தொகையை மாநில அரசும் மத்திய அரசும் ஏற்றுக் கொண்டன. இறுதியாக 1-8-1998 முதல் மொத்த செலவுத் தொகையையும் மத்திய அரசே ஏற்றுக்கொண்டுள்ளது. 2002-2003 ஆம் நிதியாண்டிலிருந்து மாநில அரசுகளே இந்தத் திட்டத்தினைச் செயல்படுத்தலாம் என்ற கொள்கை முடிவை மத்திய அரசு எடுத்துள்ளது. அதற்கேற்ப கூடுதல் நிதியை மத்திய அரசு வழங்கும். இந்த உதவித்தொகை படிப்படியாக உயர்த்தப்பட்டு தற்போது அரசாணை(நிலை) 11, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 22-1-1999-ன்படி 1-8-1998 முதல் ரூ.10,000/- நிவாரணத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

[2005 மார்ச் 23

இத்திட்டத்தின்கீழ் 1997-1998 முதல் 2004-2005 (சனவரி 2005 முடிய) செலவு செய்யப்பட்ட செலவினத் தொகை வருடம் வாரியாக கீழே தரப்பட்டுள்ளது.

| ஆண்டு | செலவு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1997-1998 | 2618.70 |
| 1998-1999 | 3591.91 |
| 1999-2000 | 1884.46 |
| 2000-2001 | 1791.38 |
| 2001-2002 | 1478.80 |
| 2002-2003 | --- |
| 2003-2004 | 2892.90 |
| 2004-2005 (1/2005 முடிய) | 3543.91 |

### விபத்து நிவாரணத் திட்டம்

அரசாணை(நிலை) எண் 471, நிதித் (மு.அ.பொ.நி.நி) துறை, நாள் 23-5-1989-ன்படி தமிழ்நாட்டில் கிராமக் கைவினைஞர்கள் உட்பட 44 வகையான தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள், பணியில் இருக்கும்போது ஏற்படும் விபத்தினால் இறக்க நேரிட்டாலோ அல்லது காயம் ஏற்பட்டாலோ அல்லது அங்கங்களை இழக்க நேரிட்டாலோ அவர்களது குடும்பங்களுக்கும், காயமடைந்த அல்லது அங்கங்களை இழக்க நேரிட்ட தொழிலாளர்களுக்கும் வருவாய்த் துறை மூலம் நிவாரணத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

#### (i) விபத்தினால் மரணம் ஏற்படும் இனங்கள்

இத்திட்டம் தொடங்கப்பட்டபோது, பணியில் இருக்கும்போது விபத்தினால் இறந்த அல்லது முழுமையாக செயல் இழந்த தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு ரூ.10,000/- நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் தேவைப்படும் நிதியை ஆரம்பத்தில் மாநில அரசே முழுமையாக ஏற்றுக்கொண்டது. 2-10-1995 முதல் இந்த நிவாரணத் தொகையை மாநில அரசும் மத்திய அரசும்



2005 மார்ச் 23]

ஏற்றுக்கொண்டன. பின்பு இறந்த தொழிலாளர்களின் குடும்பத்திற்கு வழங்கப்பட்ட நிவாரணத் தொகை 28-8-1996 முதல் ரூ.15,000/- ஆக உயர்த்தப்பட்டது. இத்தொகையில் மத்திய அரசின் பங்கு ரூ.10,000/-மும் மாநில அரசின் பங்கு ரூ.5000/-மும் ஆகும்.

2002-2003 நிதியாண்டிலிருந்து இந்தத் திட்டம் மாநில திட்டத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

இறந்த தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணத் தொகை, அதில் மாநில மற்றும் மத்திய அரசின் பங்குத் தொகை பற்றிய விவரங்கள் பின்வருமாறு:-

(ரூபாய் இலட்சத்தில்)

| ஆண்டு | மாநில அரசின் பங்கு | மத்திய அரசின் பங்கு | மொத்தம் |
|---|---|---|---|
| 1997-1998 | 47.04 | 73.25 | 120.29 |
| 1998-1999 | 69.60 | 167.13 | 236.73 |
| 1999-2000 | 80.38 | 14.67 | 95.05 |
| 2000-2001 | 29.90 | 31.62 | 61.52 |
| 2001-2002 | 39.77 | 73.20 | 112.97 |

2002-2003 முதல் 2004-2005 (1/2005 முடிய) நிதியாண்டில் செலவு செய்யப்பட்ட செலவின விவரம் கீழ்க்கண்டவாறு தரப்பட்டுள்ளது:-

(ரூபாய் இலட்சத்தில்)

| ஆண்டு | நிதி ஒதுக்கீடு | செலவு |
|---|---|---|
| 2002-2003 | 160.00 | 160.00 |
| 2003-2004 | 288.00 | 162.20 |
| 2004-2005(1/2005 முடிய) | 86.01 | 21.93 |

[2005 மார்ச் 23

**(ii) விபத்தினால் காயம் ஏற்படும் இனங்கள்**

அரசாணை(நிலை) எண் 471, நிதித் (மு.அ.பொ.நி.நி) துறை, நாள் 23-5-1989-ன்படி 44 வகையான தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு, பணியின்போது விபத்தினால் ஏற்படும் காயங்களுக்குக் காயத்தின் தன்மைகேற்ப ரூ.5,000/-முதல் ரூ.10,000/- வரை நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டது.

தற்போது, அரசாணை(நிலை) எண் 570, வருவாய்த் துறை, நாள் 27-10-1999-ன்படி விபத்தினால் காயம் அடையும் அல்லது அங்கங்களை இழக்க நேரிடும் 44 வகையான தொழில் செய்யும் தொழிலாளர்களுக்கு, காயத்தின் தன்மைக்கும், இழக்க நேரிட்ட உடல் உறுப்புகளின் தன்மையைப் பொருத்தும் ரூ.7,500/- முதல் ரூ.15,000/- வரை நிவாரணத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

விபத்தினால் காயம் அடையும் அல்லது உடல் உறுப்புகளை இழக்கும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகை முழுவதையும் இத்திட்டம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து மாநில அரசே வழங்கி வருகிறது.

**2.15 2005 ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கு இலவச சேலைகள், வேட்டிகள் வழங்கும் திட்டம்**

2005 ஆம் ஆண்டு பொங்கல் திருநாளை முன்னிட்டு ஏழை எளியவர்களுக்கு இலவச சேலைகள் மற்றும் வேட்டிகள் வழங்க அரசாணை(நிலை) எண் 54, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் (டி.2) துறை, நாள் 24-6-2004 மூலம் ஒப்பளிப்பு வழங்கி அதற்காக 111 இலட்சம் சேலைகளும் 111 இலட்சம் வேட்டிகளும், தயாரித்து வழங்க சென்னை கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு அரசு ஆணை பிறப்பித்தது.

இவ்வரசாணையின் அடிப்படையில் 111 இலட்சம் சேலைகள் மற்றும் 111 இலட்சம் வேட்டிகள், 2005-ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கு பயனாளிகளுக்கு வழங்குவதற்கு கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் உற்பத்தி செய்து வழங்கியுள்ளது.

இலவச சேலைகள் / வேட்டிகள், கிராமங்களில் உள்ள பொது விநியோக கடைகளில் கிராம நிர்வாக அலுவலர் தலைமை கொண்ட மூன்று நபர் குழுவின் மேற்பார்வையில் விநியோகிக்கப்படுகிறது. இக்குழு, கிராம நிர்வாக அலுவலர், கூட்டுறவுத் துறையைச் சார்ந்த அலுவலர், ஊரக வளர்ச்சித் துறையைச் சார்ந்த அலுவலர் மற்றும் மாவட்டத்திலுள்ள இதர துறையைச் சார்ந்த அலுவலர்களில் மாவட்ட ஆட்சியரால் நியமிக்கப்படுகிற ஒரு அலுவலர் ஆகியோரைக் கொண்டதாக அமைக்கப்படுகிறது.



2005 மார்ச் 23]

## அத்தியாயம் - 3

## நில நிர்வாகம்

அரசின் வெவ்வேறு துறைகள் வசம் உள்ள நிலங்கள் உட்பட அனைத்து வகையான அரசு நிலங்களும் வருவாய்த் துறையால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. நிலங்கள் அதன் பயன்பாட்டிற்கேற்ப வகைப்பாடு செய்யப்படுகின்றன. நத்தம், தீர்வை ஏற்பட்ட புஞ்சை தரிசு, தீர்வை ஏற்பட்ட நஞ்சை தரிசு , தீர்வை ஏற்படாத புஞ்சை தரிசு, நீர்வழி புறம்போக்குகளான குட்டை, குளம், ஓடை, ஆறு, மேய்க்கால் புறம்போக்கு, மந்தைவெளி புறம்போக்கு, தோப்பு, பாதை, வண்டிப்பாதை, கல்லாங்குத்து, கோயில் புறம்போக்கு மற்றும் மயான புறம்போக்குகள் ஆகியவை முக்கியமான வகைப்பாடுகளாகும்.

அரசு நிலங்கள் ஒப்படை, நிலமாற்றம், நில உரிமை மாற்றம் மற்றும் குத்தகை முறைகளில் தனியாருக்கும், அரசின் பல்வேறு துறைகளுக்கும், அரசு சார்ந்த நிறுவனங்களுக்கும் வழங்கப்படுகின்றன. தற்போது அரசு வசம் உள்ள நிலங்கள் நாளுக்கு நாள் குறைந்து கொண்டு வருவதால், அவற்றை ஒதுக்கீடு செய்வது குறித்த ஒவ்வொரு செயற்குறிப்பையும் கவனமாகப் பரிசீலனை செய்யவேண்டியுள்ளது.

**3.2 நில ஒப்படை**

அரசு நிலங்கள் வீட்டு மனைக்காகவும், விவசாயம் செய்வதற்காகவும் ஒப்படை செய்யப்படுகின்றன.

**வீட்டுமனை நில ஒப்படை**

சமுதாயத்தில் நலிந்த பிரிவினர்களின் முன்னேற்றத்திற்கு அடிப்படைத் தேவையான, வசிப்பதற்கு இடம் வழங்குவதே இவ்வரசின் நிலையான கொள்கையாகும். ஆட்சேபகரமான நீர் நிலைப் புறம்போக்குகள், மேய்க்கால், மந்தைவெளி புறம்போக்குகள் போன்ற இனங்களைத் தவிர்த்து ஒப்படை செய்ய எங்கெங்கு நிலம் உள்ளதோ, அங்கு வீட்டுமனைகளைத் தகுதியுள்ள நபர்களுக்கு ஒப்படை செய்து, வருவாய்த் துறை மக்களுக்கு உதவி செய்து வருகிறது. வீட்டுமனை ஒப்படை வருவாய் நிலை ஆணை 21-ன்கீழ் வரையறைக்குட்பட்டு வழங்கப்படுகிறது. கிராமப்புறங்களைப் பொறுத்தவரையில், நிலமற்ற ஏழைக் குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ.16,000/-க்கும் குறைவாக

[2005 மார்ச் 23

உள்ளவர்களுக்கும், நகர்ப்புறங்களைப் பொறுத்தவரையில், குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ.24,000/-க்கும் குறைவாக உள்ளவர்களுக்கும் இலவச வீட்டுமனை வழங்கப்பட்டு வருகிறது. மகளிர்க்கும் பொறுப்பளிப்பதைக் கருத்தில் கொண்டு, குடும்பத் தலைவி, அதாவது மனைவி அல்லது குடும்பத்தில் உள்ள பெண் உறுப்பினர்களின் பெயரில் மட்டுமே வீட்டுமனைகள் வழங்கப் படுகின்றன. தற்போது, கிராமங்களில் மூன்று சென்ட், நகராட்சி எல்லைக்குள் ஒன்றரை சென்ட், மாநகராட்சி எல்லைக்குள் ஒரு சென்ட் என்ற அளவில் வீட்டுமனைக்காக நிலம் ஒப்படை செய்யப்படுகிறது.

நடைமுறையில் இருந்த நிபந்தனைகளின்படி, ஒப்படை பெற்றவர் கூட்டுறவுச் சங்கங்கள் தவிர இதர நிதி நிறுவனங்களில் வீட்டுமனைப் பட்டாவை அடமானம் செய்ய அனுமதி இல்லை. இந்த அரசு வீட்டுமனைப் பட்டாவில் உள்ள இந்த நிபந்தனையை மாற்றி ஆணையிட்டதுடன், இந்திரா ஆவாஸ் யோஜனா மற்றும் பிரதமரின் கிராமோதய யோஜனா ஆகிய கிராமப்புற வீடு கட்டும் திட்டத்தின் கீழ் அரசால் ஒப்படை செய்யப்பட்ட நிலத்தில் வீடுகள் கட்டிக் கொள்வதற்காக கடன் உதவி மானிய திட்டத்தின்கீழ் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் கடன் பெறும் பொருட்டு, ஒப்படை செய்யப்பட்ட வீட்டுமனைப் பட்டாக்கள் அடமானம் செய்வதற்கு அரசாணை எண் 532, வருவாய், நாள் 29-11-2001-ன்படி ஒப்படைதாரர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

**கீழ்க்காணும் முன்னுரிமை வீட்டுமனை ஒப்படை செய்வதில் பின்பற்றப்படுகிறது:–**

(அ) எல்லைப்புற பாதுகாப்புப் படை மற்றும் இராணுவப் படை உட்பட முப்படையில் பணியில் இருந்தபோது உயிரிழந்தவர்கள் அல்லது செயலிழந்தவர்களின் குடும்பங்கள்.

(ஆ) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்.

(இ) விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகள்.

(ஈ) முன்னாள் இராணுவத்தினர்.

(உ) நிலமற்ற ஏழை.

ஒப்படை செய்வதன் பயன் ஏழை மக்களுக்கு விரைவில் சென்றடையும் வகையில் ஒப்படை செய்வதைத் துரிதப்படுத்துவதற்கும்,



2005 மார்ச் 23]

வீட்டுமனை ஒப்படை வழங்குவதற்கும் வருவாய்த் துறை அதிகாரிகளுக்கு கீழ்க்கண்ட நிதி அதிகார வரம்பு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது:–

| அலுவலர்கள் | நிதிவரம்பு |
|---|---|
| 1. வட்டாட்சியர் | ரூ. 10,000/- |
| 2. கோட்டாட்சியர் | ரூ. 20,000/- |
| 3. மாவட்ட வருவாய் அலுவலர் | ரூ. 50,000/- |
| 4. மாவட்ட ஆட்சித் தலைவர் | ரூ. 2,00,000/- |
| 5. நில நிர்வாக ஆணையர் | ரூ. 2,50,000/- |
| 6. அரசு | ரூ. 2,50,000/-க்கு மேல். |

2004-2005-ல் மாநிலம் முழுவதும் 60,000 வீட்டுமனைப் பட்டாக்களை வழங்குவது என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இருப்பினும், 31-1-2005 வரை 84,207 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு உள்ளன. இது தொடர்பான விவரங்கள் பின்வருமாறு:–

**2004–2005 ஆம் ஆண்டில் 31–1–2005 வரை வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கிய விவரம்**

| குறியீடு | 60,000 பட்டாக்கள் |
|---|---|
| **சாதனை** | **84,207 பட்டாக்கள்** |
| **வகுப்பினர்** | **பயனாளிகள்** |
| ஆதிதிராவிடர் | 25,586 |
| பழங்குடியினர் | 2,508 |
| மிகவும் பிற்படுத்தப்பட்டோர் | 21,264 |
| பிற்படுத்தப்பட்டோர் | 33,031 |
| ஏனையோர் | 1,818 |
| **மொத்தம்** | **84,207** |

**விவசாய நிலம் ஒப்படை**

கிராமங்களில் வாழும் மக்கள் பெரும்பாலும் தங்கள் வாழ்க்கைக்கு விவசாயத்தையும் அதைச் சார்ந்த வேலைகளையும் நம்பி வாழ்ந்து வருகின்றனர். ஆனால், அவர்கள் அனைவரும் சொந்த நிலம் வைத்திருக்க வாய்ப்பில்லை. எனவே, நிலமற்ற ஏழைகளுக்கு அரசு நிலங்களை வழங்கி, விவசாயத்தையும் அதனைச் சார்ந்த வேலைகளையும் தொழிலாக மேற்கொள்வது மற்றும் நிலத்தை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்வது ஆகிய இரு குறிக்கோள்களை அடைவதற்கு அரசு உதவி வருகின்றது. விவசாய நில ஒப்படை வருவாய் நிலை ஆணை 15-ன்கீழ் செய்யப்படுகிறது. ஒரு குடும்பத்தின் அளவு எப்படி இருந்தபோதிலும், குடும்ப ஆண்டு வருமானம் கிராமப்புறத்தில் ரூ.16,000/-க்கும், நகர்ப்புறத்தில் ரூ.24,000/-க்கும் குறைவாக இருப்பவர்களுக்கு இலவசமாக நிலம் ஒப்படை செய்யப்படுகிறது. வீட்டுமனை ஒப்படை செய்வதற்குப் பின்பற்றப்படும் அதே முன்னுரிமை வரிசை, விவசாய நில ஒப்படைக்கும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

கன்னியாகுமரி மாவட்டம் நீங்கலாக இதர மாவட்டங்களில் ஒருவருக்கு ஒப்படை செய்யப்படும் நிலத்தின் பரப்பளவு, அவர் ஏற்கெனவே வைத்திருக்கும் நிலப்பரப்பும், ஒப்படைப் பரப்பும் சேர்த்து 3 ஏக்கர் புன்செய் அல்லது ஒன்றரை ஏக்கர் நன்செய் என்ற வரம்புக்கு உட்பட்டு ஒப்படை செய்யப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் நிலங்களின் பரப்பு மிகவும் குறைவாக இருப்பதாலும், நிலங்கள் மிகவும் மதிப்பு வாய்ந்தவை என்பதாலும், அம்மாவட்டத்தில் இந்த பரப்பளவு ஒரு ஏக்கர் புன்செய் அல்லது 0.50 ஏக்கர் நன்செய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒப்படை நிபந்தனைகளின்படி, ஒப்படை பெற்ற நிலத்தை ஒப்படை செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள் ஒப்படை பெற்றவர் விவசாயம் செய்ய வேண்டும். ஒப்படை பெற்ற நிலத்தைப் பிறருக்கு விற்பனை செய்யக் கூடாது. ஒப்படை பெற்ற நிலத்தில் குறைந்தது 10 மரங்களை நடவேண்டும். ஒப்படை நிபந்தனைகள் மீறப்படுமேயானால், இழப்பீடு எதுவும் வழங்கப்படாமல் நிலம் அரசால் மீளப்பெறப்படும்.

சமுதாயத்தில் பொதுத் தேவைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். நீர்வழிப் புறம்போக்குகளான ஏரி, குளம், குட்டை, வாய்க்கால் போன்றவற்றையும் மந்தைவெளி, மேய்க்கால் மற்றும் மயானம் ஆகிய புறம்போக்குகளையும் ஒப்படை செய்வதற்கு அரசு தடை விதித்துள்ளது. இயற்கைச் சூழல் சமன்பாட்டினை





பாதுகாப்பதற்கும், மண் அரிமானத்தைத் தடுப்பதற்காகவும், மாநிலத்திலுள்ள அனைத்து மலைப் பிரதேசங்களிலும் விவசாயத்திற்கென நில ஒப்படை செய்வதற்கு அரசு தடை விதித்துள்ளது. பெரிய நகரங்களைச் சுற்றிலும் அரசின் பல்வேறு துறைகளின் வளர்ச்சித் திட்டங்களுக்கு நிலங்கள் தேவைப்படுவதால், சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் மற்றும் மாநகராட்சி எல்லைக்குள்ளும் நில ஒப்படை செய்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

வீட்டுமனை ஒப்படை செய்வதற்கு வழங்கப்பட்டுள்ளது போலவே, விவசாய நிலம் ஒப்படை செய்வதற்கும் வருவாய்த் துறை அலுவலர்களுக்கு கீழ்க்கண்ட நிதி அதிகார வரம்பு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது:-

| அலுவலர்கள் | நிதி வரம்பு |
|---|---|
| 1. வட்டாட்சியர் | ரூ. 10,000/- |
| 2. கோட்டாட்சியர் | ரூ. 20,000/- |
| 3. மாவட்ட வருவாய் அலுவலர் | ரூ. 50,000/- |
| 4. மாவட்ட ஆட்சித் தலைவர் | ரூ. 2,00,000/- |
| 5. நில நிர்வாக ஆணையர் | ரூ. 2,50,000/- |
| 6. அரசு | ரூ. 2,50,000/-க்குமேல் |

2004-2005 ஆம் ஆண்டுக்கு மாநிலம் முழுமைக்கும் 3,000 ஏக்கர் விவசாய நிலம் ஒப்படை செய்வதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 31-1-2005 வரையில் மாநிலத்தில் 5344.56 ஏக்கர் நிலம் 9,873 நபர்களுக்கு ஒப்படை செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான விவரங்கள் பின்வருமாறு:—

**2004–2005 ஆம் ஆண்டில் 31-1-2005 வரை நிலமற்ற ஏழைகளுக்கு விவசாய நிலங்கள் ஒப்படை செய்யப்பட்ட விவரங்கள்**

| | | (ஏக்கரில்) |
|---|---|---|
| **குறியீடு** | .. | **3000** |
| **சாதனை** | .. | **5344.56** |

| வகுப்பினர் | பயனாளிகள் | பரப்பு (ஏக்கரில்) |
|---|---|---|
| ஆதிதிராவிடர் | 2331 | 1322.98 |
| பழங்குடியினர் | 95 | 44.07 |
| மிகவும் பிற்படுத்தப்பட்டோர் | 3137 | 1537.55 |
| பிற்படுத்தப்பட்டோர் | 4141 | 2345.76 |
| ஏனையோர் | 169 | 94.20 |
| மொத்தம் | 9873 | 5344.56 |

### 3.3 நிலக் குத்தகை

பொதுவாக அரசு நிலங்கள் குறிப்பிட்ட கால வரையறைக்கு உட்பட்டு, தனி நபர்கள், தனியார் அமைப்புகள், நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வருவாய் நிலையாணை எண் 24ஏ-ன் கீழ் குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. ஆண்டு குத்தகைத் தொகை நிலமதிப்பின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது.

ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் வரும் நிலங்களுக்கு கீழ்க்கண்டவாறு குத்தகை நிர்ணயம் செய்யப்படுகிறது:-

| நோக்கம் | குத்தகை விகிதம் | தலவரி | தல மேல் வரி | மொத்தம் |
|---|---|---|---|---|
| வணிகநோக்கம் | 2 சதவீதம் | 2 சதவீதம் | 10 சதவீதம் | 14 சதவீதம் |
| வணிகமல்லாத நோக்கம் | 1 சதவீதம் | 1 சதவீதம் | 5 சதவீதம் | 7 சதவீதம் |

மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் வரும் அரசு நிலங்களை குத்தகைக்கு வழங்கும்போது, அவை வணிக நோக்கமாயின் நிலமதிப்பில் 14% (கூடுதல் மேல்வரி உட்பட) ஆண்டுக் குத்தகையாகவும், வணிக நோக்கமல்லாத நோக்கமாயின் நிலமதிப்பில் 7% (கூடுதல் மேல்வரி உட்பட) ஆண்டுக் குத்தகையாகவும் நிர்ணயம் செய்து தற்போது வசூல் செய்யப்படுகிறது.



### 3.4 நில மாற்றம்

அரசு புறம்போக்கு நிலங்கள் மைய அரசுத் துறைகளுக்கு வருவாய் நிலையாணை எண் 23-ன்கீழ் வழக்கமாக சந்தை மதிப்பினை வசூலித்துக் கொண்டு நிலமாற்றம் செய்யப்படுகின்றன. ஆனால், சென்னையில், துரிதஇரயில் போக்குவரத்து முதல் கட்ட திட்டத்திற்காக நிலங்கள் இரயில்வே துறைக்கு நிலக்கிரயமின்றி நிலமாற்றம் செய்யப்பட்டுள்ளது. மேலும், திருமயிலை—வேளச்சேரி வரையிலான இரண்டாம் கட்ட துரித இரயில் போக்குவரத்து திட்டத்திற்கு தேவைப்படும் புறம்போக்கு நிலங்கள் நீண்டகாலக் குத்தகை அடிப்படையில் இரயில்வே துறைக்கு வழங்கப்பட்டு, ஆண்டு ஒன்றுக்கு ரூ.1,000/- குத்தகைத் தொகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

மாநில அரசுத் துறைகளுக்கு வருவாய் நிலை ஆணை எண் 23-அ-வின்கீழ்பள்ளிக் கட்டடங்கள், மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் போன்ற வணிக நோக்கமல்லாத பயன்பாட்டிற்காக நிலக்கிரயமின்றி நிலமாற்றம் செய்யப்படுகிறது. வணிக நோக்கங்களுக்காக நிலங்கள் கேட்கப்படும்பொழுது, நிலமதிப்பு வசூலிக்க ஆணையிடப்படுகிறது.

போக்குவரத்து, சுகாதாரம், கல்வி மற்றும் காவல் துறை போன்ற அரசுத் துறைகளின் பயன்பாட்டிற்கான ஆட்சேபணையற்ற, குறைந்தபட்ச அளவு அரசுப் புறம்போக்கு நிலங்களை நிலமாற்றம் செய்ய மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. நிலமாற்றம் எந்நோக்கத்திற்காகச் செய்யப்பட்டதோ, அவற்றிற்காக முழுமையாக பயன்படுத்தப்படாத பட்சத்தில் அத்தகைய நிலங்கள் மீளப் பெறப்பட்டு, தேவைப்படும் பிற துறைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

### 3.5 நில உரிமை மாற்றம்

பொது நோக்கங்களுக்காகவும், சமுதாய நலனை முன்னேற்று வதற்காகவும், வருவாய் நிலையாணை 24-ன் கீழ் அரசு புறம்போக்கு நிலங்கள், அரசு சார்பு நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள், பல்கலைக்கழகங்கள், தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் மற்றும் இதர தொழில் நிறுவனங்களுக்கு சில நிபந்தனைகளுக்குட்பட்டு, உரிமை மாற்றம் செய்யப்படுகின்றன. தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு குடிசை வாழ்மக்களுக்கு குடியிருப்புகள் கட்டுவதற்காக நிலக்கிரயமின்றியும், இதர காரியங்களுக்கு மனை ஒன்றுக்கு பெயரளவு

[2005 மார்ச் 23

நிலக்கிரயமாக ரூ.5,000/- வசூலித்துக் கொண்டும் அரசு நிலங்கள் உரிமை மாற்றம் செய்யப்படுகின்றன. இதேபோன்று, தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியத்திற்கும் இலவசமாக நிலங்கள் உரிமை மாற்றம் செய்யப்படுகின்றன. இதர கேட்பு நிறுவனங்களுக்கு சந்தை மதிப்பு அல்லது அதற்குமேல் நிலக்கிரயம் வசூலிக்கப்பட்டு, நிலம் உரிமை மாற்றம் செய்யப்படுகின்றது. அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு பேருந்து முனையம் மற்றும் பயணியர் பேருந்து நிறுத்துமிடங்கள் அமைக்க தேவைப்படும் நிலத்தின் சந்தை மதிப்பில் 50 சதவீதம் நிலக்கிரயம் வசூலித்துக் கொண்டு உரிமை மாற்றம் செய்யப்படுகிறது. உரிமை மாற்றம் நிபந்தனைகள் மீறப்படின், எந்தவிதமான இழப்பீட்டுத் தொகையும் வழங்காமல் நிலங்கள் அரசால் மீளப் பெறப்படுகின்றன.

### 3.6 ஆக்கிரமணங்களை அகற்றுதல்

அரசு நிலங்கள் குறைவாக உள்ளன. அரசு நிலங்களைத் தகுதி வாய்ந்த ஏழைகளுக்கு ஒப்படை செய்தல் மூலமும், மற்றும் இதர வளர்ச்சித் திட்டங்களுக்காகவும், பொது நோக்கங்களுக்காகவும் அளிப்பதன்மூலமும், அவை நன்கு பயன்பட வேண்டும். எனவே, அரசு நிலங்களில் ஆக்கிரமிப்பு தடுக்கப்பட வேண்டும் என்பது அரசின் கொள்கையாகும்.

பொதுநோக்கங்களுக்கு என குறிப்பாக குறிக்கப்படாத அரசு நிலங்களில் உள்ள ஆக்கிரமணங்கள், ஆட்சேபகரமற்றவை எனக் கருதப்படுகின்றன. அத்தகைய ஆக்கிரமிப்புகளின் தன்மைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில், வரன்முறைப்படுத்தப்படுவதற்கு தகுதி உடையவை ஆகின்றன. நீர்ப்பிடிப்பு, நீர்வழிப் புறம்போக்குகள், மேய்க்கால் நிலங்கள், கோயில் நிலங்கள், களம் போன்றவற்றில் உள்ள ஆக்கிரமிப்புகள் மிகவும் ஆட்சேபணைக்குரியவை எனக் கருதப் படுவதால், அவை அகற்றப்பட வேண்டும். வருவாய்த் துறை, பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை, நகராட்சி மற்றும் மாநகராட்சி அலுவலர்கள், முறையற்ற ஆக்கிரமிப்புகளை தமிழ்நாடு ஆக்கிரமணச் சட்டம், 1905-ன்படி, முன் அறிவிப்பு அளித்த பின் அகற்ற அதிகாரம் பெற்றுள்ளனர்.

அரசு நிலங்களில் உள்ள ஆக்கிரமணங்களை ஒரு குறிப்பிட்ட காலவரைக்குள் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக மாவட்ட ஆட்சியரைத் தலைவராகவும், கீழ்க்கண்ட அதிகாரிகளை



2005 மார்ச் 23]

உறுப்பினர்களாகவும் கொண்டு மாவட்ட அளவில் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது:—

| மாவட்ட ஆட்சித் தலைவர் | தலைவர் |
|---|---|
| மாவட்ட வருவாய் அலுவலர் செயலாளர் | உறுப்பினர் |
| மாநகராட்சியின் ஆணையர் | உறுப்பினர் |
| தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர்(அ) அவரது சார்பாளர் | உறுப்பினர் |
| மாவட்ட அளவிலான காவல் துறை அதிகாரி | உறுப்பினர் |
| வனத் துறையின் மாவட்ட வன அலுவலர் | உறுப்பினர் |
| பொதுப் பணித் துறையின் மாவட்ட அளவிலான நீர்வள ஆதார செயற்பொறியாளர் | உறுப்பினர் |
| நெடுஞ்சாலைத் துறையின் கோட்டப் பொறியாளர் | உறுப்பினர் |
| ஊரக வளர்ச்சித் துறையின் உதவி இயக்குநர் | உறுப்பினர் |
| பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் | உறுப்பினர் |
| நகராட்சி நிர்வாகத் துறையின் மண்டல இயக்குநர் | உறுப்பினர் |

மாவட்ட அளவிலான இக்குழு, மாதம் ஒருமுறை கூடி, ஆக்கிரமணங்களை அகற்றுவது குறித்த செயல்திட்டத்தை வகுக்கும். இக்குழுவின் செயல்பாடுகளை மாநில அளவில், சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் ஆய்வு செய்கிறார்.

### 3.7 மரப்பட்டா திட்டம்

2சி பட்டா என வழங்கப்படும் மரப்பட்டா வழங்கும் திட்டம் மாநிலத்தில் பல்லாண்டுகளாக செயலில் உள்ளது. இத்திட்டத்தின் கீழ், அரசு புறம்போக்கு நிலங்களில் உள்ள மரங்களின் இலைகள், கனிகள் மற்றும் மரங்களின் இதர பயன்படும் பொருட்கள் ஆகியவற்றின் பலன்களைப் பயன்படுத்தும் உரிமை அருகில் உள்ள நில

உடைமையாளருக்கோ அல்லது அம்மரங்களைப் பராமரிக்கக்கூடிய பிறருக்கோ வழங்கப்பட்டு வருகிறது. ஆயினும், அரசு நிலங்கள் மற்றும் அவற்றில் நிற்கும் மரங்களின் மீதான உரிமை அரசிடமே தொடர்ந்து இருக்கும். மரப்பட்டா வழங்குவதில், நலிந்த பிரிவினைச் சார்ந்த பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது.

புதிய சமூக மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள ஊரக நிலமற்ற ஏழைப் பெண்களுக்கு, வட்டார அளவிலான குழுவினால் தெரிவு செய்யப்பட்டு, பலன் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. அரசு மற்றும் ஊராட்சி நிலங்களில் மரம் வளர்ப்பதற்கு அவர்களுக்கு மரம் நடுவதற்காக உரிமம் வழங்கப் படுகிறது. உரிமம் வழங்கப்பட்டு, இரண்டு ஆண்டு காலத்திற்குள் அவர்கள் மரங்களை நடுதல் வேண்டும். இரண்டு ஆண்டுகளுக்குப் பின், மரம் பூமியில் இருப்பது சரி பார்க்கப்பட்டு, இவ்வுரிமை தாரர்களுக்கு மரப்பட்டா வழங்கப்படுகிறது. ஒவ்வொரு கிராமத்திலும், 50 பழ மரங்கள் நடப்பட வேண்டும் என்ற திட்டத்தை அரசு கொண்டு வந்து 1992-93 முதல் அத்திட்டம் செயலாக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம், சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர்களால் செயல் படுத்தப்பட்டு வருகிறது. மாவட்ட நிர்வாகம் மரங்களை நடுவதற்கும், அவற்றைப் பாதுகாப்பதற்கும் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

**3.8 நில எடுப்பு**

1894 ஆம் ஆண்டு நில எடுப்புச் சட்டத்தின்கீழ் (மையச்சட்டம் 1/1894) மைய மற்றும் மாநில அரசுகளால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களுக்காக நிலங்கள் கையகப்படுத்தப்படுகின்றன. நில எடுப்புச் சட்டத்தின் சாதாரண பிரிவின்கீழ் நிலத்தைக் கையகப்படுத்தும் செயல்முறைகளை முழுமையாக முடிப்பதற்கு மூன்று ஆண்டுகாலம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால், அவசரப் பிரிவு 17(1)-ன்கீழ் 180 நாட்களிலும், அவசரப் பிரிவு 17(2)-ன்கீழ் உடனடியாகவும் நிலத்தைக் கையகப்படுத்த இயலும். நில எடுப்பு நடவடிக்கைகளை விரைவாக முடிக்க காலவரையறைகளை நிர்ணயித்து, திட்ட மதிப்பீடு மற்றும் மறு ஆய்வு உத்தி முறைப்படிவம் (PERT CHART) அறிமுகப்படுத்தப்பட்டது.





**நில மதிப்பீட்டு தொகை வரையறை உயர்வு**

நில மதிப்பீட்டுத் தொகை வழங்கும் வரையறை கீழ்க்கண்டவாறு உயர்த்தப்பட்டுள்ளது:—

| வ. எண் | அலுவலர்கள் | தற்போதுள்ள நிதி வரம்பு |
|---|---|---|
| 1 | வட்டாட்சியர்கள்/ தனி வட்டாட்சியர்கள் | ரூ. 2,50,000/- வரை (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) |
| 2 | கோட்டாட்சியர்கள்/ துணை ஆட்சியர் நிலையிலுள்ள அலுவலர்கள் | ரூ.2,50,000/- (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம்)-க்கு மேல் ரூ.7,50,000/- (ரூபாய் ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் ) வரை |
| 3 | மாவட்ட ஆட்சியர்/ கூடுதல் மாவட்ட ஆட்சியர்/ மாவட்ட வருவாய் அலுவலர் | ரூ. 7,50,000/- (ரூபாய் ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம்)-க்கு மேல் ரூ.20,00,000/- (ரூபாய் இருபது இலட்சம்) வரை |
| 4 | நில நிர்வாக ஆணையர் | ரூ.20,00,000/- (ரூபாய் இருபது இலட்சம்)-க்கு மேல் |

**மாவட்ட மற்றும் மாநில அளவிலான பேச்சுவார்த்தைக் குழுக்கள்**

தனியார் பேச்சுவார்த்தைமூலம் நிலங்களைக் கையகப்படுத்துவதற்கு இரண்டு குழுக்கள் உள்ளன. அவை சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரின் தலைமையின்கீழ் மாவட்ட அளவிலான பேச்சுவார்த்தைக் குழுவும் மற்றும் நில நிர்வாக ஆணையரின் தலைமையின்கீழ் மாநில அளவிலான பேச்சுவார்த்தைக் குழுவும் ஆகும். நில எடுப்புச் சட்டத்தின்படி நிலங்களைக் கையகப்படுத்துவதற்குப் பதிலாக தனியார் பேச்சு வார்த்தைமூலம் இருபது இலட்சம் ரூபாய் வரை மதிப்புள்ள நிலங்களை நில உடைமைதாரர்களிடமிருந்து வாங்குவதற்கு மாவட்ட அளவிலான குழுவிற்கு அதிகாரம் உண்டு. இருபது இலட்சம் ரூபாய்க்கு மேற்படும் நிலங்களை வாங்குவதற்கு மாநிலக் குழுவிற்கு அதிகாரம் உண்டு. மாவட்ட மற்றும் மாநிலக் குழுக்களுக்கு நிலத்தின் சந்தை

மதிப்பு அல்லது வழிகாட்டி மதிப்பு இவற்றில் எது குறைவோ அதில் 150 சதவீதம் விலையை ஒப்புக்கொள்ளப்பட்ட விலையாக ஏற்பதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. 150 விழுக்காட்டிற்கு மேற்படின் அரசின் ஒப்புதலுக்கான முன்மொழிவுகள் அனுப்பப்படவேண்டும்.

### தொழில் துறை நோக்கங்களுக்காக நிலங்கள் கையகப்படுத்தல் சட்டம், 1997 (தமிழ்நாடு சட்டம் 10/1999)

தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் நிலங்களை விரைவாக கையகப்படுத்தும்பொருட்டு, தொழில் துறை நோக்கங்களுக்காக நிலங்களை கையகப்படுத்தும் சட்டம், 1997 (தமிழ்நாடு சட்டம் 10/1999) அரசால் தனியாக இயற்றப்பட்டுள்ளது. இச்சட்டமும் மற்றும் இச்சட்டத்திற்கான விதிகளும் 21-9-2001 முதல் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

### தமிழ்நாடு நெடுஞ்சாலைத் துறைச் சட்டம், 2001 (தமிழ்நாடு சட்டம் 34/2002)

நெடுஞ்சாலைத் துறைக்கு தேவைப்படும் நிலங்களை விரைவாக கையகப்படுத்தும்பொருட்டு, தமிழ்நாடு நெடுஞ்சாலைத் துறைச் சட்டம், 2001 (தமிழ்நாடு சட்டம் 34/2002) அரசால் தனியாக இயற்றப்பட்டுள்ளது. இச்சட்டமும் மற்றும் இச்சட்டத்திற்கான விதிகளும் 1-12-2002 முதல் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.





## அத்தியாயம்-4

## நில அளவைப் பதிவேடுகள் துறை

இம்மாநில நிர்வாகத்தில் நில அளவைப் பதிவேடுகள் துறை தொன்மைவாய்ந்த துறையாகும். நில அளவைப் பணி மற்றும் புலப்படங்கள் தயாரித்தல் ஆகியவை இத்துறையின் முதன்மைக் குறிக்கோளாகும். மாநிலத்திலுள்ள அனைத்து கிராமங்கள் மற்றும் நகரங்களில் அளவைப் பணி மேற்கொள்ளுதல் இத்துறையின் கடமையாகும். பொதுமக்கள் தங்கள் நில உடைமை குறித்த புல எல்லைகளைத் தெரிந்து கொள்ளச் செய்வது மற்றும் பொதுமக்கள் உடைமைகளை சரி செய்வதும் இத்துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், கிராம வரைபடங்கள், புல வரைபடங்கள், வார்டு மற்றும் பிளாக் வரைபடங்கள், நிலப் பதிவேடுகள் ஆகியவை இத்துறையில் தயாரிக்கப்படுகிறது. நிலப் பதிவுருக்களை சரிவர பேணிக் காத்தலும் இத்துறையின் கடமையாகும்.

### நத்தம் நில அளவை

கிராம நத்தம் என்பவை நில வரித்திட்ட பதிவுகளின்படி, புறம்போக்குகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவை ஆறு, குளம் போன்ற புறம்போக்குகளிலிருந்து வேறுபட்டதாகும். பொதுமக்கள் அனுபவத்தில் உள்ள நத்தம் பகுதிக்கு சட்டப்பூர்வமாக உரிமைகள் உள்ளன. நத்தம் புறம்போக்கில் அனுபவபூர்வமான உட்பிரிவுகள் ஏதும் செய்யப்படாமல் இருந்தது. எனவே, கிராம நத்தம் பகுதிகளுக்கும் விவசாய நிலங்கள் விவசாயத்திற்குட்படாமல் பிற உபயோகத்திற்கு பயன்படுத்தப்பட்ட நிலங்கள் அனைத்தும் விரிவாக நில அளவை மேற்கொள்ளப்பட்டன.

தமிழ்நாட்டில் உள்ள 206 வட்டங்களில் 198 வட்டங்கள் நத்தம் நில அளவைப் பணிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. 4,467 ச.கி.மீ.-க்கு நத்தம் அளவைப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. நிலுவையில் உள்ள 8 வட்டங்களில் தேவைக்கேற்ப நத்தம் நில அளவைப் பணி மேற்கொள்ளப்பட உள்ளது.

[2005 மார்ச் 23

| வ. எண் | நத்தம் நில அளவைப் பணி விவரம் | வட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | மொத்த வட்டங்கள் | 206 |
| 2. | பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டவை | 198 |
| 3. | பணி முடிக்கப்பட்டவை | 192 |
| 4. | பணி முன்னேற்றத்தில் உள்ளவை | 6 |
| 5. | பணிக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டியவை | 8 |

**நகர அளவை**

நிலம் அளவை செய்யப்படாமல் இருந்த நிலையில், நிலங்களின் பரப்பு, வகைப்பாடு, தன்மை, பாய்ச்சலாதாரம், அதன்படியான நில மதிப்பு, ஆகியவற்றை நிர்ணயிக்கவும், நிலங்களின் உரிமையாளர்களை பதிவு செய்யவும், அரசுக்கு, சமுதாயத்திற்குரிய நிலங்களை வகுத்து பதிவு செய்வதற்கும், முதல் முறையாக அளவுப் பணி செய்து, புலப்படம், கிராமப்படம், உரிமையாளர் பதிவேடுகளான 'அ' பதிவேடு, சிட்டா, அடங்கல் மற்றும் பராமரிப்புத் தேவையான பதிவேடுகள் தயார் செய்யும் மூலப்பணிக்கு கிராம முதன்மை அளவை எனப்படும்.

கிராமங்கள் பெருகி வளர்ந்து, நகர அமைப்பாக மாறும்போது, இப்பகுதியின் நில மதிப்பும், நிலத்தின் வளர்ச்சித் தன்மையும் பெரிதும் மாறுபடுகின்றது. சாதாரண கிராமங்களைப் போல் அன்று நகர அமைப்பில், முழுவதும் வீடுகள், கட்டடங்கள் அமைந்துள்ளதால், கிராம வயல்வெளிகளைப் போல் அன்றி, குறுக்காக முக்கோணம் அமைத்து புலங்கள் அமைக்க இயலாததாகையால் தெருக்களை அடிப்படையாக வைத்து, வார்டு, பிளாக், நகரளவை எண் என வகைப்படுத்தி ஒவ்வொரு கைப்பற்றும் ஒரு நகரளவை எண்ணாக வைத்து பரப்புகளையும் சதுர மீட்டர் அலகாகக் கணிக்கத் தக்க வகையில் கோணமானி கருவிகளைக் கொண்டு, துல்லியமான நிலையில் மேற்கொள்ளப்படும் அளவையே முதன்மை நகரளவை ஆகும்.

தமிழ்நாட்டில் மொத்தம் 6 மாநகராட்சிகளும், 102 நகரங்களும் மேலும், சமீபத்திய அரசு வெளியீட்டின்படி, 49 மூன்றாம் நிலை நகராட்சிகளும் உள்ளன. இவற்றில் நகரளவைப் பணி 85 நகரங்களில்



2005 மார்ச் 23]

திட்டப் பணியில் எடுத்துக்கொள்ளப்பட்டு, 5 மாநகரங்களிலும், 82 நகரங்களிலும் நகர அளவைப் பணி முடிவு பெற்றுள்ளது.

| வ. எண் | நகர அளவைப் பணி விவரம் | நகராட்சி | மாநகராட்சி |
|---|---|---|---|
| 1. | மொத்த நகரங்கள் | 151 | 6 |
| 2. | பணிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டவை | 85 | 6 |
| 3. | பணி முடிக்கப்பட்டவை | 82 | 5 |
| 4. | பணி முன்னேற்றத்தில் உள்ளவை | 3 | 1 |
| 5. | பணிக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டியவை | 66 | - |

**மலைக் கிராம அளவை**

1899-1910 வரை பல்வேறு நடைமுறைகளின்கீழ் மேற்கொள்ளப்பட்ட மலைக் கிராம அளவை தற்போது பயனற்றும், பதிவேடுகள் உபயோகப்படுத்த இயலாத நிலையிலும் இருந்ததால், பதிவேடுகளை இன்றைய தேதிக்கு சரியாக பராமரிக்கும்பொருட்டும், மலைவாழ் பகுதிகளில் நில உடைமைதாரர்களின் நன்மையைக் கருதியும், மலைக் கிராம அளவை 67 மலைக் கிராமங்களை உள்ளடக்கிய 6 மலைகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மலைக் கிராம அளவை 67 மலைக் கிராமங்களை உள்ளடக்கிய 6 மலைகளில் மேற்கொள்ளப்பட்டு, அளவைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| 1. வேலூர் மாவட்டம் | 1. ஏலகிரி மலை<br>ஜவ்வாது மலை |
| 2. திருவண்ணாமலை மாவட்டம் | 2. ஜவ்வாது மலை |
| 3. திருச்சிராப்பள்ளி மாவட்டம் | 3. பச்சமலை |
| 4. சேலம் மாவட்டம் | 4. அருநூத்துமலை |
| 5. நாமக்கல் மாவட்டம் | 5. கொல்லிமலை |
| 6. கோயம்புத்தூர் மாவட்டம் | 6. ஆனைமலை |

[2005 மார்ச் 23

சுமார் 858 சதுர கிலோமீட்டர் பரப்பளவு அளவை செய்யப்பட்டுள்ளது.

**வருவாய் பதிவுகள், பதிவேடுகள் பராமரித்தல்**

பொதுமக்கள் தங்கள் உடைமை குறித்த புல எல்லைகளை தெரிந்து கொள்ளச் செய்வது, பொதுமக்கள் உடைமைகளை வருவாய் கணக்குகளில் பதிவு செய்து கொடுப்பது, பாகப்பிரிவினை ஏற்படும் போது அதற்கேற்ப கணக்குகளில் மாறுதல்களை பதிந்து கொள்வது மற்றும் உரிய கட்டணத் தொகை வசூலித்து புலப்பட நகல் வழங்குவது ஆகிய பணிகள் வட்ட அலுவலகங்களில் உள்ள நில அளவைப் பணியாளர்கள்மூலம் இத்துறை செய்து வருகிறது.

மாநில அளவில் இத்துறையின்கீழ் 30 மாவட்ட நில அளவை அலுவலகங்கள் மற்றும் சென்னையில் ஒரு மத்திய நில அளவை அலுவலகம் இயங்கி வருகிறது. பொதுமக்களுக்குத் தேவையான தகவல்கள் மாவட்ட நில அளவை அலுவலகத்தின்மூலம் தேவைப்படும் போது வழங்கப்படுகின்றன. இது தவிர கிராம வரைபடங்கள், வட்ட வரைபடங்கள், மாவட்ட வரைபடங்கள், சுற்றுலா வரைபடங்கள் மற்றும் பெருவழிப்பாதை காட்டும் வரைபடங்கள் ஆகியவை குறைந்த கட்டணத்தில் சென்னையில் உள்ள மத்திய நில அளவை அலுவலகத்தில் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

**அச்சக வசதிகள்**

சென்னை மத்திய நில அளவை அலுவலகத்தில் உள்ள அச்சகத்தில் கருப்பு, வெள்ளை மற்றும் ஆறு வண்ணங்களில் வரைபடங்கள் அச்சடிக்கப்படுகின்றன.

கணினி வரைபட மையத்தில் கிராம வரைபடத்தின் பிரதி (ஸ்கேன்) எடுத்து சேமித்தல் போன்ற இதர பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**நில ஆவணங்களை கணினிமயமாக்குதல்**

நிலப் பதிவுருக்களை கணினிமயமாக்கும் திட்டம் (தமிழ் நிலம்) மத்திய அரசின் 100 சதவீத நிதி உதவியுடன் வருவாய்த் துறையில் 1991 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் அ-பதிவேடு, சிட்டா பதிவுகள் மற்றும் அடங்கல் பதிவுகள் கணினி மயமாக்கப்படுவது முக்கியக் குறிக்கோளாகும்.



2005 மார்ச் 23]

நில அளவை ஆவணங்களைப் பொதுமக்களுக்கு வழங்கவும், கீழ்க்கண்ட வேறு பிற நோக்கங்களுக்கு பயன்படுத்தவும் நில அளவை ஆவணங்கள் கணினிமயமாக்கப்பட்டன:-

- பதிவுகளை விரைவாக மாற்றி அமைத்து சரிசெய்தல்
- நில தகராறுகளை குறைப்பதற்காக திருத்த இயலாத பதிவுகளை மேற்கொள்ளுதல்
- எளிதான முறையில் நிலப் பதிவுகளை பார்வையிட ஏதுவாக அமைத்தல்
- பொதுமக்களுக்கு உடனடியாக நில அளவை ஆவண நகல்களை வழங்க வகை செய்தல்
- நில விவரங்களை விரிவாக்கம் செய்தல்
- விவசாயக் கணக்கெடுப்பிற்கு உதவியாக புள்ளிவிவரங்கள் கொடுத்தல்
- எளிதான முறையில் தகவல் பெறவும், தேவையான தகவல்களைத் திரும்ப எடுக்கவும் மற்றும் திட்ட செயல்பாட்டை மேம்படுத்தவும் பூகோள ரீதியான தகவல்களுடன் இணைத்தல்
- ஊழலைத் தடுத்தல்
- பொதுமக்கள் நேரடியாக தொடர்பு கொள்வதற்கு ஏதுவாக அமைத்தல்

இத்திட்டத்திற்கு மத்திய அரசு முழுமையாக நிதி உதவி செய்கிறது.

இம்மாநிலத்தில் உள்ள 206 வட்டங்களில், 201 வட்டங்கள் முழுமையாக கணினிமயமாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளன. நில ஆவண கைப்பிரதி வழங்குதலை தடை செய்து, கணினிமூலம் வழங்கப்படும் நில அளவை ஆவண நகல்கள் மட்டுமே செல்லுபடி ஆகும் என அரசு அறிவிப்பு செய்துள்ளது. 31-1-2005 முடிய ஏறத்தாழ 31,94,945 நில அளவை ஆவண நகல்கள் கணினிமூலம் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

**அடங்கல் பதிவுகள்**

'அ' பதிவேடு மற்றும் சிட்டா ஆகியவற்றை கணினிமயமாக்கும் திட்டத்துடன் அடங்கல் பதிவேட்டினையும் கணினிமயமாக்க மத்திய அரசு ரூ.244.15 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. அடங்கல் விவரங்களை

[2005 மார்ச் 23

தனியார்மூலம் கணினியில் பதிவுகள் செய்வதற்கு எல்காட் நிறுவனத்தின்மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**தொடுதிரை தகவல் மேடை**

நிலப் பதிவேடுகளை கணினிமயமாக்குவதின் முக்கியத்துவத்தை உணர்ந்து, அதன் திறனை மேம்படுத்தி மக்களுக்கு எளிதான முறையில் பயன்படும் வகையில் செயல்படுத்த, தொடுதிரை கணினி தகவல் மேடை நிறுவ அரசு உத்தேசித்து, 15-04-2002 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி வட்டத்தில் தொடுதிரை தகவல் மேடை தொடங்கி வைக்கப்பட்டது. இதேபோன்று ஏனைய 29 மாதிரி வட்டங்களிலும் தொடுதிரை கணினி தகவல் மேடை நிறுவப்பட்டது. தொடுதிரை கணினிமூலம் பொதுமக்கள் பெறும் பயன்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன :

- நிலம் சம்பந்தப்பட்ட தகவல்கள் மற்றும் பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்கள்
- முதியோர் உதவித் தொகை மற்றும் வறியோர் ஓய்வூதியம் போன்ற தகவல்கள்
- நில மதிப்பீடு தகவல்கள்
- அரசு திட்டங்கள் பற்றிய விவரங்கள்

இத்திட்டத்தினால் பொதுமக்கள் எளிதாக விவரங்கள் அறிந்து கொள்வதன்மூலம் ஊழல் மற்றும் தேவையற்ற தாமதம் ஆகியவற்றை நீக்க வழிவகை செய்கிறது. ரூ.2/- செலுத்தி நில உடைமைதாரர்கள் அவர்களுக்குரிய நிலத்தைப் பற்றிய தகவல்களை அறிந்துகொள்ளலாம். ரூ.20/- செலுத்தி பட்டா நகல்களை பெறலாம். இத்திட்டத்தின் வெற்றி மற்றும் பொதுமக்களின் அமோக ஆதரவு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பிற வட்டங்களிலும் தொடுதிரை கணினி நிறுவ அரசால் முடிவு செய்யப்பட்டு, அரசு ரூ.175.60 இலட்சம் ஒதுக்கீடு செய்தது. இத்தொகைமூலம் மேலும் 97 வட்டங்களில் தொடுதிரை கணினி நிறுவப்பட்டு, இதுவரை, மொத்தம் 127 வட்டங்களில் தொடுதிரை கணினி வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**பயிற்சி**

நில ஆவணங்களைக் கணினிமயமாக்கும் திட்டம் சிறப்பாகச் செயல்பட, பணியாளர்களுக்கு கணினி மற்றும் மென்பொருள் ஆகியவற்றில் பயிற்சி அளிப்பது அத்தியாவசியமாகிறது. வட்டத்திற்கு



2005 மார்ச் 23]

40 பணியாளர்கள் வீதம் பணியாளர்களுக்கு கணினி பயிற்சி வழங்க மத்திய அரசு ஒப்புதல் அளித்து, இதற்காக மத்திய அரசு ரூ.68.36 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இதனைக் கொண்டு, ஏறத்தாழ 8,521 பணியாளர்களுக்கு கணினி அடிப்படைப் பயிற்சியும், 782 பணியாளர்களுக்கு மேம்படுத்தப்பட்ட கணினி பயிற்சியும் தனியார் பயிற்சி நிலையம்மூலமாக வழங்கப்பட்டுள்ளது. தொலைதொடர்பு தகவல் தொழில்நுட்பத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைக் கருத்தில் கொண்டு பணியாளர்களுக்கு தொடர்ந்து பயிற்சி வழங்க வேண்டிய அவசியம் உணரப்பட்டுள்ளது. இதற்காக வட்ட அலுவலகங்களில் உள்ள மீதமுள்ள அனைத்துப் பணியாளர்களுக்கும் தொடர்ந்து பயிற்சி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சிக்காக மத்திய அரசு ரூ.103.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. வட்டாட்சியர்/துணை வட்டாட்சியர் ஆகியோருக்கு பயிற்சி வழங்குவதற்கு திட்ட நிரல் தயாரிக்கப்பட்டுள்ளது.

**நிலப்படங்களைக் கணினிமயமாக்குதல்**

நில அளவை ஆவணங்களைப் பாதுகாப்பதற்கு புலப்படங்களைக் கணினிமயமாக்குதல் சிறந்த வழியாகும். நெடுஞ்சாலை, இரயில்வே, விவசாயம் மற்றும் காடுகள் போன்ற துறைகள் நில விவரங்களை எளிதில் பார்க்கவும், எடுத்து உபயோகிக்கவும், சிறப்பாகவும் துல்லியமாகவும் மற்றும் வேகமாகவும் திட்டமிடுவதற்காகவும் பயன்படுகிறது. கணினிமயமாக்கும் திட்டத்தினை முன்னோக்கி எடுத்துச் செல்ல புலப்படங்களை கணினிமயமாக்குதல் அவசியமாகிறது. எண் மற்றும் எழுத்துள்ள வடிவான விவரங்களை வரைபட விவரங்களுடன் இணைத்தல் அவசியமாகும். இதனால், எழுத்து வடிவிலான விவரங்கள் மேம்படுத்தப்படுவதோடு நில அளவை விவரங்களும் மேம்பாடு அடையும். மேலும், உட்பிரிவுமூலம் ஏற்படும் மாற்றங்களும் உடனுக்குடன் மேற்கொள்ள ஏதுவாகும். இதனால், எழுத்து வடிவான விவரங்கள் மற்றும் வரைபட விவரங்கள் உடனுக்குடன் மேம்படுத்தி சரி செய்யப்படுகிறது. இதன்மூலம் வரைபடத்துடன் கூடிய நிலஉடைமைச் சான்றுகள் வழங்க இயலும்.

செங்கல்பட்டு, குடவாசல், ஈரோடு மற்றும் கோபிசெட்டிப் பாளையம் ஆகிய 4 வட்டங்களில் புலப்படங்களை கணினிமயமாக்கும் முன்னோடித் திட்டத்திற்கு மத்திய அரசால் ரூ.124.36 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதன்மூலம் 1.22 இலட்சம் நிலப்படங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. முன்னோடித் திட்டத்தின்மூலம் ஒரு புலப்படம் தயாரிக்க ரூ.100/- வரை செலவானது. தேசிய தகவல்

மையம் கொலாப் லேண்ட் என்ற மென்பொருள் தயாரித்துள்ளது. இந்த மென்பொருள்மூலம் ஒரு புலப்படம் தயாரிக்க ரூ.10/- மட்டுமே செலவாகும். தேசிய தகவல் மையம் தயாரித்துள்ள கொலாப் லேண்ட் மென்பொருள்மூலம் மாநிலம் முழுவதுமுள்ள புலப்படங்களை ரூ.10.00 கோடி செலவில் கணினிமயமாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தேசிய தகவல் மையத்தின் மென்பொருளைக் கொண்டு அனைத்து புலப்பட நகல்களையும் கணினிமயமாக்குவது மிகவும் சிக்கனமாகும். மேலும், இந்த விவரங்கள் துல்லியமாக இருப்பதோடு பொது மக்களாலும், பிற துறைகளாலும் எளிதில் பார்க்கவும், திரும்ப எடுக்கவும், உபயோகிக்கவும் ஏதுவாகிறது. இது நிலத்தாவாக்களை வெகுவாக குறைக்கவும் வழி செய்கிறது.

புலப்படங்களுக்கான மென்பொருள் உபயோகித்து உட்பிரிவுகளை துல்லியமாக மேற்கொள்வது எளிதாகும். சாதாரணமாக, உட்பிரிவு அளவுகளைக் கொண்டு ஒரு வரைபடம் கையினால் தயாரிக்க ஒரு நாளாகும். ஆனால் இந்த மென்பொருளைக் கொண்டு 5 நிமிடங்களில் ஒரு வரைபடம் தயாரிக்கலாம்.

**பொதுமக்கள் எளிதில் தகவலறிய பாதுகாப்புடன் கூடிய கணினி தகவல் களஞ்சியம் அமைத்தல்**

முழு விவரங்கள் அடங்கிய தகவல் களஞ்சியம் அமைக்கப்படுவதன் மூலம், பொதுமக்கள் அவ்விவரங்களைத் தாமிருக்கும் கிராமப்புறப் பகுதிகளிலிருந்தே பார்வையிட்டு அறிந்து கொள்ள இயலும். அவ்வாறு தகவல் களஞ்சியம் அமைப்பதற்கு கீழ்க்கண்டவை அவசியப்படுகின்றன :

**(அ) டிஜிட்டல் பதிவுடன்கூடிய பாதுகாப்பு அமைப்பு**
(Digital Signature based Public Key Infrastructure)

(1) மத்திய கணினி தகவல் களஞ்சியத்திலுள்ள தகவல்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படுகிறது.

(2) நில ஆவணங்களின் பிரதிகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கையெழுத்திட்டு வழங்க வேண்டியதன் அவசியம் தவிர்க்கப்படுகிறது.

(3) நில ஆவண கணினி பிரதிகள் வெகுவிரைவில் வெளியிட ஏதுவாகிறது.

(4) இதற்காக அரசு ரூ.300.00 இலட்சம் வழங்கியுள்ளது.



**(ஆ) கணினிகளை இணைத்தல்** (Connectivity)

கணினிகளை இணைப்பதற்குரிய TNSWAN கட்டமைப்பு உருவாக்கப்பட்டவுடன் அகண்ட அலை (Broad Band) மூலம் 206 வட்டங்களிலுள்ள கணினிகளையும் தலைமையிடத்தில் அமைக்கப் படவுள்ள கணினி தகவல் களஞ்சியத்துடன் இணைக்க நடவடிக்கை எடுக்கப்படும். அந்நிலையில் அனைத்துத் தகவல்களும் வட்ட அளவிலும், மத்திய கணினி தகவல் களஞ்சியத்திலும் இடம் பெற்றிருக்கும். கணினிகள் அனைத்தும் மத்தியில் இணைக்கப்படும் வரை, வட்ட அலுவலக நில ஆவணங்களில் ஏற்படும் மாற்றங்கள் தினந்தோறும் மத்திய தகவல் கணினி களஞ்சியத்தில் மாற்றியமைக்கப்படும்.

**பெரம்பலூர் முன்னோடித் திட்டம்**

பெரம்பலூர் முன்னோடித் திட்டத்தை அமல்படுத்த ரூ.42.11 இலட்சம் மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் 3 சார் பதிவாளர் அலுவலகங்களிலும் கணினி வழங்கப்பட்டு, சார் பதிவாளர் அலுவலகங்கள் மற்றும் வட்ட அலுவலகங்களை இணைத்து தகவல் பரிமாற்றங்கள் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**வருவாய் நிர்வாகம் வலுப்படுத்துதல் மற்றும் நிலப் பதிவுருக்கள் மேம்படுத்தும் திட்டம்**

மத்திய அரசின் நிதி உதவி பெறும் திட்டத்தின்கீழ் வருவாய் நிர்வாகம் வலுப்படுத்துதல் மற்றும் நிலப் பதிவுருக்கள் மேம்படுத்துதல் திட்டத்திற்காக 1989 முதல் 2003 முடிய மத்திய அரசிடமிருந்து ரூ. 1,132.06 இலட்சம் நிதி உதவியாக மாநில அரசு பெற்றுள்ளது. இதில் 50 சதவிகிதம் மாநில அரசால் திட்ட செலவுக்காக வழங்கப்பட்டுள்ளது. இந்நிதி, உபகரணங்கள் வாங்கவும், பயிற்சி உள் அமைப்புகளை வலுப்படுத்தவும், கட்டடங்கள் கட்டுவதற்கும் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை திட்டத்தின்கீழ் ரூ.901.93 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**கிராம வரைபடங்களை ஸ்கேன் செய்தல்**

மத்திய நில அளவை அலுவலகத்தில் கிராம வரைபடங்கள் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. 17 ஆயிரத்துக்கும் மேற்பட்ட

[2005 மார்ச் 23

கிராம வரைபடங்களின் 50 முதல் 100 பிரதிகளை சேமித்து வைக்க அதிக இடம் தேவைப்படும். தேவையான கிராம வரைபடங்களை உடனுக்குடன் எடுக்க இயலாது. இத்திட்டத்தின்கீழ் முதற்கட்டமாக ரூ.10.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

இதன்மூலம், கிராம வரைபடங்களைக் குறைந்தமட்டில் பதிவு செய்யும் பணி தொடங்கப்பட்டது. இதுவரை 26 மாவட்ட கிராம வரைபடங்கள் ஸ்கேன் செய்யப்பட்டுவிட்டன. இதன்மூலம் இடவசதி தாராளமாக்கப்படுகிறது. கணினிமூலம் கிராம வரைபடங்களை எளிதில் எடுக்கவும் அச்சடிக்கவும் இயலும். முன்பு வரைபடம் பெறுவதற்கு 2 அல்லது 3 நாட்களாகும், ஆனால் கணினிமூலம் 1/2 மணி நேரத்திற்குள் வரைபடம் பெற இயலும்.

### பூகோள ரீதியான அளவை முறை

பூகோள ரீதியான விவரங்கள் கணினி முறையில் துல்லியமாக நில அளவை மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியம் தெரிய வந்துள்ளது. பூகோள ரீதியான விண்கோள் முறை அளவைப் பணிக்காக, அரசு, ரூ.120.00 இலட்சம் அனுமதி வழங்கியுள்ளது. இதில் 50% மத்திய அரசு நிதி உதவி வழங்குகிறது. இத்திட்டத்தின்கீழ் கணினி மூலமாக வரைபடங்கள் தயாரிக்கப்படுகின்றன. இதன்மூலம் துல்லியமான நில அளவை விவரங்கள் கிடைக்க ஏதுவாகும். இந்த முறையில் 5 அணிகளுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளன. இதற்கான முன்னோடித் திட்டம் காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், கோனாதி கிராமத்தில் மேற்கொள்ளப்பட்டு, நில அளவைப் பணி முடிக்கப்பட்டுவிட்டது. சென்னை மாநகரத்தில் உள்ள 7 கிராமங்களில் இத்திட்டத்தின்கீழ் நகரளவைப் பணி நடைபெற்று வருகிறது. இதுவரை 4 கிராமங்களில் இத்திட்டப் பணி முடிவடைந்துள்ளது.

ஜிப்பிஎஸ். மற்றும் டோட்டல் ஸ்டேஷன் உபயோகித்து நில அளவை மேற்கொள்வது இத்துறைக்கு புதிதாகும். இந்த முறையில் பூகோள ரீதியான புள்ளிகளை வடிவமைத்து கணினியில் விவரங்களை மாற்றி இதன்மூலம் வரைபடங்கள் தயாரிக்கப்படுகிறது.

### இந்தத் திட்டத்தின் நோக்கமாவது

- பூகோள ரீதியில் துல்லியமான அடையாளங்கள் செய்தல்
- மேம்படுத்தப்பட்ட நில உபயோகத்தின் விவரங்களை இணைத்தல்



2005 மார்ச் 23]

- ஜி.ப்பி.எஸ். மூலம் நில விவரங்களை கணினியில் பதிவு செய்து மேம்படுத்துதல்

ஜி.ப்பி.எஸ். கருவிமூலம் செய்யும் நில அளவை ஒரு மில்லி மீட்டர் அளவிற்கு மாறுதல் இல்லாமல் தவிர்க்கலாம். சங்கிலி அளவை முறையினை வைத்துப் பார்க்கும்போது இம்முறைமூலம் பணிக்காலம் குறைக்கப்படுவதோடு, பணச் செலவும் குறைகிறது. மேலும், இப்பணியால் பெறும் விவரங்கள் துல்லியமாகவும், எளிதில் பார்க்கக் கூடியதாகவும், உபயோகிக்க ஏதுவாக உள்ளதாகவும் இருக்கிறது.

கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் ஜிப்பிஎஸ். மற்றும் டோட்டல் ஸ்டேஷன்மூலம் அளவை செய்யும் பணியின் அவசியத்தை கோடிட்டுக் காண்பிக்கிறது.

| வ. எண் | ஜி.ப்பி.எஸ். மற்றும் டோட்டல் ஸ்டேஷன் மூலம் நில அளவை மேற் கொள்ளப்பட்ட கிராமங்கள் | பரப்பு | சங்கிலி அளவை முறை | | ஜி.ப்பி.எஸ். மற்றும் டோட்டல் ஸ்டேஷன் அளவை முறை | |
|---|---|---|---|---|---|---|
| | | | பணி முடிக்க தேவைப்படும் காலம் | தேவைப்படும் மனித நாட்கள் | பணி முடிக்க எடுத்துக் கொள்ளப்பட்ட மனித நாட்கள் | தேவைப்பட்ட மனித நாட்கள் |
| 1. | கோனாதி கிராமம் (காஞ்சிபுரம் மாவட்டம்) | 1.08 | 2 வருடங்கள் | 6,300 | 4 மாதங்கள் | 1,250 |
| 2. | 4 கிராமங்கள் (சென்னை மாநகரம்) | 4.22 | 10 வருடங்கள் | 16,800 | 9 மாதங்கள் | 2,243 |

### பயிற்சி மற்றும் கட்டமைப்பு

இத்துறையின் கட்டுப்பாட்டில் தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒரத்தநாடு நில அளவைப் பயிற்சிப் பள்ளி செயல்பட்டு வருகிறது. இதில் வருவாய்த் துறை அலுவலர்கள், பயிற்சி துணை ஆட்சியர், பயிற்சி உதவி ஆட்சியர்கள் மற்றும் பிற துறைகளைச் சார்ந்த அலுவலர்கள் ஆகியோர்களுக்கு நில அளவைப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

நவீன தொழில்நுட்ப கருவிகளைக் கொண்டு நில அளவை செய்வதற்கு நில அளவைப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கும் வகையில் சென்னையில் அண்ணா பல்கலைக்கழகத்தில் உயர் தொழில் நுட்பத்துடன் கூடிய பயிற்சிப் பள்ளி "சி-ஸ்டார்" அமைக்கப்பட்டுள்ளது.

[2005 மார்ச் 23

இந்தப் பயிற்சி நிலையத்தின் குறிக்கோள் பின்வருமாறு:-

- நில அளவைப் பயிற்சி வழங்குதல், நில அளவை சம்பந்தமான ஆராய்ச்சி மற்றும் முன்னேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்
- நில அளவைத் துறை பணியாளர்களுக்கு பயிற்சி வழங்குதல்
- நில அளவைத் துறையை நவீனமயமாக்க வழிகாட்டுதல்

இந்தப் பயிற்சி நிலையம் அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்க அரசு உத்தரவிட்டுள்ளது. அண்ணா பல்கலைக்கழகத் துணை வேந்தர் தலைவராகவும், குழு அலுவலர்கள் 7 நபர்களில் 4 நபர்கள் அரசு அலுவலர்களாகவும், 3 நபர்கள் அண்ணா பல்கலைக்கழகத்திலிருந்தும் உறுப்பினர்களாகவும் செயல்படுகின்றனர். அண்ணா பல்கலைக்கழகத்தில் உள்ள ஒரு பேராசிரியரை சிஸ்டார் இயக்குநராக நியமிக்க நிர்வாகக் குழு தேர்வு செய்துள்ளது. மத்திய மாநில அரசு திட்டத்தின்கீழ் 50 : 50 விகிதத்தில் ரூ.250.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

**மாநில பொது எல்லை**

1956-ம் ஆண்டு மொழிவாரி மாநிலங்கள் புனரமைக்கப்பட்டதன் தொடர்ச்சியாக, தமிழ்நாட்டிற்கும் அண்டை மாநிலங்களுக்கும் இடையே புதிதாக எல்லை நிர்ணயம் செய்யப்பட்டதை கூராய்வு செய்ய ஒரு கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கூட்டாய்வு நடந்து முடிந்ததும் அதனை சம்பந்தப்பட்ட அண்டை மாநிலங்கள் அங்கீகாரம் செய்கின்றன. மாநில பொது எல்லையைப் பராமரிக்கும்பொருட்டு மேற்கொள்ளப்பட்டு இக்கூட்டுத் தணிக்கை 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பணி அளவும் முடிக்கப்பட்ட விவரமும் கீழ்க்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளது:—

தமிழ்நாடு கேரள எல்லை 830.1 கி.மீ. தூரம் கொண்டு 24 பகுதிகளாக அமைந்துள்ளது. 229.4 கி.மீ. தொலைவிற்கு எல்லை அளவைப் பணி முடிக்கப்பட்டு அதன் தொடர்ச்சியாக தயாரிக்கப்பட்ட தூய ஆவணங்கள் இரு அரசாலும் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 294.7 கி.மீ. நீளமுள்ள ஆவணங்களுக்குக் கூராய்வுப் பணி நடைபெற்று



2005 மார்ச் 23]

வருகிறது. 56.4 கி.மீ. தொலைவுள்ள எல்லைக்கான கூட்டாய்வுப் பணி முன்னேற்றத்தில் உள்ளது. மீதமுள்ள 249.6 கி.மீ. தொலைவுள்ள எல்லை கூட்டாய்வு எடுத்துக்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

தமிழ்நாடு - ஆந்திரா - 578.8 கி.மீ.

தமிழ்நாடு - கர்நாடகா - 481.0 கி.மீ.

மேற்கண்ட இரு மாநிலங்களின் எல்லை தொடர்பான கூட்டாய்வு இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

தமிழ்நாடு-பாண்டிச்சேரி மாநில எல்லை 358.8 கி.மீ. நீளமுள்ளது. கூட்டாய்வு 275.5 கி.மீ. நீளத்திற்கு முடிவடைந்துள்ளது. கூட்டாய்வு 5.8 கி.மீ. பணி முன்னேற்றத்தில் உள்ளது. 78.8 கி.மீ. தொலைவிற்கு கூட்டாய்வுப் பணி மேற்கொள்ள அரசாணை பெறப்பட்டு ஆரம்பக் கட்டப் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

## நில அளவைப் பதிவேடுகள் துறை

**நத்தம் நில அளவை**

மாநிலம் முழுவதும் நத்தம் நில அளவையில் குறியீட்டின்படி நில அளவைப் பணி முழுமையாக முடிக்கப்பட்டுவிட்டது. (4,467 சதுர கிலோமீட்டர் அளக்கப்பட்டுள்ளது). ஒரு மாதத்தில் ஒவ்வொரு அலகிலிருந்தும் 0.50 கி.மீ.-க்கு உரிய ஆவணங்கள் நத்தம் நிலவரித் திட்டப் பிரிவிற்கு ஒப்படை செய்ய வேண்டுமென குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 2004-2005 ஆம் ஆண்டுக்கான செயல்திறன் அறிக்கை கீழ்க்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளது :—

| காலம் | நில அளவைப் பணி | நிலவரித் திட்டம் பிரிவிற்கு ஆவணங்கள் ஒப்படைத்தல் (ச.கி.மீ.) | |
|---|---|---|---|
| | இலக்கு / சாதனை | இலக்கு | சாதனை |
| 01-04-2004—28-2-2005 | பணி முடிக்கப்பட்டது | பணி முடிக்கப்பட்டது | பணி முடிக்கப்பட்டது |

நீலகிரி மாவட்டத்தில் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

**நகர அளவை**

நகர அளவைப் பணியில் ஒரு மாதத்தில் ஒவ்வொரு அலகிற்கும் 0.80 ச.கி.மீ. பரப்பு அளவைப் பணிக்கும் 0.50 ச.கி.மீ.-க்கான ஆவணங்கள் நிலவரி திட்டப் பிரிவிற்கும் ஒப்படைக்க வேண்டும் என குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 2004-2005-க்கான செயல்திறன் அறிக்கை விவரம் கீழ்க்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளது:—

| காலம் | நில அளவைப் பணி (ச.கி.மீ.) | | நிலவரி திட்டம் பிரிவிற்கு ஆவணங்கள் ஒப்படைத்தல் (ச.கி.மீ.) | |
|---|---|---|---|---|
| | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை |
| 01-04-2004— 28-2-2005 | 16.00 | 14.63 | 11.00 | 7.40 |

**மலைக்கிராம அளவை**

2004-2005-க்கான செயல்திறன் அறிக்கை விவரம் கீழ்க்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளது:—

| காலம் | நில அளவைப் பணி (ச.கி.மீ.) | | நிலவரி திட்டம் பிரிவிற்கு ஆவணங்கள் ஒப்படைத்தல் (ச.கி.மீ.) | |
|---|---|---|---|---|
| | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை |
| 01-04-2004— 28-2-2005 | பணி முடிக்கப் பட்டது | பணி முடிக்கப் பட்டது | பணி முடிக்கப் பட்டது | பணி முடிக்கப் பட்டது |

**நில அளவை மற்றும் நிலப் பதிவுருக்கள் பராமரித்தல் நிலவரி திட்டத் துறை வேளாண்மை சீர்திருத்தம் அறிமுகப்படுத்துதலும் இடைத்தரகர்களை ஒழித்து இரயத்துவாரியாக மாற்றலும்**

சுதந்திரத்திற்கு முன்பு ஜமீன் கிராமங்களில் விவசாயிகளிடமிருந்து ஜமீன்தாரர்கள் வரி வசூல் செய்து கணிசமான தொகையை நிர்வாகம் மற்றும் பராமரிப்புச் செலவுக்கு வைத்துக் கொண்டு பாக்கித் தொகையை அரசுக்குச் செலுத்தி வந்தனர்.





சுதந்திரம் அடைந்த பின்னர், பெருமளவில், வேளாண்மை சீர்திருத்தத்தை அறிமுகப்படுத்தும் நோக்கத்துடன் அரசுக்கும் இரயத்துக்களுக்கும் இடையே இருந்த இடைத்தரகர்களை ஒழித்து பல சட்டங்கள் இயற்றப்பட்டன. வேளாண்மை சீர்திருத்தத்தினை செயல்படுத்தும் நோக்கத்துடன் இயற்றப்பட்ட அனைத்துச் சட்டங்களின் தொடர்பான பணிகள் கூடலூர் ஜென்ம நிலங்கள் தவிர அனைத்தும் முடிக்கப்பட்டுள்ளன. ஜென்மம் நில உடைமைதாரர்கள் சிலர் அவர்கள் கைப்பற்றில் உள்ள நிலங்களுக்கு 1969 ஆம் ஆண்டைய கூடலூர் ஜென்மம் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 24/69) பொருந்தாது என சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிப் பேராணைகள் மனுக்கள் தாக்கல் செய்தனர். இந்த மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. அவர்களில் சிலர் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர். உச்ச நீதிமன்றம் மனுதாரர்களின் நிலங்களுக்குத் தடையாணை விதித்து உத்தரவு பிறப்பித்தது. மனுதாரர்கள் தங்களது சிவில் மற்றும் ரிட் மேல்முறையீடுகளில் அரசு தக்க ஆணை பிறப்பிக்க வேண்டி தங்களது மேல்முறையீடுகளைத் திரும்பப் பெறுவதற்காகக் கேட்டதின்படி, கோரிக்கைகளை ஏற்று அவர்களது மேல்முறையீட்டினை தள்ளுபடி செய்து மனுக்களில் பிரிவு 9 அல்லது 17-ன்கீழ் தக்க ஆணை பிறப்பிக்கும்படி தமிழ்நாடு அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. கூடலூர் ஜென்மம் ஒழிப்புச் சட்டம் 24/69 அரசியல் சாசனத்தில் 9-வது அட்டவணையில் சேர்க்கப்பட்டது செல்லத்தக்கதா என்ற கேள்வி எழுப்பியதையடுத்து இவ்வழக்கை விசாரிக்க ஒன்பது நீதிபதிகள் உள்ளடக்கிய பெஞ்சுக்கு அனுப்ப உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. தடையாணை நீக்கம் செய்யப்பட்ட இனங்களில் தகுந்த ஆணை பிறப்பிக்க அரசாணை எண் 3763, பொதுத் துறை, நாள் : 5-9-2001-இல் மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் ஒரு நிலவரித் திட்ட அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார். தற்போது அளவைப் பணி நடைபெறுகிறது. சட்டப்பூர்வ விசாரணை மேற்கொள்ளப்படவுள்ளன.

[2005 மார்ச் 23

## அத்தியாயம் - 5

## நிலச் சீர்திருத்தம்

வேளாண்மை நில உடைமைகளில் ஏற்றத் தாழ்வுகளைப் போக்கிட நில உடைமைக்கு ஓர் உச்சவரம்பு நிர்ணயித்து, உச்சவரம்பிற்கு மேல் உபரியாக உள்ள நிலங்களை நிலமற்ற ஏழைகளுக்கு வழங்கும் நோக்கத்திற்காக 1961 ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 58/61) இயற்றப்பட்டது.

ஆரம்பத்தில் ஐந்து உறுப்பினர்கள் கொண்ட குடும்பத்திற்கு 30 தர ஏக்கரும் (Standard Acres) ஒவ்வொரு கூடுதல் நபருக்கும் கூடுதலாக ஐந்து தர ஏக்கரும், ஆனால் ஒரு குடும்பத்திற்கு மொத்தம் 60 தர ஏக்கர் என உச்சவரம்பாக நிர்ணயிக்கப்பட்டது. மேலும் குடும்பத்தின் பெண் உறுப்பினர்களுக்கு 10 தர ஏக்கர் சீதன நிலம் உச்சவரம்பு அளிக்கப்பட்டது. இந்தச் சட்டம் பல்வேறு மாறுதல்களுக்கு உட்பட்டும், முன்னர் அளிக்கப்பட்ட உச்சவரம்பு பகுதிகள் மற்றும் விதிவிலக்குகள் இரத்து செய்யப்பட்டும், இன்றைய தேதியில் பின்வருமாறு உச்சவரம்பு அமலில் உள்ளது:—

| | |
|---|---|
| 1. ஐந்து நபர் கொண்ட ஒரு குடும்பத்திற்கு | 15 தர ஏக்கர் |
| (I) ஒவ்வொரு கூடுதல் உறுப்பினருக்கு | 5 தர ஏக்கர் |
| (II) மொத்த உச்சவரம்பு | 30 தர ஏக்கர் |
| 2. 1-3-1972-ல் இருந்த நம்பகங்களுக்கு (Trust) | 5 தர ஏக்கர் |
| 3. 1-3-1972-க்குப் பிறகு எந்த நம்பகமும் விவசாய நிலங்கள் பெறுவதற்கு தடை செய்யப்பட்டுள்ளது | |

1961 ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) சட்டத்தின்கீழ் அரசு கையகப்படுத்தும் மிகை நிலங்கள், 1965 ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச் சீர்திருத்தம் (மிகை நில விநியோகம்) விதிகளின்கீழ் முன்னுரிமை அடிப்படையில் தகுதியுடைய நிலமற்ற ஏழைகளுக்கு அதிகபட்சம் 3 ஏக்கர் புன்செய் அல்லது 1.5 ஏக்கர் நன்செய் என்ற அளவில் ஒப்படை செய்யப்படுகிறது.



2005 மார்ச் 23]

மிகை நிலமென அறிவிப்பு செய்யப்பட்ட மொத்த பரப்பின் விவரம், அதில் ஒப்படை செய்யப்பட்டது, பயனாளிகளின் எண்ணிக்கை ஆதிதிராவிடர்/பழங்குடி வகுப்பினைச் சார்ந்த பயனாளிகளின் எண்ணிக்கை மற்றும் நிலச் சீர்திருத்தச் சட்டம் தோற்றுவிக்கப்பட்ட நாளிலிருந்து 28-2-2005 வரையில் நீதிமன்ற வழக்குகளுக்கு உட்பட்ட நிலப்பரப்பு மற்றும் ஒப்படை வழங்கப்படவுள்ள மீதமுள்ள நிலப்பரப்பு ஆகிய விவரங்கள் பின்வருமாறு:—

**மிகை நிலமென அறிவிக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பு, ஒப்படை செய்யப்பட்ட நிலப்பரப்பு மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை குறித்த விவரப் பட்டியல்**

| ஆண்டு | உபரியாக அறிவிக்கப்பட்ட நிலம் | ஒப்படை செய்யப்பட்ட நிலம் (ஏக்கரில்) | பயனடைந்தோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1961-1970 | 19,028 | 14,074 | 7,978 |
| 1971-1980 | 1,08,132 | 70,730 | 51,244 |
| 1981-1990 | 50,834 | 59,647 | 53,494 |
| 1991-1996 | 15,093 | 34,953 | 21,297 |
| 1997-2000 | 6,552 | 8,824 | 7,098 |
| 2000-2001 | 604 | 1,635 | 1,236 |
| 2001-2002 | 677 | 1,612 | 1,336 |
| 2002-2003 | 1,432 | 1,887 | 1,548 |
| 2003-2004 | 2,144 | 1,768 | 1,442 |
| 1-4-2004 முதல் 28-2-2005 வரை | 861 | 1,505 | 1,018 |
| **மொத்தம்** | **2,05,357** | **(*)1,96,635** | **1,47,691** |

(*) 1965 ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச் சீர்திருத்தம் (மிகை நில விநியோகம்) விதிகளின் விதி 13-இன்கீழ் பொது நோக்கத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலமும் அடங்கியது.

[2005 மார்ச் 23

உபரி நிலம் ஒப்படைப் பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கையைக் குறிக்கும் விவரப்பட்டியல்:—

| பயனடைந்தோர் (இன வாரியாக) | நபர்கள் | ஒப்படை செய்யப்பட்ட பரப்பு (ஏக்கரில்) |
|---|---|---|
| ஆதிதிராவிடர் | 65,535 | 70,151 |
| பழங்குடியினர் | 236 | 320 |
| மற்றவர்கள் | 81,920 | 1,15,979 |
| **மொத்தம்** | **1,47,691** | **1,86,450** |

ஒப்படை வழங்கப்பட வேண்டிய மீதமுள்ள நிலங்கள் மற்றும் நீதிமன்ற வழக்குகளுக்குட்பட்ட நிலப்பரப்புகளைக் காண்பிக்கும் விவரப்பட்டியல்:—

| | பரப்பு. (ஏக்கரில்) |
|---|---|
| 1. மிகை நிலமாக அறிவிக்கப்பட்ட நிலப்பரப்பு | 2,05,357 |
| 2. நிலமற்ற ஏழைகளுக்கு ஒப்படை செய்யப்பட்ட நிலப்பரப்பு | 1,86,450 |
| 3. நிலுவை | 18,907 |
| 4. உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றம், நில ஆணையர் நிலத் தீர்ப்பாயம் மற்றும் சார் நீதிமன்றங்கள் ஆகியவை பிறப்பித்துள்ள தடையாணைக்குட்பட்ட பரப்பு | 8,469(*) |
| 5. மீதி | 10,438 |
| 6. 1965 ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச் சீர்திருத்தம் (மிகை நில விநியோகம்) விதிகளில் விதி 13-ன் கீழ் பொது நலனுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலப்பரப்பு | 10,185 |
| 7. ஒப்படை செய்யப்படவேண்டிய பரப்பு | 253 |



2005 மார்ச் 23]

(*) நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளின் விவரம்:—

| வரிசை எண் | நீதிமன்றங்களின் பெயர் | நிலுவையிலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை | விஸ்தீரணம் (ஏக்கர்) |
|---|---|---|---|
| 1 | உச்ச நீதிமன்றம் | 6 | 639 |
| 2 | உயர் நீதிமன்றம் | 112 | 6,295 |
| 3 | நிலத் தீர்ப்பாயம் | 21 | 282 |
| 4 | மற்ற சிவில் நீதிமன்றங்கள் | 25 | 1,253 |
| | **மொத்தம்** | **164** | **8,469** |

2004-2005 ஆம் நிதியாண்டில் 1,500 ஏக்கர் மிகை நிலங்கள் தகுதியுள்ள நபர்களுக்கு ஒப்படை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இதில் 28-2-2005 வரை 1,018 நபர்களுக்கு 1,505 ஏக்கர் மிகை நிலங்கள் கீழ்க்கண்டவாறு ஒப்படை செய்யப்பட்டுள்ளன:—

| | பயனாளிகளின் எண்ணிக்கை | பரப்பளவு (ஏக்கரில்) |
|---|---|---|
| 1. ஆதிதிராவிடர் | 337 | 408 |
| 2. பழங்குடியினர் | 31 | 45 |
| 3. மற்றவர்கள் | 650 | 1,052 |
| **மொத்தம்** | **1,018** | **1,505** |

## குடிவாரச் சட்டங்கள்

### 1955 ஆம் ஆண்டைய தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 25/55)

இச்சட்டம், குத்தகைதாரர்களின் குத்தகை பாக்கி நிலுவை தவிர வேறு காரணங்களுக்காக அவர்கள் குத்தகை சாகுபடி செய்யும் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவதைத் தடை செய்து பாதுகாப்பு

[2005 மார்ச் 23

அளிக்கிறது. வறட்சி மற்றும் வெள்ளம் போன்ற இயற்கை சீற்றங்களினால் குத்தகைதாரர்கள் பாதிக்கப்படும்பொழுது, குத்தகை பாக்கித் தொகையை வசூலிப்பதை தள்ளி வைத்து தனிச் சட்டத்தின் மூலம் அவர்களுக்கு அவ்வப்பொழுது நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

### 1956 ஆம் ஆண்டைய தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாய குத்தகை செலுத்துதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 24/56)

இச்சட்டம் தற்போது ஆண்டொன்றிற்கு மொத்த விளைச்சலில் 25 விழுக்காடு மட்டும் நிலச் சொந்தக்காரருக்கோ அல்லது நம்பகங்களுக்கோ (Trust) பயிரிடும் குத்தகைதாரர்களால் செலுத்தப் படவேண்டிய குத்தகைத் தொகையை நிர்ணயிக்க வகை செய்கிறது. குத்தகையை பணமாகவோ விளை பொருளாகவோ செலுத்தலாம். ஆனால், நில உரிமையாளர்கள்/நம்பகங்கள் செலுத்த வேண்டிய நிலவரி தவிர, பயிரிடுவதற்கான மற்ற செலவுகள் முழுவதையும் குத்தகைதாரர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

### 1961 ஆம் ஆண்டைய தமிழ்நாடு பொது நம்பகங்கள் (வேளாண்மை நிலங்களின் நிர்வாகம் மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 57/61)

இச்சட்டத்தில் நம்பகங்கள் (Trust) தங்களுடைய சொந்த சாகுபடிக்கு அதிகபட்சமாக 20 தர ஏக்கர் நிலம் மட்டும் வைத்துக்கொள்ளவும், அதற்கு மேலுள்ள நிலத்தைக் கட்டாயமாக பிறருக்கு குத்தகைக்கு விடவும் வகை செய்யப்பட்டுள்ளது.

### 1969 ஆம் ஆண்டைய தமிழ்நாடு வேளாண்மை தொழிலாளர்கள் நியாய ஊதியங்கள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 19/69)

இச்சட்டத்தில் நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் விவசாயத் தொழிலாளர்களுக்கு பல்வேறுபட்ட விவசாயப் பணிகளுக்காக நியாய ஊதியம் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. விவசாயத் தொழிலாளர்களுக்கு தற்போது வழங்கப்படும் ஊதிய விகிதங்கள் பின்வருமாறு:-

| விவசாயத் தொழிலாளர் வகை | குறைந்தபட்ச ஊதியம் |
|---|---|
| 1. தங்கள் சொந்த ஏர் மாட்டோடு உழுவோர் | நாள் ஒன்றிற்கு ரூ.100/- |



2005 மார்ச் 23]

| | |
|---|---|
| 2. தங்கள் சொந்த ஏர் மாடு இல்லாமல் உழுவோர் | நாள் ஒன்றிற்கு ரூ.54/- |
| 3. நெல் அறுவடை, கதிர் அறுப்பு, களத்திற்கு எடுத்துச் சென்று கதிர் அடித்தல், அவைகளை அளந்து மூட்டைகளில் அடைத்தல் ஆகிய பணியில் ஈடுபடும் தொழிலாளர் | நாள் ஒன்றிற்கு ஆறு மணிநேரம் வேலை செய்யும் ஆண் தொழிலாளிக்கு ரூ..54/- நாள் ஒன்றிற்கு ஐந்து மணிநேரம் வேலை செய்யும் பெண் தொழிலாளிக்கு ரூ.45/- அல்லது மொத்த விளைச்சலில் எட்டில் ஒரு பகுதி அளித்தல் அவற்றில் எது அதிகமோ அது. |
| 4. நெல்லைத் தவிர மற்ற தானியங்களை அறுவடை செய்யும் தொழிலாளர்கள்/ இதர விவசாயப்பணிகளில் ஈடுபடுவோர் | நாள் ஒன்றிற்கு ஆறு மணிநேரம் வேலை செய்யும் ஆண் தொழிலாளிக்கு ரூ.54/- நாள் ஒன்றிற்கு ஐந்து மணிநேரம் வேலை செய்யும் பெண் தொழிலாளிக்கு ரூ.45/- |

### 1969 ஆம் ஆண்டைய தமிழ்நாடு வேளாண்மை நிலங்கள் (குத்தகை உரிமைகள் ஆவணம்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 10/69)

இச்சட்டத்தில் பயிரிடும் குத்தகைதாரர்கள் தங்கள் உரிமைகளைப் பாதுகாக்க தங்களைக் குத்தகைதாரர்களாக பதிவு செய்து கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது. வருவாய் வட்டாட்சியர்கள் இச்சட்டத்தின்கீழ் பதிவு அலுவலர்களாக செயல்படுவர். அவர்களுக்கு உதவி புரிய அலுவல் சார்பற்றவர்களைக் கொண்ட ஆலோசனைக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. இச்சட்டத்தின்கீழ் 28-2-2005 வரை குத்தகைதாரர்களாகப் பதிவு செய்துள்ள நபர்களின் எண்ணிக்கை குறித்த விவரங்கள் பின்வருமாறு:-

| வரிசை எண் | இனம் | குத்தகைதாரர்களாகப் பதியப்பட்டோர் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | ஆதிதிராவிடர் | 1,91,017 |
| 2 | பழங்குடியினர் | 912 |
| 3 | ஏனையோர் | 3,75,117 |
| | மொத்தம் | 5,67,046 |

[2005 மார்ச் 23

## 1971 ஆம் ஆண்டைய தமிழ்நாடு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உடைமை உரிமை வழங்குதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 40/71)

இச்சட்டத்தில் 19-6-1971 அன்று சொந்த வீட்டுமனை இல்லாத, ஆனால் பிறர் நிலங்களில் குடியிருப்பு அமைத்து அனுபவித்து வருபவர்களுக்குக் குடியிருப்பு உரிமை வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. 1976 ஆம் ஆண்டைய தமிழ்நாடு கிராமப்புற கைவினைஞர்கள் (குடியிருப்பு அனுபோக உரிமை வழங்குதல்) சட்டத்தின் (குடியரசுத் தலைவரின் சட்டம் 38/76)-ன்படி 1-7-1975-ல் குடியிருப்புகளை அனுபோகத்தில் வைத்துள்ள சொந்த வீட்டுமனை இல்லாத கிராமப்புற கைவினைஞர்களும் மேற்கண்ட பலன்களைப் பெற வகை செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட இரு சட்டங்களின் கீழும் முன்னர் அறிவிக்கப்பட்ட 1-4-1990 வரை நீட்டிக்க, சட்டம் 39/90-ன்கீழ் வகை செய்யப்பட்டுள்ளது. 28-2-2005 வரையில் உடைமை உரிமை வழங்கப் பெற்ற குடியிருப்பு அனுபோகதாரர்களின் மொத்த எண்ணிக்கை விவரங்கள் பின்வருமாறு:-

| வரிசை எண் | இனம் | நபர்களின் எண்ணிக்கை | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | | சட்டம் 40/71 | சட்டம் 38/76 | சட்டம் 39/90 | |
| 1 | ஆதிதிராவிடர் | 1,00,127 | 62 | 1,017 | 1,01,206 |
| 2 | பழங்குடியினர் | 2,317 | 17 | 412 | 2,746 |
| 3 | ஏனையோர் | 80,017 | 363 | 275 | 80,655 |
| | மொத்தம் | 1,82,461 | 442 | 1,704 | 1,84,607 |

மேலே உள்ள சட்டங்களின்கீழ் நிலுவையில் உள்ள வழக்குகளின் விவரங்கள் பின்வருமாறு:-

| | | |
|---|---|---|
| சட்டம் 40/71 | 170 | |
| சட்டம் 38/76 | - | |
| சட்டம் 39/90 | - | |
| மொத்தம் | 170 | நேர்வுகள் |



2005 மார்ச் 23]

### நிலத் தீர்ப்பாயங்கள்

சார்பு நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள நிலச் சீர்திருத்த வழக்குகளை முடிவு செய்வதற்காக 1980 ஆம் ஆண்டில் மாவட்ட வருவாய் அலுவலரின் தலைமையில் நிலத் தீர்ப்பாயம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தற்போது மாநிலம் முழுவதற்குமாக ஒரு நிலத் தீர்ப்பாயம் மட்டும் சென்னையில் இயங்கி வருகிறது.

### வருவாய் நீதிமன்றங்கள்

தற்போது மாநிலம் முழுவதும் 6 வருவாய் நீதிமன்றங்கள் கடலூர், மயிலாடுதுறை, திருவாரூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் தனித் துணை ஆட்சியர்களின்கீழ் செயல்பட்டு வருகின்றன. வருவாய் நீதிமன்ற தனித் துணை ஆட்சியர்கள் 1969 ஆம் ஆண்டைய தமிழ்நாடு வேளாண்மை நிலங்கள் (குத்தகை உரிமை ஆவணம்) சட்டத்தின் கீழான வட்டாட்சியர்களின் ஆணைக்கு எதிராக தொடரப்படும் வழக்கு மனுக்களை விசாரணை செய்யும் பணியில் மேல்முறையீட்டு அதிகாரிகளாகச் செயல்படுகின்றனர். மேலும், மேலே குறிப்பிட்டுள்ள பல்வேறு குடிவாரச் சட்டங்களையும் அவர்கள் கவனித்து வருகின்றனர்.

### தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் நல வாரியம்

அரசாணை (நிலை) எண் 600, வருவாய் [நி.சீ.1(2)] துறை, நாள் : 27-11-2000-ல் வெளியிடப்பட்டுள்ள ஆணையின்படி தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் நல வாரியம் அமைக்கப்பட்டு அதில் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் தலைவராகவும் மற்றும் 7 அலுவலர்களை அரசு சார்பு உறுப்பினர்களாகவும் நில உரிமையாளர்கள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் சார்பில் தலா 9 பேர் அலுவல் சார்பற்ற உறுப்பினர்களாகவும் உள்ளனர். தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் நல வாரியத்தால் 2001 ஆம் ஆண்டைய தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நலத் திட்டம் வடிவமைக்கப்பட்டு **தமிழ்நாடு அரசிதழ்** எண் 109, நாள் : 9-2-2001-ல் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 18 வயதிற்குக் குறையாத 60 வயதிற்கும் மேற்படாத நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் அல்லது 1 ஏக்கர் நன்செய் அல்லது இரண்டரை ஏக்கர் புன்செய் நிலங்களுக்கு மிகாமல் வைத்திருந்து அதில் நேரடியாக சாகுபடி செய்து வரும் சிறு விவசாயிகள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்படலாம். இதற்காக அவர்கள் ஒருமுறை ரூ.100/- உறுப்பினர்

சந்தா கட்டினால் போதுமானது. இவ்வாறு பதிவு செய்துகொண்ட விவசாயத் தொழிலாளர்கள் கல்வி, திருமணம், மகப்பேறு, விபத்தில் மரணம், இயற்கை மரணம் ஆகிய நிகழ்வுகளுக்கு உதவித் தொகை பெற தகுதியுடையவர்கள் ஆகிறார்கள்.

இத்திட்டத்தின்கீழ் 28-2-2005 வரை 7,32,130 நபர்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளனர். அவர்களிடமிருந்து பங்களிப்புத் தொகையாக ரூ.7,32,13,000/- வசூலிக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு நகர்ப்புற நில உச்சவரம்பு**

1978 ஆம் ஆண்டைய தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 3-8-1976 முதல் தமிழ்நாட்டில் அமலாக்கம் செய்யப்பட்டு வந்தது.

2. தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 1978 தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) நீக்கறவுச் சட்டம், 1999 (தமிழ்நாடு சட்டம் 20/99)-இன் மூலமாக 16-6-1999 முதல் நீக்கறவுச் செய்யப்பட்டது. முதன்மைச் சட்டத்தின்கீழ் ஏற்கெனவே கையகப்படுத்தப்பட்டு அரசு வசம் வைத்துக் கொள்ளப்பட்ட நிலங்கள் மற்றும் முதன்மை சட்டப் பிரிவு 21(1) கீழ் விலக்களிக்கப்பட்ட நிலங்கள் ஆகியவற்றிற்கு இந்நீக்கறவுச் சட்டம் பொருந்தாது. விலக்களிப்பில் உள்ள நிபந்தனைகள் எப்பொழுது மீறப்படுகிறது என்று தெரிய வருகிறதோ அப்போது அந்நிலங்களை மீளப்பெறுவதற்கு விலக்களிப்புப் பெற்றவர்களுக்கு அறிவிக்கைகள் அனுப்பப்பட்டு, தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

3. முதன்மைச் சட்டத்தின்கீழ் இதுவரை 2,472 ஹெக்டேர் மிகை வெற்று நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. இவற்றில் 98 ஹெக்டேர் நிலம் நீதிமன்ற நடவடிக்கையில் உள்ளது. 339 ஹெக்டேர் நிலத்தினை அரசுத் துறை, அரசு கழகங்கள், பொதுத் துறை நிறுவனங்கள், வீட்டுவசதி வாரியம், குடிசை மாற்று வாரியம் மற்றும் இதர நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. 527 ஹெக்டேர் நிலப் பரப்பு ஆக்கிரமிப்பிலும், 340 ஹெக்டேர் நிலப் பரப்பு நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டம் நீக்கறவு செய்யப்பட்ட காரணத்தால் நீதிமன்றத்தின் மேல்முறையீட்டின்மீது பெறப்பட்ட தீர்ப்பின் அடிப்படையிலும் நடவடிக்கை கைவிடப்பட்டன. 1,168 ஹெக்டேர் நிலப்பரப்பு ஒதுக்கீடு செய்வதற்கு உள்ளது.



4. நகர்ப்புற நில உச்சவரம்பு சட்டம் நீக்கறவு செய்யப்பட்ட நிலையில் அச்சட்டத்தின்மூலம் கையகப்படுத்தப்பட்ட நிலங்களை ஒதுக்கீடு செய்வது மற்றும் அந்நிலங்களில் ஏற்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்துவது குறித்து அரசு விரிவாக ஆய்வு செய்து, அரசு ஆணை (நிலை) எண் 353, வருவாய், நாள் : 30-6-2000-ல் கீழ்க்கண்டவாறு ஆணையிட்டுள்ளது :

(1) நகர்ப்புறங்களில் கையகப்படுத்தப்பட்ட மிகை வெற்று நிலங்களில் ஆக்கிரமிப்பு ஏதுமில்லாத நிலங்களை, கீழ்க்கண்டபடி முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் :

(அ) தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் மூலமாக சமுதாய நலன் கருதி துவக்கப்படும் திட்டங்கள்.

(ஆ) உள்ளாட்சி நிறுவனங்கள், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றும் வாரியம்.

(இ) மின்சார வாரியம், போக்குவரத்து போன்ற மாநில அரசு நிறுவனங்கள் பயன்பாட்டிற்கும் மற்றும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் போன்ற அரசுத் துறை சார்ந்த நிறுவனங்கள் மற்றும் அரசுத் துறைகள்.

(2) ஒதுக்கீடு செய்யப்படாத மீதமுள்ள நகர்ப்புற உபரி நிலங்களை ஒப்பந்தப் புள்ளி மற்றும் ஏலம் மூலமாக விற்பனைக்குக் கொண்டு வருதல்.

(3) கையகப்படுத்தப்பட்டு அரசு வசம் எடுத்துக் கொள்ளப்பட்ட மிகை வெற்று நிலங்களில் ஆக்கிரமிப்புகள் இருப்பின், அவைகளை வரன்முறைப்படுத்தும்போது அரசு ஆணை (நிலை) எண் 168, வருவாய், நாள் : 27-3-2000-ல் எடுக்கப்பட்ட முடிவு பின்பற்றப்பட வேண்டும்.

(4) ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட நிலங்கள் வியாபார நோக்கில் பயன்பட்டு வருமாயின், அந்நிலங்களை முறைப்படுத்துவதற்கு முன் அந்த ஆக்கிரமிப்பாளர்களிடம் வழிகாட்டிப் பதிவேட்டு மதிப்பில் இரண்டு மடங்கு விலை வசூலிக்கப்படவேண்டும்.

(5) இது தவிர, இதுபோன்ற நகர்ப்புற மிகை வெற்று நிலங்களை நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டத்தைப் பற்றிய விவரம் அறியாது, ஒன்றரை கிரவுண்டு வரை, குடியிருப்புக்காக வாங்கியிருப்பின் அதனை அரசு நிர்ணயித்துள்ள மண்டல மதிப்பினைச் செலுத்தி வரன் முறைப்படுத்த அரசு ஆணை எண் 649, வருவாய், நாள் : 29-7-1998-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

[2005 மார்ச் 23

## தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம், 1966

அரசிற்கு வருவாயை அதிகப்படுத்தும் நோக்கத்துடனும், மக்களிடம் அதிக பரப்பளவுள்ள நிலங்கள் வைத்திருப்பதைத் தவிர்க்கும் பொருட்டும் தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம் முதன் முதலில் 1-7-1963-ல் அறிமுகம் செய்யப்பட்டது. இது சென்னை நகருக்கு மட்டும் பொருந்தும். பின்னர் மதுரை, கோயம்புத்தூர், சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய நகரங்களுக்கு 1-7-1971 முதலும், சென்னை புறநகர்ப் பகுதிகளுக்கு 1-7-1975 முதலும் இச்சட்டம் நீட்டிக்கப்பட்டது. இப்பகுதிகள் அனைத்திற்கும் 1-7-1971 ஆம் தேதி சந்தை மதிப்பு அடிப்படையில் நகர்ப்புற நிலவரி நிர்ணயம் செய்யப்பட்டது.

2. பின்னர் இச்சட்டம் திருநெல்வேலி மாநகராட்சி பகுதிக்கு 1-7-1981 முதல் விரிவுபடுத்தப்பட்டது. கீழ்க்கண்ட நகராட்சிகளும் நகரியங்களும் 1-7-1991 முதல் இச்சட்ட வரம்பிற்குள் கொண்டு வரப்பட்டன:

**நகராட்சிகள்**

| | | |
|---|---|---|
| மயிலாடுதுறை | வேலூர் | காஞ்சிபுரம் |
| கும்பகோணம் | கடலூர் | உடுமலைப்பேட்டை |
| விழுப்புரம் | பழனி | புதுக்கோட்டை |
| காரைக்குடி | ஈரோடு | இராசபாளையம் |
| பொள்ளாச்சி | நாமக்கல் | தஞ்சாவூர் |
| உதகமண்டலம் | திருப்பூர் | திண்டுக்கல் |
| தூத்துக்குடி | கரூர் | நாகர்கோவில் |

**நகரியங்கள் ( தற்போது நகராட்சிகள்)**

கொடைக்கானல் மேட்டூர்

3. இந்த எல்லாப் பகுதிகளுக்கும் 1-7-1981 நாளைய சந்தை மதிப்பை அடிப்படையாகக் கொண்டு 1-7-1991 முதல் வரி விதிக்கப்பட்டது.



2005 மார்ச் 23]

**வரிவிதிப்பு விகிதங்கள் பின்வருமாறு :**

| சென்னை புறநகர்ப்பகுதி தவிர்த்த ஏனைய நகர்ப்புற நிலங்கள் அனைத்தும் | | சென்னை புறநகர்ப் பகுதியிலுள்ள அனைத்து நிலங்கள் | |
|---|---|---|---|
| 1. முதல் இரண்டு மனைகள் | வரி இல்லை | 1. முதல் மூன்று மனைகள் | வரி இல்லை |
| 2. இரண்டு மனைக்கு மேல் ஐந்து மனைக்குள் | சந்தை மதிப்பில் 0.7 சதவீதம் | 2. மூன்று மனைக்கு மேல் ஏழு மனைக்குள் | சந்தை மதிப்பில் 0.7 சதவீதம் |
| 3. ஐந்து மனைக்கு மேல் பத்து மனைக்குள் | சந்தை மதிப்பில் 1 சதவீதம் | 3. ஏழு மனைக்கு மேல் பத்து மனைக்குள் | சந்தை மதிப்பில் 1 சதவீதம் |
| 4. பத்து மனைக்கு மேல் இருபது மனைக்குள் | சந்தை மதிப்பில் 1.5 சதவீதம் | 4. பத்து மனைக்கு மேல் இருபது மனைக்குள் | சந்தை மதிப்பில் 1.5 சதவீதம் |
| 5. இருபது மனைக்கு மேல் | சந்தை மதிப்பில் 2 சதவீதம் | 5. இருபது மனைக்கு மேல் | சந்தை மதிப்பில் 2 சதவீதம் |

4. நகர்ப்புற நிலவரி செலுத்துபவர்களின் பெயர்கள், நிலுவையாக உள்ள தொகை மற்றும் செலுத்தப்பட்ட தொகை ஆகிய விவரங்கள் அனைத்து மாவட்டங்களிலும் கணினியில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

5. இந்தச் சட்டத்தின் பிரிவு 29-ன்கீழ் வரி விதிப்பினின்றும் கீழ்க்கண்ட வகையான நிலங்கள் விலக்கு பெறுகின்றன:–

1. மத்திய மாநில அரசு நிலங்கள்
2. பொது வழிபாட்டுக்கான நிலங்கள்
3. மாநில அரசினால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனை நிலங்கள்
4. மயான பூமி நிலங்கள்

5. சாலைகளாகப் பயன்படும் நிலங்கள்

6. தமிழக அரசினால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக நிலங்கள்

7. பொது பூங்காக்கள், நூலகங்கள் மற்றும் அருங் காட்சியகங்கள் உள்ள நிலங்கள்

8. ஆதரவற்றோர் மற்றும் அனாதை விடுதிகள் உள்ள நிலங்கள்

6. விவசாயத்திற்குப் பயன்படும் நிலங்கள், நகர்ப்புற நிலவரி விதிப்பில் இருந்து விலக்களிக்கப்படுகின்றன. தர்ம மற்றும் சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்களுக்கு நகர்ப்புற நிலவரி செலுத்துவதில் அதிகமான சிரமம் இருப்பின் பிரிவு 27(1)-ன்கீழ் அரசு வரி விலக்கு அளிக்கிறது.

7. கீழ்க்கண்ட அமைப்புகளுக்கும் அரசு வரிச் சலுகைகளை அளித்துள்ளது:

(அ) திரைக்காட்சி தயாரிக்கும் அரங்குகள், களியாட்ட சங்கங்கள் சமுதாய பொழுதுபோக்கும் மையங்கள் ஆகியவற்றினைக் கொண்டுள்ள நகர்ப்புற நிலங்களில் கட்டடம் கட்டப்பட்டுள்ள பகுதி மற்றும் காலி நிலத்திற்கு வரிவிதிப்பினின்று 50 சதவீதம் வரிச் சலுகை.

(ஆ) சிறுதொழில் சான்றுபெற்ற தொழிற்சாலைகளுக்கு வரியில் 25 சதவீதம் சலுகை, மற்ற தொழிற்சாலைகளுக்கு 10 சதவீதம் சலுகை.

(இ) சங்கீத, நாட்டியம் மற்றும் இதர கலை நிகழ்ச்சிகள் நடைபெறும் சபைகளுக்கு 50 சதவீதம் சலுகை.

(ஈ) திரையரங்குகளுக்கு 10 சதவீதம் சலுகை.

(உ) குடிசைப்பகுதியாக அறிவிக்கப்பட்ட நிலங்களுக்கு முழுச் சலுகை.

(ஊ) நகர்ப்புற நிலத்தில் கட்டடம் இருந்து அது நிலத்தின் சொந்தக்காரரால் குடியிருப்புக்காக முழுமையாகப் பயன்படுத்தப்பட்டால், நகர்ப்புற நிலவரியில் 50 சதவீதம் வரிச் சலுகை தரப்படுகிறது.

8. நகர்ப்புற நிலவரி மதிப்பீடு மற்றும் வரி விதிப்பை எதிர்த்து தொடரப்படும் மேல்முறையீட்டு மனுக்களை விரைவாக தீர்வு



செய்யவும், மக்களுக்கு நிவாரணம் கிடைக்கவும் அந்தந்த மாவட்ட வருவாய் அதிகாரிகளையே நகர்ப்புற நிலவரி தீர்ப்பாயமாக அரசு நியமித்துள்ளது. சென்னை நகரைப் பொறுத்தவரையில் சென்னை-5, சேப்பாக்கத்தில் உள்ள நிலச்சீர்திருத்தத் துறையில் உள்ள மாவட்ட வருவாய் அலுவலர் (நிலத் தீர்ப்பாயம்) தீர்ப்பாய நீதிபதியாக செயல்படுகிறார்.

31-12-2004 நாள் நிலவரப்படி 1,79,423 வரி விதிப்பு நேர்வுகளில் ரூ. 34.10 கோடி நகர்ப்புற நிலவரி விதிக்கப்பட்டுள்ளது. 31-12-2004 வரையிலான நகர்ப்புற நிலவரி கேட்பு வசூல் மற்றும் நிலுவை விவரங்கள் இணைப்பில் தனியாக கொடுக்கப்பட்டுள்ளது.

**நகர்ப்புற நிலவரி கேட்பு, வசூல் மற்றும் நிலுவை விவரப்பட்டியல்**

**(ரூபாய் இலட்சத்தில்)**

| வ. எண் | மாவட்டம் | கேட்பு | வழக்கு சீராய்வு மனுக்களில் உள்ள தொகை | 1-4-2004 முதல் 28-2-2005 வரை வசூல் | நிலுவை 1-3-2005 -ன்படி |
|---|---|---|---|---|---|
| 1. | சென்னை | 3833.69 | 484.16 | 374.53 | 2975.00 |
| 2. | கோயம்புத்தூர் | 1153.18 | 288.18 | 216.40 | 648.30 |
| 3. | கடலூர் | 68.43 | 11.71 | 7.89 | 48.83 |
| 4. | திண்டுக்கல் | 222.69 | 35.35 | 18.31 | 169.03 |
| 5. | ஈரோடு | 129.66 | 84.83 | 13.95 | 30.88 |
| 6. | காஞ்சிபுரம் | 1270.02 | 125.38 | 117.31 | 1027.33 |
| 7. | கன்னியாகுமரி | 111.96 | 88.42 | 10.59 | 12.95 |
| 8. | கரூர் | 14.00 | 3.58 | 3.08 | 7.34 |
| 9. | மதுரை | 664.33 | 70.75 | 33.20 | 560.38 |
| 10. | நாகப்பட்டினம் | 13.98 | 0.87 | 5.89 | 7.22 |

[2005 மார்ச் 23

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11. | நாமக்கல் | 39.07 | 0.00 | 3.59 | 35.48 |
| 12. | புதுக்கோட்டை | 11.22 | 0.00 | 3.13 | 8.09 |
| 13. | சேலம் | 297.02 | 25.21 | 30.19 | 241.62 |
| 14. | சிவகங்கை | 19.01 | 0.01 | 3.82 | 15.18 |
| 15. | தஞ்சாவூர் | 51.96 | 21.73 | 9.39 | 20.84 |
| 16. | திருவள்ளூர் | 2366.87 | 462.14 | 210.56 | 1694.17 |
| 17. | திருநெல்வேலி | 206.27 | 113.73 | 8.25 | 84.29 |
| 18. | திருச்சி | 101.22 | 3.96 | 26.40 | 70.86 |
| 19. | தூத்துக்குடி | 105.15 | 69.11 | 13.94 | 22.10 |
| 20. | நீலகிரி | 27.04 | 2.04 | 8.11 | 16.89 |
| 21. | வேலூர் | 132.20 | 0.00 | 21.35 | 110.85 |
| 22. | விழுப்புரம் | 16.15 | 8.39 | 2.68 | 5.08 |
| 23. | விருதுநகர் | 15.79 | 9.14 | 5.70 | 0.95 |
| | மொத்தம் | **10870.91** | **1908.99** | **1148.26** | **7813.66** |



2005 மார்ச் 23]

# இணைப்பு V

*(448 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 34

## பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2005-2006

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, 1973 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட மாநில நிருவாகச் சீர்திருத்த ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் 1976 ஆம் ஆண்டு நவம்பர் 6 ஆம் நாளில் தோற்றுவிக்கப்பட்டது. அரசின் செயல்பாடுகளில் ஏற்பட்ட அபரிமிதமான வளர்ச்சியாலும், அரசுப் பணியாளர் எண்ணிக்கையின் கணிசமான உயர்வினாலும் உருவான நிலைமையைச் சமாளிப்பதற்காக, இத்துறை தோற்றுவிக்கப்பட்டது. இத்துறை கீழ்க்கண்ட இரண்டு அலகுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு அலகும் தனித் தனிச் செயலாளர்களின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்குகிறது:

(i) பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை.

(ii) பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி) துறை.

**2. இத்துறையின் முக்கியப் பணிகள் வருமாறு:**

(i) அறிவுரை வழங்கும் பணிகள்;

(ii) சட்டபூர்வமான பணிகள்; மற்றும்

(iii) நிருவாகப் பணிகள்.

**3. அறிவுரை வழங்கும் பணிகள்**

"தமிழ் நாடு அரசு அலுவல் விதிகள் மற்றும் தலைமைச் செயலக அறிவுறுத்தல்கள்" ஆகியவற்றில் வரையறுக்கப்பட்டுள்ளபடி கீழ்க்கண்ட இனங்கள் தொடர்பாக அறிவுரை வழங்கும் ஒரு துறையாக பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை செயல்பட்டு வருகிறது:

(i) தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளின்கீழ் வரும் பல்வேறு பதவிகளுக்குக் காலியிட மதிப்பீட்டை நிர்ணயம்

செய்தல், பதவி உயர்வு மற்றும் உயர்பதவியில் பணி நியமனம் ஆகியவற்றுக்கான தேர்ந்தபட்டியல் தயாரித்தல்.

(ii) அரசு அலுவலர்களின் பணியை வரன்முறைப்படுத்தல் மற்றும் தகுதிகாண் பருவத்தினை முடித்தல் தொடர்பாகச் சிறப்பு / பொது விதிகளைத் தளர்த்துவது பற்றிய கருத்துருக்களைப் பரிசீலனை செய்தல்.

(iii) அடிப்படை விதிகளின்படி, கீழ்க்கண்ட கருத்துருக்கள்மீது அறிவுரை வழங்குதல்:—

(அ) ஊதிய நிர்ணயம் (அடிப்படை விதி 22)

(ஆ) ஆண்டு ஊதிய உயர்வு வழங்குதல் (அடிப்படை விதி 27)

(இ) சரியான முதுநிலைக்குக் கொண்டுவரப்படும் நேர்வுகளில் விதித்துளி 17 அடிப்படை விதி 27-ன்கீழ் ஊதியம் நிர்ணயம் செய்தல்

(ஈ) மேற்படிப்புக்காக விடுப்பு வழங்குதல் (அடிப்படை விதி 84)

(உ) அயல்நாடுகளில் வேலையில் சேர்வதற்கான விடுப்பு வழங்குதல் (தமிழ்நாடு விடுப்பு விதிகள் பிரிவு II அ)

(ஊ) தன்விருப்ப ஓய்வு [அடிப்படை விதி 56 (3)]

(எ) கட்டாய ஓய்வு [அடிப்படை விதி 56(2)]

(ஏ) அயற்பணி விதிகள் மற்றும் வரையறைகளின்படி அயற்பணிக்கு அனுப்புதல் (அடிப்படை விதி 110–114).

(ஐ) தற்காலிகப் பணி நீக்கக் காலத்தை முறைப்படுத்தல் (அடிப்படை விதி 54)

(ஒ) அரசுப் பணியாளர்களின் கட்டாயக் காத்திருப்பை வரன்முறை செய்தல் (அடிப்படை விதி 9).

(iv) தனியர் முதன்முதலில் பணியமர்த்தப்படும் பதவியில் தகுதிகாண் பருவம் நிறைவு செய்து ஆணை வெளியிட்டவுடன் பொது விதி 31-இன்கீழ் உறுதிப்படுத்தி ஆணையிடுதல்.

(v) தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணி பொது விதி 41அ-ன் கீழ் அரசுப் பணியாளர்களின் பணித் துறப்பை ஏற்றல்.

(vi) தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணி பொதுவிதி 47-ன்கீழ் அரசுப் பணியாளர்களின் பணி உரிமை துறப்பு ஏற்றல்.



(vii) தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணி பொதுவிதி 35-ன்கீழ் முதுநிலையைத் திருத்துவது குறித்த கருத்துருவினை ஆய்வுசெய்தல்.

(viii) நடைமுறையிலுள்ள அறிவுரைகளின்படி, பணியாளர்களின் மந்தணக் கோப்புகளைப் பராமரித்தல்.

(ix) அரசுப் பணியில் நியமனம் செய்ய வரையறுக்கப்பட்ட கல்வித் தகுதிக்குச் சமமான கல்வித் தகுதி நிர்ணயித்தல் / அங்கீகரித்தல் குறித்த கருத்துருவை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் அமைக்கப்படும் 'அங்கீகரிப்புக் குழு' முன் வைத்தல் மற்றும் மேற்படி குழுவின் பரிந்துரையின்பேரில் ஆணை வெளியிடல்.

**4. சட்டபூர்வமான பணிகள்**

அரசுப் பணியாளர்களின் பணிகள் தொடர்பாக கீழ்க்கண்ட சட்டமுறை மற்றும் ஒழுங்கு முறை விதிகளை இத்துறை நிருவகித்து வருகிறது:—

(அ) மாநில அரசின் அனைத்துத் துறைகளில் பணிபுரியும் அனைத்து வகை அரசுப் பணியாளர்களின் பணியினை முறைப்படுத்தும் பணிவிதிகள் (அகில இந்திய பணிகள் நீங்கலாக) :—

(i) தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணி விதிகள் (பகுதிகள் I மற்றும் II) ;

(ii) தமிழ்நாடு அரசுப் பணியாளர் நடத்தை விதிகள், 1973;

(iii) தமிழ்நாடு அரசு அடிப்படை விதிகள்;

(iv) தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள்;

(v) தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு நடவடிக்கைகள் நடுவர் மன்றம்) விதிகள், 1955;

(ஆ) அனைத்து அரசுத் துறைகளுக்கும் உள்ள பொதுவான, சில குறிப்பிட்ட பணியாளர் வகையினரை முறைப்படுத்தும் பணி விதிகள்:—

(i) தமிழ்நாடு அமைச்சுப் பணி சிறப்பு விதிகள்

(ii) தமிழ்நாடு அடிப்படைப் பணி சிறப்பு விதிகள்

[2005 மார்ச் 23

(iii) தமிழ்நாடு பொது சார்நிலைப் பணி சிறப்பு விதிகள் – இனம் XXII;

(இ) தலைமைச் செயலகப் பணி:–

(i) தமிழ்நாடு தலைமைச் செயலகப் பணி சிறப்பு விதிகள்

(ii) தமிழ்நாடு பொதுப் பணி சிறப்பு விதிகள் – இனம் XII மற்றும் XII அ;

(ஈ) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்–

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகள், 1954.

**5. நிருவாகப் பணிகள்**

தலைமைச் செயலகத்தில் ஓர் அலகுமுறையின் (One Unit System) கீழ் வரும் அரசு சார்புச் செயலாளர்களின் நிலை வரை அனைத்துப் பணியாளர்களின் பணி அமைப்பு குறித்து இத்துறையில் கவனிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் தமிழ்நாடு நிருவாகத் தீர்ப்பாயம் ஆகியவை இத்துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகின்றன.

**6. அரசு அலுவல்கள்**

தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு அரசின் அலுவல்கள் கீழ்க்கண்ட விதிகளின்படி நடைபெற்று வருகின்றன:—

(i) தமிழ்நாடு அரசு அலுவல் விதிகள் மற்றும் தலைமைச் செயலக அறிவுறுத்தல்கள்;

(ii) அவ்வப்போது வெளியிடப்படும் மாண்புமிகு முதலமைச்சரின் நிலை ஆணைகள்;

(iii) தமிழ்நாடு தலைமைச் செயலக அலுவலகக் கையேடு.

**7. பணியாளர் சங்கங்கள்**

பணியாளர் சங்கங்களுக்கு அங்கீகாரம் அளித்தல் மற்றும் அவற்றின் கூட்டமைப்பு மன்றக் கூட்டங்களை நடத்துவது ஆகியவை இத்துறையின் பொறுப்பாகும்.



2005 மார்ச் 23]

**8. நிருவாகச் சீர்திருத்தங்கள்**

அண்மைக் காலமாக, தமிழ்நாடு, இந்திய அளவிலான மனித வள மேம்பாட்டுக் குறியீடுகள் சிலவற்றில் சிறப்பிடம் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. முக்கியமான சேவை செயலாக்கத்திலும், தமிழ்நாடு சிறந்து விளங்குகிறது. சமீபத்தில் பொது அலுவல் மையம் நடத்திய கணக்கெடுப்பின்படி, பொது விநியோகத்திலும், பள்ளிக் கல்வி முறையிலும் தேசிய அளவில் தமிழ்நாடு முதல் இடத்தையும், குடிநீர் வசதி மற்றும் சாலைப் போக்குவரத்துப் பணிகளில் இரண்டாவது இடத்தையும் வகிக்கிறது. ஒளிவு மறைவற்ற, திறமைமிக்க மற்றும் பொறுப்புள்ள நிருவாகத்தை அளிப்பதிலும், அனைத்துத் துறைகளிலும் தமிழகத்தை முதல் இடம் வகிக்கச் செய்வதிலும் இவ்வரசு சிறப்பு முக்கியத்துவம் அளித்து வருகிறது.

(அ) கோப்புகளை ஆய்வு செய்து இறுதி முடிவு எடுப்பதில் செலவிடும் நேரத்தைக் குறைக்கும் பொருட்டு, "நிலை தாண்டுதல்" (Level Jump) முறையை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. அதன்படி, பிரிவுகளில் பரிசீலிக்கப்படும் கோப்புகள் அனைத்து நிலை அலுவலர்களுக்கும் ஒப்புதலுக்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டியதில்லை. இம்முறை இடைநிலை அலுவலர்களைத் தவிர்த்து, கோப்புகளை, உயர் அலுவலர்களுக்கு நேரடியாகச் சமர்ப்பிக்க உதவுகிறது.

(ஆ) அரசின் நிருவாகச் செயல்பாடுகளைத் தாமதமின்றி நடைமுறைப்படுத்தவும், தேவையற்ற கடிதப் போக்குவரத்தைத் தவிர்க்கவும், தலைமைச் செயலகத் துறைகள் மற்றும் சென்னை மாநகரில் அமைந்துள்ள துறைத் தலைவர்களுக்கும் இடையே ஒற்றைக் கோப்பு முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட பொருண்மைகள் தொடர்பாக இம்முறை பின்பற்றப்படுகின்றன:

(i) திட்டங்கள்,

(ii) பணியமர்வு மற்றும் பணியாளர் மாற்றங்கள்,

(iii) பதவி உயர்வுகளுக்கான தேர்ந்த பட்டியல்கள் தயாரித்தல்,

(iv) அரசு ஊழியர்கள் நடத்தை விதிகளின்கீழ் அனுமதி வழங்குதல்.

(v) சம்பள நிர்ணயமும், திருத்தியமைத்தலும்,

[2005 மார்ச் 23

(vi) தற்காலிகப் பணியிடங்களை மேலும் தொடர ஒப்பளித்தல் மற்றும் அவற்றை நிலையான பணி இடங்களாக மாற்றுதல்,

(vii) துறைத் தலைவர்களின் கட்டுப்பாட்டின் கீழுள்ள அலுவலர்களின் கட்டாய ஓய்வு நேர்வுகளை அடிப்படை விதி 56(2)-ன்கீழ் ஆய்வு செய்தல்.

மேற்குறிப்பிட்ட நேர்வுகளில் சம்பந்தப்பட்ட நிருவாகத் துறைச் செயலர் முறையான சுற்றோட்டக் குறிப்பு இல்லாமலேயே, நேரடியாக, சம்பந்தப்பட்ட அமைச்சருக்குக் கோப்பினை அனுப்பி ஆணை பெறலாம்.

(இ) கோப்புகள் முடிக்கும் இயக்கம்:-

வெளிப்படையான, நேர்மையான, திறமையான நிருவாகம் அளிக்கும் பொருட்டு, குறை தீர்க்கும் மனுக்களைப் பெற்று, 5 நாட்களில் ஒப்புகைச் சீட்டு அனுப்ப வேண்டும் என்றும், 90 நாட்களில் மனுக்களின்மீது நடவடிக்கை எடுத்து, மனுவின்மீதான இறுதி முடிவினை மனுதாரருக்குத் தெரிவிக்க வேண்டும் என்றும், அரசு அறிவுறுத்தியுள்ளது. கோப்புகள் விரைவாக முடிக்கப்படும் பொருட்டு, ஒவ்வொரு திங்கட்கிழமையிலும் நிலுவையிலுள்ள கோப்புகளை நுண்ணாய்வு செய்ய வேண்டுமென மாவட்ட ஆட்சியர்களும், அரசுச் செயலாளர்களும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

**9. தகவல் மற்றும் சேவை மையம்**

அரசு நடைமுறைகளை மக்கள் புரிந்துகொள்ளவும், தங்கள் கோரிக்கைகளின் தற்போதைய நிலையைத் தெரிந்துகொள்ளவும் தகவல் மற்றும் சேவை மையங்களைத் திறக்க வேண்டுமென்று அனைத்துத் தலைமைச் செயலகத் துறைகளுக்கும், மாவட்ட ஆட்சியர்களுக்கும் அரசு ஆணை பிறப்பித்ததை அடுத்து, தற்போது அனைத்து மாவட்ட ஆட்சியர் மற்றும் துறைத் தலைமை அலுவலகங்களிலும் தகவல் மற்றும் சேவை மையங்கள் இயங்கி வருகின்றன.

**10. மக்கள் சாசனம்**

ஓர் அரசின் திட்டமிடப்பட்ட பயன்கள் ஏழை, எளிய மக்களுக்குச் சென்றடைவதை உறுதிபடுத்திட, அந்த அரசின் சேவை-செயலாக்க அமைப்பு மேம்படுத்தப்பட வேண்டும் என்பது அனைவராலும்



2005 மார்ச் 23]

ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். மாநில அரசிடம் உள்ள குறைந்த நிதியாதாரங்களுக்குள் சேவை-செயலாக்க அமைப்பை மேம்படுத்துவது என்பது சவால் மிகுந்த பணியாகும். ஓர் அரசின் முதன்மையான நோக்கமே, ஏழை, எளிய, வாய்ப்பு, வசதிகள் அற்ற மக்களுக்கு நலத் திட்டப் பயன்கள் சென்றடைவதை உறுதி செய்து, அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதுதான். எனவே, நலப் பணித் திட்டங்களின் பயன்கள் எந்த அளவுக்கு மக்களைச் சென்றடைகின்றனவோ அதைக் கொண்டுதான் சேவை-செயலாக்க அமைப்பின் செயல்திறனைக் கணக்கிட முடியும். ஒவ்வொரு அரசுத் துறையும் மேற்குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்கள் மற்றும் கீழ்க்கண்ட நோக்கங்கள் ஆகியவற்றை அடைய மக்கள் சாசனத்தை வகுக்க வேண்டும் என அரசு கேட்டுக் கொண்டுள்ளது:-

(i) மக்களுக்கு அளிக்கப்படும் பணிகள் குறித்து பதில் சொல்லும் பொறுப்பையும், ஒளிவுமறைவற்ற தன்மையையும் உறுதி செய்யவேண்டும்;

(ii) பொதுமக்கள் தங்கள் உரிமைகள் பற்றி அறிந்து கொள்வதற்கான விழிப்புணர்வையும் மற்றும் தங்களுக்கு வழங்கப்படும் சேவைகளின் தரங்களை அறிந்துகொள்ளும் நிலையையும் அதிகரிக்கச் செய்ய வேண்டும்;

(iii) திட்டப் பணிகளுக்கு அடிப்படையாக உள்ள சிறந்த பொதுப் பணி கோட்பாடுகளைக் காலத்திற்கேற்றவாறு அமைக்க வேண்டும்.

மக்கள் சாசனம் தயாரிப்பதற்கு உதவக்கூடிய வழிகாட்டுதல்கள் அடங்கிய கையேடு ஒன்று தலைமைச் செயலகத்தின் அனைத்துத் துறைகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. தலைமைச் செயலகத்தில் 29 துறைகளும் / சில அரசு நிறுவனங்களும் மக்கள் சாசனத்தைத் தயாரித்து, தமது கொள்கை விளக்கக் குறிப்புடன் சட்டமன்றப் பேரவைமுன் வைத்துள்ளன. இத்துறைகளின் மக்கள் சாசனங்களை, இவ்வரசின் www.tn.gov.in (NICNET / INTERNET) இணையதள முகவரியிலும் காணலாம். பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, பொது மற்றும் சட்டம் ஆகிய ஐந்து துறைகளுக்கு மக்கள் சாசனம் தயாரிப்பிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

**11. மின்-ஆளுகை**

(i) ஒளிவுமறைவற்ற, சிறந்த நிருவாகத்திற்கு மின்-ஆளுகையை உரிய அளவுக்குப் பயன்படுத்த இத்துறையில் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இது தொடர்பாக, அனைத்துச் சட்டங்களும், விதிகளும் அரசு வலைதளத்தில் (Website) பதிவு செய்யப்பட்டுள்ளன.

(ii) அனைத்துச் சட்டங்களும், விதிகளும் உள்ளடக்கிய மின்னணுவியல் தொகுப்பு உருவாக்கப்பட்டு, கணினி குறுந்தகடுகளில் (CD-ROM) பதிவு செய்யப்பட்டு வருகின்றன.

(iii) இத்துறையால் வெளியிடப்பட்ட அனைத்து அரசாணைகளையும் உள்ளடக்கிய மின்னணுவியல் தொகுப்பு (Compendium) உருவாக்கப்பட்டு, கணினி குறுந்தகடுகளில் பதிவு செய்யப்பட்டு வருகின்றன.

(iv) இத்துறையில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களுக்கும் மின்னணு பணி விவரக் குறிப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

(v) சட்டங்களிலும், விதிகளிலும் அவ்வப்போது செய்யப்படும் திருத்தங்கள் உடனடியாக மின்னணுவியல் தொகுப்பில் பதிவு செய்யப்படுகின்றன. இதற்கென ஒரு தகவல் வங்கி (Reference Bank) உருவாக்கப்பட்டுள்ளது.

(vi) இந்திய ஆட்சிப் பணி சாராத கூடுதல் செயலாளர்கள், இணைச் செயலாளர்கள், துணைச் செயலாளர்கள், சார்புச் செயலாளர்கள், பிரிவு அலுவலர்கள், தனிச் செயலாளர்கள், நேர்முக உதவியாளர்கள், உதவிப் பிரிவு அலுவலர்கள், நேர்முக எழுத்தர்கள், உதவியாளர்கள், மற்றும் தட்டச்சர்கள் ஆகியவர்களின் பணியாளர் தொகுதிப் பட்டியல்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன.

(vii) பொதுமக்கள் மற்றும் அரசுப் பணியாளர்கள் சம்பந்தப்பட்ட அரசாணைகள், கடிதங்கள், பணி விதிகள் போன்றவை தலைமைச் செயலக வலைதளம் மற்றும் தமிழ்நாடு அரசின் வலைதளத்தில் பதிவு செய்யப்படுகின்றன.

(viii) தேசிய தகவல் மையத்தின் தொழில்நுட்ப உதவியுடன் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறைக்கென உருவாக்கப்பட்டுள்ள தனியான வலைதளம் விரைவில் தொடங்கி வைக்கப்படும்.



(ix) 2005-2006 ஆம் நிதியாண்டில், மின்னணு கோப்பு நிலையறி-கண்காணிப்பு முறையை இத்துறையில் அறிமுகப்படுத்துவதற்கு, பகுதி-II திட்டத்தின்கீழ் ரூ.17.87 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(x) மேற்குறிப்பிட்ட மின்னணு முறை இத்துறையில் முன்னோடித் திட்டமாக அறிமுகப்படுத்தப்படவுள்ள தலைமைச் செயலக தகவல் முறையின் (Secretariat Knowledge System) ஒரு பகுதியாகும்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் தமிழ்நாடு நிருவாகத் தீர்ப்பாயத்தின் நிருவாக அலுவல்கள், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறைச் செயலாளர் அவர்களால் கவனிக்கப்பட்டு வருகிறது.

**12. தமிழ்நாடு நிருவாகத் தீர்ப்பாயம்**

(i) தமிழ்நாடு நிருவாகத் தீர்ப்பாயம் ஒரு நடுவர் ஆயமன்றத்துடன் 12-12-1988 அன்று நிறுவப்பட்டது. 20-7-1990 அன்று இரண்டாவது நடுவர் ஆயமன்றம் ஏற்படுத்தப்பட்டது.

(ii) 1997 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின்படி, தீர்ப்பாயத்தின் ஆணைகள் உயர் நீதிமன்றத்தின் ஆய்வுக்கு உட்பட்டவையாகும். ஆகவே, தற்பொழுது, அரசுப் பணி சம்பந்தப்பட்ட வழக்குகளில் தீர்ப்பாயம், உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றம் என்ற மூன்றடுக்கு நீதிமன்ற அமைப்பு முறை உள்ளது. அரசுப் பணி சம்பந்தப்பட்ட வழக்குகளுக்கு இரண்டடுக்கு நீதிமன்ற அமைப்பே (உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றம்) போதுமானது என்று அரசு முடிவெடுத்தது. எனவே, தமிழ்நாடு நிருவாகத் தீர்ப்பாயத்தைக் கலைத்துவிடலாம் என 2001 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் அரசு கொள்கை முடிவெடுத்துள்ளது.

(iii) இது சம்பந்தமாக சென்னை உயர் நீதிமன்ற அனுமதி பெற்று, மத்திய அரசுக்கு தமிழ்நாடு நிருவாகத் தீர்ப்பாயத்தைக் கலைத்துவிட கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. இக்கருத்துரு மத்திய அரசின் ஆய்வில் உள்ளது.

(iv) இதற்கிடையில் சென்னை உயர் நீதிமன்றத்தில், 6-1-2005-ல் வழங்கப்பட்ட நீதிப் பேராணை வழக்கு எண் 322/05-ல் தலைமை நீதிபதி தலைமையிலான இரு நீதிபதிகள் ஆயம், மனுதாரர்கள் விருப்பப்பட்டால், தமிழ்நாடு நிருவாகத் தீர்ப்பாயத்தில் உள்ள வழக்குகளை இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 227-ன்கீழ் உயர்

நீதிமன்றத்திற்கு மாற்றிக் கொள்ளலாம் என்று தீர்ப்பளித்துள்ளது. அதன்படி, பல வழக்குகள் மாநில நிருவாகத் தீர்ப்பாயத்திலிருந்து சென்னை உயர் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு வருகின்றன.

(v) இந்திய உச்ச நீதிமன்றம், அண்மையில் வழங்கிய ஒரு தீர்ப்பில், மாநில நிருவாகத் தீர்ப்பாயத்தைக் கலைப்பது பற்றி கொள்கை முடிவு எடுப்பதற்கு மத்திய பிரதேச அரசுக்கு அதிகாரம் உள்ளது என்று தெரிவித்துள்ளது. தமிழ்நாடு மாநில நிருவாகத் தீர்ப்பாயத்தில் உள்ள காலியிடங்களை நிரப்புவது தொடர்பாக, சென்னை உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள ஒரு வழக்கில், தமிழக அரசு, உச்ச நீதிமன்றத்தின் மேற்கண்ட தீர்ப்பை, அதன் கவனத்திற்குக் கொண்டு வந்து, மாநில நிருவாகத் தீர்ப்பாயத்தை கலைப்பது தொடர்பாக மாநில அரசு ஒரு கொள்கை முடிவு எடுக்க முடியும் என்றும், அதனைத் தொடர்ந்து இக்கலைப்பு பற்றிய அறிவிக்கை ஒன்றை மத்திய அரசு வெளியிட வேண்டும் என்றும், மாநில அரசு, இதற்கான செயற்குறிப்பு ஒன்றை மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளது என்றும் வாதாடியது. இது, சென்னை உயர் நீதிமன்றத்தின் பரிசிலனையில் உள்ளது.

## 13. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

(i) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் உறுப்பு 315(1)-ன்கீழ் ஒரு தன்னாட்சி அமைப்பாக அமைக்கப்பட்டுள்ளது. இத்தேர்வாணையம், தலைவர் மற்றும் 11 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. இத்தேர்வாணையத்தின் தலைவர், உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோரின் பணி நிலைகள் 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஒழுங்கு முறை விதிகளுக்கு உட்பட்டவையாகும்.

(ii) பணிகள்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் உறுப்பு எண் 320-ல் கூறப்பட்டுள்ள கடமைகள் மற்றும் அலுவல்களை ஆற்ற வேண்டும்.

(அ) பணியாளர்களைத் தெரிவு செய்தல் இத்தேர்வாணையத்தின் தலையாயப் பணியாகும்.

(ஆ) பதவி உயர்வு, மாற்றல் மூலமாகச் செய்யப்படும் நியமனங்கள் தொடர்பாக ஆலோசனை வழங்கும் குழுமமாகவும் இத்தேர்வாணையம் செயல்படுகிறது.





(இ) பணியாளர்களைத் தெரிவு செய்தல் பற்றிய விதிகள் இயற்றுவது, பணி நியமனம், பதவி உயர்வுகள் அளித்தல், ஒரு பணியிலிருந்து மற்றொரு பணிக்கு மாற்றல்கள் செய்தல் ஆகியவற்றில் பின்பற்றப்பட வேண்டிய நெறிமுறைகள் மேலும் அரசு ஊழியர்களைப் பாதிக்கக்கூடிய ஒழுங்கு நடவடிக்கை போன்ற அனைத்து இனங்களிலும் அறிவுரை வழங்கும் பணியினையும் இத்தேர்வாணையம் மேற்கொள்கிறது.

(ஈ) அரசுப் பணியாளர்களுக்கான சிறப்புத் தேர்வுகள் மற்றும் துறைத் தேர்வுகளை இத்தேர்வாணையம் நடத்துகிறது.

(உ) இந்திய அரசின் சார்பாக, பாதுகாப்பு அமைச்சகத்தின்கீழ் டேராடூனில் உள்ள ராஷ்டிரிய இந்திய ராணுவக் கழகத்தில் சேர்வதற்கான தேர்வுகளையும் இத்தேர்வாணையம் நடத்துகிறது.

(iii) சம்பளம், படிகள் மற்றும் ஓய்வூதியம் உட்பட தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் அனைத்துச் செலவினங்களும் மாநில அரசின் தொகுப்பு நிதியிலிருந்து செலவு செய்யப்படுகிறது. தேர்வாணையத்தின் ஆண்டறிக்கை ஆண்டுதோறும், தேர்வாணையத்தின் கருத்துரையிலிருந்து மாறுபட்ட இனங்கள் ஏதும் இருப்பின், அதற்கான விளக்கக் குறிப்புடன் சட்டமன்றப் பேரவைமுன் வைக்கப்படுகிறது.

## 14. அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்களுடன் நல்லுறவு

அரசு சிறந்த முறையில் செயலாற்றுவதற்கும், மக்களுக்குச் சிறந்த சேவையாற்றுவதற்கும் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் நலன் மிகவும் முக்கியம் என்று இந்த அரசு எப்போதுமே கருதி வந்துள்ளது. மோசமான நிதிப் பற்றாக்குறை நிலவிய நிலையில், அரசு, சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டி இருந்தது. நிதி நிலை மேம்பாடு அடைந்த பிறகு, அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோருக்கு சிறந்த பணிப் பயன்களை வழங்க வேண்டும் என்பதில் அரசு முனைப்பாக உள்ளது. 20-10-2004 அன்று அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து சில சலுகைகள் அறிவிக்கப்பட்டன.

1. அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஜூலை, 2003-ல் மேற்கொண்ட வேலைநிறுத்தப் போராட்டம் தொடர்பாக அவர்களுக்கு வழங்கப்பட்ட அனைத்துத் தண்டனைகளை

இரத்து செய்தும் மற்றும் அவர்கள்மீது தொடுக்கப்பட்ட அனைத்து ஒழுங்கு நடவடிக்கைகளைக் கைவிட்டும் அரசு ஏற்கெனவே ஆணையிட்டது. 5-7-2003 முதல் 21-7-2003 வரையிலான வேலை நிறுத்தக் காலத்தை, பணிக்காலமாக கருதி உத்தரவிடப்பட்டுள்ளது. இதன்வாயிலாக, 1,65,533 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

II. மேலும் ஒரு நல்லெண்ண நடவடிக்கையாக, அரசு, ஏற்கெனவே பணி நீக்கம் செய்யப்பட்டு பின்னர் பணிக்குச் சேர்ந்த அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களைத் தவிர ஏனைய அரசு ஊழியர்களின் 25-7-2003 முதல் 16-11-2003 / 30-12-2003 வரையிலான பணிக்கு வராத காலத்தினைப் பணிக் காலமாகக் கருத முடிவு செய்துள்ளது. இதன்வாயிலாக, 4,303 நபர்கள் பயனடைகின்றனர்.

III. 28-11-2001 முதல் நிறுத்தி வைக்கப்பட்ட ஈட்டிய விடுப்பினை சரண் செய்யும் சலுகையை, மீண்டும் அளித்து, 20-10-2004 முதல் ஆண்டுதோறும் 7 நாட்கள் ஈட்டிய விடுப்பினைச் சரண் செய்து அதற்கு ஈடான ஊதிய தொகையைப் பெற்றுக்கொள்ள ஆணையிட்டுள்ளது.

IV. அரசிற்கும், அரசு ஊழியர்கள் / ஆசிரியர்களுக்குமிடையே பரஸ்பரம் நல்லுறவை ஏற்படுத்தவும், பொதுமக்களுக்கு ஆக்கபூர்வமான சிந்தனையோடும், புதிய தீர்மானத்தோடும், அர்ப்பணிப்பு உணர்வோடும் சிறப்பாகச் சேவை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடும் முன்பு இரத்து செய்யப்பட்ட 37 பணியாளர் சங்கங்களின் அங்கீகாரத்தை மீண்டும் வழங்கி அரசு ஆணையிட்டுள்ளது.

V. மேம்பட்ட செயல்பாடு மற்றும் செயல்திறனில் கவனம் செலுத்தவும், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் குறைகளை நிவர்த்தி செய்வதற்கும் சேவை-செயலாக்க மேம்பாடு மற்றும் குறை தீர்ப்புக் குழுக்களை தலைமைச செயலரின் தலைமையில் மாநில அளவிலும் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் தலைமையில் மாவட்ட அளவிலும் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**15.** மாநில விழிப்புப் பணி ஆணையம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குநரகம், ஒழுங்கு நடவடிக்கைகள் நடுவர் மன்றங்கள், அண்ணா மேலாண்மை நிறுவனம், ஆய்வுப் பிரிவு, பயிற்சிப்



பிரிவு மற்றும் அமைப்பு மற்றும் செயல்முறைப் பிரிவு ஆகியவைகளின் நிருவாகம் தொடர்பான பணிகளை பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி) துறைச் செயலாளர் கவனிக்கிறார்.

**16. மாநில விழிப்புப் பணி ஆணையம்**

மாநில விழிப்புப் பணி ஆணையம் மாநில அரசால் 1965 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. பொதுப் பணிகளில், ஊழல் தடுப்பு தொடர்பான நடவடிக்கைகள் சார்ந்த பெரும்படியான நிருவாகச் சிக்கல்களிலும், கண்டு வெளிப்படுத்தப்பட்ட தனிப்பட்ட ஊழல் நேர்வுகளிலும் எவ்வாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது குறித்து அரசிற்கு அறிவுரைகள் வழங்குவது இதன் முக்கியமான பொறுப்பாகும். ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குநரகம், விழிப்புப் பணி ஆணையம் தன் பொறுப்புகளைச் செவ்வனே நிறைவேற்றுவதற்கு உரிய உதவிகளையும், ஆலோசனைகளையும் அளிக்கும் முக்கிய ஓர் அமைப்பாக விளங்கி வருகிறது.

2. மாநில அரசின் செயலாக்க அதிகாரத்திற்குட்பட்ட கீழ்க்கண்ட இனங்கள்மீது, மாநில விழிப்புப் பணி ஆணையம் அதிகார வரம்பு கொண்டுள்ளது:-

(அ) பொது ஊழியர் ஒருவர் நேர்மையற்ற முறையில் அல்லது ஊழலான முறையில் செயல்பட்டுள்ளதாகக் குற்றம் சாட்டப்படும் அல்லது சந்தேகிக்கப்படும் யாதொரு நடவடிக்கை குறித்து விசாரணை நடத்துதல்;

(ஆ) ஒரு பொது ஊழியர் தன்னுடைய நேர்மையற்ற செயல்பாட்டிற்கு அல்லது ஊழல் செயல்பாட்டிற்கு தன் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தியதாக அல்லது உரிய அதிகாரத்தைப் பயன்படுத்தாமை பற்றி அளிக்கப்பட்ட புகார்மீது விசாரணை அல்லது புலனாய்வு நடத்தச் செய்தல்;

(இ) தேவையான தகவல்கள் மற்றும் புள்ளிவிவரங்களைச் சேகரித்தல்;

(ஈ) தன் அதிகார வரம்பிற்குட்பட்ட செயல்பாடுகள் மற்றும் ஆணையத்தின் பரிந்துரைகளின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அரசுத் துறைகள் அல்லது அரசு நிறுவனங்கள் அல்லது பொது ஊழியரிடமிருந்து விவரங்களைக் கேட்டுப் பெறுதல்.

[2005 மார்ச் 23

## 17. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குநரகம்

பொது நிருவாகத்தில் ஊழலைக் கட்டுப்படுத்தும் அமைப்பு ரீதியான முதல் நடவடிக்கையாக, தமிழ்நாடு அரசு, 1964 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குநரகத்தைத் தனியொரு துறையாக உருவாக்கியது. இந்த இயக்குநரகம் கூடுதல் காவல் துறை இயக்குநர் பதவித் தரத்தைச் சேர்ந்த இயக்குநர் தலைமையில் செயல்பட்டு வருகிறது. இயக்குநருக்குத் துணையாக, காவல் அதிகாரிகள் மற்றும் சட்ட அலுவலர்கள் முறையே காவல் துறை மற்றும் குற்ற வழக்குத் தொடர்வு இயக்குநரகம் ஆகியவற்றிலிருந்து அழைக்கப்பட்டு பணிபுரிகின்றனர்.

2. மாநில அரசின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் பொது ஊழியர்கள்மீதான குறிப்பான கையூட்டு அல்லது ஊழல் மற்றும் அது தொடர்புடைய முறைகேடுகள் குறித்த புகார்கள்/தகவல்கள் மீதான விசாரணைகளை/புலனாய்வினை இந்த இயக்குநரகம் மேற்கொள்கிறது. 1988 ஆம் ஆண்டின் ஊழல் தடுப்புச் சட்டத்தின்கீழ் பொது ஊழியராக வகைப்படுத்தப்பட்டுள்ள, மாநில அரசின்கீழ் இயங்கும் பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் ஊழியர்களும் இந்த இயக்குநரகத்தின் செயல்வரம்பிற்கு உட்பட்டவராவார்கள். மாநில விழிப்புப் பணி ஆணையரால் குறிப்பிடப்படும் ஊழல் மற்றும் இதர முறைகேடுகள் குறித்த புகார்களின்மீதும் விசாரணை நடத்தி, உரிய தகவல்கள் மற்றும் புள்ளிவிவரங்களையும் மாநில விழிப்புப் பணி ஆணையத்திற்கு இந்த இயக்குநரகம் அளிக்கிறது.

3. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குநரகம் தனது புலனாய்வு அறிக்கைகளை மாநில விழிப்புப் பணி ஆணையத்திற்கு அனுப்பி வைக்கிறது. மாநில விழிப்புப் பணி ஆணையம், அவ்வறிக்கைகளை ஆய்வு செய்து, தொடர்புடைய தலைமைச் செயலகத் துறைகளுக்கு, தேவைக்கேற்ப, எவ்விதமான மேல் நடவடிக்கைகள் தொடரப்பட வேண்டும் என்று அறிவுரை வழங்கும்.

4. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குநரகத்தை மின்-ஆளுகையின்கீழ் கொண்டுவரும்பொருட்டு, தேவையான தளவாடங்கள் வாங்குவதற்கும், வலைதளம் மற்றும் மென்பொருட்கள் உருவாக்குவதற்கும் அரசு, 2004-2005 ஆம் ஆண்டு பகுதி-II திட்டத்தின்கீழ், ரூ.29.97 இலட்சம் ஒப்பளித்தது. அதன் தொடர்ச்சியாக,



2005 மார்ச் 23]

2005-2006 ஆம் ஆண்டிற்கான பகுதி-II திட்டத்தின்கீழ், ரூ.24.08 இலட்சம் செலவில், தளவாடங்கள் வாங்குவதற்கான ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குநரின் கருத்துருவிற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

## 18. ஒழுங்கு நடவடிக்கைகள் நடுவர் மன்றங்கள்

இம்மாநிலத்தில் 10 ஒழுங்கு நடவடிக்கைகள் நடுவர் மன்றங்கள் இயங்கி வருகின்றன. அவை சென்னை, வேலூர், சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி மற்றும் நாகர்கோவில் ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு ஒழுங்கு நடவடிக்கைகள் நடுவர் மன்றமும், நீதி முறை சார்புடைய மன்றமாக இயங்கி வருகிறது. இம்மன்றங்களில் இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் அல்லது மாவட்ட வருவாய் அதிகாரிகளின் பணி நிலையில் உள்ள அதிகாரிகள் தலைமைப் பொறுப்பில் உள்ளனர். ஒழுங்கு நடவடிக்கைகள் நடுவர் மன்றம், தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு நடவடிக்கைகள் நடுவர் மன்றம்) விதிகள், 1955-ன்கீழ், அரசினால் அனுப்பப்படும் வழக்குகளை விசாரணை செய்து, அறிக்கைகளை அரசுக்கு அனுப்புகின்றது.

## 19. பயிற்சி

(i) "பொறுப்பான நிர்வாகத்தில்" பயிற்சி இன்றியமையாததொரு பங்கு வகிக்கிறது. இப்பயிற்சியின் நோக்கமானது, அரசுப் பணியாளர்களின் செயல் திறன் மற்றும் திறமைகளை மேம்படுத்தி, பொதுமக்களுடைய பிரச்சினைகளைப் புரிந்து கொண்டு அவர்களுக்குச் செவ்வனே பணியாற்ற வழி வகுப்பதே ஆகும். பல்வேறு துறைகளின் நடைமுறைகளை அறிந்து, நவீன உத்திகளைக் கையாளுவதன்மூலம் துறைகளின் சேவைகள் துரிதமாக மக்களைச் சென்றடைகின்றன. சிறந்த நிருவாகத்திற்கு வழிவகுக்க, அரசு ஊழியர்களுக்கு விதிகள் மற்றும் நெறிமுறைகளைப் பற்றி பயிற்சி அளிப்பதால் அவர்கள் தங்களின் பணியில் செயல்திறனை வளர்த்துக் கொள்ளவும், சிறந்த முறையில் முடிவெடுக்கவும் இயலுகிறது.

(ii) பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி) துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் ஐந்து பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன.

**(அ) தலைமைச் செயலகப் பயிற்சி நிலையம்**

தலைமைச் செயலகப் பணியாளர்களுக்கு அலுவலக நடைமுறை. ஒழுங்கு நடவடிக்கை மற்றும் நீதிமன்ற/நடுவர் மன்ற நடவடிக்கைகள் தொடர்புடைய சட்ட சார்பான பயிற்சிகள் இப்பயிற்சி நிலையத்தில் அளிக்கப்படுகின்றன. மேலும், தலைமைச் செயலகத்தில் உள்ள உதவியாளர்கள், நேர்முக எழுத்தர்கள், தட்டச்சர்கள் மற்றும் நேரடியாக நியமனம் செய்யப்பட்ட உதவிப் பிரிவு அலுவலர்கள் ஆகியோருக்கு அடிப்படைப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இதுவரை, 52 அணிகளுக்கு இத்தகைய பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இதுதவிர, ஒப்பந்த அடிப்படையில் தலைமைச் செயலகத்தில் தற்காலிகப் பணி நியமனம் செய்யப்பட்டுள்ள 433 உதவியாளர்களுக்கு தலைமைச் செயலக அலுவல் நடைமுறை குறித்து, அடிப்படைப் பயிற்சியும் இப்பயிற்சி நிலையத்தில் அளிக்கப்பட்டது.

**(ஆ) அண்ணா மேலாண்மை நிலையம்**

தமிழ்நாட்டின் முதன்மைப் பயிற்சி நிலையமாக விளங்கும் அண்ணா மேலாண்மை பயிற்சி நிலையமானது, அதன் சென்னை பயிற்சி மையத்தில் 2004-2005 ஆம் ஆண்டில் 143 பயிற்சி வகுப்புகளை நடத்தி உள்ளது. மதுரை மற்றும் கோயம்புத்தூரில் இதுவரை 14 பயிற்சிகள் நடத்தியுள்ளது. திருச்சிராப்பள்ளியிலும் இத்தகைய பயிற்சிகளை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலாண்மை குறித்த பல்வேறு தலைப்புகளில் இதுவரை 3,783 நபர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. மேலும், தலைமைச் செயலக அலுவலர்களின் அறிவுத் திறனை மேம்படுத்தும் பொருட்டு, தகவல் தொடர்பு திறன், பொருளாதாரச் சீர்திருத்தம், மனித உரிமைகள், தொடக்கநிலை வரவு-செலவுத் திட்டம் போன்ற இனங்களில் சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு அணியிலும் 30 பயிற்சியாளர்களைக் கொண்ட 10 பயிற்சி அணிகளுக்கு, இதுவரை இத்தகைய பயிற்சி நடத்தப்பட்டுள்ளது. மேலும் மூன்று அணிகளுக்கு, 2005 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதிக்குள் பயிற்சி அளிக்கப்படும். இப்பயிற்சி நிலையத்தில் உள்ள 'பேரிடர் மேலாண்மைப் பிரிவு' மூலமாக அரசுத் துறை அலுவலர்கள், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், பஞ்சாயத்துத் தலைவர்கள் ஆகியோருக்குப் பலவிதமான பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளன. மாவட்டங்களிலுள்ள அனைத்து வருவாய் அலுவலர்களுக்கும் மூன்று நாட்களுக்கு ஆழிப்பேரலையினால் ஏற்படும் பாதிப்புகளைச் சமாளிப்பது தொடர்பாக சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.





ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம் மற்றும் மைய அரசின் பணியாளர் மற்றும் பயிற்சித் துறை உதவியுடன் 'பயிற்சி நிறை பணியாளர் மாவட்டத் திட்டம்' என்ற சிறப்புத் திட்டம் தேனி மாவட்டத்தில் அனைத்து அரசுப் பணியாளர்களுக்கும் பயிற்சியளிப்பதற்காக, 8-12-2004 அன்று துவக்கி வைக்கப்பட்டது. இந்தியாவில் இந்தத் தனிச் சிறப்பு வாய்ந்த திட்டத்தைச் செயல்படுத்துவதற்காகத் தெரிவு செய்யப்பட்ட மிகச் சில மாநிலங்களுள் தமிழ்நாடும் ஒன்றாகும். டிசம்பர் 2004 முதல் மே 2005 வரை ஆறு மாத காலத்திற்குள் தேனி மாவட்டத்திலுள்ள 5,460 அரசுத் துறை அலுவலர்களுக்கு, நிருவாக நடைமுறை மற்றும் மேலாண்மை பற்றிய தலைப்புகளில் ரூ.40.14 இலட்சம் செலவில் முழுமையான பயிற்சி அளிக்கப்படும். இத்திட்டத்தினை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தினால், மாவட்டத்தில் உள்ள அரசு அலுவலர்களின் மதிப்பு உயர்வதுடன், பொதுமக்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும் இடையிலான உறவும் மேம்படும். இப்பயிற்சிகள் மக்களுக்கான சேவைகளை மேம்படுத்துதல், கூட்டு முயற்சியை வளர்த்தல் மற்றும் கணினி சாதனத் திறமையோடு பொதுமக்கள் உறவினை நன்முறையில் முன்னேற்றுதல் ஆகியவற்றைப் பலப்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. மேல்மட்ட செயல் அதிகாரிகளின் இலட்சியங்கள், மாநிலத்தில் உள்ள சாதாரண மக்களுக்கும் சென்றடையும் வண்ணம் இப்பயிற்சிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. 17-1-2005 முதல் 19-1-2005 வரை, தேனி மாவட்டத்தில், காவல் துறை அதிகாரிகளுக்கான மூன்று நாள் மேலாண்மை மற்றும் ஆளுமை மேம்பாடு குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது. பிப்ரவரி 2005 வரையில் 'அ', 'ஆ' மற்றும் 'இ' தொகுதிகளில் உள்ள 1,770 பணியாளர்களுக்கு இப்பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. நவீன வசதிகளுடன்கூடிய புதிய பயிற்சிக் கட்டட வளாகத்தில் அண்ணா மேலாண்மை நிலையம் இவ்வாண்டு முதல் செயல்பட உள்ளது.

**(இ) அனைத்திந்திய குடிமைப் பணிகள் தேர்வு பயிற்சி மையம், சென்னை**

அனைத்திந்திய குடிமைப் பணிகள் இறுதிக்கட்டத் தேர்வு முடிவுகளின்படி இந்தியாவில் உள்ள பல முக்கியமான பயிற்சி நிறுவனங்களில் இந்நிறுவனம் முன்னோடியாக விளங்குகிறது. 2003 ஆம் ஆண்டில் மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்திய அனைத்திந்திய குடிமைப் பணிகள் தேர்வில், தமிழ்நாட்டில் இருந்து தேர்வுபெற்ற 54 நபர்களில் 31 நபர்கள் இப்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்றவர்கள் ஆவர்.

அரசின் நோக்கமான 'பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் மற்றும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர்' மாணவர்களுக்கு இந்தியாவில் மிகவும் உயர்ந்த குடிமைப் பணிகளில் நுழைய உதவுவதே இப்பயிற்சி மையம் ஏற்படுத்தப்பட்டதன் முக்கியமான நோக்கமாகும்.

**(ஈ) அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர்**

தங்குமிட வசதியுடன் கூடிய இப்பயிற்சி நிலையம் 1974 ஆம் ஆண்டு முதல், 'இ' பிரிவு அரசு அலுவலர்களுக்கு அடிப்படைப் பயிற்சி அளித்து வருகிறது. இதுவரை, 2004-2005 ஆம் ஆண்டில், 15 பயிற்சி வகுப்புகள் மூலமாக 2,390 அலுவலர்களுக்கு அடிப்படைப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இந்நிலையத்தில் நவீன நூலகம் ஒன்றும், கணினி மையம் ஒன்றும் செயல்பட்டு வருகின்றன. ஆர்வமுள்ள அலுவலர்களுக்கு, நவீன கணினிப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. மேலும், இந்நிலையத்தில் துணை வட்டாட்சியர்களுக்கும் பணியிடைப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**(உ) 'அ' மற்றும் 'ஆ' பிரிவினருக்கான அடிப்படைப் பயிற்சி நிறுவனம், சென்னை**

நேரடியாகத் தேர்வு செய்யப்பட்ட மற்றும் பதவி உயர்வின்மூலம் பணியமர்த்தப்படும் 'அ' மற்றும் 'ஆ' தொகுதி அலுவலர்களுக்கு அண்ணா மேலாண்மை நிலையத்தின்கீழ் இயங்கும் இந்நிறுவனத்தில் அடிப்படைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. நடப்பாண்டில், இதுவரை, 16 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன. இதன்மூலம் 243 ஆண் அலுவலர்கள் மற்றும் 97 பெண் அலுவலர்கள் உட்பட 340 நபர்கள் பயனடைந்துள்ளனர். இங்கு, சிறந்த ஒலி மற்றும் ஒளி வசதிகளுடன் பயிற்சிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. இதன்மூலம் மக்கள் சாசனம், பாலினப் பிரச்சினைகள், தகவல் பெறும் உரிமை, குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு போன்ற திட்டங்கள் மற்றும் அரசின் நிருவாக மேம்பாடு குறித்து சிறந்த பயிற்சி அளிக்கப்படுகிறது.

**20. ஆய்வுப் பிரிவு**

(i) 3 ஆய்வுப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. ஆய்வுப் பிரிவுகள்-1 மற்றும் 2, தனித் தனியாக துணைச் செயலாளர் அளவிலான ஆய்வு அலுவலர்களாலும், ஆய்வுப் பிரிவு-3, மாவட்ட வருவாய் அலுவலராலும் மேற்பார்வை செய்யப்படுகின்றன. 11 மாவட்ட ஆய்வுக் குழுக்கள்



ஒவ்வொன்றும் 7 அலுவலர்களைக் கொண்டு ஒரு துணை ஆட்சியரின் தலைமையில் இயங்கி வருகின்றன. இவை எல்லா மாவட்டங்களிலும் உள்ள மண்டலம், மாவட்ட மற்றும் கோட்ட நிலையிலான அரசு அலுவலகங்களை ஆய்வு செய்கின்றன.

(ii) பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ஆய்வுப் பிரிவுகள்) துறை இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை என்ற ஆய்வுச் சுற்றின்படி அனைத்துத் துறைத் தலைமையகங்கள் / தலைமைச் செயலகத் துறைகள் ஆகியவற்றை ஆய்வு செய்கின்றன. இவை மாவட்ட அளவிலான அதிகாரிகளுக்கு முன்னோடி ஒழுங்கு நடவடிக்கை பயிற்சி வகுப்புகளையும், கண்காணிப்பாளர் மற்றும் மேலாளர் நிலையில் உள்ள அலுவலர்களுக்கு அலுவலக நடைமுறை தொடர்பான குறுகிய காலப் பயிற்சி வகுப்புகளையும் நடத்துகிறது. இப்பயிற்சிகள், 5 நாட்களுக்கு எல்லா மாவட்டங்களிலும் ஒவ்வோர் ஆண்டும் நடத்தப்படுகின்றன. மாவட்ட ஆய்வுக் குழுக்கள், மாவட்ட அளவிலான அலுவலகங்களையும் ஆண்டுக்கொரு முறை ஆய்வு செய்கின்றன. பொது மக்களின் புகார்களுக்குள்ளான அலுவலகங்களை திடீரெனவும் ஆய்வு செய்கின்றன. இது தவிர, மாவட்ட ஆட்சியரின் வழிகாட்டுதலின் பேரில் மாவட்ட விழிப்புக்குழு அலுவலர்களுடன் இணைந்து திடீர் சோதனைகளும் நடத்துகின்றன. இதன் நோக்கம், நிருவாகத் திறனை மேம்படுத்துவதும் மற்றும் அலுவலர்களுக்கு அலுவலக நடைமுறை, பணி விதிகள் ஆகியவற்றைத் தெளிவாக அறிவுறுத்துவதும் ஆகும்.

(iii) ஆய்வுப் பிரிவு, 30 துறைத் தலைமையகங்கள் / தலைமைச் செயலகத் துறைகளை ஆண்டு தோறும் தொடர்ந்து ஆய்வு செய்கின்றன. தவிரவும், அனைத்து மாவட்டங்களிலும், 30 முன்னோடி ஒழுங்கு நடவடிக்கை வகுப்புகள் மற்றும் குறுகிய காலப் பயிற்சி வகுப்புகளை நடத்தி வருகின்றன. 11 மாவட்ட ஆய்வுக் குழுக்களும், 2004-2005 ஆம் ஆண்டில் 132 விரிவான ஆய்வுகளையும், 2,389 திடீர் தணிக்கைகளையும், மாவட்ட ஆட்சியரின் முன்னிலையில் 132 விழிப்புக் குழு அலுவலர்களுடன் இணைந்த கூட்டங்களையும் நடத்தியுள்ளன.

**21. அமைப்பு மற்றும் செயல்முறைக் குழு**

(i) அமைப்பு மற்றும் செயல்முறைக் குழுவின் நோக்கமானது அரசின் பல்வேறு துறைகளின் நடைமுறைகளைச் சீர்திருத்தம் செய்வது, பணி அளவீட்டின்படி தேவையான பணியாளர்களை (மனித சக்தி)

[2005 மார்ச் 23

மதிப்பீடு செய்வது மற்றும் சிக்கன நடவடிக்கைகளை அமல்படுத்துவது ஆகியனவாகும்.

(ii) அமைப்பு (மற்றும்) செயல்முறைக் குழுவின் ஆராய்ச்சியின் முக்கிய நோக்கங்கள் வருமாறு:-

(அ) மனித ஆற்றலை மதிப்பீடு செய்வது;

(ஆ) வழிமுறைகள் மற்றும் நடைமுறைகளை எளிமைப்படுத்தல்;

(இ) அரசுத் துறைகளில் செயல் திறன் மற்றும் சிக்கன நடவடிக்கைகளைச் செயற்படுத்தல்;

(ஈ) அதிகாரங்களைப் பகிர்ந்தளித்தல் மற்றும்

(உ) பதிவுருக்களை நன்முறையில் பராமரித்தல்.

(iii) தற்பொழுது அமைப்பு மற்றும் செயல்முறைக் குழுவில், இரண்டு நிருவாக அணிகள் உள்ளன. ஒரு நிருவாக அணிக்கு அரசின் சார்புச் செயலரும், மற்றொரு அணிக்கு அரசு இணைச் செயலரும், தலைமை ஏற்று நடத்துகின்றனர். மேலும், இந்த அரசு இணைச் செயலாளர், ஆய்வுக் குழுவின் ஒருங்கிணைப்பாளராகவும் உள்ளார். ஓர் ஆராய்ச்சி அலுவலர் மற்றும் ஓர் உதவிப் பிரிவு அலுவலரைக் கொண்ட கண்காணிப்புக் குழு ஒன்றும் அரசு இணைச் செயலாளர் (அமைப்பு மற்றும் செயல்முறை) தலைமையின்கீழ் இயங்குகிறது. இக்குழு அமைப்பு மற்றும் செயல்முறைக் குழுவின் அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது தொடர் நடவடிக்கைகள் எடுப்பதோடு, இப்பகுதிக்கு தேவையான அலுவலக நடைமுறைகளையும் செய்து வருகிறது.

(iv) தலைமைச் செயலகத்தில் உள்ள துறைகள் மற்றும் துறைத் தலைமையகங்கள் ஆகியவற்றில், அமைப்பு மற்றும் செயல்முறைக் குழுவின் ஆய்வு தேவைப்படக்கூடிய நிருவாகச் சிக்கல் உள்ளதா என்று இக்கண்காணிப்புக் குழு தகவல் கோருகிறது. அவர்களது கோரிக்கையின் அடிப்படையில், செயல் திட்டம் வரையப்பட்டு, ஒவ்வொரு குழுவிற்கும் பணி பகிர்ந்தளிக்கப்படுகிறது. அரசுத் துறைகளில் பணியாற்றும் பணியாளர்களின் பணி அளவீடு, பணி அளவீட்டின் நிர்ணயம் மற்றும் பணியாளர்களின் ஒட்டுமொத்த செயல்திறனை மேம்படுத்துதல் குறித்து இக்குழு ஆய்வு நடத்தி அறிக்கைகள் அளிக்கின்றன. ஆண்டு செயல் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள ஆய்வுகள் தவிர துறைகளின் அவசர கோரிக்கையின் அடிப்படையில் சிறப்பு ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அமைப்பு மற்றும் செயல் முறை



2005 மார்ச் 23]

பகுதியில் உள்ள குழுக்கள் இதுவரையில், 226 ஆய்வு அறிக்கைகள் தயார் செய்து செயலாக்கத்திற்காக சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பியுள்ளது.

## 22. 2005-2006 ஆம் ஆண்டுக்கான பகுதி 2 திட்டங்கள்

2005-2006 ஆம் ஆண்டுக்கான கீழ்க்கண்ட பகுதி 2 திட்டங்கள் நிதி நிலைக் குழுவால் ஏற்பளிக்கப்பட்டுள்ளன:-

| வரிசை எண் | திட்டப் பணிகளின் விவரம் | மொத்தம் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | **பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம் - தலைமைச் செயலகம்** | |
| | பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையில் மின்னணுவியல் முறையில் கோப்புகளில் நடவடிக்கை எடுக்கும் ஏற்பாடு முறையைச் செயற்படுத்துவதற்காக கணினிகளும் மென்பொருளும் வாங்குதல். | 17.87 |
| 2. | **ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குநரகம்** | |
| | தலா 28 எண்ணிக்கையில் டாட்- மேட்ரிக்ஸ் பிரிண்டர்கள், ஸ்கேனர்கள், டிஜிட்டல் வீடியோ கேமராக்கள் மற்றும் 10 எண்ணிக்கையில் நகலெடுக்கும் இயந்திரங்கள் ஆகியவை வாங்குதல். | 24.68 |
| 3. | **தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்** | |
| | (i) உறுப்பினர்களின் அறைகளில் கணினிகள் வழங்குதல் - கணினித் துணைச் சாதனங்கள் மற்றும் ஆண்டு பராமரிப்புக்கான கட்டணம் வழங்குதல். | 12.00 |
| | (ii) கணினிப் பிரிவு மற்றும் மதிப்பீட்டாய்வுத் துறையில் புதிய குளிர் சாதன வசதி ஏற்படுத்துதல். | 2.85 |
| | (iii) நகல் அச்சுக் கருவி 2 வாங்குதல். | 3.70 |

[2005 மார்ச் 23

(iv) உறுப்பினர்களின் அறை, செயலாளரின் அறை, தேர்வுக் கட்டுப்பாட்டு அதிகாரியின் அறை ஆகியவற்றில் உள்ள குளிர் சாதன வசதிகளைப் புதுப்பித்தல் மற்றும் ஆணையத்தின் அலுவலகத்தில் பயன்படுத்தப்பட்டு வருகிற குளிர் சாதனங்களுக்காக மின்வலி அளவை நிலைப்படுத்தும் 16 புதிய ஸ்டெபிலைசர் சாதனங்கள் வாங்குதல். 4.00

(v) ஆணையத்தின் அலுவலகத்திற்காக EPABX புதிய விசைப் பலகை வாங்குதல். 2.00

4. **அண்ணா மேலாண்மை நிலையம்**

(i) மடியமர் கணினி (லேப்டாப்) வாங்குதல். 1.00

(ii) ஸ்பைரல் பைண்டிங் இயந்திரம் வாங்குதல். 0.50

(iii) ஹை லுமென் ஓஹெச்பி (OHP) 1.50

(iv) ஓஎல்இ வசதி கொண்ட அதிவேக ஸ்கேனர் சாதனம் (OLE) வாங்குதல். 1.00

(v) கணினி மொழிக் கூடம். 4.00

(vi) எல்.சி.டி. புரஜெக்டர் வாங்குதல். 1.50

(vii) டிஜிட்டல் ஒலிப்பதிவு சாதனம் வாங்குதல். 0.10

5. **அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர்**

(1) துணைப் பாகங்களுடன் எல்சிடி புரஜெக்டர் வாங்குதல்

(2) கணினி வசதியுடன் நூலக நிருவாக ஏற்பாட்டு முறை

(3) ஜெஸ்டெட்னர் மின்னணுவியல் நகலெடுக்கும் இயந்திரம் வாங்குதல்.

(4) அவசரக் காப்பு விளக்குகள் மற்றும் அலுமினிய ஏணிகள் வாங்குதல்.

(5) குடியிருப்புக் கட்டடங்களுக்குச் சிறப்பு பழுது பார்ப்புப் பணிகள்.

(6) டிவிடி டிரைவ் மற்றும் ரைட்டர் சாதனம் வாங்குதல். 10.00



2005 மார்ச் 23]

6. **அனைத்திந்திய குடிமைப் பணிகள் தேர்வு பயிற்சி மையம், சென்னை**

கட்டில்கள் மற்றும் எல்சிடி புரஜெக்டர் சாதனங்கள் வாங்குதல். 3.00

7. **'அ' மற்றும் 'ஆ' பிரிவினருக்கான அடிப்படைப் பயிற்சி நிறுவனம், சென்னை**

5 கணினிகள் மற்றும் துணைப் பாகங்கள், திரையுடன் கூடிய ஒரு எல்சிடி புரஜெக்டர் ஆகியவை வாங்குதல். 4.50

மொத்தம் 94.20

## 23. வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள்

2003-2004 ஆம் ஆண்டிற்கான கணக்குகள், 2004-2005 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள், 2004-2005 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடுகள், 2005-2006 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் ஆகியவை பின்வரும் கணக்குத் தலைப்புகளில் தரப்பட்டுள்ளன:-

(ரூபாய் ஆயிரத்தில்)

| வரிசை எண் (1) | கணக்கு எண் (2) | கணக்குத் தலைப்பு (3) | கணக்குகள் 2003–2004 (4) | வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகள் 2004–2005 (5) | திருத்த மதிப்பீடுகள் 2004–2005 (6) | வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகள் 2005–2006 (7) |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2052 | பணியாளர்-நிருவாகச் சீர்திருத்தத் துறை | 40998 | 51762 | 43052 | 47945 |
| 2 | 2052 | அண்ணா மேலாண்மைப் பயிற்சி நிலையம் | 5662 | 6362 | 7862 | 8122 |
| 3 | 2052 | அமைப்பு மற்றும செயல்முறைப் பிரிவு | 1905 | 3400 | 2872 | 3128 |
| 4 | 2053 | மாவட்டங்களில் ஆய்வுக் குழுக்கள் | 9148 | 10219 | 9142 | 9960 |

[2005 மார்ச் 23

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 5 | 2070 | ஹைதராபாத். இந்திய நிருவாகப் பயிற்சிக் கல்லூரி சங்கத்துக்குத் தொகை கொடுத்தல் | 5 | - | - | - |
| 6 | 2070 | புதுடில்லி இந்தியப் பொது நிருவாக நிறுவனத்திற்கு மானியங்கள் | 100 | 100 | 100 | 100 |
| 7 | 2075 | தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்திற்கு உதவி | 5 | 1 | 1 | 1 |
| 8 | 2075 | பணியாளர்களை அமர்த்திக் கொள்ளும் செலவிற்காகத் தமிழ்நாடு தலைமைச் செயலகச் சங்கத்திற்கு நிதியுதவி | - | 1 | 1 | 1 |
| 9 | 2075 | மனமகிழ் பணிகளுக்காக தமிழ்நாடு தலைமைச் செயலக சங்கத்திற்கு நிதியுதவி | - | 1 | 1 | 1 |
| 10 | 2075 | தமிழ்நாடு அரசு அலுவலக உதவியாளர்-அடிப்படைப் பணியாளர் சங்கத்திற்கு நிதியுதவி | - | 1 | 1 | 1 |
| 11 | 2075 | தமிழ்நாடு அரசுத் துறை ஓட்டுநர்கள் சங்கத்திற்கு நிதியுதவி | 3 | 2 | 2 | 2 |
| 12 | 2075 | தமிழ்நாடு தலைமைச் செயலகப் பிரிவு அலுவலர்கள் சங்கத்திற்கு நிதியுதவி | - | 1 | 1 | 1 |
| 13 | 2075 | தமிழ்நாடு தலைமைச் செயலக அதிகாரிகள் சங்கத்திற்கு நிதியுதவி-பணியாளர்களை பணி அமர்த்த மானியங்கள் | - | 1 | 1 | 1 |



2005 மார்ச் 23]

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 14 | 2070 | விழிப்புப் பணி-இலஞ்ச ஒழிப்பு இயக்ககம் | 101572 | 117696 | 122176 | 130551 |
| 15 | 2070 | விழிப்புப் பணி-ஊழல் ஒழிப்பு இயக்ககம்-முகமையில் அனுப்பப்பட்ட காவல் துறைப் பணியாளர்களுக்கு இன்றியமையாப் பொருட்கள் சிலவற்றை வழங்குதல் | 629 | 200 | 200 | 200 |
| 16 | 2070 | விழிப்புப் பணி-ஊழல் ஒழிப்பு இயக்ககத்தின் குறியீட்டு கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பயன்படுத்துவோர் துறைகளுக்கு ஏற்பட்ட விமானப் பயணச் செலவு-களைக் கொடுத்தல் | 169 | 300 | 300 | 300 |
| 17 | 2070 | மாநில விழிப்புப் பணிக் குழு | 3208 | 3785 | 4207 | 4223 |
| 18 | 2051 | தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் - சாட்டியது | 79743 | 98591 | 94277 | 101139 |
| 19 | 2059 | கட்டடங்கள் - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் - (தலைமைப் பொறியாளரால் (கட்டடங்கள்) நிருவகிக்கப் படுபவை) | 1385 | 1100 | 1315 | 1385 |
| 20 | 2014 | தமிழ்நாடு நிருவாக நடுவர் மன்றம் | 3055 | 3684 | 3277 | 2822 |
| 21 | 2070 | தமிழ்நாடு மாநில நிருவாகத் தீர்ப்பாயம் | 10010 | 12586 | 9320 | 9286 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 22 | 2070 | குடிமைப் பணி பயிற்சி - அண்ணா மேலாண்மை நிலையத்தில் 'அ' மற்றும் 'ஆ' பிரிவினருக்கு அடிப்படைப் பயிற்சி அளித்தல் | 1297 | 1975 | 2001 | 2148 |
| 23 | 2070 | அண்ணா மேலாண்மை நிலையத்தின்கீழ் அனைத்திந்திய குடிமைப் பணிகள் தேர்வுப் பயிற்சி மையம் | - | 500 | 500 | 3 |
| 24 | 2225 | அனைத்திந்திய பணிகள் தேர்விற்காக ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் மாணவர்களுக்கு தேர்வுக்கு முந்தைய பயிற்சி அளிப்பதற்குரிய தேர்வுப் பயிற்சி மையம் | 2846 | 2536 | 2529 | 2740 |
| 25 | 2070 | பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையம் | 7019 | 8218 | 6546 | 7596 |
| 26 | 2052 | ஒழுங்கு நடவடிக்கை நடுவர் மன்றம், சென்னை | 2406 | 2784 | 2904 | 2982 |
| 27 | 2052 | ஒழுங்கு நடவடிக்கை நடுவர் மன்றம், கோயம்புத்தூர் | 1706 | 1991 | 2138 | 2165 |
| 28 | 2052 | ஒழுங்கு நடவடிக்கை நடுவர் மன்றம், மதுரை | 1318 | 1741 | 1563 | 1762 |
| 29 | 2052 | ஒழுங்கு நடவடிக்கை நடுவர் மன்றம், திருநெல்வேலி | 1290 | 1658 | 1634 | 1716 |
| 30 | 2052 | ஒழுங்கு நடவடிக்கை நடுவர் மன்றம், நாகர்கோவில் | 1354 | 1672 | 1631 | 1728 |
| 31 | 2052 | ஒழுங்கு நடவடிக்கை நடுவர் மன்றம், இராமநாதபுரம் | 1260 | 1535 | 1580 | 1723 |
| 32 | 2052 | ஒழுங்கு நடவடிக்கை நடுவர் மன்றம், சேலம் | 1354 | 1326 | 1396 | 1494 |



| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 33 | 2052 | ஒழுங்கு நடவடிக்கை நடுவர் மன்றம், வேலூர் | 1483 | 1554 | 1634 | 1844 |
| 34 | 2052 | ஒழுங்கு நடவடிக்கை நடுவர் மன்றம், திருச்சிராப்பள்ளி | 994 | 1184 | 1203 | 1298 |
| 35 | 2052 | ஒழுங்கு நடவடிக்கை நடுவர் மன்றம், தஞ்சாவூர் | 1263 | 1525 | 1541 | 1661 |
| | | **மொத்தம்** | **283187** | **339992** | **326908** | **350029** |

185276
சென்னை-600 009
நூலகம்
D
V211, 31'P05
P05.75.2

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**112, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Special Commissioner and Commissioner of Stationery and Printing, Chennai-600 002.